## இந்திரா சௌந்தர்ராஜன்



# பாண்டிய நாயகி

# அணிந்துரை

நாவல் இலக்கியம் தோன்றி நூறு ஆண்டுகள் உருண்டோடி விட்டன; இன்றைய நிலையில் நாவல் பல்வேறு பரிமாணங்களையும், பெற்று வளர்ந்து கொண்டிருக்கின்றது. சமூக நாவல், வட்டார நாவல், துப்பறியும் நாவல், அறிவியல் நாவல், அரசியல் நாவல், காந்திய நாவல், மார்க்சிய நாவல், உளவியல் நாவல், புனைவுலக (Utopia) நாவல் என்பன நாவல் வகைகளுள் குறிப்பிடத்தக்கன. இதே போல் நாவல் பெற்றிருக்கும் பல்வேறு பரிமாணங்களுள் ஒன்றே வரலாற்று நாவல் ஆகும்.

ஒரு குறிப்பிட்ட கால்கட்டத்தின் வரலாற்றை நுணுகி ஆராய்ந்து, அக்கால வாழ்க்கையை அதன் உள்ளும் புறமுமாகப் படம்பிடித்துக் காட்டும் வகையில் அமைவதுதான் வரலாற்று நாவல். ஆனால், தமிழ் மொழியில் வரலாற்றை அப்படியே எடுத்துக்காட்டும் நாவல்கள் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வேறு வகையாகக் கூறினால், கற்பனை கலந்த வரலாற்று நாவல்கள்தான் தமிழ் மொழியில் மிகுதியாக வெளி வந்துள்ளன.

பற்பல வரலாற்று நாவல்களைப் படைத்து, அவற்றின் மூலம் மக்களின் ஆர்வத்தைத் தூண்டிப் படிக்கச்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

செய்த பெருமை எழுத்தாளர் கல்கியையே சாரும், பொது மக்களைக் கவர்ந்ததோடு மட்டுமின்றி, வரலாற்றுப் பின்னணியுடன் நாவல்களைப் படைக்க எழுத்தாளர் களுக்கும் ஒரு தூண்டுகோலாக அமைந்தார் கல்கி. அவரைப் பின்பற்றி அகிலன், நா. பார்த்தசாரதி, ஜெகசிற்பியன், சாண்டில்யன், கோவி. மணிசேகரன், சோமு, மயில்வாகனன், விக்கிரமன், லட்சுமி நாராயணன், வே. கபிலன், பூவண்ணன், கௌதம நீலாம்பரன், ரா.கி. ரங்கராஜன், மதியழகன், கலைஞர் மு. கருணாநிதி, மு. மேத்தா போன்ற பற்பல எழுத்தாளர்கள் இன்று வரலாற்று நாவல்களைப் படைத்துத் தந்துள்ளனர்.

அவ்வரிசையில் அண்மைக் காலத்தில் எழுத்தாளர் இந்திர சௌந்தர்ராஜன் இணைந்துள்ளார். 'கோட்டைப் புரத்து வீடு', 'ரகசியமாக ஒரு ரகசியம்', 'ஐந்துவழி மூன்று வாசல்' போன்ற பல அருமையான துப்பறியும் நாவல் களை எழுதி முத்திரை பதித்த இந்திரா சௌந்தர்ராஜன் இப்போது 'பாண்டிய நாயகி'யை உருவாக்கி வரலாற்று நாவலும் தமக்குக் கைவந்த கலைதான் என்று மெய்ப் பித்துள்ளார். சிறந்த சிறுகதைக்காக 'இலக்கியச் சிந்தனை' பரிசு பெற்றவர் இவர். 'மர்ம தேசம்' தொலைக் காட்சித் தொடர் வாயிலாக தமிழ்கூறு நல்லுலகிற்குப் பரவலாக அறியப்பட்டவர் இவர்.

வரலாற்று நாவலில் இரண்டு வகைகள் உள்ளன; ஒன்று, வரலாற்று நிகழ்ச்சிகளையும், வரலாற்று மாந்தர் களையும் அடிப்படையாகக் கொண்டு கதை எழுதுதல்; மற்றொன்று, வரலாற்று மாந்தரை மட்டும் வைத்துக் கற்பனை நயம் தோன்றக் கதை புனைதல். இவற்றுள் 'பாண்டிய நாயகி' இரண்டாவது வகையைச் சார்ந்தது. கி.பி.765 முதல் கி.பி.790 வரை பாண்டிய நாட்டை ஆண்டு

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வந்த ஜடாவல்லப பராந்தக நெடுஞ்சடையனைத் தலைவனகாகக் கொண்டு இந்நாவல் புனையப்பட்டுள்ளது. பாண்டிய மன்னர்கள் பலரும் வழிவழியாகச் சைவச் சார்புடையவர்களாக விளங்க, இப்பராந்தகன் நெடுஞ்சடையன் மட்டும் வைணவ மதச் சார்புடையவனாக விளங்கினான் என்னும் வரலாற்றுச் செய்திதான் ஆசிரியருக்கு இந்நாவலை உருவாக்கக் காரணமாக அமைந்திருக்கிறது. இருபத்து மூன்று இயல்களைப் பெற்று விளங்கும் இந் நாவல், திங்கள் இதழான 'கலைமக'ளில் தொடர்ந்து வெளிவந்து வாசகரிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வரலாற்று நாவல்களில் சில சமயங்களில் வரலாற்று மாந்தரைவிட ஆசிரியரால் கற்பனையாகப் படைக்கப் பட்ட மாந்தர்கள் மிகுந்த சிறப்பிடம் பெற்றுவிடுவது உண்டு. கல்கியின் 'சிவகாமியின் சபதம்', 'பொன்னியின் செல்வன்' ஆகிய வரலாற்று நாவல்களைப் படித்தவர் களால், கல்கி தம் கற்பனையில் படைத்து உலவவிட்ட சிவகாமியையும், ஆயனச் சிற்பியையும், நந்தினியையும் என்றென்றும் மறக்க முடியாது.

அதுபோல்தான் இந்நாவலில் வரும் மதுரவல்லியும் நாகமாலினியும் பாண்டிய நாயகி யார்?-பாண்டியன் காதலிக்கும் மதுரவல்லியா, பாண்டியனைக் காதலிக்கும் நாகமாலினியா என்னும் சிக்கலை மையப் பொருளாக்கி இக்கதையைச் சுவையாக நகர்த்திச் செல்கிறார் ஆசிரியர்; மதுரவல்லி மீது பாண்டிய மன்னன் கொண்டகாதல்தான் அவனை வைணவச் சார்புடையவனாக மாற்றிவிட்டது என்று இந்நாவலில் காட்ட முனைந்துள்ளார் அவர். சைவமும் வைணவமும் இரு கண்கள் என்றாலும் சைவத்தையே சார்ந்து விட்ட பாண்டிய வம்சாவளிகளில்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

முதல் முறையாக உறுதி மிகுந்த வைணவ நெறி யாளனாயப் பராந்தகன் திகழக் காரணமே இந்தக் காதல் தானே?" (ப. 63) என்னும் பச்சைமால் தீர்த்தரின் வாய் மொழியும், "கோபுரம் கட்டப்படும் முன் சாரங்கள்தான் கோபுரமாய் நின்று அதை உருவாக்குகின்றன, கோபுரம் நிலை பெற்ற பிறகு சாரங்கள் அகற்றப்படுகின்றன. அப்படித்தான் என் வைணவ நாட்டம். நான் வைணவம் பால் மாளாக் காதல் கொள்ள என்னுள் வைணவ கோபுரம் எழும்ப நீ சாரமாய்ப் பயன்பட்டதென்னவோ உண்மை. ஆனால், நீயே இப்பொழுது உரைத்தாலும் என்னால் அந்தத் திருமாலின் திருவடி தொழாமல் இருக்க முடியாது" (பக் 83) என்னும் பாண்டிய மன்னனின் வாக்கு மூலமும் இக்கருத்திற்கு அரண் செய்வனவாகும்.

எந்த ஒரு கலைப் படைப்பிற்கும் கால இட, செயல் பின்னணிகள் (Unity of time action and place) சரியாக அமைய வேண்டும் என்பர். ஆசிரியரின் வருணனைப் பாங்கு அப்பணியினைச் செம்மையாகச் செய்திருக்கின்றது. மதுரைக்குச் சிறப்பு அங்கு ஓடும் பொய்யாக் குலக் கொடியாம் வைகைநதி. அந்நதி வலது பக்கம் ஒரு கிளை நதியாகப் பிரிந்து சென்று கிரிதிருமால் நதி என்னும் பெயருடன் விளங்கியதை-அது கூடல் அழகர் ஆலயத்தை வளைத்துக் கொண்டு ஓடியதை-காசியில் கங்கையில் மூழ்கியவர்கள் இந்தக் கிரிதிருமால் நதியிலும் நீராடி னால்தான் முழுமையான பாபம் தொலைத்தவர்கள் ஆவார்கள் என்று எண்ணும் மக்களின் நம்பிக்கையை (பக். 27) இங்ஙனம் ஒல்லும் வகையெல்லாம் தம் படைப்பின் ஊடே வரலாற்றுப் பின்னணியை ஆசிரியர் அழகுறப் படம்பிடித்துச் செல்கின்றார். இதைப் படிக்கும் வாசகர்கள் காலப்போக்கில் அந்நதி கிருதுமால் நதியாகி,

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இன்று சென்னையில் கூவம் போல் ஆகிவிட்ட பரிதாப நிலையையும் ஒரு கணம் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. மதுரையில் நடைபெறும் கதை என்பதற்கேற்ப மதுரையைச் சுற்றி அமைந்துள்ள யானை மலை, அதனருகில் அமைந்துள்ள நரசிம்மர் கோவில், நாகமலை, அதனருகில் மூன்று காத தொலைவில் அமைந்துள்ள சமணர் குகை, அன்று மிக்க செல்வாக்குடன் விளங்கிய கூடலழகர் கோவில் போன்ற இடங்களில் வருணனை இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

ஒரு நாவலின் இன்றியமையாத கூறு பாத்திரப் படைப்பு ஆகும். ஒவ்வொரு கதைமாந்தரின் அறிமுகத்திலேயே அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைப் படிக்கும் வாசகர்கள் உய்த்துணரும் வகையில் உருவாக்கியுள்ளார் ஆசிரியர். எடுத்துக்காட்டாக, நாகாபரணி பாத்திரப் படைப்பைக் காட்டலாம். பெயருக்கேற்ப அவன் ஒரு நாகம் போன்றவன் என்பதனை அறிமுகக் காட்சியிலேயே சுட்டிக் காட்டி விடுகிறார் ஆசிரியர். நாகங்களை வசப்படுத்தி, இரண்டு கைகளில் இரண்டு நாகம் என்கிற ரீதியில் கருநாகங்களைப் பற்றி எடுத்துத் தன் கரங்களில் விட்டுக் கொள்ள, அவை மெல்லத் தவழ்ந்து அவன் கழுத்தைச் சுற்றி வளைத்துக்கொள்ள-நாகாபரணி என்னும் பெயருக்கேற்ப அவன் நிற்பதைக் காட்டும் போதே (ப. 25) அவனுடைய மன இயல்பைப் படம் பிடித்துக் காட்டிவிடுகிறார் ஆசிரியர். வஞ்சம் வைத்துப் பழி வாங்கும் இயல்பு நாகத்திற்கு உண்டு என்று கூறுவார்கள். அதை மெய்ப்பிக்கும் வகையில் நாவலின் இறுதிவரை அவனுடைய செயல் அமைகின்றது. மதுரவல்லியைக் கொன்றால்தான் தன் சகோதரி நாகமாலினியைப் பாண்டியன் திருமணம் செய்து கொள்வான் என்று தப்புக் கணக்கு போட்டு, அதைச் செயல்படுத்த

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

முனைந்து, முதலில் தோல்வியுற்று, பிறகு தன் செயலில் வெற்றி பெறுவதை-சிறப்புப் படைத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

இதேபோல் அழகர் பட்டர் நம்பி, தன் மகள் மதுரவல்லி மீது கொண்ட அளவற்ற பாசம், பாண்டிய மன்னன் அவள் மீது கொண்ட காதலைத் தடை போட நினைக்கிறது, "பராந்தகர் என் மகளைக் காதலிப்பது எங்கள் ஆசாரத்திற்கும் சம்பிரதாயங்களுக்கும் ஒழுக்க விதிகளுக்கும் முரணானது. முரண்பாட்டை முதலாகப் போட்டால்தான் எனக்கு வைகுண்ட பதவியே கிடைக்கும் என்றால், அப்பொழுதும் நான் அந்தப் பதவியே வேண்டாம் என்றுதான் சொல்வேன். முரண்படத் தயாரில்லை. என் மகளைச் சிதைத்து இந்த மண்ணில் ஸ்ரீவைஷ்ணவ நெறியை நான் வளர்க்கத் தயாரில்லை' (பக். 64-65) என்று பச்சைமால் தீர்த்தரிடம் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார் அழகர் பட்டர் நம்பி. அதற்கேற்ப, அவர் தம் மகளைக் காப்பாற்றும் பொருட்டு அவள் உயிருக்கு விலையாக நாட்டைக் கூடக் காட்டிக் கொடுக்கத் துணியும் துரோகத்தையும் செய்கிறார் (ப.280)

நாகமாலினி, மதுரவல்லி ஆகிய இருவரையும் கதை நாயகியர் என்பதற்கேற்ப வீரமும் விவேகமும் நிறைந்த நங்கையராகப் படைக்கிறார் ஆசிரியர்; தன் நாட்டில் வாழும் விலங்குகள்கூடத் துன்பம் அடையக்கூடாது என்றெண்ணும் பாண்டியன் (ப. 98); மன்னன் தன் மீது கொண்ட காதலைத் தன் பேச்சு வன்மையால் நாட்டின் மீது-நாட்டுப் பாதுகாப்பின் மீது-திசை திருப்பிவிடும் மதுரவல்லி, பாண்டியன் மீது கொண்ட அளவற்ற காதலால் முதலில் தவறிழைத்தாலும், இறுதியில் தன் தவற்றினை உணர்ந்து திருந்திப் பாண்டியனுக்காக-

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பாண்டிய மண்ணிற்காக-உயிர் துறக்கும் நாகமாலினி; நாட்டில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளையும் அறிந்து வைத்திருக்கும் பச்சைமால் தீர்த்தர்; அவ்வப் போது தருகிற ஆலோசனைகளை வழங்கும் அமைச்சர் மதுரகவிராயர்; நாட்டை நன்முறையில் பாதுகாக்கும் தளபதிகள் வல்லவன் கணபதி, சாத்தன் கார்கோடன் என்று ஆசிரியர் தம் நாவலில் வரும் ஒவ்வொரு கதை மாந்தரையும் சிறப்பாகப் படைத்துக் காட்டியிருப்பது அவரது தனித்தன்மையை எடுத்துக் காட்டுவதாகும்.

வீரத்தின் மீது நம்பிக்கை வைக்காமல், சோதிடத்தில் நம்பிக்கை வைத்து, யாகம் செய்வதால் மட்டுமே வெற்றி பெற்று விடலாம் என்று நினைக்கும் பல்லவ மன்னன் நந்திவர்மனின் மூடநம்பிக்கையைப் பல இடங்களில் சாடியுள்ளார் ஆசிரியர். (ப: 87, 93, 110)

'வைணவத்தின் தனிச் சிறப்பே செருக்கறுத்தலும், சிரம் பணிதலுமே. உன்னிடம் அதை இன்று காண்கிறேன். வாழ்க உன் மாண்பு!' (ப. 194) என்று நந்தி மன்னனின் ஒற்றனாக வரும் பைராகி, பாண்டிய மன்னனை வாழ்த்தும் உரையில் வைணவ மதக் கொள்கை விளக்கம் பெறக் காண்கிறோம். 'எனக்கிணை எவர் என்று மார் தட்டிய ஹிரண்யனை அவனது பாதுகாப்பான வரங்களுக்கு நடுவிலும் பாதை கண்டு வதைத்து, பிரகலாதன் நம்பிக்கையைக் காப்பாற்றிய நாராயணனைத் தொழும் தாங்களா இப்போது பிரகலாதன் போல் உங்களை நம்பிக் காத்திருக்கும் இந்த மதுரை மக்களின் நம்பிக்கைக்குக் குந்தகமாய்ச் சிந்திப்பது(ப. 351) என்று கூறிப் பாண்டிய மன்னனுக்கு மதுரவல்லி உற்சாகமூட்டுமிடத்தும், மதுரகவியார், தீர்த்தர், பட்டர் அழகர்நம்பி ஆகியோரது

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உரையாடலிலும் வைணவ சமயத்தின் சிறப்பு சுட்டிக் காட்டப்படுகிறது.

'அறையின் மாடத்தில் ஒரு பிறை. அதனுள் தாழிடப் பட்ட ஓர் உண்டிக்குழி. அதனுள் விலை உயர்ந்த வைர வைடூரியங்களை அங்கே தங்கியிருப்பவர்கள் வைத்துக் கொள்ளலாம் என்பதற்கு இசைவாகவே அது கட்டப்பட்டது போல் தெரிகிறது. அதன் திறவுகோல் கூட அருகிலேயே இருக்கிறது... ஒலிப்பேழையைத் தொட்டு வந்திருப்பதை உணர்த்தினாள்.' (ப.226) - இவ்வாறு அமையும் பகுதிகள், வரலாற்று நாவல் என்பதற்கேற்ப, அக்காலத்து அரண்மனை அமைப்பை எடுத்துக்காட்டத் துணை புரிகின்றன.

'பருவத்தில் எல்லாப் பெண்களும் காதல் தேசத் தவர்கள், அதன்பின் காதலன் தேசத்தவர்கள் (ப.175);

'உதயசந்திரனின் மந்தி வியூகமெல்லாம் சந்தி சிரித்துப் போய்விட்டது. (ப.362);

'பாண்டியனின் உள்ளத்தில் நேசப் பதிவெடுக்க வேண்டியவள் வேஷப் பதிவெடுத்து விட்டதன் நிமித்தம் கலங்கிப்போய் விட்டதை அவனால் உணர முடிகிறது' (ப.224)

ஆசிரியரின் நடை நயத்திற்குக் கட்டியம் கூறும் சில பகுதிகள் இவை.

'இந்த அசைவச் சைவன் வைணவன் ஆனானே- அதுவே சாதனையில்லையா' (ப.83)

'உதயசந்திரன் புரவியின் வேகத்தைக் கட்டுப்படுத்தி சுற்றுமுற்றும் பார்க்கிறான்... மெல்ல புரவிநீக்கம் செய்து

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நாகாபரணியையும் சுமந்து அந்த ஆலமர நிழலில் கிடத்துகிறான்' (ப.125)

'பராந்ததகா... என்ன இது அத்தனை பேரையும் அழைத்து விட்டு எதற்காக மெல்ல ஊஞ்சல் ஆடுகிறாய்' (ப.159)

'மேகத்துண்டு ஒன்று நிலாவை மூடி ஒத்துழைத்தது' (ப.176)

- 'அசைவச் சைவன்' 'புரவி நீக்கம்', 'மௌன ஊஞ்சல்', 'மேகத்துண்டு' ஆசிரியரின் மொழி நடையில் மின்னலடிக்கும் சில சொற்றொடர்கள் இவை.

படிப்பவர் நெஞ்சை அள்ளும் அழகான உவமை களும் இந்நாவலில் ஆங்காங்கே காணப்படுகின்றன. ஒரு சில சான்றுகள் இதோ;

'ஒரு சாதுப்பூனை போல் ஓடிக் கொண்டிருந்தாள் வைகை' (ப.19)

'மைதானம் போல் அவர்கள் மார்பு திறந்து கிடக்கும்' (ப.20)

'நிலாத்துண்டம் நீரில் விழுந்த மாதிரி மேனியில் ஒரு பளபளப்பு, ஓடும் ஆற்றில் ஓட்டி ஓடப்பார்த்து இயலாது போய்ச் சாரைப் பாம்பாய் வளைந்து நெளியும் நீண்ட கூந்தலிலோ நிறைந்த தன்மை. வண்டு விழிமேல் பட்டுப் பூச்சியின் இயைந்த சிறகசைப்பாய் இமைவிரி மூடல்கள். கன்னமோ கவ்விக் கடிக்கத் தூண்டும் மாம்பழக் சுதுப்பு.' (ப.30)

இயைபு உத்தி இந்நாவலில் பல இடங்களில் சிறப் பாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஓர் எடுத்துக் காட்டு:

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

'அந்த நாகம் மாமன்னனை நேசிக்கிறதாமே? அதே எண்ணக் கலக்கம் படர்கிறது அவள் நெஞ்சுக்குள் என்னாகும்? ஏதாகும்?' -என்று ஒரு காட்சி முடிய, அடுத்த காட்சி.

'எதுவும் ஆகிவிடாது. நீ கவலையே கொள்ளாதே நிச்சயம் நாகாபரணி இந்த பாண்டிய தேசம் விட்டு நீங்கியிருப்பான்.' (பக்.150) என்று தொடங்கிறது.

இவை போன்ற இன்னும் பல சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்ட 'பாண்டிய நாயகி' வெறும் வரலாற்று நாவலாக மட்டுமன்றி, வரலாற்றுக் கால சமூக மாந்தரைப் படம்பிடிப்பதாகவும் விளங்குகிறது. இந்நூல் ஆசிரியரின் சொற்களிலேயே சொல்ல வேண்டுமானால்-

'பராந்தகனின் காதலை...அவனது வெற்றியை-மதுராவின் தியாகத்தை, ஆனைமலையும், நாகமலையும், கிரிதிருமால் நதி தீரமும், கூடல் அழகர் ஆலயமும் உள்ள வரை காத்து நிற்கும் என்பது சர்வ நிச்சயம். (பக். 375)

இது போன்ற இன்னும் பல படைப்புகளை எதிர் காலத்தில் ஆசிரியர் தர வேண்டும்; மக்களும் அவற்றை ஏற்றுப் போற்றி ஆசிரியருக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்க வேண்டும்.

டாக்டர் நிர்மலா மோகன்
பேராசிரியை,
செந்தமிழ்க் கல்லூரி
மதுரை-1

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

# என்னுரை

**ப**ணிவான வணக்கங்கள்.

பாண்டிய நாயகி! எனும் இந்தச் சரித்திரத் தொடர் எனது ஒரு எளிய முயற்சி. அமரர் கல்கியும், சாண்டில்யனும், கோவியும், விக்கிரமனும் வலம் வந்திருக்கும் உலகில் நானும் வலம்வர மேற்கொண்ட ஒரு சின்ன தவம்.

இது எத்தனை ஆழமானது-விசாலமானது நேர்த்திமிக்கது, காலத்தால் நிலைத்து நிற்கக்கூடியது என்பதெல்லாம் இனித் தெரியவரும்.

என் வரையில் காதலுக்கும் வீரத்துக்கும் சம அந்தஸ்து தந்து செயல்பட்டிருக்கிறேன்.

பொதுவில் சரித்திரம் என்றாலே அதில் கற்பனைச் சரக்குக்கு மிகுந்த இடம் தாராளமாக அளிக்கலாம். அதிலும் கல்வெட்டுக் குறிப்புகளாலும், சாசனங்களாலும் மட்டுமே அறியப்பெறும் விஷயங்களில் யூகமும் கற்பனையும் மட்டுமே பிரதான இடத்திலா இருக்கும். உண்மையும் ஆதாரமும் பூச்சரத்து நாராய் கண்ணுக்குத் தெரியாமல்தான் இருக்கும்.

ஓர் எழுத்தாளன் தன் திறனையும் கற்பனையையும் காட்ட சரித்திரக் கதை இடமளிக்கின்ற மாதிரி வேறு எதுவும் அளிப்பதில்லை.

ஆராய்ச்சி மனதுக்கும் சரித்திரத்தில்தான் பிரதான பணி இருக்கிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இதனால் எல்லாம்தான் துணிந்து இந்த பாண்டிய நாயகியை நான் எழுதினேன்.

இந்தத் தொடரின் அடி ஆதாரம் மிக மெலிவானது; சொற்பமானது. பராந்தக பாண்டியன் ஒரு ராஜ ராஜ சோழன் அளவோ, சேரன் செங்குட்டுவன் அளவோ பிற்காலப் பாண்டியர்கள் போன்றோ பிரசித்தி மிக்கவனாய்ச் சரித்திரக் குறிப்புகளில் காணப்படவில்லை.

ஆனால், சைவம் தழைத்த பாண்டிய மண்ணில் அவனொரு வைணவனாய் வாழ்ந்தான் என்பது ஆச்சரியம் தரும் ஒரு மின்வெட்டுச் செய்தியல்லவா?

இதன் பின்னால் எழுப்ப வேண்டிய வினாக்களும் ஏகமல்லவா? அது மட்டுமா? அவன் தாய் குறுநிலத் தேசமான கெங்கநாட்டவள், தகப்பன் கோச்சடையனோ வீரபாண்டியன்-இருவருக்கும் பிறந்த நெடுஞ்சடையனோ வைணவதாசன்!

ஆச்சரியமாயிருக்கிறதல்லவா?

மட்டுமா?

சோழ மண்டலம் கடந்து நிற்கும் பல்லவனோடு திராப்பகை.. காலமெல்லாம் அவனுடன் யுத்தம். அவனை அடக்கி வெற்றி கண்ட தீரம்...என்று கண்ணில் பட்ட குறிப்புகள் வெறும் நிகழ்ச்சித் தொகுப்பாக எனக்குப் படவில்லை.

ஊக்கத்திற்கும், ஆய்வுக்கும் இடமளிக்கும் விஷயமாகத்தான் எனக்குத் தோன்றின.

ஆழ்வார்கள் தலையெடுக்க இந்தக் காலத்தில் மதுரைக்குள் கிரிதிருமால் நதி ஓடியதன் சான்றாக

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இன்றும் அந்த நதிப்பாதை இருப்பதைப் பார்த்தபோது கற்பனைக் சிறகின் அசைப்பை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

கூடல் அழகனின் திருவருளும் கூடியதால் இந்தப் பாண்டிய நாயகி ஜனித்தாள் என்று கருதுகிறேன்.

இந்தத் தொடரில் பராந்தகனின் காதல் உள்ளத்தை நான் விரித்துப் பார்த்த அளவு அவனது மற்ற பக்கங்களை நான் பார்த்திடவில்லை. பராந்தகனின் அண்டை அயல் உறவு. ராஜ்ஜியம் புரிந்த விதம் இவன் காலத்தில் தமிழுக்குக் கிட்டிய மரியாதை. ஆன்மிகம் தழைத்த பாங்கு என்றெல்லாம் விரித்துப் பார்த்தால் எங்கே வெறும் விளக்கச் சித்திரமாகி வேகமும் விறுவிறுப்பும் மட்டுப் படுமோ என்கிற பயம்கூட நான் மற்ற விஷயங்களை ஆழமாகக் காணத் தடை செய்தன.

எனவே இதனுள் அது இல்லாதது குறித்து ஆழ்ந்து நோக்குபவர்கள் வருத்தம் தவிர்க்க வேண்டுகிறேன் கன்னி முயற்சியாதலால் ஊக்கமிகு விமரிசனங்களை எதிர் நோக்குகிறேன். ஊனங்கள் இருப்பின் சுட்டுங்கள் அது இனிவரும் தொடர்களில் நீங்கும்.

சுருக்கமாகச் சொல்வதானால் அமரர் நா. பார்த்த சாரதி அவர்கள் தீட்டிய 'மணிபல்லவம்' சரித்திரபுதினமே எனக்கு ஆழ்ந்த ஊக்கம் அளித்தது.

மணிபல்லவம் ஒரு வித்தியாசமான வரலாற்றுச் சித்திரம். அது வரலாற்று நாயகர்களை பற்றிப் பேசாமல் அந்த நாயகர்கள் காலத்துச் சாமானிய மனிதர்களை அவர்களின் வாழ்வியல் முறைகளை ஆசை பாசம் காதலைப் பற்றிப் பேசிய அதிசயச் சித்திரம்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இது ஒரு சரித்திரத் தொடரே அல்ல என்கிற விமரிசனங்களையெல்லாம் அது சந்தித்ததாகக்கூட அறிந்தேன். சரித்திரம் என்பது ராஜ வாழ்வுகளைப் பற்றிச் சொல்வது மட்டுமின்று. அவர்கள் காலத்து சமூக வாழ்க்கையைச் சொல்வதும்கூட—

இதில் எனக்கு மாறுபட்ட கருத்துக் கிடையாது. அதற்காக இந்த 'பாண்டிய நாயகி'யில் நான் பராந்தகன் காலத்து சமூக மாந்தர்களைப் பற்றி மட்டுமே கதை செய்திருக்கிறேன் என்றும் பொருள் கொள்ளக் கூடாது.

'மணி பல்லவம்!' தொடர் எனக்குச் சரித்திரத்தைச் சுதந்திர உணர்ச்சியோடு அணுக வழி செய்து கொடுத்தது.

கலைமகள் அதற்கு இடம் அளித்துள்ளது.

வாசக நெஞ்சங்களிலும் இதற்கோர் இடம் கிட்டியதை அவ்வப்போது எனை நெருங்கிய விமரிசனங் களால் உணர்ந்தேன்.

அந்த விமரிசனங்களுக்கும் கலைமகளுக்கும் என் இதய நன்றிகள் என்றும் உரியவை.

இத்தொடருக்கு நல்ல முறையில் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியை திருமதி நிர்மலா மோகன் அவர்களுக்கும். இத்தொடரை அற்புதமாக வெளியிட்டு எனக்கு ஆதரவு தந்த கலைமகள் மாத இதழிற்கும் என் இதய நன்றிகள். அட்டைச் சித்திரம் வரைந்துள்ள மணியம் செல்வனை மறக்கலாமோ? அவருக்கும் என் நன்றி.

மதுரை-3
24-9-96

பணிவன்புடன்
இந்திரா சௌந்தர்ராஜன்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

# பாண்டிய நாயகி

## 1

ஒரு சாதுப் பூனை போல் ஓடிக் கொண்டிருந்தாள் வைகை. அகண்டு விரிந்து கிடக்கும் போதிலும் அவ்வளவாய் அலை பாய்ச்சல் இல்லை. எகிறல் திமிறல் இல்லை.

இதென்ன ஆடி மாதமா?

ஆடியில்தான் அலை பாய்ச்சல் அதிகம் இருக்கும்.

அதிகம் என்றால் சமயங்களில் கடலோர விளிம்புக்குச் சமமாய் நதியின் வளைவுகளில் ஆறடி உயரமெல்லாம் அலை எகிறும். அலைக்குப் போட்டியாய் வாளை மீன்களின் துள்ளலையும் பார்க்கலாம். காற்றும் அப்படி வீசும்.

இப்பொழுதோ சித்திரை; தகித்துக் கொண்டிருக்கிறான் கதிரவன். அவனுக்குப் பயந்து கொண்டோ இல்லை தனது உற்பத்தி ஸ்தானமான மலைப் பிராந்தியத்தில் மழையற்றுப் போனதாலோ வைகையிடம் வண்ணமிகு நடை இல்லை.

அதன் கரைப்புறத்து வண்டல் எல்லாம் நெருப்பில் வறுத்த மாதிரி சிவந்து கிடக்கிறது. அந்த வண்டல் வெளியில் கால் பதித்து விட்ட ஒரு புரவி அந்த உஷ்ணம் தாளாமல் குதிக்கத் தொடங்கியது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

புரவி மேல் மத்திம வயதில் ஒருவன். அவன் தலைப்பாகை தரித்திருக்கும் விதமே அலாதியாக இருக்கிறது.

பாண்டிய மண்ணில் யாருமே அப்படிப் பாகை தரிக்க மாட்டார்கள் பாகைத் துணியின் தொடக்கமும் முடிவும் பாகை வட்டத்துக்குள்ளேயே மடிந்து அடங்கி வீழும் விதமாகத்தான் பாண்டிய நாட்டுப் பாகைகள் இருக்கும்.

இவனோ பாகைத் துணியின் எஞ்சிய துணியைத் தன் வலப்பக்கக் காதோரமாய் தோள் வரை புரளும் படி தொங்கவிட்டிருக்கிறான். ஆடை உடுப்பில்கூட வித்தியாசமாகத் தெரிகிறான். நெற்றியில் கறுப்பு மையால் அரவப் பொட்டும் வைத்திருக்கிறான்.

அவசியத்தின் பொருட்டு ஆடல் பாடல் வேளை களில் பாண்டிய மகளிர் மட்டும் இங்கே கயல் சின்னம் தரிப்ப துண்டு. பாண்டிய ஆடவர்க்கு இப்படிச் சின்னம் தரிப்பதோ மார்பு முதல் கழுத்து வரை மூடி ஆடை அணிவதோ எல்லாம் கட்டோடு பிடிக்காது.

மைதானம் போல் அவர்கள் மார்பு திறந்து கிடக்கும் அதன் மேல் முத்து மாலையோ இல்லை ரத்னாகரமோ தரித்தபடி ஆண்மை கெழும நிலம் அதிர நடக்கத்தான் அவர்களுக்குப் பிடிக்கும்.

பாண்டிய அரசவையில் பணியாற்றும் கூட்டம் மட்டும் இடையில் ஒரு கச்சினைக் கட்டாயம் தரித்து மணிக்கட்டிலும்கூட அதன் எச்சத்தைக் கட்டியிருப் பார்கள்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அடிக்கடி பாண்டிய நாட்டுக்குள் வந்து செல்லும் சில வேணாட்டு வியாபாரிகள்கூட நெற்றியில் களபச் சந்தனம் தாங்கித் திறந்த மார்புடன் வெண்ணிறத் துவராடைக் கச்சத்துடன்தான் காட்சி தருவார்கள்.

இவன் போல் இல்லை.

இவன் உருவமும் பார்வையுமே வித்தியாசமாகத் தெரிகின்றனவே! ஆடையில் படிந்து கிடக்கும் அழுக்கும்-முகத்தில் படிந்து கிடக்கும் சோகமும் இவன் ஒரு நெடுந்தூரப் பயணி என்பதைக் கூறாமல் கூறிவிடுகிறது.

புரவி கூட வெப்பம் தாளாமல் ஆற்றுக்குள் இறங்கி நிற்கப் பார்க்கிறது. அவனும்கூடப் புரவியை விட்டு இறங்கி வைகை நீரில் கால் வைக்கிறான்.

அந்தக் கந்தக வேளைக்கு வைகையின் ஜில்லென்ற வருடல் அவனை நெகிழ வைக்கிறது. பாகையை அவிழ்த்துப் புரவிச் சேணத்தில் அதை வாகாகச் செருகி விட்டுத் தன் தலைமுடியைக் கோதிவிட்டுக் கொள்கிறான்.

ஆற்று நீரில் முங்கிக் குளித்தால்கூடத் தேவலை என்று படுகிறது அவனுக்கு. ஆனாலும் குளிக்க அவ் வளவாய் விருப்பமில்லாதவன் போல் தண்ணீரை இரு கைகளாலும் வாரி வாரி முகத்தில் அடித்துக் கொள்கிறான்.

இப்படி ஒரு வெப்பத்தை அறியாதவன் போல் பெரிதாய்த் தலையைச் சிலிர்ப்பி 'உஸ்ஸ்' என்று பெருமூச் செல்லாம் விட்டு சிலாகிப்புகள் வேறு புரிகிறான்.

பின் மெல்ல நெற்றி மேல் வலக்கையை வளைத்துக் கதிர்க் கரம் கண்களைக் கூசாதபடி கூரைகொடுத்து முடிந்த தொலைவு பார்வையை ஓட்டுகிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

காடும் வயலுமாய்த் தரைப் பரப்பில் பசுமை படைத்துக் கொண்டு தெரிந்தாலும் தன் நாட்டுக்கு இணையான ஒருவகைத் திமிர் பிடித்த பசுமை இங்கே இல்லை என்பதாக அவனுக்குள் நினைப்பொன்று பிறக்கிறது

அவன் நாட்டில் ஆறு இப்படி அடங்கி ஓடியும் அவன் கண்டதில்லை. பெருக்கெடுக்கும் அதன் பாய்சலுக்கும் இந்த வைகையின் அசாத்திய அமைதிக்கும் ஏணி வைத்தாலும் எட்டுமா?

அவன் பார்வையில் நெடுந்தொலைவில் ஒரு வயல் வெளியின் களத்து மேடும் அதன் மேல் சிலர் அசைந்தபடி நிற்பதும் தெரிகிறது. திரும்பவும் பாகை தரித்துப் புரவி ஏறி அவர்களை நோக்கித் தனது புரவியைச் செலுத்தத் தொடங்குகிறான் இவன்.

அந்தக் களத்து மேட்டு மனிதர்கள் கள்ளைக் குடித்துவிட்டுத் தும்சமாய் கிடக்கிறார்கள். பக்கத்தில் அவர்கள் கள் குடித்தமைக்குச் சான்றாக உடைந்து கிடக்கும் சட்டிப் பானைகள்.

களத்துமேடு என்பது ஏறத்தாழ ஒரு தெய்வச் சந்நிதி போன்றது. அங்கே இப்படி ஒரு கூத்தா?

நெருங்கிவிட்ட அவனுக்கு அவர்கள் செயல் இடறலாகப் படுகிறது. அவன் மனத்தில் சலனம்.

பாண்டிய நாட்டைப் பற்றி அவன் கற்பனை செய்து வைத்திருந்த விதமே வேறாக இருந்தது.

பரந்து விரிந்த-தேசமாக வீரம் விளையாடும் ஒரு பெரிய பட்டினமாக அவன் நினைத்திருந்ததற்கு நேர் மாறாக அனைத்தையுமே அவன் கண்டு வருகிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

'அமுங்கி ஓடும் ஆறு-தழைப்பில்லாத வயல் வெளி-போதை மனிதர்கள்' என்று ஓர் சீர் கெட்ட நாடாக அவன் மனக்கண்ணில் இப்போது பாண்டிய நாடு விரியத் தொடங்கிவிட்டிருந்தது.

இப்படி ஒரு நாட்டிற்கா தன் நாட்டுப் பெண் மருமகளாகியுள்ளாள்? அவனுக்குள் அது ஏதோ ஒரு மாபெரும் குற்றமாய் உருவாகத் தொடங்கியது.

அப்பொழுது குடித்துவிட்டுக் கிடப்பவர்களில் ஒருவன் அவனைப் பார்த்து போதைத் தமிழில் தயங்கித் தயங்கிக் கேட்கிறான்.

"ஏய்- குதிரைக்காரா, யாரடா நீ? உன்னைப் பார்த்தால் பாண்டி நாட்டான் போல் தெரியவில்லையே-"

கேள்வி கேட்டவனைப் பார்த்து முறைக்கத் தொடங்கினான் அவன்.

தன் நாட்டில் யாரும் இப்படி எடுத்த எடுப்பிலேயே ஏகவசனம் பேசி அழைக்கமாட்டார்கள். இது என்ன மட்டமான மமதைக் கலாசாரம்?

"கேக்கறேன்ல. நீ இப்படிப் பேசாம இருந்தா எப்படி? நீ யாரு, உன் பேரென்ன?"-இது அடுத்தவன்.

அவனுக்குப் பதில் சொல்லவே பிடிக்கவில்லை.

'ச்சீ! என்ன மனிதர்கள் இவர்கள்?' அவன் தன் புரவியை அங்கிருந்து செலுத்த ஆரம்பிக்கும்போது ஒருவன் தள்ளாடியபடி எழுந்திருந்து புரவியின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்து நிறுத்தப் பார்த்தான்.

புரவி தன்னை ஒரு அந்நியன் தீண்டக்கூடாது என்பது போல் முன்னிரண்டு காலையும் எகிறலாய்த்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தூக்கி கோபத்துடன் கனைத்துவிட்டுப் புழுதி பறக்க தன் குளம்புக் கால்களைத் திரும்ப அந்த களத்து மண்ணில் பதித்தது.

"அடேயப்பா! உன் குதிரைக்கு இத்தனை சாமர்த்தியமா... இதென்ன பெரிய அரபு தேசத்துக் குதிரையா என்ன?"-அவர்களில் இன்னொருவன் கேட்டு விட்டுப் புளித்த ஏப்பம் ஒன்றை விட்டான்.

அவன் இனியும் அங்கிருப்பது தகாத செயல் என்பதாக உணர்ந்து புரவியைச் செலுத்தத் தொடங்க, அவர்கள் விடாமல் வழி மறித்தார்கள்.

களத்துமேட்டை ஒட்டி ஒரு பெரிய பாம்புப் புற்று. அதன் உடலில் ஏகமாய் துவாரக் கண்கள். ஓடிய புரவி அந்தப் புற்றருகில் நின்று தேங்கலாய் இப்பக்கமும் அப்பக்கமுமாகத் திரும்பி அவர்களை வெறித்தபோது ஒருவன் கீழே கிடந்த உடைந்த கள் கலயம் ஒன்றின் துண்டுப் பகுதியை எடுத்து அவன் மேல் எறிய, அது அவன் பாகையில் பட்டு பாகை அவிழ்ந்து கீழே விழுந்தது.

விழுந்த பாகை கூட ஒரு மாலை போல் புற்றின் மேல் விழுந்தது. அதன் நிமித்தமோ அன்றி யதார்த்தச் செயலாகவோ கருநாகம் இரண்டு மெல்ல புற்றின் கண் களிலிருந்து வெளிப்பட்டுத் தீர்க்கமாய்ப் படம் விரித்து, தங்கள் வளைந்து நெளியும் சரீரம் தூக்கி, கருமுத்துப் போன்ற கண்களால் நடப்பதைப் பார்க்க ஆரம்பித்தன.

கள் குடித்தவர்கள் உடனேயே அஞ்சியபடி "பாம்பு பாம்பு" என்று அரற்றத் தொடங்கினார்கள். ஆனால், அவனோ துளியும் அஞ்சாது அவற்றைப் பார்த்து மகிழ்ந்தவன் போல் முதல் காரியமாய்ப் புரவியை

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

விட்டுக் கீழே இறங்கி, அவற்றின் எதிரே சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்க ஆரம்பித்தான்.

கள் குடியர்கள் அதை ஆச்சரியமாய்ப் பார்த்தார்கள். வணங்கி விட்டு நிமிர்ந்தவன் உதட்டில் எதையோ முணுமுணுத்தபடி மெல்ல அந்த நாகங்களை நோக்கி நெருங்கித் தனது வலக்கரத்தை நீட்டினான்.

நீண்ட பெருமூச்சும் அதில் அசாத்திய சப்தமும் இழைந்தபோதிலும் அந்தக் கருநாகங்கள் அவன் கரத்தைக் கொத்திப் பிடுங்காமல் தங்கள் வளை கழுத்தை மெல்ல பின்னுக்கு இழுத்துக் கொண்டன. அவனைக் கடிக்கவே அஞ்சுவது போல் அவை இரண்டும் ஒன்றைப் பார்த்து ஒன்று வெறித்தன.

கள் குடியர்களின் கண்கள் ஆச்சரியத்தால் காது வரை விரிந்து விட்டிருந்தன.

"டேய், இவன் ஏதோ சித்து வேலைக்காரன்டாய்" என்று முணு முணுக்கிறான் அவர்களில் ஒருவன்.

அவன் அதையெல்லாம் லட்சியமே செய்யாமல் அந்தக் கருநாகங்களை இரண்டு கைக்கும் இரண்டு நாகம் என்கிற ரீதியில் பற்றி எடுத்தான். அவை இரண்டும் அவன் கரத்தில் கொஞ்சி விளையாடுவது போல் நெளிந்து புரளத் தொடங்கின. மெல்ல தோளிலும் ஏறிக் கழுத்தை வளைத்த அவனைச் சிவ ரூபியாக்கிப் பார்த்தன.

அந்தப் பரமனின் கழுத்தில்கூட ஒரு நாகம்தான் இருக்கும். இவன் கழுத்திலோ இரட்டை நாகம். அதுவும் கருநாகம்!

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கள் குடியர்களிடம் இப்பொழுது தொடை நடுக்கம். அவன் இதற்குள் புற்றின் மேல் மாலை போல அவிழ்ந்து விழுந்த தன் பாகைத் துணியை எடுத்து தலையில் பழைய படி பாகையாகக் கட்டிக் கொண்டான். பின் நாகங்களைக் கழுத்திலிருந்து விலக்கிப் புற்றுக்குள் விடத் தொடங்கி னான். அவை இரண்டும் புற்றுக்குள் நுழைந்து காணா மலும் போயின.

இதையெல்லாம் ஒரு அதிசயக் காட்சி போல் கண்டு கொண்டிருந்த குடியர்கள் அவனை இப்பொழுது மிகுந்த பயத்துடன் பார்த்து, "ஏய்! உண்மையைச் சொல். யார் நீ?" என்று கேட்க, அவனிடம் சற்றே கேலியான ஒரு தெற்றுச் சிரிப்பு.

"நானா? நானொரு நாக வம்சத்தவன்?" என்றான் முதல் முறையாக.

அதைக் கேட்டு அவர்கள் முகம் வெளிற ஆரம்பித்தது.

"நாக வம்சத்தவனா- என்றால் கெங்க நாட்டானா நீ?" இது இன்னொருவன்.

அவனிடம் ஆமோதிப்பாய்த் தலையசைப்பு.

"உன் பெயர்?"

"பரணி- நாகாபரணி!"

"அதனால்தான் பெயருக்கேற்ப நாகங்கள் உன் உடல் மேல் ஆபரணமாய் அழகு செய்ய ஓடி விளையாடியதோ?"

"இருக்கலாம்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"பாண்டிய நாட்டிற்கு எதற்கு வந்தாய்?"

"அது உங்களுக்கு அவசியமில்லாத கேள்வி. மதுரைக்கு இங்கிருந்து எவ்வளவு தூரம்?"

"அதிகமில்லை, அரைக் காதம்தான். இதே பாதையில் போனால் இந்த வைகையைப் போல், ஆனால் அத்தனை பெரிதாக இல்லாதபடி ஒரு கிளை நதி பிரியும்."

"தெரியும்... அதன் பெயர் கிரிதிருமால் நதி! அது பிரபஞ்ச பரம்பொருளான மகாவிஷ்ணு குடிகொண்டிருக்கும் கூடல் அழகர் ஆலயத்தை வளைத்துக் கொண்டு ஓடித் திரியும் நதி. காசியில் கங்கையில் மூழ்கியவர்கள், இந்த கிரிதிருமால் நதியிலும் நீராடினாலே முழுமையான பாபம் தொலைத்தவர்கள் ஆவர் என்பதும்கூடத் தெரியும்."

"நீயும் அப்படிப் பாவம் தொலைக்கத்தான் வந்தாயா?"

"இல்லை...உம்மைப் போன்ற பாண்டிய நாட்டுப் பாவிகளை பார்த்து ஆச்சரியப்பட வந்தேன். ஏர் பிடிக்க வேண்டிய வேளையில் கள் குடிக்கும் உங்களை என்னென்பேன்..?"

"இது எங்கள் மண்ணின் ஆரோக்கிய பானம்."

"என்றால் மகாமுனி வள்ளுவர் ஏன் கள்ளுண்ணாமை குறித்து ஒரு அதிகாரமே படைத்தார்..! அவர் படைத்த அந்தக் குறட்பாக்களை உங்கள் மாமதுரை பொற்றாமரைக் குளமே அங்கீகரித்து உலகப் பொது மறை அது என்று சொல்லாமல் சொன்னதெல்லாமல் உங்களுக்கு மறந்து போய்விட்டதா?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அடேயப்பா! ஒரு கெங்க நாட்டானுக்கு இத்தனை ஞானமா? பலே..."

"பாராட்டுக்கள் எனக்குத் தேவையில்லை. எவரிடமும் மரியாதையாகப் பண்போடு நடக்கக் கற்றுக் கொள்ளுங்கள். எங்கள் கெங்க நாட்டில் பச்சைக்குழந்தையைக்கூட மரியாதையாகத்தான் விளிப்போம். சரி, நான் வருகிறேன்."

நாகாபரணி எனும் அவன் சொன்ன வேகத்தில் தன் புரவியைச் சீண்ட, அது சிட்டாய்ப் பறக்கத் தொடங்கியது.

இவன் எதற்காக வந்திருப்பான் பாண்டிய நாட்டுக்கு?

கிரிதிருமால் நதி.

பெயருக்கேற்ப அந்தத் திருமாலின் நீலச் சொரூபம் போல் நீல நீர்த்தாரையாய் அமைதியாய் ஓடிக்கொண்டிருந்தது. சிவன் வைத்த கையால் ஊற்று பொங்க ஓடி வந்த வைகை இடப்பக்கம் அகண்டு ஓடினால் வலப் பக்கத்தில் அதன் ஒரு பிரிவே அழகர் பெருமானை வலம் வந்து வணங்க விரும்பியது போல் கிரிதிருமால் நதியாய் ஓடிக்கொண்டிருந்தது. நதிக்கரை முழுக்க திருமண் ஸ்ரீசூரண காப்பு தரித்த வைணவர்களின் புனித நீராடல்கள்.

அதிலும் கூடல் அழகர் ஆலயத்தின் அருகாமையிலான இந்திரன் படித்துறையில் பெண்கள் மாத்திரமே நீராடும் இடத்தில் ஏக களேபரம்!

படித்துறைக் கரையில் ஒரு அமர்க்களமான பல்லக்கு. அதன் சுமப்பாளர்கள் தங்கள் கண்ணுக்குச்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கருநீலப் பட்டுத்துணி கட்டப்பட்ட நிலையில் நதிக்கு நேர் எதிர்த் திசை பார்த்து நிறுத்தப்பட்டிருந்தார்கள். ஆடாமல் அசையாமல் ஒரு கொடிமரம் போல் அவர்கள் நிற்பதைப் பார்த்தால் யாருக்கும் சிரிக்கத்தான் தோன்றும்.

இவர்கள் பல்லக்கில் தூக்கி சுமந்து வந்த பெண்ணோ திருமால் நதியில் திளைக்கத் திளைக்கக் குளித்துக் கொண்டிருந்தாள்.

அவளைச் சற்றிலும் அவளின் வயதுப் பெண்கள் வளைச் சங்கிலி போல் கரம் கோத்துக் கட்டிப் பிடித்து நடுவில் அவளை ஒரு தாமரை மொட்டுப் போல் ஏந்திப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களைப் போலா திளைப்பாகக் குளிக்க முடியாத சில முதிர்ந்த பெண்கள், பசு மஞ்சள் பூசி படித்துறையின் முதல் படியிலேயே அமர்ந்து முழங்கால் நனைய ஓடும் நீரில் ஒரு காக்கைக் குளியலை நிகழ்த்திக் கொண்டிருந்தாலும் ஆற்றுக்குள் அமர்க்களம் பண்ணும் அந்த இளம் பெண்களின்செயலுக்காகப் பொறாமைப் படாமல் இல்லை.

"பெண் என்றால் அடக்கம் வேண்டும். அடக்கம் தானே நம் முதல் ஆபரணம்- இது தெரியாமல் இப்படியா திளைப்பது?"-ஒருத்தி மற்றொருத்தியிடம் சலித்துக் கொள்ள, அவளோ எச்சரிப்பது போல் அவளைப் பார்த்தாள்.

"உஸ்ஸ்... பார்த்துப் பேசு. நீ யாரைப் பற்றிப் பேசுகிறாய் என்பதை உணர்ந்து பேசு. பட்டர் அழகர் நம்பியின் ஒரே பெண் மதுரவல்லியைப் பற்றி என்பதை மறந்து விடாதே-"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"தெரியும். தெரிந்துதான் பேசுகிறேன். இவள் பெரிய சக்கரவர்த்தியின் மகளா என்ன? சாதாரண கோயில் பட்டரின் மகள்தானே- இவளுக்கு எதற்குப் பல்லக்கும் அரசவையின் எடு பிடிகளும்?"

"எல்லாம் ராஜாங்க விஷயம். அதிலும் பாண்டிய நாட்டு ராஜாங்க விஷயம் என்றால் அதில் நுட்பம் நூறு இருக்கும். எதையாவது உளறி ஆபத்தில் சிக்காதே... முதலில் கரை ஏறப் பார்."

"மதுரவல்லி ஒன்றும் சாமானியப்பட்ட பெண் இல்லை. அவள் அந்த மகாலட்சுமியின் சொரூபம்" என்று பரிந்து பேசியவள் மகாலட்சுமி என்று வர்ணித்த மதுரவல்லியை ஆற்றில் நோக்கிட, அதற்குத் தோதாக மதுரவல்லி எனும் அந்த இளம்பெண்ணும் ஆற்றின் நடுவில் அப்படித்தான் தெரிந்தாள்.

'நிலாத்துண்டம் நீரில் விழுந்த மாதிரி மேனியில் ஒரு பளபளப்பு. ஓடும் ஆற்றில் ஒட்டி ஓடப் பார்த்து இயலாது போய்ச் சாரைப் பாம்பாய் வளைந்து நெளியும் நீண்ட கூந்தலிலோ நிறைந்த தன்மை. வண்டு விழிமேல் பட்டுப் பூச்சியின் இயைந்த சிறகசைப்பாய் இமை விரி மூடல்கள். கன்னமோ கவ்விக் கடிக்கத் தூண்டும் மாம்பழக் கதுப்பு. மூழ்கி எழும் வேளையில் முண்டித் திமிறும் மார்பில் மலை வெள்ளரிகளின் மதர்த்த செழுமை.

-பார்த்தால் பார்த்துக் கொண்டே இருக்கலாம். சித்தத்தில் வேறு எண்ணமே தோன்றாது.

பெண்களுக்கே பொறாமையைத் தூண்டும் அந்த வதனத்தை ஆடவர்கள் பார்த்தால் அலைக்கழிந்துதான் தீர வேண்டும்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அதன் நிமித்தம் மதுரவல்லியால் மனம் சிதையாத வாலிபர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். தினமும் காலை வேளையில் கூடலழகர் பெருமானை வழிபட மலர்க் கூடையுடன் அவள் வரும் அழகிற்கே ஆயிரம் கழஞ்சுப் பொன்னும் தரலாம்.

மதுரவல்லியின் சொரூபம் மட்டுமா அழகு?

அவள் குரலும்தான்.

நாகணவாய் பட்சிகளே நாணிக்கோணும் அளவுத் தேன் பாகாய் இயைந்த குரல்.

அந்தக் குரல் வளத்தோடு அவள் கூடல் அழகனை வியந்து பாசுரம் பாடினால் கூட்டமே பரவசப்பட்டும் போகும்.

ஒரு நாள் அந்தக் கூட்டத்தில் மாறுவேடத்தில் பாண்டிய மாமன்னன் பராந்தக நெடுஞ்சடையனும் இருந்து உருகிக் கரைந்ததால்தானே மதுரவல்லி இன்று பல்லக்கு-பரிவாரம் என்று சீரெல்லாம் பெற நேர்ந்தது.

அந்த உருகலும் கரைவுமேகூட ஒரு தனிக்கதை... அற்புதமான காதல் வரலாறு!

ஆனால், அந்த வரலாற்றைத் திருத்தி எழுத ஒரு வல்லூறை காலம் அனுப்பும் என்று யாருமே நினைத் திருக்க மாட்டார்கள்.

அந்த வல்லூறும்கூட அந்த நதிக்கரையை எட்டி ஆற்றில் திளைக்கும் மதுரவல்லியை ஒரு மரத்தின் பின்னால் நின்று வெறித்து நோட்டமிடுகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

சற்று முன் வைகைக் கரையோரம் களைத்து நடந்து நாக சர்ப்பங்களோடெல்லாம் கொஞ்சி மகிழ்ந்த கெங்க நாட்டான் நாகாபரணியே அந்த வல்லூறாக நிற்கிறான்.

"அண்ணா, மதுரவல்லியைக் கொன்றாலன்றிப் பாண்டியராஜர் இதயத்தில் என்னால் இடம்பிடிக்க முடியாது. அப்படி என்னால் என் காதலில் வெற்றி பெற முடியாத பட்சத்தில் நான் உயிர் வாழ்வதிலும் அர்த்தமிருக்காது. மறைந்த பாண்டிய பேரரசர் இரண தீர கோச்சடையார் மாறவர்மன் இராசசிம்மனுடன் நமது குறுநில நாட்டுக்கு ஏற்பட்ட இரத்த பூர்வமான உறவு என் மூலமாக, அவர் புதல்வரிடமும் வலுப்பட்டால்தான் நமக்கும் நம் நாட்டுக்கும் வளம் என்றால் அதற்கு முழு முதல் தடையே இந்த மதுரவல்லிதான். சாதாரண பட்டர் பெண்தானே என்று இளப்பமாகக் கருதினால் நாம் தாம் ஏமாந்து போவோம். அவளை நெடுஞ்சடையர் கண்ணுக்கு இமையாய்க் காத்து நிற்பதை நீ நெருங்கி னால்தான் அறிவாய்."

நாகாபரணியின் உள்ளத்தில் அவன் ஆசைத் தங்கையின் அழுகுரல் விம்மலுடன் ஒலித்து அடங்கிய போது மதுரவல்லியும்கூடத் தோழியர் புடைசூழப் படித்துறை தொட்டு ஈரம் சொட்ட படி ஏறித் தலை துவட்டத் தொடங்கியிருந்தாள்.

நாகாபரணி அவளைக் கடூரமாய் வெறித்தான்.

'பெண்ணே, என்னை மன்னிப்பாயாக! எனக்கு என் நாட்டு நலனும் என் தங்கையின் மகிழ்வுமே முதல் இரண்டு தேவைகள். அதற்காக நான் எதையும் செய்வேன்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உன்னை நெருங்குவது உங்கள் பாண்டி நாட்டவர்க்கு வேண்டுமானால் இயலாச் செயலாய், இடர் தரும் துயரமாய் இருக்கலாம். இந்த நாகாபரணிக்கல்ல.'

அவன் தனக்குள் கருவியபடி இடையிலிருந்து ஒரு கட்டாரியை எடுத்தான். படித்துறை நோக்கி மதுரவல்லியின் மார்புக்குக் குறி வைத்துக் கரத்தை ஓங்கியவன் தோள் மேல் ஓர் இரும்புக் கரம் தடுப்பது போல் விழுந்தது.

ஆனால், கட்டாரி கை மீறிச் சீறிப் பாயத் தொடங்கி விட்டது.

# 2

**கா**ற்றைக் கிழித்தபடி பயணித்த அந்தக் கட்டாரி மேலாடையைத் துவட்டிப் பிழிந்தபடி நிற்கும் மதுரவல்லியின் இடது தோள் பட்டையில் தைத்தே விட்டது!

மதுரவல்லி அதன் நிமித்தம் அலறிய அலறலில் படித்துறையே கதிகலங்கிப் போயிற்று.

அரைத்த சந்தனம் போன்ற அவள் வலக்கரம் நொடியில் சிவந்த குருதியால் மூடிப் போயிற்று.

"ஐயகோ... யாரது இப்படிச் செய்தது? என்ன நடக்கிறது இங்கே?" ஒருத்தி பதற, இன்னொருத்தி மயங்கி விழுந்த மதுரவல்லியைத் தாங்கிக் கொள்ள- பல்லக்குத் தூக்கிகளைப் பார்த்து ஒருத்தி கை தட்டி அழைக்க... அந்தப் படித்துறையே பரபரப்புக்கு உள்ளாகிட, கூட்டம் அதிர்வில் பிளந்த வாயை மூடவில்லை.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அதே சமயம் கட்டாரியை எறிந்த நாகாபரணியைத் தடுக்கப் பார்த்த இரும்புக் கரத்தின் பிடியில் நாகாபரணி திணறத் தொடங்கியிருந்தான்.

"அடேய்- யாரடா நீ? ஒரு பட்டத்து ராணியைப் போன்ற எங்கள் மதுரவல்லி தேவியாரை மறைந்து நின்று தாக்கிய உன்னை-"

அந்த இரும்புக் கரத்துக்குரிய சாத்தன் கார்கோடன் என்பவன் விட்ட குத்தில் நாகாபரணி நிலைதடுமாறிப் போனான். நிமிர்ந்து சுதாரிக்கப் பார்த்து இயலாமல் போன அதே சமயம் தலைப்பாகையை நழுவ விட்டு, தன் சுருண்ட சிகையைக் காட்டியபடி தடுமாறிய அவனை அந்தச் சாத்தன் கார்கோடன் மேலும் தாக்க முனைந்து நெருங்கியபோது, நாகாபரணியிடம் சமயோசிதப் புத்தி துல்லியமாக வேலை செய்தது.

சடாரென்ற கையில் அகப்பட்ட கிரிதிருமால் நதி தீரத்து வண்டல் மண்ணாலே எதிரியின் முகத்தில் அறைய அது நன்றாகவே வேலை செய்தது.

அவன் கண்ணைப் பிசைந்து தடுமாறத் தொடங்கிய அந்த நொடிப் பொழுதை ஸ்வீகரித்தபடி நிமிர்ந்த நாகாபரணி அருகில் தயாராய் நின்ற தன் புரவி மேல் ஏறிச் காற்றாய்ப் பறந்து தப்ப ஆரம்பித்தான்.

அவன் புரவியைச் செலுத்த ஆரம்பித்த அதே பாதையிலேயே மதுரவல்லியைச் சுமந்தபடி பல்லக்கு வெகு வேகமாக விரைந்து கொண்டிருந்தது.

ஒரு விநாடி புரவியை நிறுத்திப் பல்லக்கை வெறித்த நாகாபரணியைப் பல்லக்குத் தூக்கிகளும் சேடியப் பெண்களும் அதிர்ந்து நோக்குகின்றனர்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"நான் எறிந்தது சாதாரண கட்டாரியல்ல. விஷக் கட்டாரி. இதிலிருந்து மட்டும் இவள் பிழைத்து விட்டால் நான் காட்டாரியைப் பயன்படுத்துவதையே நிறுத்திக் கொள்வேன்" என்று உக்கிரமாகப் பேசிவிட்டுத் திரும்பப் புரவியைச் சீண்டவும், அது காற்றைச் சண்டைக்கிழுத்தது.

அனைவரும் அவன் கருத்தால் மேலும் அதிர்ந்து அந்தப் பல்லக்கை வெகு வேகமாய்ச் சுமந்தபடி எதிரே தெரியும் கூடல் அழகர் கோபுரத்தை நோக்கியபடி ஓட்டமாய் ஓட ஆரம்பித்தார்கள்.

ஆலயத்தை ஒட்டிய மாட வீதியிலேயே இருக்கிறது மதுரவல்லியின் மனை.

'பட்டர் அழகர் நம்பி அங்கு இருக்கிறாரோ இல்லை, ஆலயத்தில் திருச்சந்நிதியில் கைங்கர்யத்தில் இருக்கிறாரோ? மதுரவல்லி தேவியார் இப்படி அந்நியப் புருஷனால் தாக்கப்பட்ட சேதி அறிந்தால் அதைத் தாங்குவாரோ-மாட்டாரோ?'

சுமந்தபடி ஓடும் சிவிகைக்காரர்கள் மனத்தில் இது போல் பலவிதமான எண்ணங்கள்.. 'அழகர் நம்பியைக் கூடச் சமாளித்து விடலாம்-மாமன்னரை நினைத்தால்தான் ஈரக்குலையே நடுங்குகிறது' என்கிற நினைப்பு ஒரு சேடியப் பெண்ணிடம்.

'உருக்குக்கு நிகரான வீரன் சாத்தன் கார்கோடன் இருந்தும் இப்படி ஆகி விட்டதே!" என்று இன்னொருத்தி பதைக்கும் சமயம் எதிரில் ஓடி வருகிறார் பட்டர் அழகர் நம்பி.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வெண்பட்டுக் கச்சமும்-கரும்பச்சைத் துவட்டலு மாய்த் திறந்த மார்பில் பூணூலாட—மகாவிஷ்ணுவின் திவ்ய ஆயுதங்களுடன் சங்கும் சக்ரமும் திருமண் சின்னத்திற்கு இடவலமாய் நின்று இயங்குகின்ற மாதிரி, தோள் இரண்டிலும் சமாஷ்ரயணம் செய்து கொண்ட அச்சின்னம் தாங்கி அவர் ஓடிவரும் கோலத்தில் ஒரு அகர கதி தெரிகிறது. மேனி தழைக்க தரித்த பன்னிரு திரு மண்ணில் நெற்றித் திருமண் மாத்திரம் அவர் ஓடி வந்த வேகத்தில் வியர்வைக் குழுமத்தால் கரைந்து கொண்டிருக்கிறது.

"மகளே மதுரா! அம்மா, உனக்கு என்ன ஆயிற்று? உன்னைத் தாக்கவும் ஒருவரா-நினைக்கவே பதைக்கிறதே நெஞ்சு-" பட்டர்பிரான் நெருங்கியபடி விம்முகிறார்.

"பட்டரே உடனடியாகத் தேவியாரை மருத்துவர் வந்து பார்த்தாக வேண்டும். எதிரி எறிந்த கட்டாரியில் நஞ்சு உள்ளது. அதை அவனே நின்று கூற நாங்கள் கேட்டோம்" என்று ஒரு பல்லக்குத் தூக்கி கூறவும் பட்டர் அழகர் நம்பி விதிர்த்துப் போகிறார்.

சிவிகைத்துணி விலக்கி உள்ளே மயங்கிய நிலையில் உயிர் மூச்சுக்காக இளைக்கத் தொடங்கி, கண்கள் செருகக் கிடக்கும் மதுரவல்லியைப் பார்த்து விதிர்ப்பைக் கூட்டியும் கொள்கிறார்.

இதற்குள் அங்கே சில புரவிகள் வந்து குழுமின. அந்தப் புரவி கூட்டத்தில் கம்பீரமாக, அதே சமயம் கண்கள் சிவக்கத் தெரிகிறான் சாத்தன் கார்கோடன் என்பவன்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கையும் களவுமாகப் பிடித்த நாகாபரணியைத் தப்ப விட்டுவிட்ட தவிப்பும் துடிப்பும் அவன் முகத்தில் ஒரு புறம் அலை மோத, மறுபுறத்தில் அவன் மதுரவல்லி தேவியாரைப் பிழைக்கச் செய்ய அரண்மனை மருத்து வரை அழைத்து வந்திருப்பதும் தெரிகிறது.

மருத்துவர் தம் கடப்பாட்டை உடனடியாகச் செய்ய ஆரம்பமாகி விட்டார்.

நாடித் துடிப்பை அளந்து பார்த்துவிட்டுப் பதைப்பை முகத்தில் தேக்குகிறார்.

கட்டாரி விஷத்தால் ரத்தக் கூட்டமே துவண்டு ஓடு வதை அவரால் துல்லியமாக உணர முடிகிறது.

"மருத்துவரே...தேவியார் பிழைத்தால் கட்டாரி எறிவதையே நிறுத்திக் கொள்வதாக அந்தக் கடூரன் பேசிச் சென்றிருக்கிறான். எறிந்ததும் விஷக் கட்டாரியாம். தாங்கள்தான் எப்படியாவது மீட்க வேண்டும்..."

ஒருவன் அருகிருந்து பதற, கட்டாரி தைத்த இடத்தைத் தைல நீரெடுத்துக் கழுவுகிறது மருத்துவர் கரம். கூட்டமே அமைதியுடன் காண்கிறது. தைத்த கட்டாரிகூட அருகில்!

"எப்படியும் பிழைக்கச் செய்து விடுவேன். கவலை வேண்டாம்" எனும் மருத்துவரைப் பட்டர் அழகர் நம்பி கேவலுடன் நோக்குகிறார்.

இதற்குள் ஒரு வயதான பெரியவர் அழகர் நம்பியை நெருங்கி, "நம்பி-நம்பி- என்னடாவாயிற்று மதுராவிற்கு? நாமெல்லாம் கைங்கர்ய பிராமணர்கள். ராஜாங்க தொடர்புகளை நம்மாலெல்லாம் தாங்க முடியாது என்றால் கேட்டாயா நீ.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இப்பொழுது பார். ஊர்ப்பேர் தெரியாதவன் எல்லாம் கட்டாரி எறிகிறான். பாண்டிய அரசின் மேலான வஞ்சத்திற்கு நம் பெண்ணைப் பலி கேட்கிறான். நன்றாக இருக்கிறதா இது?" என்று அவர் புலம்பத் தொடங்குகிறார்.

அதே சமயம் வைத்தியர் தம் கடப்பாட்டில் கண்ணாயிருந்த அந்தத் தருணத்தில் சாத்தன் கார்கோடன் அந்த கட்டாரியை எடுத்து உற்றுப் பார்க்கிறான். அதன் கைப்பிடியில் படம் விரித்த நாகத்தின் முத்திரை!

**வா**னில் கிருஷ்ண பட்ச பௌர்ணமி!

தண்ணிலவின் வெண்ணொளி மனத்தின் மெல்லிய உணர்ச்சிகளைத் தூண்டி மனதைச் சுகந்தத்தில் மிதக்க விட வல்லது என்பதற்கேற்ப, அரண்மனைப் பஞ்சணையில் ஒரு பாம்பென நெளிதலுடன் கிடக்கும் அந்தப் பெண்ணிடத்திலும் அது உணர்ச்சிகளைத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தது.

வெண்ணொளியின் வசீகரம் ஒருபுறம் என்றால் அவள் மணிக்கட்டில் தரித்திருந்த மனோரஞ்சித மலர் வளையத்தின் வாசமோ அவளைக் கிறங்கவே வைத்து விட்டது.

பஞ்சணையில் மல்லாந்தபடி கிடக்கிறாள் அவள் அவள் விழி சுழன்றுவரும் திசையெல்லாம் சுவர்களில் வண்ண வண்ண ஓவியங்கள். ஓவியங்கள ஒருவகை உயிர் பெற்ற தன்மை, அதிலும் யானை ஒன்றின் தந்தம் பற்றி அதையே மண்டியிடச் செய்யும் மார்பு விரிந்த ஒரு வீரனின் வீர சாகஸமான ஓவியம். ஓவியமாகத் தெரியாமல் நேர் எதிரே நடைபெறும் ஒரு வீர நிகழ்ச்சியாகவே படுகிறது அவளுக்கு.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அந்த வீரனைப் பார்க்கும்போது தன் மனதில் ஆழப்பதிந்து கிடக்கும் பாண்டியப் பேரரசின் உருவாகவே அவளுக்குத் தோன்றுகிறது.

பாண்டியர் பராந்தகர் இவனினும் வீரர் என்பதாக எண்ணிச் சற்றே நாணித் தலைகுனிகிறாள் அவள்.

பராந்தக நெடுஞ்சடையர் என்பதற்கேற்ப அரசரின் தோளில் புரளும் அடர்ந்த சடையின் அலைவரிசை நெளிவை ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறாள். அதே சமயம், தன் கூந்தலையும் தன் மதர்த்த மார்பின் மேல் போட்டு உற்றுப் பார்த்து மகிழ்கிறாள். 'பெண்ணுக்கழகு கூந்தல்-ஆனால் அதிலும்கூடப் பாண்டியர் பராந்தகர் பங்கு போட்டுக் கொண்டு விட்டாரே!' என்றெண்ணித் தன் கூந்தலை மீண்டும் பின்னால் விட்டுக் கொள்கிறாள் அவள்.

மெல்ல பஞ்சணை நீங்கி மாடத்தை நெருங்கி ஜில்லென்ற காற்றை முகத்தில் வாங்கி, சற்று மேனி சிலிர்க்கும் அவளுக்குள் இப்பொழுது வாட்டத்தின் கொப்பளிப்பு.

எதிரே மாமதுரையின் பெருவீதி மாடங்கள் பளீரிடுகின்றன. அந்த இரவுக்காலத்திலும் சில பட்சிக் கூட்டங்கள் வானில் நீந்தித் திரிகின்றன. எங்கோ ஒரு நாகணவாய் கூட இழைந்து கூவும் ஓசை.

அனைத்தும் அவளுக்குள் மோக உருண்டையைப் பிசைந்து, 'இந்த மதுரைக்கு நீ எப்பொழுது ராணியாகப் போகிறாய்?" என்று கேட்பதாக ஒரு பிரமை அவளுக்குள். 'எப்படியாவது ஆகி விடு' என்று உள்ளுணர்வு ஒன்று அவளை முறுக்கிப் பிழியும்போது அங்கே யாரோ வரும் அரவம்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உற்று நோக்கியபோது அவளது அந்தரங்கத் தோழி கோமளம்தான் என்பதை அறிந்து எதிர்பார்ப்போடு கோமளத்தைப் பார்த்து அவள் கேட்ட முதல் வினாவே "மதுரவல்லி பிழைக்கவில்லைதானே?" என்பதுதான்.

"இல்லை நாகமாலினி-அவளை நம் வைத்தியர் அனந்தசித்தர் பிழைக்கச் செய்துவிட்டார்" என்று கோமளம் கூறவும், அதைக் கேட்டு வாடி வதங்கிப் போகிறது நாகமாலினி என்கிற கன்னியின் வதனம்.

அதோடு கோப அலை வந்து மையமிட, விழி யிரண்டும் அகண்டு விரிந்து அவள் முகத்தில் ஒருவகைக் கூரத்தைப் பரப்புகிறது.

"என் அண்ணன் நாகாபரணியின் குறிகூடப் பிசகி விட்டதா?" என்று உரக்கவே அரற்றத் தொடங்கு கிறாள் அவள்.

"மாலினி! நாகாபரணியைப் பிடிக்க சாத்தன் கார் கோடன் நாலாபுறமும் தன் படைப் பிரிவையே ஏவி விட்டுள்ளான். இந்த விநாடியில் பாண்டிய மண்ணில் நாகாபரணி இருந்தால் அவன் அகப்படுவது நிச்சயம். அவனைப் பிடிக்காமல் தம் முகத்திலேயே முழிக்கக் கூடாது என்று முழக்கமிட்டிருக்கிறார் பாண்டியர் பராந்தக நெடுஞ்சடையர்" என்று மேலும் அவள் கூறு வதைக் கேட்கவும், நாகமாலினி எனும் அவள், நிஜத்திலும் ஒரு நச்சரவம் போல் மார்பு தூக்கி விழி அகற்றிச் சீற ஆரம்பிக்கிறாள்.

"விட்டால் இந்தப் பாண்டியர் அந்த மதுர வல்லிக்காக உயிர்மூச்சைக்கூட விட்டுவிடுவார் போல் உள்ளதே" என்கிறாள்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அதுதானே காதலின் சக்தி?"

"எது காதல்? அவளோ ஓர் ஆண்டியின் புதல்வி. மாலை கட்டுவதும் பாசுரம் பாடுவதும்- தனக்கென வாழாது ஊர்வாழப் பிராமணீயம் காக்கும் இளம் பிராமண சிகாமணி ஒருவனை மணந்து, இந்தப் பாண்டிய மண்ணில் நிறைந்து கிடக்கும் ஏதோ ஒரு கோவிலில் அக்கார வடிசல் சமைத்து பதிசேவை புரிய வேண்டியவள் மேல் பராந்தகருக்கு வந்த மயக்கத்திற்குப் பேர் காதல் என்றால் அல்லும் பகலும் அனவரதமும் பராந்தகர் நினைப்பிலேயே வளர்ந்து மலர்ந்து அவருக் காகவே, காத்திருந்தபடி உருகிக் கரைந்து கொண்டிருக் கிறேனே எனது உணர்ச்சிக்கு என்ன பெயர்?"

"உன் உணர்ச்சியும் காதல்தான். அதில் ஐயமில்லை. ஆனால், சுத்தமான ஒருதலைக் காதல்."

"அது இரு தலைப்படத்தான் இடராய் நிற்கும் மதுரவல்லியைக் கொன்றுவிடச் சொன்னேன். தப்பிப் பிழைத்துவிட்டாளே, பாதகி!"

"என்ன செய்ய முடியும்...? அவள் விதி வலுவாக உள்ளது."

"இந்த விதி, வினை இவைகளில் எனக்கு நம்பிக்கை கிடையாது. கோமளம், மனித மதி முன்னால் விதியாவது வினையாவது..."

"உன் மன உறுதியைப் பாராட்டுகிறேன். ஆனால், உன் கருத்தை ஒப்புக் கொள்ள மாட்டேன்..."

"ஒப்புக்கொள்ள வைக்கிறேன். இடையறாது துயர்தரும் பல்லவனுக்குப் பாடம் புகட்டிவிட்டு, தன்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

மணம் குறித்துச் சிந்திப்பதாகக் கூறியுள்ள பராந்தக நெடுஞ்சடையரின் மணிமார்பில் இந்த மாலினிதான் தலை சாயப் போகிறாள். அதை நீ பார்க்கத்தான் போகிறாய்" என்கிறாள் நாகமாலினி.

"உன் உற்ற தோழி என்ற முறையிலும் உன் நலத்தில் அக்கறை உடையவள் என்பதாலும் உன் ஆசை வெற்றி பெற அந்த நாராயணனை வேண்டிக் கொள் கிறேன் நாகமாலினி" எனும் கோமளத்தை அதிசயமாய்ப் பார்க்கிறாள் நாகமாலினி.

"அட... நீகூட நாராயணனை நம்புவதாகக் கூறுகிறாயே. நாமெல்லாம் நாக வம்சத்தவர்கள்..." என்கிறாள்.

"தெரியும். ஆனால், பாண்டிய மண்ணில் இன்று ஒரு புதிய அலை போல் வீசும் விஷ்ணு பக்தி என்னையும் ஆட்கொண்டு விட்டது. பாண்டிய அரசர்களிலேயே உன் ஆசைப் பராந்தக நெடுஞ்சடையரும்கூட விஷ்ணு பக்தர் தான். ஒரு முறை அந்தக் கூடல் அழகர் பெருமானைத் தரிசிக்கச் சென்ற நானும்கூட அந்தப் பேரழகு ஸ்தூலம் கண்டு மெய்சிலிர்த்துப் போனேன். அழகில் பெரியவர் சிவனா திருமாலா என்றால் திருமாலே என்பது என் முடிவு."

"போதும் கோமளம், போதும். விட்டால் இந்த மண்ணின் புதல்வர்கள் போல் சங்கத்தில் வைத்து விவாதப் பொருள் ஆக்கிவிடுவாய் போல தெரிகிறதே.

ஏனோ என்னால் அந்த விஷ்ணுவை நினைக்கவே பிடிக்கவில்லை. நினைத்தாலே என்னையும் அறியாமல் அந்தப் பட்டரின் உருவமும்-அவர் மகளான அந்த மது

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வல்லியின் முகமும்தான் அகத்தில் தோன்றுகின்றன."- என்று ஒரு சராசரிப் பெண் போல பேசும் நாக மாலினியைச் சற்று கெக்கலிப்புடன் பார்த்துச் சிரிக்கிறாள் கோமளம்.

"பராந்தகரின் காதலையே உன்னால் ஜீரணிக்க முடியவில்லையே.. அவர் மதுரவல்லியை மணம் செய்து கொண்டால் உயிரையே விட்டுவிடுவாய் போல் உள்ளதே" என்றும் பரிகசிக்கிறாள்.

"அதில் உனக்குச் சந்தேகம் வேண்டாம் கோமளம். பராந்தகரை அடையவே நான் என் சொந்த மண்ணான கெங்க நாட்டை விட்டு இங்கு வந்துள்ளேன். இராச சிம்மன் என்றும், கோச்சடையர் என்றும் இரணதீரர் என்றெல்லாம் புகழப்பட்ட பராந்தகரின் தந்தையை என் அத்தை கை பிடித்தது போல் நான் அவர் மகனைக் கை பிடிப்பேன்."

"பாண்டிய நாட்டுக்கும் கெங்க நாட்டுக்குமான உறவினை என்றும் இறுக்கமுடன் வைத்திருப்பேன். அதற்கு குறுக்கே யார் வந்தாலும் அவர்களை எது வேண்டு மானாலும் செய்வேன்."

நாகமாலினியின் பேச்சு கோமளத்தையே சற்றுப் பீதிக்குள்ளாக்குகிறது.

அந்தக் கணத்தில், கிருஷ்ண பட்ச பௌர்ணமியின் தண்ணொளிக் குளுமையை மீறி நாகமாலினி அனல் வயப்பட்ட அந்தப் பொழுதில்.. பரந்த அந்தப் பாண்டிய அரண்மனைக்குள் பாண்டியப் பேரரசன் என்றும், ஆலவாய் நகருக்கே அரசன் என்றும், சொக்கன் பட்டி னத்து ராஜா என்றும் ஊரும் உலகமும் போற்றும் பராந்தக

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நெடுஞ்சடைய பாண்டியன் மதுரவல்லிக்கு நேர்ந்த கொடுமை பற்றிய புழுக்கத்துடன் குறுக்கும் நெடுக்குமாய் ஒரு யானை போல் நிலமதிர நடந்தபடி யோசித்த வண்ணம் இருக்கிறான். அருகில் சாந்த சொரூபியாய் அவனது மந்திரி மதுரகவி.

"வந்து கட்டாரி எறிந்தவன் ஒருக்கால் பல்லவனோ?"

"இல்லை- கட்டாரியில் அரவின் சின்னம் உள்ளது மன்னா-"

"என்றால் கெங்க நாட்டவனா?"

"இருக்கக்கூடும்."

"கெங்கர்கள் நம் எதிரிகள் இல்லையே?"

"அப்படிக் கூறிவிட முடியாது."

"என்றால் அந்தக் கெங்கன் மதுராவைத் தாக்கக் காரணம்?"

"அவனைப் பிடித்தால் தெரிந்துவிடும்?"

"பிடிபட்டும் தப்பவிட்ட நம் கோழைத்தனத்தை என்னவென்பது?"

"அவன் செய்தது நரிச் செயல். குற்றம் சாத்தன் கார்கோடனுடையது அல்ல."

"புலிகளை நரிகள் என்ன செய்துவிட முடியும்?"

"பதற்றம் வேண்டாம் பராந்தகரே- அவன் நிச்சயம் பிடிபட்டுவிடுவான்."

மதுரகவியின் கருத்துக்கு இசைவாக வீரன் ஒருவன்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

மனிதன் பிடிபட்டுவிட்டான்" என்றபோது பராந்தக நெடுஞ்சடையனின் முகத்தில் ஒரு செருக்கும் ஆவேசமும் சம அளவு கலந்து ஓடின!

# 3

எதிரி கிடைத்துவிட்டான்!

பாண்டிய வீரர்களிலேயே அசகாயன் சாத்தன் கார்கோடன். அதனாலேயே மதுரவல்லிக்குப் பாது காவலாக மன்னன் நெடுஞ்சடையனால் நியமிக்கப் பட்டவன்.

ஒரே சமயத்தில் வேங்கைப் புலியையும், சிங்கத்தை யும் சந்திக்கச் சொன்னாலும் அவற்றைச் சந்தித்து, அவற்றின் கோரப் பிடியிலிருந்து மீண்டு வரத் தெரிந்தவன். இப்படிப்பட்ட வீரனிடமிருந்து தப்பித்த எதிரி திரும்பக் கிடைத்து விட்டான்!

எங்கே பாண்டிய மண்ணின் வீர மாண்பு ஒரு பழங்கதையாகி விடுமோ, புழுதியில் புரண்டு நெளிய நேருமோ என்றெல்லாம் கவலை மிகக் கொண்ட மன்னன் பராந்தக நெடுஞ்சடையன், இப்பொழுதுதான் உயிர் பெற்றவன் போல் புத்துணர்ச்சியோடு தெரிகிறான். உள்ளுக்குள் எண்ணப் புரளல்.

'வரட்டும் எதிரி... அவனை இரண்டிலொன்று பார்த்து விடுகிறேன். என் இதயச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் மதுரவல்லியையே குற்றுயிராக்கிய அவனை யும் அதே கதிக்கு ஆளாக்காவிட்டால் இந்த ஊனுக்குள் பாண்டிய ரத்தம் வீரச் சூட்டுடனும், காதல் சுவையுடனும் ஓடுவதற்கே அர்த்தமில்லாமல் அல்லவா போய் விடும்?'

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

-அது ஒரு மெல்லிய மாலைப் பொழுது!

கடம்ப விருட்சப் பெருநகரின் ராட்சசத் தலை மரங்களெல்லாம் மந்த கதியில் தென்றலாட்டில் திளைத்துக் கொண்டிருக்க, கோகிலங்களும், கோவில் புறாக்களும் வான வீதியில் சிறகசைக்க, ஆங்காங்கே பொன்முலாம் பூச்சலில் மேகத் துண்டுகள்.

நினைத்துப் பார்க்க ரம்மியமாக இருந்தாலும் இயலாத கொதிப்பில் பராந்தகன் அரண்மனை மாடத்தில் குறுக்கும் நெடுக்கும் நடக்க மந்திரியார் மதுரகவிக்குக்கூட அது சற்று; உற்பாதம் செய்கிறது.

இருந்தாலும் எதிரி நேரில் அழைத்து வரப்பட்டு, விசாரணை முடிந்து விஷய அரும்புகள் மலரும் வரை இந்தச் சிங்கத்தின் ஆவேசத்தை தடுத்து நிறுத்திவிட முடியாதுதான்.

மதுரகவியாரும் சமாதான நினைப்போடு நாகாபரணிக்குக் காத்திருக்க, அந்த அரண்மனைக்குள் ஒருத்தி மட்டும் உயிரே போய்விட்டது போல் துடித்துக் கொண்டிருப்பதை என்னவென்று சொல்ல-

"கோமளம்...அண்ணன் நாகாபரணி பிடிபட்டு விட்டானாமே? பேரரசன் அண்ணனிடம் விஷயத்தை வெளிக்கொண்டு வந்து விட்டால் எந்த நாளும் எனக்கும் என் கெங்க ராஜ்ஜியத்துக்கும் அவர் மனசில் இடம் இல்லாமல் போய்விடுமே! இப்பொழுது நான் என்ன செய்வேன்?"

"பதட்டப்படாதே நாகமாலினி. நாகாபரணி என்ன சின்னக் குழந்தையா இல்லை சளைத்த வீரனா-

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அவனைக் கண்டந்துண்டமாக வெட்டினாலும் உண்மை வெளியாகாது என்றே நம்புகிறேன்."

"எனக்கும் அந்த நம்பிக்கையுண்டு. ஆயினும் அவன் கெங்க நாட்டவன் என்பது தெரிந்தால்கூட அரசர்க்கு எங்கள்பால் பற்றுதல் போய் விடுமே-"

"பொறுத்திரு. என்ன நடக்கிறது என்று பார்ப்போம். ஒருக்கால் அரசர் அவனைக் கெங்க நாட்டவன் என்று கண்டு கொண்டால், இல்லையில்லை இவன் பல்லவன் என்று நிரூபிக்க நம்மால் ஆனதைச் செய்வோம்- பல்லவன் தான் இன்று நம் முதல் எதிரி. அவனுக்குள் தான் நம்மை அழிக்கும் ஆசையும் புயல் போல வீசிக் கொண்டிருக்கிறது."

அதன் நிமித்தம் உளவறிய வந்த எவ்வளவோ பல்லவ ஒற்றவர்கள் இன்று நம் சிறைக்கூடத்தில்.

'விதவிதமான வேடமிட்டு வந்தவர்கள் இன்று கெங்க நாட்டான் ஆகவும் வேடமிடப் பார்க்கிறார்கள் என்போம்."

கோமளத்தின் பொருள் செறிந்த பேச்சைக் கேட்டு, மிகுந்த துடிப்பிற்கு நடுவே துளி பிரகாசமடைகிறாள் நாகமாலினி.

"ஆம்- அப்படித்தான் செய்தாக வேண்டும். அதே சமயம் அண்ணனை எப்படியும் காப்பாற்றியும் ஆக வேண்டும். அதற்கு எது வழி?"

**நா**காபரணியை ஏறத்தாழ ஒரு புலியைக் கூண்டில் அடைத்து இழுத்து வருகின்ற மாதிரிதான் இழுத்து வந்தார்கள். உடல் முழுக்க இரும்புச் சங்கிலிகளால் பிணைத்து, ஒரு எருதை வண்டியில் பூட்டி, வாலை

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

முறுக்கி விரட்டும் வேகத்துடன் அவனை இழுத்து வருவதை மாமதுரை வீதியே திரண்டு நின்று பார்க்கிறது.

காலையில் கிரிதிருமால் நதி தீரத்தில் அவனைத் தொலைத்ததால் நேரிட்ட அவமானத்தைத் துடைத்து, திரும்பவும் அவனைப் பிடித்துவிட்ட செருக்குடன் முன் நடக்கிறான் சாத்தன் கார்கோடன்.

நாகாபரணியின் நடையில்கூடச் சோர்வில்லை. அகப்பட்டுவிட்ட சோகமுமில்லை!

"பாரேன், அவன் செருக்கை! பேரரசின் கைகளில் அகப்பட்டும் துளியும் அச்ச உணர்வின்றி அவன் நடப் பதைப் பார்த்தால் இந்தத் தைரியம் அந்தப் பல்லவப் புருஷர்களுக்குத்தான் வரும் என்று படுகிறது."

"இந்தப் பல்லவர்களுக்குத் துளிக்கூடப் புத்தியே கிடையாது. நம்மோடு மோதி மண்டை உடைப்பட்டும் இவர்களுக்கு ஏன்தான் புத்தி இப்படிப் போகிறதோ?"

"சோழப் பேரரசே நம்மிடம் பயந்து நல்லிணக்கம் காட்டும்போது இந்தப் பல்லவன் மட்டும் பணிய மறுக்கிறானே?"

"ஏன் திருவனந்தபுரத்து மேனாட்டுக்காரர்கள்கூட தான் தம் பாண்டிய நாட்டைப் பார்த்துப் பொறாமைப் படுகிறார்கள். சேர அரசன் அதியமான்கூட மீசையை நீவிவிட்டுக் கொள்கிறான். ஆனால், இவன் அளவு அவர்களிடம் துள்ளல் இல்லை. இவர்கள் கொட்டத்தை அடக்காவிட்டால் நமக்கு நிம்மதியும் இல்லை."

மாமதுரை வீதியில் இதுபோல் பலத்த தர்க்கங்கள் — வாதங்கள்-பிரதி வாதங்கள்!

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அனைத்தையும் கடந்து குழுமியிருக்கும் ராஜ்ஜிய பிரதானிகளின் சபை நடுவில் கொண்டு சென்று நிறுத்தப் படுகிறான் நாகாபரணி.

ஒரு நீண்ட வீதியையே அவையாக்கியது போன்ற மிகப் பெரிய அரண்மனைப் பகுதி அது. ஆயிரமவர் அமர்ந்திருக்க, அங்குதான் பிரதான சிம்மாசனமும் மற்றை யோர்களின் சரியாசனங்களும் உள்ளன.

இடவலமாய் நேர் எதிராய் மாடங்களும் அங்கே அரச குடும்பத்தவர்களின் ஆர்வமிக்க முகங்களும், குறிப்பாகப் பெண்களை குழுமமும் அங்கேதான் நேரிடும்.

அதிலும் அரசு சிம்மாசனத்திற்கு நேர்எதிர் மாடத் தில் பராந்தகனின் பாசமிகுந்த தாய் மட்டுமே அமர்ந் திருந்து நோக்குவாள்.

இடப்புறத்து மாடம் பராந்தகனின் உற்ற நல் உறவினர்களுக்கு; வலப்புறத்து மாடத்திலோ விருந்தினர் களும், அரசவைக் கலைஞர்களும் அமர்ந்திருப்பார்கள். இங்கேதான் நர்த்தகிகளும்-வாத்திய விற்பன்னர்களும் கூட இருப்பார்கள்.

இவர்களில் எவருக்கும் வெறுமனே கூடும் சபையை விட இப்படி ஒரு பரப்பான நிலையில் கூடும் சபையில் கலந்துகொள்ளத்தான் விருப்பம் அதிகம்.

இதற்கு முன் இப்படித்தான் ஒரு பல்லவ ஒற்றன் எப்படியோ அரண்மனைக்குள்ளேயே நுழைந்துவிட் டான். நுழைந்ததோடு மட்டுமா? ஏறத்தாழ ஒரு மண்டல காலம் அவன் அரண்மனை செயல்பாடுகளைக் கவனிக் காத வினாடிகளில்லை.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

எங்கே யார் நடமாடுகிறார்கள்?

நாணயச் சாலை எங்கிருக்கிறது...? வரிமேடையில் வசூல்தினம் நிகரம் எவ்வளவு? தானியக் களஞ்சியத்தின் இருப்பு எவ்வளவு? படைபலம் எவ்வளவு? பாண்டியர் பராந்தகருக்கு உற்ற நெருக்கமானவர்கள் யார் என்பது வரை கணித்ததோடு, பராந்தகர் உறங்கி, எழும் காலம் வரை சகலத்தையும் கணக்குப் பார்த்து ஒரு வரலாற்றையே அவன் தன் மூளைக்குள் நுணுக்கிச் சேர்த்துக் கொண்டு விட்டான்.

அத்தனை செய்திகளோடும் அவன் தப்பிக்க நினைத்தபோதுதான் கணபதியின் கரம் அவன்மேல் விழுந்தது.

கணபதி-

சாத்தன் கார்கோடனைப் போலவே பராந்தகரின் அன்புக்குப் பாத்திரமான படைத்தளபதிகளில் ஒருவன்.

துப்புத் துலக்குவதிலும், காற்று புகமுடியாத இடத்திலும் உள் நுழைந்து வெளியே வருவதிலும் மிகத்தேர்ந்த மதியூகி. 'வல்லவன் கணபதி' என்கிற முழு நாமத்தோடு பராந்தகர் அவனை அழைத்த மாத்திரத்தில் ஓடிவந்து அவர் கேட்கப்போகும் வினாவைக்கூட முன் கூட்டியே யூகித்துப் பதிலோடு சொல்லி நிற்பவன்.

இன்று வல்லவன் கணபதிகூடப் பிரதானிகளின் சபையில் யூகிக்க முடியாத சிக்கல் நினைப்போடு நின்று கொண்டிருக்கிறான்.

கர்ஜனை முழக்கத்தோடு நாகாபரணியை இழுத்து வந்து சபைமுன் விட்டாயிற்று.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

சபை முழுக்க நாகாபரணியை உற்றுப் பார்க்கிறது. அந்தப் பாகைத் தலை கலைந்த மாதிரி தெரியவில்லை. புருவப் பொட்டும் அவ்வளவாய் அழிந்திருக்கவில்லை. கண்ணிரண்டில் மட்டும் சோக அலை வீசுவது நன்கு தெரிகிறது.

சங்கிலிகளின் பிணைப்புகளலகூட ஒன்றின் மேல் ஒன்று மோதும் சப்தம்.

"யார் நீ" - பராந்தகரி[illegible]ககரன் முதலில் வினா பிறக்கிறது.

நாகாபரணியிடம் மௌனம்.

"இது வேண்டாத மௌனம். நீ வீரனென்றால் வாய் திறக்கத்தான் வேண்டும்." இது மந்திரி ம[illegible]யாரின் ஆணை.

ஆனாலும் நாகாபரணி அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை. இதனூடே மாடத்தில் லேசான சலசலப்பு.

பராந்தகனின் பார்வை மேலே உயர்கிறது.

அவனது அன்புத் தாயும் ராஜமாதாவுமான பூசுந்தரி தேவி அங்கே தெரிகிறாள்.

பூசுந்தரியும்கூடத் தன் சிம்மாசனத்தில் அமராமல் அவை முன் ஒரு நெடுமரம் போல் நின்று நீண்ட நேரம் நோட்டம் விட்டுச் சங்கிலிப் பிணைப்புகளில் சங்[illegible]த்துக் கிடக்கும் நாகாபரணியை ஆழமாகப் பார்த்துவிட்டு சிம்மாசனத்தில் அமர முனைகிறாள்.

பராந்தகன் தன் இருப்பிடத்திலிருந்தே தாயைப் பார்த்துக் கை கூப்ப, அந்த பண்பட்ட செயலைப் பார்த்து

Library No.
District Central Library
நாள் :

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அவை நெகிழ, மெலிந்த ஆரவாரமும் முற்றும் அடங்கிட, திரும்பவும் அனைவரின் கவனமும் நாகாபரணி மேலேயே விழுகிறது.

இப்படி ஓர் அந்தி சந்திப் பொழுதில் அவை கூடுவதும் [redacted] ாயில் இப்படி ஓர் ஆழ்ந்த கவனமும் இப்பொழுதெல்லாம் பாண்டிய மண்ணுக்குச் சாதாரண விஷயங்கள் ஆகிவிட்டன.

பொதுவில் இதுபோன்ற விஷயங்களை அவை கூட்டி பிரஸ்தாபிக்காமல் ராஜ்ய ரகசியமாய்க் கருதி, தனிப்பட விசாரித்து தண்டனை தந்துவிடுவதில் பராந்தக னுக்கோ மற்றையோருக்கோ யாதொரு சிக்கலும் இல்லாத போதிலும், பராந்தகனின் இந்த அவையின் விசாலமான செயல்பாடு ஏதோ ஒருவகை அர்த்தமிக்கதாகவே பலருக்கும் படுகிறது.

ஆனால், மதுரகவியார் மட்டும் ஸ்ரீ சூர்ணம் தரித்த தம் நெற்றி சுருங்க இப்படிப்பட்ட விசாரணைகளைத் த்விர்த்துவிடலாம் என்கிற மாதிரி யோசிப்பதாகவும் தெரிகிறது.

பலரும் இதுபோல் பலவிதமாய்ச் சிந்தித்தும் உற்று நோக்கியும்கூட நாகாபரணியிடம் மௌனம் நீங்கிய மாதிரி தெரியவில்லை. அவனுக்குள் சுதந்திரமான சில புதிய முடிவுகளின் முடிச்சுக்கள்.

எங்கே அவன் வாய் திறந்து பேசக்கூடாததைப் பேசி விடுவானோ என்கிற பயத்துடன் மாடத்தில் கோமளமும் தெரிகிறாள். ராஜமாதா பூசுந்தரிதேவியார் தன் உறவினனான நாகாபரணியை அடையாளம் கண்டு கொண்டுவிடக்கூடாதே என்கிற கவலையும் அவளிடம் இருக்கிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அண்ணன் நாகாபரணியை அத்தைக்கு அடையாளம் தெரிய வாய்ப்பே இல்லை. என் அண்ணன் எனக்கு நேர்ச் சகோதரன் இல்லை. என் தாய் வழியில் அவரது தமக்கை மகன். அத்தை பூசுந்தரியாரோ என் தந்தை வழி உறவினர். அத்துடன் அண்ணன் நாகாபரணி கெங்கநாட்டுத் தலைநகர் தழைக்காட்டிலேயே வளர்ந்து திரியாதவன்.

பொன்னி நதி பொங்கி விரியும் குடகுமலைக் காட்டுக்குள் ஒரு சித்தனைப் போல் பதுங்கி வாழ்பவன். எனவே அவனை ஒரு கெங்கனாய் அத்தையால்கூட அடையாளம் காண முடியாது" என்றெல்லாம் நாக மாலினி ஆறுதலாய்ப் பேசியிருந்தாலும்கூட நாகா பரணியைப் பார்க்கும்போது மனது பதைக்காமல் இல்லை.

"இவனை இப்படியெல்லாம் கேட்டால் சொல்ல மாட்டான். முள் சவுக்கைச் சொடுக்குங்கள்.." என்றொரு குரல் பிரதானிகள் தரப்பில் இருந்து வருகிறது.

அதைத் தொடர்ந்து நாகாபரணி நிமிருகிறான். "கெங்கனைப் போல் தெரியும் நானொரு பல்லவ நாட்டுப் புருஷன். என் பெயர் வஜ்ரகேது!" அவனது பதிலில் அவையே ஒரு விநாடி திகைத்துப் போகிறது. அவனது சமயோசிதத்தை எண்ணிக் கோமளம் வியந்து போகிறாள்.

"போகட்டும்.. மதுரவல்லி தேவியாரை நீ தாக்கக் காரணம்?" இது மதுரகவியாரின் அடுத்த கேள்வி.

"பராந்தகரைத் தாக்கினால் அவர் உடல் மட்டுமே காயப்படும் உள்ளமல்ல! எனக்கு அவர் உள்ளம் காயப் பட்டு அவர் உடைத்து நொறுங்க வேண்டும் என்பது

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

எதிர்பார்ப்பு. அதன் நிமித்தம் அவர் உள்ளத்தில் குடி கொண்டிருப்பவள் மதுரவல்லி தேவியார் என்பதை யறிந்து தேவியாரைத் தாக்கினேன்."

"இதில் உனது எதிர்பார்ப்பு?"

"சின்னக் குழந்தை கூட ஊகித்துவிடும். பாண்டியப் பேரரசர் மனது உடைந்து போனால் மற்றதெல்லாமும் உடைந்து விடும். மதுரையைக் கைப்பற்றியாக வேண்டும் என்ற எங்கள் அரசர் நந்திவர்ம பல்லவரின் ஆசைகூட அதனால் பூர்த்தியாகும்."

"இவ்வளவுதானா? இதற்கு மேலும் திட்டங்கள் உண்டா?"

"எங்கள் பல்லவரிடம் திட்டங்களுக்கா பஞ்சம்? மதுரை எங்களுக்கு வசமாகும் வரை திட்டங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்_"

"உன் அடாத செயலுக்கு மரண தண்டனை விதித்தால்_"

"மகிழ்ச்சியோடு ஏற்பதுதானே வீரனுக்கு அழகு?"

"மறைந்திருந்து ஒரு பெண்ணைத் தாக்கிய நீ எப்படி வீரனாக முடியும்?"

"தேசக் காவலுக்கு இணையாய் ஒரு பெண்ணுக்குக் கூடுதலான காவலும் பாதுகாப்பும் வைத்து அவள்பால் தீராக் காதலும் மையலும் கொண்ட ஒரு மனிதர் அரச ராகவே இருக்கும்போது நான் வீரனாக இருப்பதில் ஆட்சேபனைக்கு இடமே இல்லை."

"அரசன் என்றால் காதல் உணர்வு கூடாதா? காதலியை எதிர்கால மகாராணியாய்க் கருதி இப்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பொழுதே பாதுகாப்புடன் வைத்துக் கொள்வது தவறா என்ன?"

"அது போலத்தான் என செயலும்... மதுரவல்லி யாரைக் கொன்று அகப்பட்டு மடிவதற்கு என்னுயிர் ஒன்றும் அற்பம் இல்லை. அவர் மடியவும் வேண்டும், நான் தப்பிக்கவும் வேண்டும் என்கிற விவேகமான எண்ணத்தில் எடுக்கப்பட்டதே மறைந்திருந்து தாக்கிய செயல்.

என் செயல் தப்பென்றால் ராமாயணத்தில் ஸ்ரீராமன், வாலியை மறைந்திருந்து தாக்கிய செயலும் தவறே..."

நாகாபரணியின் பேச்சில் தெரிந்த ஆவேசமும் பொருளும் கோமளத்தைக் குளிர்வித்தாலும் பராந்த கரைப் பதைபதைக்க வைக்கின்றன.

அவை முழுக்கக்கூடப் பதற்றம் பந்தாடுகிறது.

"என்ன பேச்சு பேசுகிறான் இவன்?"

இவனது கட்டாரி வீச்சைவிடச் சொற்களின் வீச்சு தான் பலமாகவும் ஆழமாகவும் தாக்குகின்றன.

மதுரகவியார் மலைத்து நோக்கினாலும் களைத்துப் போகாத பாவங்களுடன் நடப்பதைக் கவனிக்கிறார்.

மரண தண்டனைதான் இவனது தீர்ப்பென்றாலும், அதை வழங்கும் முன் இது போன்ற குழப்பமான காலங்களில் எல்லாம் பெரிதும் துணை நிற்கும் ராஜ குரு பச்சைமால் தீர்த்தரைப் பார்க்கிறார். ராஜ்ய பிரதானிகள் வரிசையில் அமர்ந்திருக்கும் அந்த வைணவப்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பழம் அர்த்தபுஷ்டியுடன் பராந்தகரை ஒரு பார்வையும் மதுரகவியாரை மறுபார்வையும் பார்த்துச் சற்றுச் செருக்குடன் சிரிக்கிறது.

அந்த சிரிப்பின் உட்பொருள் மதுரகவியாருக்கும் புரியத்தான் செய்கிறது.

'பராந்தகன் வீர புருஷன். ஆனால், காதல் அவன் மேல் விழப்போகும் கறை. அதிலும் அந்தணர் குலத்துக் காதல் பராந்தகனின் வீரத்தையே மழுங்கச் செய்து அவனை நிலைகுலையச் செய்துவிடும். இது புரியாத வரை பார்ந்தகனுக்கு நேரும் எந்த ஒரு களங்கத்தையும் நாம் கழுவுதலும் அசாத்தியமே!' என்று அவர் ஒரு முறை கூறி, நாரைச் சிறகுக்குச் சவால் விடும் வெண் தாடியை தடவி, கவலையோடு சிரித்த விதம் நினைவுக்கு வருகிறது.

"இனியும் இவனோடு என்ன பேச்சு-தன் பிழையைப் பட்டவர்த்தனமாய் ஒப்புக்கொண்ட இவன் சிரம் நாளை இவன் உடலில் இருக்கக் கூடாது.." என்றபடி விடைத்து எழுகிறான், பாண்டியன் பராந்தக நெடுஞ் சடையன்.

"அவசரம் வேண்டாம்.." தீர்த்தரிடம் இருந்துதான் வேண்டுகோள் பிறக்கிறது.

"ஏன் தடுக்கிறீர் தீர்த்தரே..?"

"இவன் பேச்சு என்னைச் சந்தேகப்பட வைக்கிறது. வீர பல்லவர்கள் ராஜ்ய விஷயங்களை இதுபோல் வெளிப்படையாய்ச் சபை அறிய பேசமாட்டார்கள். முன்பு நம்மிடம் அகப்பட்ட ஒற்றர்கள் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசினார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

ஒற்றன் என்பவன் உயிரை விடுபவனாய் வேண்டு மானால் இருப்பான். விஷயத்தை வெளியே விடமாட்டார் கள். அதிலும் நந்திவர்ம பல்லவனின் ஒற்றன் பல்ல வனுக்காகப் பிராணனுக்கும் மேல் ஏதாவது இருந்தால் அதைக்கூட விடுவான். மாறாக இப்படிப் பட்டவர்த் தனமாய்ப் பேசமாட்டான்..."

"ஆகையால்...?"

"ஆகையால் இவனைச் சிறையில் அடைத்து இவன் பற்றிய உண்மை அறியும் பொறுப்பை நமது வல்லபன் கணபதியிடம் விடவும்...

வல்லவன் கணபதியின் கருத்துக்குப் பிறகு இவனைப் பரலோகப் அனுப்புவதா, இல்லை பாண்டிய மண்ணிலேயே பொதி சுமக்க விடுவதா என்பதைப் பின்னர் முடிவு செய்யலாம்."

பச்சைமால் தீர்த்தரின் கருத்துக்கு இசைந்த கருத்து மதுரகவியாரிடம்!

"தீர்த்தரின் கருத்தை நான் முழுமனசோடு வரவேற்கிறேன்" என்று பராந்தகனைப் பார்க்கிறார் மதுரகவியார்.

பராந்தகனும் "அவ்வாறே ஆகட்டும்" என்றபோது மாடத்தில் கோமளத்தைக் காணவில்லை!

கூடல் அழகனின் கம்பீரமான அந்த அமர்ந்த திருக் கோலமும் அருகில் ஸ்ரீதேவி பூதேவி சமேதமும் தரிசிக்கக் கண்ணிரண்டின் போதாமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ, அங்கே பட்டர் அழகர் நம்பி, தம் திருவாராதனைப் பணியில் மூழ்கிக் கிடக்கிறார்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

சந்நிதி முழுக்க புஷ்பங்களின் கலவையான வாசனை மணக்கிறது. 'பாண்டிய மண்ணில் மலர்ந்து மணம் வீசும் அத்தனை ஜாதி பூக்களும் முதலில் கூடல் அழகனுக்குத்தான் சேர வேண்டும். பிறகுதான் அது சாவடிகளுக்குச் செல்லலாம்.' இது பராந்தகன் இடாமல் இட்ட ஆணை!

சந்நிதி முழுக்க தங்கத்திலேயே ஜொலிக்கிறது. அட்சய பஞ்ச பாத்திரங்கள்... கூடல் அழகர் திருவடிக் காப்பிலிருந்து சடாரி வரை சகலமும் சொர்ணமயம்...

அதிலும் கூடல் அழகனின் அந்தக் கிரீடமும் அதில் பதித்துள்ள நவமணிகளும் அதில் பளீரிடும் மாணிக்க வைரங்களும் மாந்தரின் விலை மதிப்புக்குக் கட்டுப் படா தவை.

இமாலயத்துச் சாளக்கிராமங்கள் தனியாய்ப் பட்டுத் துணி மேல் பவித்ரமாய் பளிச்சிடுகின்றன. அதில் ஒன்றில் மாலவனின் சக்கரரூபம். இன்னொன்றில் சங்குகள் வடிவம்.

சென்ற பௌர்ணமியன்று ஒரு வடநாட்டுப் பைராகி, மன்னன் பராந்தகனுக்கு வழங்கிய அற்புதமான சொத்து அது! 'பாண்டியனே... இந்த சாளக்கிராமங் களைச் சாதாரணக் கற்களாய் நினைத்து விடாதே. இவை திருமாலின் திருமேனி தாங்கும் நவமணிக்கும் மேலான வஸ்து. வலம்புரிச் சங்கைப் போல் - நீரில் விளையும் முத்தைப் போல் புண்ணிய தீர்த்தத்தில் மாத்திரமே விளையும் தெய்வீகப் பொக்கிஷம்.

பச்சைச் சந்தனத்தைக் குளிரக் குளிர இட்டு இந்தப் பொக்கிஷங்களை உகந்த பூஜைகளுடன் வைத்திரு.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தோல்வி என்ற சொல் உன் தேசம் விட்டே ஓடும். துரோகம் என்கிற எண்ணமே பாண்டிய மண்ணில் எவருக்கும் வராது.

வெற்றி தேவதை வீரலட்சுமியாய் உன் தேசத்தில் ஆனந்தக் கூத்திடுவாள்.

குறிப்பாய் மோட்சத்தையே நீ எட்டிப் பிடிக்கும் பாதைக்கு இந்தச் சாளக்கிராமக் கதிர்கள் உன்னை இட்டுச் செல்லும். உன் ஞானேந்திரியங்களில் புத்தொளியும் புத்துணர்வும் ததும்பி வழியும்..."

என்றெல்லாம் சொல்லித் தந்த சாளக்கிராமங்கள் அவை. தன் வசம் வந்தவற்றை உடனேயே ஆலயத்துக்கு வழங்கி விட்டான் பராந்தகன்.

பட்டர் அழகர் நம்பி அவற்றை வெறிக்கிறார். திருவாராதனை நிமித்தம் மந்திரங்களை உதட்டில் சுமந்திருந்தாலும், மனத்தில் அருமை மகள் மதுரவல்லியும், அவளுக்கு நேர்ந்த அந்த விபரீதமும் அவரைச் சோர்வில் ஆயாசத்தில், கிலேசத்தில் புரட்டி எடுத்துக் கொண்டே இருக்கின்றது.

இந்தச் சாளகிராமங்கள் வந்த வேளை என் மகளுக்கு நடக்கக்கூடாதது நடந்துவிட்டது மட்டுமா? அந்தணச் செல்விக்குப் பேரரசன் மேலும் காதல்!

இரண்டையும் ஜீரணிக்க மாட்டாத நிலையில் கை தவறியதால் தீர்த்தப் பாத்திரம் கீழே கவிழ, பதறுகிறது உடம்பு.

"பட்டரே என்னாயிற்று உமக்கு?

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

மனம் ஒருமைப்பட்டுச் சாந்தியடையும் இடம் அல்லவா கருவறை. அங்கென்ன தடுமாற்றம்..?

கருவறைக்கு வெளியிலிருந்து ஒரு குரல் பிறந்து பட்டரைத் தாக்குகிறது. பட்டர் விதிர்த்துப் போய் வெளியே பார்த்துவிட்டுக் குரல் கொடுத்த மனிதரைப் பார்த்து மேலும் விதிர்த்துப் போகிறார்!

# 4

கூடல் அழகனின் கருவறைக்கு வெளியே நின்று அப்படி அதட்டலாக பேசியது வேறு யாருமல்ல- பராந்தகனின் ராஜகுரு பச்சைமால் தீர்த்தர்தாம்!

திருமாலின் பரம பக்தர்!

"வாருங்கள் தீர்த்தரே... வரவேண்டும் வர வேண்டும்!"-தடுமாறிய குரலுடன் இடைக் கச்சத்தைச் சற்று உயர்த்தி விட்டுக் கொண்டு, சந்நிதியை விட்டு வெளியே வருகிறார் பட்டர் அழகர்நம்பி.

சந்நிதி மண்டபத்திற்கு வெளியே தீர்த்தருடன் வந்த அரண்மனைச் சிப்பந்திகள் தீர்த்தரின் ஏகாந்த சேவைக்கு குறுக்கே நின்றுவிடக் கூடாது என்கிற பவ்யத்துடன் வெளியே நின்றுவிட்டது பளிச்சென்று தெரிகிறது.

"தீர்த்தர் வந்து நெடுநேரமாகிவிட்டதோ" பட்டரிடம் இணக்கமான விசாரிப்பு.

"ஆம். அருமை மகள் குறித்தும்-அவன் காதல் குறித்தும் சஞ்சலம் மிகக்கொண்டு தாங்கள் அழகனின்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

திருவாராதனப் பணியில் குழம்ப ஆரம்பித்தபோதே வந்து விட்டேன்" என்கிறார் தீர்த்தர்.

-பட்டரின் முகத்தில் முத்துமுத்தாய் வியர்வைப் புள்ளிகள்.

"சம்பவாமி யுகே... யுகே... என்ற கண்ணனின் ஸ்ரீ வைஷ்ணவ நெறியில், 'சகலமும் நாராயணார்ப்பணம்' என்கிற தவச் சிந்தனையோடு பற்றிருந்தும் இல்லாது சேவை செய்யும் தங்களுக்கும் பாசத்தின் நிமித்தம் சலனம் என்றால், இந்த உலக வாழ்வின் பந்தபாச சக்தியை நினைத்து எனக்கே பயமாகத்தான் இருக்கிறது பட்டரே..." என்று விஸ்தரிப்பாய்ப் பேசத் தொடங்குகிறார் தீர்த்தர்.

"நானென்ன திரிதண்டம் பற்றி காவியுடுத்திச் சலன சஞ்சலங்களை வெட்டிவிட்டுக்கொண்ட சந்நியாசியா? திருமாலின் ஊழியன்தானே... அவன் திருவடி நிழலைத் தவிர வேறு அறியாத எனக்கு ஏன் இந்த இடர் என்று எண்ணிப் பார்த்தேன்-மனிதன்தானே, கலங்கி விட்டேன்."

'கலங்கும்படி என்ன ஆகிவிட்டது?"

"என்ன ஆகவில்லை தீர்த்தரே? என்று என் அருந் தவச் செல்வியை அரசர் பராந்தகர் பார்த்தாரோ அன்றே எல்லாத் துன்பங்களுக்கும் என் வாழ்வில் கதவுகள் திறந்து விட்டனவே..."

"ராஜ பார்வை ரம்மியம் அல்லவா சேர்க்கும். உலகில் நவக்கிரகங்களில் குரு பார்வைக்கு அடுத்து மதிப்பு மிகுந்த பார்வை ராஜ பார்வைதானே பட்டரே...?"

"இருக்கலாம். அது தேவை என்று கருதி நிற்கும் பிரஜைகளுக்கு. என் போன்ற ஆசார சீலர்களுக்கல்ல...

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

எனக்கு அரசனும் சரி, ஆண்டவனும் சரி... எல்லாம் ஸ்ரீமந் நாராயணன் மாத்திரமே. மறந்தும் புறந்தொழ என் வீர வைணவத்தில் இடம் இல்லை என்பது தங்களுக்குத் தெரியாதா தீர்த்தரே..."

"தெரியாமல் என்ன... நீர் எங்கே இங்கே பாரந்த கனைத் தொழுகின்றீர்... அவனல்லவா உங்களைத் தொழுது கொண்டிருக்கின்றான்..."

"என்னைத் தொழுவதே அபசாரம். இதில் என் மகளையும் அவர் சேர்த்தல்லவா சேவிக்கிறார்?"

"அது காதல் நிமித்தம் நிகழும் சேவிதம். காதலுக் குள்ள சக்தி அது. காதலிக்காக நிலவையே பூவாய்க் கருதிப் பறிக்க ஆசைப்பட்ட சிகாமணிகள் பாரில் நிறைய உண்டு பட்டரே..."

"அரச காதலுக்கு அரசிகளே தகுதியானவர்கள். இந்த ஆண்டியின் மகள் எப்படித் தீர்த்தரே பொருத்த மாவாள்?"

"இனம் பார்த்து வருவதற்குப் பேர் காதலல்ல பட்டரே. அது கயமை. பேரரசர்-பாண்டியர் பட்டினத்து தலைவன். முடத்திருமாறனும், உக்கிரப் பெருவழுதியும் ஆண்ட இந்த வீர மண்ணில் மாறவர்மன் கோச்சடையன் ராஜசிம்மனின் வீரப்புதல்வன் நமது பராந்தக நெடுஞ்சடை யனுக்கு வந்த இந்தக் காதல் ஒரு சாதாரணமான உணர்ச்சி என்று நான் கருதத் தயாரில்லை பட்டரே...

முந்தையோர் காலத்தில் இம்மண்ணில் வைஷ்ணவ நெறி எத்தகைய வரவேற்பில் இருந்தது என்பதையும் தற்போது அது எத்தனை மெருகேறிய சிறப்புடன் உள்ளது என்பதையும் எண்ணிப் பாருங்கள்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

சைவமும் வைணவமும் இரு கண்கள் என்றாலும் சைவத்தையே சார்ந்து வந்துவிட்ட பாண்டிய வம்சாவளி களில் முதல் முறையாக உறுதி மிகுந்த வைணவ நெறி யாளனாய்ப் பராந்தகன் திகழக் காரணமே இந்தக் காதல் தானே.

இந்தக் காதல் நிமித்தமாகப் பராந்தகர் வைண வத்தைப் பின்பற்றுகிறார்... திருமால் அழகனின் திவ்ய குணாம்சங்களை உணர்ந்து நெகிழ்ந்து வைணவம் சார வில்லையா அவர்? இது எத்தனை பேதைமை..?

பதற்றம் வேண்டாம் பட்டரே... நம்முள் இருந்து நம்மை இயக்குபவன் யார்?"

"எல்லாம் அந்த நாராயணன்தான்."

"இதில் சந்தேகமில்லையே..."

"எனக்கு அதில் சந்தேகமில்லை. ஆனால், அதற்காகத் தங்கள் பராந்தகரின் தப்பெண்ணத்திற்கும் காரணம் நாரணனே என்று பொதுத் தத்துவம் பேசி விடாதீர்கள்."

"எது தப்பெண்ணம்? உமது மகளின் பேரழகைக் கண்டதால் வந்த காதல் எண்ணங்களா?"

"அதுமட்டுமல்ல... அழியும் அழகுக்குச் சொந்தமான என் மகளை நிலையாகக் கருதி அழியாப் பேரழகன், அந்த கூடல் அழகனை அவர் நேசிக்கத் தலைப்படுவதே தவறுதான்."

"மேலோட்டமாகப் பார்த்தால் இது தவறாகத்தான் தெரியும். உறுதியற்ற சாரங்களைக் கொண்டு முதலில் கோபுரத்தைக் கட்டி எழுப்புகிறோம். பிறகு சாரங்கள் உதிர்ந்து போகின்றன. கோபுரம் கால காலத்திற்கும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நிலையாக நிற்பதில்லையா, அப்படித்தான் பராந்தகனின் காதலும்.

"மதுரவல்லியின் காதலுக்காக அவள் காதலைப் பெறத் தன்னை ஒரு வைணவ நெறியாளன் ஆக்கிக் கொண்டவன் பின் மதுரவல்லியே தடுத்தாலும் விலகிக் கொள்ளாத உறுதியான வீர வைண்வனாக ஆகியே தீருவான்.

"வைணவப் பாற்கடல் என்ன அத்தனை சுவை குன்றியதா என்ன? நமது மந்திரியார் மதுரகவியாரே அதற்கொரு சான்றாயிற்றே...என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். நானும்கூட அந்தப் பாற்கடலில் விழுந்து விட்ட ஒரு மீன்குஞ்சுதானே-வைணவ பக்தியில் திளைத்து நீந்திக் கொண்டிருக்கவில்லையா நான்?"

"என்றால் வைணவத்துக்காக இந்தக் காதலை நான் வரவேற்க வேண்டுமா?"

"தப்பென்ன அதில்?"

"ஒரு விஷயம் தவறாக இருப்பது வேறு, சரியாக இருப்பது வேறு."

"நீங்கள் என்ன சொல்ல வருகின்றீர்?"

"பராந்தகர் என் மகளைக் காதலிப்பது எங்கள் ஆசாரத்திற்கும் சம்பிரதாயங்களுக்கும், ஒழுக்க விதி களுக்கும் முரணானது. முரண்பாட்டை முதலாகப் போட்டால்தான் எனக்கு வைகுண்ட பதவியே கிடைக்கும் என்றால், அப்பொழுதும் நான் அந்தப் பதவியே வேண்டாம் என்றுதான் சொல்வேன். முரண்படத்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தயாரில்லை. என் மகளைச் சிதைத்து இந்த மண்ணில் ஸ்ரீவைஷ்ணவ நெறியை நான் வளர்க்கத் தயாரில்லை–'

"ஒரு வகையில் உம் முடிவும் தெளிவானதுதான். ஆனால் அதில் துளியும் விவேகமோ விசாலமோ விநயமோ இல்லை. பிடிவாதமும் குறுகிய சிந்தையும்தான் உள்ளன."

"எப்படி வேண்டுமானாலும் கருதிவிட்டுப் போங்கள். இப்படிக் குறுகிய எண்ணத்துடன் இருக்கும் போதே என் மகள் உயிருக்கு ஆபத்து வந்துவிட்டதே- விசாலத்துடன் இருந்தால் இன்னும் என்னவெல்லாம் நடக்குமோ?"

"ஆபத்தில்லாத வாழ்க்கை இந்த உலகில் யாருக்குத் தான் இருக்கிறது பட்டரே...? தவளைக்குப் பாம்பால் ஆபத்து, பாம்பிற்குப் பருந்தால் ஆபத்து, பருந்துக்கு வேடனால் ஆபத்து என்று அது ஒரு வட்டச் சுழற்சி அல்லவா?"

"நீங்கள் என்ன சொன்னாலும் சரி, எனக்குச் சமாதானம் ஏற்படாது. முதலில் என் மகளை ஸ்ரீவில்லி யில் வாழ்ந்து வரும் என் தமக்கை மகனுக்கு மணம் முடித்துவிட்டுத்தான் இனி நான் மறுவேலையே பார்க்கப் போகிறேன்."

"ஆமாம்- இதற்கு மதுரா சம்மதிப்பாளா? பராந்தக னுக்கு அவள் மேல் மாறாக் காதல் என்றால் மதுர வல்லிக்குப் பராந்தகன் மேல் அழியாக் காதலாமே?"

"எதைபற்றியும் எனக்கு இனி அக்கறையில்லை. நான் மிகவும் மனப் போராட்டம் நிகழ்த்தி விட்டேன். இந்த மண்ணுக்கு அரசர் என்ற முறையில் இதுவரை எந்த மறுப்பும் சொல்லாமல் அவர் என் மகளைக் காண வந்த

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

சந்தர்ப்பங்களை நான் தடுக்கவில்லை. இனி நான் அப்படிச் செய்வதாக இல்லை. அரண்மனைச் சிப்பந்திகளையும், சிவிகைச் சேடியர்களையும் திருப்பி அனுப்பிவிட்டு நாங்கள் இனி எளிய வாழ்க்கை வாழ்வதாக இருக்கிறோம். என் மகளுக்கு இனி எந்தப் பாதுகாப்பும் பரிவாரமும் தேவையில்லை."

"உறுதியாகத்தான் சொல்கிறீர்களா?"

"இறுதியாகவும் இதுவே என் கருத்து. நீங்களேகூட மன்னனிடம் கூறிவிடுங்கள்."

"நீரும் நானும் கூறினால் கேட்பவனா அந்தப் பராந்தகன்?"

"கேட்காவிட்டால் அவருக்குத்தான் நட்டம்."

"புரியாமல் பேசாதீர்கள் பட்டரே.. உம் கருத்தை முதலில் உம்முடைய மகளை ஏற்கச் செய்யுங்கள். பிறகு மன்னனுக்கு வரலாம்."

"என் மகள் என் பேச்சைக் கேட்காமல் வேறு யார் பேச்சைக் கேட்கப் போகிறாள்?"

"அது போகப் போகத்தானே தெரியும்."

பச்சைமால் தீர்த்தர் ஒரு முடிவோடு சொன்னதற்கு பட்டரிடம் பதிலில்லை.

"சரி, இனியாவது பூஜிக்கலாமா?" என்று கேட்ட தீர்த்தருக்காகச் சந்நிதிக்குள் திரும்ப உள் நுழைந்தார் பட்டர்.

பச்சைமால் தீர்த்தர் கூடல் அழகனின் திவ்விய சொரூபத்தில் ஊன்ற ஆரம்பித்தார். உள்ளூர இந்தக் காதல் தீர்த்தருக்குப் பிடிக்காத விஷயம்தான் என்றாலும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பட்டர் என்ன நினைக்கிறார் என்றறிய காதலுக்கு ஆதரவாகப் பேசியதன் பலன் பட்டரின் உறுதிப்பாடான நிலை அவருக்குப் புரிபட்டிருந்தது.

புறத்தில் இரண்டாம் நந்திவர்மப் பல்லவன் பராந்தகனின் தந்தை இராசசிம்மன் காலத்தில் நிகழ்ந்த தோல்விக்குப் பழிவாங்க சகல ஆயத்தங்களும் செய்து கொண்டிருக்கும்போது மதுரையைப் பற்றிக் கவலைப் படாமல் மதுரவல்லியைப் பற்றியா பராந்தகன் கவலைப் படுவது?

தீர்த்தரின் எண்ணங்கள் ராஜ்ய பாரத்துடன் பல விதமாக நெளியும்போது அன்று காலை அவர் காதை எட்டிய தகவல் அவரை நிரடியது.

'பாண்டியனுக்கு எதிராகப் பல்லவன் சகலரையும் கூட்டுச் சேர்க்கத் தொடங்கிவிட்டான். அதோடு பாண்டிய மண்டலமே தன் வசப்பட வேண்டுமென்றால் அந்த மண்டலத்திலேயே ஒரு வேள்வியைச் செய்தாக வேண்டும். இத்தகைய செயல்களுக்கெல்லாம் வரத்தை வாரி வழங்குபவர் திருமாலின் ஸ்ரீசக்ர ரூபத்தில் உருவாகியுள்ள ஸ்ரீ சுதர்ஸன மூர்த்திதான்!

அந்த சுதர்ஸன மூர்த்தியை உபாசித்து வேள்வி நிகழ இருக்கிறது. ஆகுதிப் பொருளை வேள்வியில் செலுத்தப் போகின்றவன் நரசிம்ம பல்லவனே!

இதற்காகவே மாறுவேஷத்தில் நரசிம்ம பல்லவன் மதுரைக்குள் நுழைந்திருக்கிறான்! அவனது வேள்வி வெற்றியடையாமல் தடுப்பதில்தான் பராந்தக பாண்டிய வெற்றியே இருக்கிறது-என்ற நுட்பமான தகவலை வல்லபன் கணபதி தீர்த்தரின் காதில் சேர்த்திருந்தான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அதன் நிமித்தம் தீர்த்தர் கூடல் அழகர் பெருமானைப் பக்தி சிரத்தையுடன் பார்க்கிறார்.

'எம்பெருமானே... பராந்தகன் காதல் நினைவுகளில் இருந்து மீண்டு நெருங்கி விட்ட அபாயம் குறித்தும் கவலை கொண்டு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய உன் திருவருள் துணை செய்ய வேண்டும்!' என்று மனசில் மன்றாடத் தொடங்கும்போது உள்ளே பட்டர் கர்ப்பூர ஆரத்தி காட்ட ஆரம்பித்தார்.

**கொ**ழுந்துவிடத் தொடங்கியது கர்ப்பூரம்.

இங்கே எரியும் கர்ப்பூரத்தின் எதிரிலே அகோர உருவில் மகாகாளி! மார்பு வரை நீண்ட சிவந்த நாக் கோடும் முட்டை விழிகளோடும், நெருப்புச் சடையோடும் திரிசூலம் வஜ்ரகோளம், பிசிண்டி என்று சகல ஆயுதங்களுடனும் நிற்கும் அந்த வன துர்க்கையைக் கண்ணீர் விழிகளுடன் பார்த்துக் கைகூப்பிக் கொண்டிருக்கிறாள் நாக மாலினி.

அகப்பட்டுவிட்ட அண்ணன் ஒருபுறம் - நிறைவேறாத தன் காதல் மறுபுறம்-மதுரவல்லி பிழைத்துப் பராந்தகனின் அன்பு அவள்பால் கூடியது இன்னொரு புறம், என்று திக்குக்குத் திக்கு வேதனைகளே தெரிவதால் காளிமாதாதான் காப்பாற்றுவாள் என்று வந்து விட்டாள் போலும்-

“தாயே- என் அண்ணன் அந்த வல்லபன் கணபதியிடம் எதையும் உளறிக் கொட்டிவிடக் கூடாது. எப்படியாவது அவனை நான் சிறையில் இருந்து மீட்டுவிட வேண்டும். அதேபோல் மதுரவல்லியும் பராந்தகனை வெறுக்கும்படி செய்ய வேண்டும்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பராந்தகர் எனக்கே எனக்கு என்றாக வேண்டும். இதற்குப் பிரதியுபகாரமாய் நீ கேட்கும் உயிர்களைப் பலி தருகிறேன். அது நரபலியாய் இருந்தாலும் ஆட்சேபம் இன்றி நிறைவேற்றுவேன்...'' என்று உக்ர மாய்ப் புலம்பத் தொடங்கி விட்டாள்.

கோமளத்தால்கூட அவளைத் தேற்றமுடியாத அளவுக்குப் புலம்பி அழத்தொடங்குகிறாள் நாக மாலினி.

“மாலினி... என்ன இது? இது சந்நிதி! இப்படியா உடைந்து போவாய்? உன்னை வீரப்பெண் என்றல்லவா எண்ணியிருந்தேன். அம்பிகை நிச்சயம் அருளுவாள். கவலைப்படாதே..” என்று தேறுதல் கூறிப் பார்க்கிறாள்.

“அருளாவிட்டால் அவளை நான் சும்மா விடமாட்டேன்” என்று பற்களை நரநரவென்று கடிக்கிறாள் நாக மாலினி.

“இது என்ன பைத்தியக்காரப் பேச்சு.. அவள் மகா சக்தி. அவளிடம் வேண்டிக் கொள்வதற்காக வந்து விட்டு, அவளையே எதிர்ப்பது போலவுமா பேசுவது.. நீ என்ன பேசுகிறாய், புரிந்துதான் பேசுகிறாயா?”

-கோமளத்தின் பேச்சுக்குப் பதில் பேச முடியாத படி கேவி அழவே தொடங்கிவிட்டாள் நாகமாலினி.

“கோமளம், எனக்கு பைத்தியம் பிடித்துவிட்டதடி பைத்தியம் பிடித்துவிட்டது! அதனால்தான் இப்படி எல்லாம் உளறுகிறேன். நான் நினைத்தபடி ஒரு விஷயம் நடக்காவிட்டால் என்னால் அதைத் தாங்க முடிய வில்லை. அதனால்தான் இப்படி ஆகிவிடுகிறேன். அது என்னவோ பராந்தகரை என்னைத் தவிர யாருமே

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நினைத்துவிடக் கூடாது என்கிற வெறித்தனமான எண்ணம் என்னைப் பாடாய்ப் படுத்துகிறது கோமளம், பாடாய்ப் படுத்துகிறது."

"எல்லாம் சரியாகிவிடும். நாம் போகலாமா? மதுரையின் எல்லையில் இருக்கும் இந்த ஆலயத்தை நாம் அடையவே மிகவும் சிரமப்பட வேண்டி இருந்தது, ரத ஓட்டி வேறு ஒரு மாதிரியான ஆள். இந்தக் காளி ஆலயத்திற்கு யாரும் வருவதில்லையே என்றெல்லாம் குடைந்து கொண்டே வந்தான். சாயரட்சையாகும் முன் கிளம்ப வேண்டும். உம் கிளம்பு."

-கோமளம் துரிதப்படுத்த, அரைமனசாக அங்கிருந்து கிளம்ப ஆரம்பித்தாள் நாகமாலினி. அதிகம் கலங்கிப் போனதன் நிமித்தம் முகத்தில் சோபையிழந்த தன்மை. நடந்து சென்று ரதம் ஏறி அமர்ந்த நிலையில் கெங்க நாட்டுத் தலைநகர் தழைக்காட்டில் அற்புதமான இயற்கை சூழலுக்கு நடுவில் பராந்தகனுக்காகத் தவம் கிடந்த நாட்களை எண்ணிப் பார்க்கிறாள்.

அதிலும் காவிரியில் ஆடிப்பெருக்கில் நடைபெறும் அந்தத் தெப்பத் திருவிழா கெங்கநாட்டிலேயே மிகப்பெரிய அளவில் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒன்று.

கெங்க மன்னன் ஸ்ரீபுருஷனும் அவன் தர்ம பத்தினியும் இந்தத் திருவிழாவில் நேரடிப் பங்கேற்பார்கள்.

கெங்க நாட்டவர்கள் மரம் ஏறுவதில், ஆற்றில் நீந்துவதில், வேட்டையாடுவதில் எல்லாம் அதிசூரர்கள்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அதிலும் அன்று பெருக்கெடுக்கும் ஆற்று வெள்ளத்தில் கெங்க நாட்டு இளம் வாலிபர்கள் காட்டும் நீச்சல் திறனைக் காண கண் இரண்டும் போதாது.

முன்பெல்லாம் அடிக்கடி இந்தத் திருவிழாவுக்கு நல்லிணக்கத்தோடு பராந்தகனின் தந்தையான இராசசிம்ம பாண்டியர் சென்று வருவதுண்டு. அப்படிச் சென்று வந்த சமயத்தில்தான் இளவரசி பூசுந்தரி தேவியார் மீது மையல் கொண்டு அது திருமணம் வரை சென்றது-

இதன் காரணமாய் பாண்டிய நாட்டுடன் ஏற்பட்ட இந்த உறவு முறைவிலான தொடர்பினால் கெங்க நாட்டின் வலிவும் பொலிவும் கூட கூடிப் போயின.

அடிக்கடி கெங்க மன்னன் ஸ்ரீபுருஷனைப் பல்லவனும் வேறு மிரட்டிக் கொண்டேயிருந்தான்.

குடகுநாட்டு மலைச் செல்வங்களின் மேல் அவனுக்கு அப்படி ஒரு ஆசை. இராசசிம்ம பாண்டியன் கெங்க நாட்டு மாப்பிள்ளை ஆனதால் பல்லவனால் ஸ்ரீபுருஷனைச் சாதாரணமாய்க் கருதித் தீண்ட முடியாத நிலை.

பல்லவன் மட்டுமா?

அண்டை அயலில் சாளுக்கியர்கள் வரை ஸ்ரீபுருஷனைத் தீண்டவே யோசிக்கும் நிலை அதனால் வந்தது.

இராசசிம்மனின் மறைவுக்குப் பிறகு எங்கே அந்த வலுவான தொடர்பு அறுந்து போகுமோ என்கிற கவலை ஸ்ரீபுருஷனுக்கு வந்து விட்டது!

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இந்தக் கவலையை மூட்டியவன்கூடப் பல்லவன் தான்.

இங்கே பாண்டிய மண்ணில் இராசசிம்மன் தலை வீழ்ந்து பராந்தகன் ஆட்சிப் பொறுப்பில் நிலைப்படும் முன்பே ஸ்ரீபுருஷனைத் தாக்க ஆரம்பித்து விட்டான் பல்லவன்.

அந்த யுத்தத்தில் ஸ்ரீபுருஷன் தன் நாட்டையே இழந்திருந்தாலும் கவலைப்பட்டிருக்க மாட்டான். ஆனால், இழக்கக் கூடாத ஒன்றை இழந்து விட்டான்.

அவன் முன்னோர்கள் போற்றிப் போற்றிப் பாது காத்து வந்த விலை மதிப்பில்லாத வயிர மணிமாலையைப் பல்லவன் கவர்ந்து விட்டான்.

பூர்வீகப் பரம்பரைச் சொத்து அது. அதையே பல்லவன் கவர்ந்து போனதில் உடைந்து போன ஸ்ரீபுருஷன் இந்தக் கணம்வரை இன்னமும் மனத்தால் நிமிரவில்லை.

இழந்த மணிமாலையைப் பல்லவனிடமிருந்து மீட்டாக வேண்டும். இராசசிம்மனை மருமகனாய் அடைந்ததுபோல் அவன் பிள்ளை பராந்தகனையும் தன் மகன் வயிற்றுப் பேத்தி நாகமாலினிக்கே மணவாள னாக்கிப் பாண்டிய நாட்டு உறவு முறைத் தொடர்பை என்றும் போல் தொடரவேண்டும். இப்படி முடிவு செய்து நாகமாலினி உள்ளத்திலும், பராந்தகனைப் பற்றியும், அவன் பிரதாபங்களைப் பற்றியும் பேசிக் காதல் தீயை மூட்டி 'அடுத்த பாண்டிய நாயகி நீயே' என்கிற அளவிற்கு அவளை வளர்த்தாகிவிட்டது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இங்கே இவள் தயாரானால் போதுமா?

பராந்தகன் என்ன நினைக்கிறான் என்று யாருக்குத் தெரியும்? அவன் நினைப்பை அறியவும்-நாகமாலினி யோடு அவனுக்குக் காதல் வலுப்படவும் ஸ்ரீபுருஷ மன்னரும் ஒரு ஏற்பாடு செய்தார்.

திருவிழாவிற்குப் பராந்தகனை அழைத்து, அழைத்த இடத்தில் நாகமாலினியோடு பல நாட்கள் அந்தரங்கமாய் அவர்கள் பேசி மகிழ ஏற்பாடுகள் செய்து தந்தார்.

இதனாலெல்லாம் நாகமாலினியிடம் வேண்டு மானால் காதலின் மட்டம் கூடியிருக்கலாம். ஆனால், பராந்தகன் அவளை ஒரு பெண்ணாகப் பார்த்தானே யன்றி அவள்பால் வேறுவிதத்தில் எந்த ஒரு எண்ணமும் கொள்ளாமல் திரும்பவும் பாண்டிய நாட்டிற்குக் கிளம்பி விட்டான்!

திரும்பும்பொழுதுகூட அவனுடன் பாண்டிய நாட்டைப் பார்க்க விரும்புவதாகக் கூறி நட்புக்கொண் டாள் நாகமாலினி.

அப்படி இந்த மண்ணை எட்டி மாதங்கள்தான் ஓடி விட்டனவேயன்றிக் காதல் கைகூடவில்லை.

இனியாவது கூடலாம் என்பதற்கும் இடமில்லாத படி மதுரவல்லியின் குறுக்கீடும்-அவள்பால் பராந்தக னுக்குக் காதலும் அமைந்துவிட்டன.

ஆக, நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் என்கின்ற மாதிரியே எல்லாமும் ஆகிவிட்டது.

நடந்தவை அத்தனையையும் நினைத்துப் பார்த் தால் நாகமாலினிக்கு ஏன் இன்னமும் உயிரை விடாமல்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறோம் என்கிற நினைப்பே பிரதானமாய் எழுகின்றது.

இருந்தாலும் அந்த நாக மரபிற்கேயுண்டான விடா முயற்சியும், வெறியும் ஒரு சேர அவளைப் புரட்டி எடுத்து 'எப்பாடுபட்டாவது, என்ன விலை கொடுத்தாவது பராந்தகனை அடைந்து விடு' என்கிறது. அதற்காகக் காளி மாதா காலைக்கூடப் பிடித்து அழுதாயிற்று.

-ஆகக்கூடிப் பராந்தகனை அடைந்தே தீர வேண்டும். அதுமட்டுமா? இவனைக் கொண்டே பல்லவனை வென்று அவள் தாத்தா ஸ்ரீ புருஷனிடம் கைப்பற்றிச் சென்ற அந்த வயிரமணி மாலையை மீட்டாக வேண்டும்.

அந்த மாலையுடன் பாண்டிய நாயகியாகத்தான் கெங்க நாட்டைத் தீண்டவேண்டும்.

இல்லாவிட்டால் மடிந்து மண்ணாகி விழுவதுதான் பெருமைக்குரிய செயல்-

-வைராக்கியத்துடன் நாகமாலினி நினைவுகளில் அமிழ்ந்து கரைந்து போன அந்த வேளையில் மாலைப் பொழுதும் மனதுக்கு இசைவாக வந்துவிட்டது... கதிரவனை மேற்கு விழுங்க ஆரம்பிக்க, வைகை நதியை ஒட்டிய பாதையில் அவர்கள் ரதம் விரையும் போதுதான் அந்தக் காட்சியை நாகமாலினி காண ஆரம்பித்தாள்.

வைகையின் மறுகரையில் ஏகமாய்ப் புரவிக் கூட்டம்- பல புரவிகள் வைகை நீரில் தாகசாந்தி செய்து கொண்டிருக்க, ஒரு புரவிமேல் முதிர்ந்த ஒரு கிழவன் வேடத்தில் நரசிம்ம பல்லவன்!

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

# 5

காளிமாதேவியை தரிசித்துச் சற்றே மன ஆறுதல் பெறலாம் என்றும், அலைக்கழிக்கும் அண்ணன் நாகா பரணியின் பிரச்சினை குறித்து ஆழ்ந்து சிந்தித்து நல்ல தொரு முடிவிற்கு வரவேண்டியும் கோயிலுக்கு வந்தாள்.

ஆனால், தோழி கோமளத்துடன் மாநகர் மதுரையின் எல்லை தொட்டு நிற்கும் இவ்வேளையில் நாகமாலினி எதிர்பாராத விதத்தில் பல்லவ மன்னன் நந்தி வர்மனையே காணப் பெறுவாள் என்பது அவள் கனவிலும் எதிர்பார்த்திராத ஒன்று.

நந்திவர்மனை அவள் நேரில் இதுகாறும் பார்த் தறியாள். ஆயினும் அவனது தைல ஓவியம் ஒன்றைப் பாண்டியப் பேரரசின் ஒற்றர்கள் மாளிகையில் பார்த்த தாக ஞாபகம்.

"நந்தி.. உனை வெல்லாமல் எனக்கு உறக்கமில்லை. நமது பகை உணர்வுக்கு அனுதினமும் எண்ணெய் விடுவது போல் என் நாட்டுள் நீ மூட்டும் குட்டிக் குழப்பங்கள் எனக்கு தெரியாது என்று மட்டும் எண்ணிவிடாதே. பாண்டியன் வெறும் பண்டையன்-பல்லவனே என்றும் வில்லவன் என்கிற உனது கொக்கரிப்புக்கு நான் பதில் சொல்லி உன்னை அடக்காவிட்டால் இந்தப் பராந்தகன் பாண்டியனே அல்ல என்று எட்டு திக்கும் வெற்றி கொண்டு சர்வோமய சக்கரவர்த்திகளும் எனக்குக் கப்பம் கட்டும்படி செய்கின்றேனோ அன்றுவரை இந்த பராந்தகன் தலைமுடி திருத்தமாட்டேன். நெடுஞ்சடைய னாகவே திகழ்வேன்.." என்று அந்த ஓவியத்தைப் பார்த்து

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பராந்தகர் என்றோ செய்த வீர முழக்கமும் அவள் காதுக்குள் பாய்கிறது.

அகண்டுபோன விழிமணிகளில் அப்பட்டமாய் ஆற்றின் மறுகரையில் நந்திவர்மன் தெரிகிறான். "கோமளம் அது பல்லவனேதான் பராந்தகரின் பிரதான எதிரியும், பாண்டியரின் பரம வைரியுமான நந்திவர்ம பல்லவ மன்னனேதான் அவன். அந்த முகம் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது-"

தோழி கோமளத்தைப் பார்த்து ரதத்தை நிறுத்தி அவள் பதைப்பதில் கோமளமும் அலமந்து போகிறாள்.

"நன்றாகப் பார்! அவர்கள் இருப்பது ஆற்றின் அக்கரை- யாரோ யாத்ரீகர்கள் என்பதாகவே என்னுள் எண்ணம் எழுகிறது."

"பைத்தியம்... இந்த நாகமாலினிக்குப் பருந்துப் பார்வை என்பது உனக்குத் தெரியாதா? அந்த கூட்டத்தில் நல்ல ஆகிருதியான உருவாய்ப் பல்லவன் தெரிந்து கொண்டிருப்பது என் பேரதிர்ஷ்டம் என்றே கருது கிறேன்."

"அப்படியே இருக்கட்டும். அதற்கென்ன செய்வ தாய் உத்தேசம்? இப்பொழுதே காலமாகி விட்டது. விரைவாய் அரண்மனை திரும்ப வேண்டும். இத்தனை தூரம் தனியாய் நாம் வந்ததே தவறு..."

"புலம்பாதே- துணிவை முதலிட வேண்டிய கட்டம் இது. பல்லவன் ஏதோ உள்நோக்கோடுதான் வந்திருக்க வேண்டும். ஒரு பேரரசனே மாறுவேடம் இட்டு வரு கிறான் என்றால் யோசித்துப் பார்... அதன் பின்புலத்தில் ஏதோ ஒரு பிரதான மர்மம் இருக்கத்தானே வேண்டும்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"எது வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும்- நீ உடன் புறப்படு நாகமாலினி.."

"முடியாது கோமளம். காளிமாதா என் பிரார்த்தனைக்கு இரங்கிப் பல்லவனைக் காட்டி பராந்தகர் மனதில் இடம் பிடிக்க வழிகாட்டியுள்ளாள்-இனி என்ன செய்கிறேன் என்று பார்."

பேசியபடியே ரதத்தை விட்டுக் கீழிறங்கினாள் நாகமாலினி.

"இது வினையை விலைக்கு வாங்கும் செயல்..." கோமளம் பதறுகிறாள்.

"அப்படி வாங்கும் வினையை நல்ல விலைக்கு விற்க என்னால் முடியும்- நீ பேசாமல் இரு-" பேசியபடியே தனது அணிகலன்களைக் கழற்றி ரதத்தின் இருக்கை மேல் வைத்தவள் கணத்தில் ஆற்றுக்குள் பாய்ந்து விட்டாள். கெங்கர்களுக்கு நீச்சல் நன்கு கைவரப் பெற்ற ஒன்றாயிற்றே-

ஆற்றின் மறுகரையிலோ பல்லவனின் கூட்டம் நீண்ட தூரம் பயணித்த களைப்பில் வைகை நீரின் குளிர்ச்சியில் இளைப்பாறத் தொடங்கியிருந்தது.

மூன்று நாட்களுக்கு முந்தைய துவாதசி இரவில் காஞ்சியை விட்டுக் கிளம்பியிருந்தான் பல்லவன். உடன் தனது விசுவாசம் மிக்க படை — பிரதானமாய் அதில் உதயசந்திரன்.

பல்லவ சாம்ராஜ்ஜியம் தழைக்க தன் ஆவியை அர்ப்பணித்துவிட்ட வீர புருஷன்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வைகை நீரை இரு கைகளாலும் அள்ளி அள்ளி ஆற்றில் விட்டபடி ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறான் உதயசந்திரன். நந்தியிடம் அதற்கான வினா.

"உதயா, உனது சிந்தனைக்குக் காரணம்?"

"அற்புதமானது... இந்தப் பாண்டிய மண். இல்லாவிட்டால் சேர மலை நாட்டு மேகங்கள் இங்கே இப்படி ஆறாய்ப் பயணிக்குமா? அதை எண்ணிப் பார்த்தேன். சிந்தனையில் ஆழ்ந்து விட்டேன்..."

"காஞ்சி மட்டும் என்ன அற்பமானதா? அங்கும்தான் ஸ்படிகமாய்ப் பாலாறு பாய்கிறதே..?"

"இருக்கலாம். ஆனால், அதன் கரைவெளியில் என்ன அற்புதம் நிகழ்ந்திருக்க முடியும்... இந்தப் பாண்டிய மண்ணில்தானே தெய்வீகத் திருவிளையாடல்கள்."

"காஞ்சியில் நடவாத திருவிளையாடலா? அத்தி வரதர் மகிமையறிவாய்தானே நீ.. அன்னை காமாட்சியும் கருணைக் கடலாயிற்றே-நகரமென்றால் காஞ்சியென்று சான்றோர்கள் புகழ்வது தெரிந்துமா இந்த மதுரை கண்டு மாய்ப்பு உன்னுள்?"

"இது மாய்ப்பு மட்டுமில்லை அரசே.. ஒரு வகையில் நேசம்.. நல்லதை எங்கும் எப்போதும் போற்றி நேசிக்கும் பண்பின் வெளிப்பாடு. இந்த நேசம் மட்டும் இல்லாவிட்டால் இந்தப் பாண்டிய தேசம் நமக்கு அடிமைப்பட வேண்டும் என்று கருதத் தேவையேயில்லையே.."

"உண்மைதான். வந்த நோக்கம் விடுத்து நாம் வேற்று வகை உரையாடல்களில் மூழ்குவது இலக்குக்கு

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

எதிர்மாறான பயணமாகிவிடும். இன்னும் எவ்வளவு காத தூரம் இருக்கிறது அந்த எல்லைக் காளி கோவிலுக்கு?"

"காலரைக்காதம்கூட இல்லை-ஆற்றைத் தாண்டி விட வேண்டும்."

அப்பொழுது படைவீரர்களில் ஒருவன் ஆற்றின் மறுகரையில் ஊன்றிப் பார்த்த பார்வை நீக்கி, "மன்னா, அங்கே ஒரு ரதமும்-பெண்டிர் இருவர் வெகு நேரம் தர்க்கம் நிகழ்த்தியதையும் ஓரளவு என்னால் காண முடிந்தது. தற்போது அந்த ரதம் அங்கிருந்து விலகி மறுகரையின் மரக்கூட்டங்களில் மறைந்துவிட்டதாக கருதுகிறேன்."

"பாண்டிய ஒற்றர் கூட்டமாய் இருக்குமோ?"

உடனேயே துணுக்குற்றான் நந்திவர்மன்.

"பெண்டிர் என்கிறான் நமது வீரன். பாண்டிய நாட்டில் பெண்களெல்லாம் உளவு பார்க்கத் தொடங்கி விட்டதாகத் தெரியவில்லை. யாராவது அரண்மனைச் சிப்பந்திகள் உலா போல் வந்திருக்கக்கூடும்."

"ஹேஸ்யத்துக்கு இடமில்லை. வரும் உத்திர நட்சத்திர சித்தயோகத்தில் அந்தச் சுதர்ஸனப் பெருமாளுக்கு மகாஹோமம் செய்து பாண்டிய நாட்டை வெற்றி கொள்ளும் செயலுக்கு இந்த மண்ணிலேயே நான் நிகழ்த்தும் பரிகாரச் செயல் ஈ காக்கைக்குக் கூடத் தெரிந்து விடக் கூடாது. ஹோமத்தில் நான் விடும் ஆகுதியே என் வெற்றிக்குப் பெரும்படி

நாரணனின் ரௌத்ர சொரூபம் சுதர்சனம். சிவனுக்கே பிரம்மஹத்தி பாவம் நீங்க வரம் தந்த அக்கினி மூர்த்தி அந்தச் சுதர்ஸன மூர்த்தி.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வேண்டியவர்க்கு வேண்டியதை அருளும் அந்தக் கருணாமூர்த்தி எனது பாண்டிய நாட்டு வெற்றிக்கும் வரம் தரட்டும்."

நந்தியின் வீரப் பெருமுழக்கம் கேட்டு எல்லாரும் நெஞ்சு நிமிர்த்த, அந்த மகா சுதர்ஸன ஹோமத்தை நிகழ்த்த ஏற்ற இடமாக அவன் எல்லைக் காளி ஆலயத்தையே தேர்ந்தெடுத்திருப்பது அருகிலேயே நீர்ப்படுகை மேல் எவரும் காணாவண்ணம் மிதந்தபடி காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த நாகமாலினிக்கு மட்டும் தெரிந்துவிட்டதை அங்கு எவரும் உணர்ந்ததாகவே தெரியவில்லை.

நாகமாலினியின் உருவை எவரும் தப்பித் தவறிக் கூடப் பார்த்திராதபடி அடர்ந்த ஆற்றோரக் கோரைப் புதர்கள் மறைத்துக் கொண்டிருக்கின்றன.

நாகமாலினியும் அனைத்தையும் கேட்டு விதிர்த்துப் போகிறாள்.

அவள் மனக்கணக்கில் அந்தக் கணமே பராந்தகன் அவளது மடியில் விழுந்துவிட்டது போல் ஒரு பிரமை.

**ஆ**லயத் திருக்கதவை மூடி நடை சாற்றிவிட்டு வழியும் வியர்வையை உத்தரியத்தால் ஒற்றியபடி கூடல் அழகர் ஆலயம் விட்டு நீங்கத் தொடங்குகிறார் பட்டர் அழகர் நம்பி.

வாடிப்போயிருக்கிறது வதனம்.

பன்னிரு திருமண்ணில் கனகம்பீரமாய் - ஒரு வைணவப் பெருஞ் சுடராய்த் தெரிபவர், மதுரவல்லிக்கு நேரிட்ட அந்த அடாத கட்டாரித் தைப்பால் அணைந்த

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தீபமாய் புகைவிடத் தொடங்கிவிட்டிருப்பது நன்றாகத் தெரிகிறது.

ஆலயச் சேவகர்கள் அது கண்டு அவர்களும் வாடினாலும் வாய் திறந்து அதன் தொடர்பாய்க் கருத்து பரிமாற அச்சப்படுவதாகவே படுகிறது.

இருந்தும் இரண்டு மடைப்பள்ளிச் சேவகர்கள் ஆதங்கப்படாமல் இல்லை.

"நம் பட்டருக்கு மாமன்னரின் தொடர்பே கட்டோடு பிடிக்கவில்லை. பேசாமல் திருமலை, திருவரங்கம், திருக்கோட்டியூர் என்று பெரும் சந்நிதியாய்ப் பார்த்துக் கிளம்பி விடலாமா என்று பார்க்கிறார்-"

"இவர் விரும்பினாலும் அதை மதுரா விரும்ப வேண்டுமே! அவளும் மாமன்னன்மேல் பெருங் காதல் கொண்டுள்ளாள்."

"சற்று முன் கூட மாமன்னரின் சிவிகை மதுராவின் இல்லம் ஏகக் கண்டேன்-"

ஆம்!

அந்தச் சின்னஞ் சிறிய வீட்டின் வெளியே பாண்டியன் பராந்தகனின் பட்டுத் துணி வேய்ந்த சிவிகை.

அதைச் சுற்றிப் பன்னிரு காப்பாளர்கள்-

உள்ளே காதல் ததும்பும் பைந்தமிழ் பேச்சுடன் பராந்தகன்.

"கண்ணே! என் பொருட்டு உன்னை எமன் கொண்டு செல்லப் பார்த்தான். எப்படியோ தப்பி வந்து விட்டாய். எல்லாம் அந்தப் பல்லவன் சதி. என்னை நேரடியாய்த்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

திண்ட வீரமில்லாதவன் உன்னை வீழ்த்தி என்னை வீழ்த்த நினைத்து விட்டான்."

"ஒருக்கால் நான் வீழ்ந்துவிட்டிருந்தால் நீங்களும் வீழ்ந்திருப்பீர்களா?" மதுராவின் கேள்வி பராந்தகனை நடுங்கச் செய்கிறது.

"அதிலென்ன சந்தேகம் மதுரா? நிச்சயம் நீ வீழ்ந் திருந்தால் நான் வீழ்ந்து-இந்தப் பாண்டிய மண்டலமே வீழ்ந்திருக்கும்."

"என்றால் என்னுள்ளா இந்த மண்ணின் உயிர் உள்ளது?" மதுராவின் அந்த நெருடலான கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது? பராந்தகனிடம் நெடு நேரத்துக்குப் பேச்சில்லை.

"அற்பமான பெண்மணி நான். அற்புதமான தேசம் நம் தேசம். என் உயிரைக் கொடுத்து நான் இந்த மண்ணை வாழ வைத்தால்தான் எனக்குப் பெருமை. இப்படி வீழ்த்தினால் எதிர்கால வரலாறு என்னை பழிக்காதா?"

"நீ என்ன சொல்கிறாய் மதுரா?"

"உங்கள் காதல் கரைக்குள் ஓடும் ஆறாகத்தான் இருக்க வேண்டும். வெள்ளம் கண்டு ஊரை விழுங்கும் அசுரத்தனம் கூடாது என்கிறேன்."

"எனக்குள்ளும் ஓர் இயலாமை உண்டென்றால் அது உன்னிடம் மட்டுமே. உன் பொருட்டு நான் எதையும் செய்து விடுகிறேன். பேசியும் விடுகிறேன்."

"அப்பட்டமான கண்மூடித்தனம். அதிலும் ஒரு மாமன்னனிடம் இருக்கவே கூடாத விஷயம் இது. நான்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

ஏன் இந்த மண்ணில் பிறந்தேன் என்று வருந்தும்படி செய்து விடாதீர்கள்."

"அப்படி எல்லாம் பேசாதே- உன்னால்தான் நான் உலகை ஒளிமயமாய்க் காண்கிறேன். உனைக் காணுமுன் வரை நான் முனைப்பேயில்லாதவன். கோச்சடையன் புதல்வன்-வம்சாவளிப்படி இந்த மண்ணை ஆள உரிமை கொண்ட ஒருவன் மட்டுமே-"

"எனைக் கண்டபின் மட்டும் என்ன பெரிதாய்ச் சாதித்து விட்டீர்?"

"இந்த அசைவச் சைவன் வைணவன் ஆனானே அதுவே சாதனையில்லையா?"

"வைணவம் புரிந்தும் உணர்ந்தும் ஒழுக வேண்டிய நெறி. காதலிக்காகக் கைக்கொள்ளும் கண்மூடி உணர்ச்சி யல்ல அது."

"கோபுரம் கட்டப்படும் முன் சாரங்கள்தான் கோபுர மாய் நின்று அதை உருவாக்குகின்றன. கோபுரம் நிலை பெற்ற பிறகு சாரங்கள் அகற்றப்படுகின்றன. அப்படித் தான் என் வைணவ நாட்டம். நான் வைணவம்பால் மாளாக் காதல் கொள்ள என்னுள் வைணவ கோபுரம் எழும்ப நீ சாரமாய்ப் பயன்பட்டதென்னவோ உண்மை. ஆனால், நீயே இப்பொழுது உரைத்தாலும் என்னால் அந்தத் திருமாலின் திருவடி தொழாமல் இருக்க முடியாது."

"நிஜமாகவா?"

"ஆம் மதுரா! உன்னை அந்த லக்குமி வடிவாகத் தான் காண்கிறேன்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"மன்னா... இன்றே நான் பெருமகிழ்வு பெற்றேன் நான் பாக்கியசாலி."

"என்னை விடவா?"

"நிச்சயமாய்..." கண்கள் செருக ஆனந்த பரவசத்துடன் நெகிழும் மதுரவல்லியை வாரித் தழுவிக் கொள்கிறான் பராந்தகன்.

எதிர்ப்பாராமல் அங்கே வந்து விட்ட பட்டர் அழகர் நம்பி அதைக் கண்டு குமைந்து போகிறார்.

சலனத்துடன் வெளியேற நினைத்த அவர் எதிரே மந்திரி மதுரகவியாரின் பிரசன்னம். "பட்டரே, வைணவ ஆசாரங்களை நினைத்தும், குலச்சார்பை எண்ணியும் குமையாமல் பராந்தகரை மருமகனாய் எண்ணப் பழகுங்கள்."

"பூர்வ ஜென்மத்தில் மதுரவல்லி தேவியார் அந்த மகாலட்சுமிக்குக் கோடி மலர்களால் அர்ச்சனை செய்திருக்க வேண்டும். அதனால்தான் ஒரு மாமன்னனே அவளுக்கு மணாளனாக வரவிருக்கிறார்..."

பட்டர் அதைக் கேட்டு விரக்திச் சிரிப்பு சிரிக்கிறார். அந்தச் சிரிப்புக்கு பொருளை மதுரகவியால் உணர முடியவில்லை.

"பிறப்பால் நான் ஒன்றும் க்ஷத்திரியன் இல்லை. ஆயினும் மதுரமாய்க் கவி பாடும் ஆழ்வார்களின் திவ்ய நாமங்களைக் கேட்டு என் பெயரையே மதுரகவி என்று ஆக்கிக் கொள்ளவில்லையா?

நல்ல மாற்றங்களை ஏற்கத் தயங்குதல் கூடாது. அதிலும் இந்தப் பாண்டிய தேசமே எங்கே பல்லவன்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வசம் அகப்பட்டு விடுமோ என்கிற பீதி பரவத் தொடங்கியுள்ள இடைவேளையில் பராந்தகரின் காதலுக்கு எண்ணத்தால்கூட குறுக்கில் நின்று அவரின் வீரம் ஒடுங்கி விடக் காரணமாக இருந்து விடாதீர்.''

மதுரகவியாரின் பேச்சின் பிடிபடாத உட்பொருளால் பட்டர் திகைக்கிறார்.

''மந்திரியாரே, என்ன சொல்கிறீர்?''

''மகள் மதுரவல்லி தேவியாரிடம் கூறிப் பல்லவனை வெல்லுவதே உங்கள் முதல் கடன் என்று கூறச் செய்யுங்கள்...''

''மதிநிலம் உரைக்க வேண்டிய மந்திரியா இப்படி என் மகள் மூலம் பேசச் சொல்வது?''

''எனது கடப்பாட்டைக் குறைவின்றிச் செய்து விடுவேன். ஆயினும் காதல் என்னினும் ஆயிரம் மடங்கு வன்மை மிக்கது. சீதாதேவியின் கடைக்கண் பார்வை தானே ராமன் சிவதனுசையே முறிக்கக் காரணமாய் இருந்தது?''

''உண்மைதான்... அது சரி! உங்கள் பேச்சின்படி பார்த்தால் பல்லவனால் ஏதோ பெரிய ஆபத்து நம் நாட்டுக்கு வந்திருப்பது போல் தெரிகிறதே...''

''உண்மைதான். பெரும்படை திரட்டி ஆயத்த நிலையில் இருக்கிறான் பல்லவன் நந்திவர்மன். நாம் எப்பொழுது சோர்ந்துபோவோம் என்று காத்திருக்கிறான். பராந்தகரைச் சோகத்தில் மூழ்கச் செய்யத்தான் மதுரவல்லியாரைக் கூடத் தாக்கியிருக்கிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"இவை எல்லாம் ஹேஸ்யம் என்று கருதி விடாதீர்கள். நாம் பேசிக் கொண்டிருக்கும் இந்த விநாடியில் பல்லவனும் நம் பாண்டிய மண்ணில்தான் இருக்கிறான் என்றால் நம்புவீர்களா?' மதுரகவியாரின் பேச்சைக் கேட்டு பட்டர் பிளந்த வாயை மூடவில்லை.

அந்தக் காளி ஆலயத்தின் சிதைந்த மண்டப வெளியில் எரிதழல் மிக்க யாக மேடை.

காஞ்சியிலிருந்தே வரவழைக்கப்பட்டிருந்த வைணவப் பட்டர்களின் வசீகரம் மிகுந்த மந்திர உச்சாடனங்களால் மகா சுதர்ஸன வேள்வித் தீ ஆளுயரத்திற்கு எரிந்து கொண்டிருக்கிறது. கலப்பில்லாத பசு நெய் விட்டு வேள்வித் தீயை நிலைப்படுத்திக் கொண்டிருக்கிறான் நந்திவர்மப் பல்லவன்.

யாக மேடை முன் பிரதான கர்த்தாவாய்க் கம்பீரத் தோற்றம் காட்டி அமர்ந்திருக்கிறான். நெற்றி நிறைய திருமண். அடர்ந்து வளர்ந்துவிட்ட அரிவாள் மீசை-பார்க்க திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமானே நேரில் வந்து ஹோமம் வளர்த்து நெய் இடுவது போல் ஒரு பிரமை.

ஆலய வெளியில் பல்லவக் காவலர்கள். யாரும் வந்து இடர்ப்படுத்தி விடக்கூடாது என்பதற்குத் தோதாக காவல் இருக்கிறார்கள்.

'ஹோமத்தின்போது இடையூறு நேரிட்டால் தோல்வி நிச்சயம்' என்னும் காஞ்சிச் சோதிடரின் கூற்று அவர்கள் காதுகளில் அழையாமல் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

'எந்த மண்ணை வெற்றி கொள்ள வேண்டுமோ அந்த மண்ணிலேயே வேள்வி புரிவதுதான் விசேஷம். எப்பாடு பட்டாவது நந்தி நீ அதை நிறைவேற்றி விடு-வெற்றித் தேவதை உனக்கே மாலையிடுவாள்' என்று சோதிடர் சொன்னதற்கேற்ப பாண்டிய மண்ணில் பல்லவன் நந்திவர்மனால் மகா சதர்ஸன வேள்வி நிகழும் அந்த வேளையில்... ஒரு மாடு மேய்ப்பவனாய் நூற்றுக்கணக்கான மாடுகளை மேய்த்தபடி பராந்தகன் அந்த பக்கம் பிரவேசிக்க... இடையச்சி வேடத்தில் நாகமாலினி உருமாறிக் கலயப் பானை தாங்கி நடந்து வர, ஆலயப் பெருவெளி வீரர்கள் அவர்களைப் பார்த்து நிமிருகின்றனர்.

# 6

அந்த ரகசிய இடத்தில் அதீதக் காவலுடன் யாகம் நடத்த முனைந்த வேளையில் காவல் மிக இருந்த போதிலும், எச்சரிக்கையும் எழுச்சியும்கூட மிக இருந்த போதிலும் அங்கே சற்றும் எதிர்பாராத விதத்தில் ஆட்டுக் கூட்டத்துடன் இடையன்-இடைச்சியாகப் பாண்டியனை யும், நாகமாலினியையும் பார்த்துவிட்ட பல்லவ வீரர்கள் விதிர்த்து நிற்கிறார்கள்.

"ஏய் இடையா, இங்கென்ன வேலை உனக்கு? யார் நீ?" ஒரு வீரனின் வினாவால் இடையனாய் நிற்கும் பாண்டியன் முகத்தில் எகத்தாளப் புன்னகை பூக்கக் காரணமாகிறது.

"இடையா என்றழைத்துவிட்டு யார் நீ என்றும் கேட்டால் எப்படி? என் மேய்க்கும் தொழிலைப் பார்த்த

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பிறகும் இங்கென்ன வேலை என்கிற அபத்தமான கேள்வி வேறு... நான் உங்களைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வியை என்னைப் பார்த்து நீங்கள் கேட்பது விசித்திரமாக உள்ளது."

பாண்டியனின் பதிலால் வாயடைத்துப் போகிறான் அந்த வீரன்.

"சரி... சரி! உன் ஆடுகளை மேய்த்துக் கொண்டு அப்பக்கமாய்ச் செல். உள்ளே அரசர் பெருமான் இருக்கிறார்."

"எந்த நாட்டு அரசர்?"

"விடமாட்டாய் போல் தெரிகிறதே! பாண்டியப் பேரரசர்தான்."

அந்தப் பதிலால் அதிர்ந்து போகிறான் பாண்டியன். "உங்களைப் பார்த்தால் பாண்டிய நாட்டவர்கள் போல் தெரியவில்லையே?"

"அதிகம் பேசாதே- பாண்டிய நாட்டவர்க்கென்ன தனியாகக் கொம்பா முளைத்திருக்கும்?"

"இப்படி வம்பு பேசினால் கொம்பென்ன அவர்கள் சிரத்தில் கோபுரமே கூட முளைக்கும்."

வெளியே விடாமல் வாதம் முற்றும் அதே சமயம் உள்ளே யாகத் தீ அரைப் பனை உயரத்துக்குத் தழைத்து எழுந்து கொழுந்துவிட, பல்லவன் ஆகுதியைப் பெற்றுச் சென்று மஹா சுதர்ஸன மூர்த்தியான ஸ்ரீமந் நாராயணனிடம் கொண்டு போய்ச் சேர்ப்பிக்க தயார் நிலையில் இருப்பது தெரிகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பட்டர்களிடம் வேத மந்திர முழக்கம் வெண்பட்டி லிருந்து மட்டைத் தேங்காய் வரையான பொருட்கள் யாக குண்டத்தில் விழுந்து சாம்பலாகித் தீயின் ஜ்வாலை தகிக்கிறது.

யாகத்தின் முக்கிய கட்டத்தை நோக்கிப் பட்டர் களின் மந்திர முழக்கம் சென்று முடிய, பட்டுக் கச்சம் அணிந்து மார்பில் ஹாரங்கள் புரள, நெற்றியில் திருமண் ஸ்ரீசூரண காப்பெல்லாம் தரித்துப் பல்லவன் வைணவச் செம்மலாய்த் தோற்றம் தந்தபடி ஆகுதிப் பொருளுடன் எழுந்து நிற்கிறான்.

"நந்தி, மனதார அந்த மஹா விஷ்ணுவை வேண்டிக் கொள். இந்த மாமதுரை உன் வயப்பட வேண்டும்; திரும்பும் திக்கெல்லாம் பல்லவ நந்திக் கொடியே பறக்க வேண்டும். அதன் நிமித்தம் நடைபெறும் இந்த மகா சுதர்ஸன வேள்வி மகோன்னத வெற்றி பெறக் கடவதாகுக..." அருகாமையில் பல்லவனையே பெயர் சொல்லி அழைக்குமளவு இணக்கமும் உரிமையும் உடைய ஒரு வயதான பட்டரின் வார்த்தைகள் நந்திவர்மப் பல்லவனுக்குள் உற்சாகம் மூட்டும்போது வெளி அரவம் சற்று வலுத்து அவன் காதுகளை எட்டுகிறது. திரும்பிப் பார்க்கிறான். "என்ன அங்கே சப்தம்?"

"யாரோ ஒரு ஆட்டிடையன் வாதம் செய்து கொண்டிருக்கிறான்"

"பாண்டிய மண்ணில் ஆட்டிடையர்கள்கூடவா வாதம் செய்யுமளவு உள்ளனர்?"

பல்லவன் ஆச்சரியம் தாளாது துளி அதிர்ச்சியும் மிகக் கொண்டு திரும்பி நடக்கத் தொடங்க, "நந்தி, உன்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கவனம் பிசகுகிறது ஆகுதியை முதலில் யாகக் குண்டத்தில் சேர்" என்கிறார் பட்டர்.

இதற்குள் ஆட்டிடையனான பாண்டியன் வெளியே உள்ள வீரர்களைத் தன் வலுத்த புஜபல பராக் கிரமத்தால் பிடித்துத் தள்ளிவிட்டு யாகசாலை நோக்கி ஓடி வர, பல்லவன் பார்வை பாண்டியனைப் பார்க்கிறது.

பாண்டியனின் பார்வையும் பல்லவனைத் தாக்கு கிறது. இருவருமே ஒருவரை ஒருவர் தரித்து நிற்கும் வேடத்தை மீறிப் புரிந்து கொள்கின்றனர்.

"வாருங்கள், நெடுஞ்சடையரே! வாருங்கள்! எனது யாகத்திற்கான பலனை இத்தனை சீக்கிரத்தில் நான் அடைவேன் என்ற எதிர்பார்க்கவேயில்லை. எவரை வெல்ல வேண்டும் என்று நான் யாகம் வளர்க்கிறேனோ அவரே என் எதிரில்... ஆஹா! என்னே இறைவனின் கருணை-"

நந்திவர்மனின் வியாகூலமான விளக்கம் அனை வரையுமே திடுக்கிடச் செய்கிறது. அதிலும் பல்லவ நாட்டு நலனில் அக்கறை மிகக்கொண்ட நந்தியின் மாபெரும் விசுவாசி உதயசந்திரன் அதிர்வின் உச்சிக்கே சென்று விடுகிறான்.

"என்ன- வந்திருப்பவர் பாண்டியர் நெடுஞ்சடை யரா?"-துணுக்குற்று வினவுகிறான்.

"ஆம்! பாண்டியனேதான்! எனது கண்ணில் மண்ணைத் தூவி விட்டு எனது மண்ணிலேயே யாகமும் செய்து என்னையே வீழ்த்த என் மண்ணுக்கே வந்துள்ள தங்கள் செயலை வீரம் என்பதா, விவேகம் என்பதா.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இல்லை இரண்டுமேயில்லாத ஏமாற்றுத் துரோகம் என்பதா; அதுவுமில்லை சிறுபிள்ளைத்தனம் என்பதா, இல்லை, சிறுநரித்தனம் என்பதா என்றெல்லாம் கேள்வி களைச் சுமந்தபடி ஒரு ஆட்டிடையனாகி வந்திருக் கிறேன்-"

பாண்டியனின் விளக்கத்தைத் தொடர்ந்து பல்லவன் பார்வை அருகில் அழகுச் சுடராய் நிற்கும் நாகமாலினி யின் பக்கம் திரும்புகிறது. "எவளோ இவள்? பட்டர் அழகர் நம்பியின் அருமைப் புதல்வி மதுரவல்லி தேவியாரோ?"

பல்லவரின் அந்தக் கேள்விமுன், விம்ம ஆரம்பிக் கிறாள் நாகமாலினி! 'மதுரவல்லியைப் பற்றிப் பல்லவன் கூடத் தெரிந்து வைத்திருக்கிறானே! என்ன கொடுமை இது...?' மனசு பதைக்க தன் விழிகளால் அவனைக் கொடூரமாய் வெறிக்கத் தொடங்குகிறாள்.

"தவறு, தவறு- நீ மதுரவல்லியாய் இருக்க வாய்ப் பில்லை. அவள்தான் எவனோ ஒருவனால் தாக்கப்பட்டுச் சிகிச்சையில் இருக்கிறாளே! நீ அனேகமாய் கெங்க மன்னன் ஸ்ரீபுருஷன் மகளாகத்தான் இருக்க வேண்டும்."

நந்தியின் விளக்கம் பாண்டியனைக் கூர்மைப்படுத்து கிறது. "நந்தி, உனக்கு என் அந்தரங்கத் தொடர்புகள்கூட வலுப்பட தெரிந்திருக்கிறது. பாராட்டுகிறேன். உனக்குத் தான் என் நாட்டின் மேல் என்ன ஒரு கண்- போகட்டும்! இப்பொழுதுதான் உன் ஒற்றன் ஒருவன் அகப்பட்டிருக் கிறான்; இனி மற்றவர்களும் அகப்படுவார்கள்-"

பாண்டியனின் பதில் பல்லவனை நகைக்கச் செய்கிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"எனது ஒற்றர்கள் அகப்படவே மாட்டார்கள். அகப்பட்டால் அவன் பல்லவ ஒற்றனாக நிச்சயம் இருக்க மாட்டான்."

"அப்படியானால் என் வசம் அகப்பட்டுள்ள வஜ்ர கேது?"

"அவன் யார் என்று நீயே அறிந்து கொள்ளப் பார்."

பல்லவனின் பதில் பாண்டியனை அதிர்வித்து குழப்பத்தில் தள்ள, நாகமாலினி அவனையும்விட பல மடங்கு அதிர்கிறாள். பல்லவன் இத்தனை விஷயம் தெரிந்து வைத்திருப்பான் என்று அவள் எதிர்ப்பார்த்திருக்க வில்லை. நடுவே பட்டர்பிரான் இடையிடுகிறார்.

"அவர்கள் யாராய் இருந்தாலும் சரி... நந்தி, நீ முதலில் ஆகுதியை யாகத்தில் சேர். முகூர்த்த காலம் தப்பிவிடப் போகிறது." பட்டர் கட்டளையிட்ட கையோடு வேத உச்சாடனம் புரியத் தொடங்க, பட்டர் குழாம் ஒருசேர அந்த மந்திரத்தை உச்சரித்து முழங்குகிறது.

நந்தியும் ஆகுதியுடன் தயாராகுகிறான்.

நாகமாலினி பதைத்துப் பாண்டியனைப் பார்க்கிறாள், பல்லவன் பேசிய பேச்சால் உடைந்து நிற்கும் பாண்டியன். விநாடியும் தாமதிக்காமல் அவள் பார்வையைப் புரிந்து, பல்லவனின் கைவசத்திலுள்ள ஆகுதியைத் தன் வசப்படுத்தி எரியும் யாக நெருப்பில் சேர்க்கிறான்.

துணுக்குற்ற பல்லவ மெய்க்காப்பாளன் உதய சந்திரன் வாளை உருவுமுன் அதை நாகமாலினி உருவி எடுத்து அவன் மார்புக்கு நேராகவே நீட்டுகிறாள். பட்டர்களிடம் பதற்றத்தின் தொற்றுதல்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"பாண்டியனே, இதென்ன ஈனத்தனம்?" நந்தி செருமத் தொடங்குகிறான்.

"உன் செயல்தான் ஈனத்தனமானது. என் மண்ணில் எனக்கெதிரான செயலை நீ செய்வாய். நான் அதை வேடிக்கை பார்க்கவா?"

"யாகம் வளர்த்தது நான். எனக்கு நீ செய்த இடர் அந்தச் சுதர்ஸன மூர்த்திக்கே செய்ததாகும்."

"விதரணையற்ற பேச்சு- வீரன் என்றால் களத்தில் மோது."

"மோதத்தான் போகிறேன்... இரண்டில் ஒன்று பார்க்கத்தான் போகிறேன்-"

"என்றால் இந்த விநாடி இங்கிருந்து அகன்று படையோடு வா. நானும் மோதக் காத்திருக்கிறேன்."

"உன் மண்ணில் உனக்கெதிராக நிற்பவன் எதிரியே ஆனாலும் நானும் ஒரு நாட்டு அரசன், என் யாக வேள்விக்கு நீ செய்த இடர் மன்னிக்க முடியாத குற்றம்."

"என் மண்ணைத் தீண்டி எனக்கெதிராக நீ குற்றம் செய்ய தொடங்கியதைவிடச் சிறியதே என் குற்றம். அதிகம் பேசி அவதிப்படாமல் உடனே இங்கிருந்து ஓடி விடு-"

நெடுஞ்சடையன் பேச்சால் கண்கள் சிவக்க எரிமலையாய்த் தகித்துக் கைபிசைகிறான் பல்லவன்.

"இந்த விநாடி உன்னையும் உன் கூட்டத்தையும் கைதுசெய்து, உன் பல்லவ நாட்டையே பாண்டிய நாட்டுக்கு அடிமை சாசனம் எழுதும்படி செய்ய எங்களால் இயலும். ஆனாலும் வீரத்தில் உன்னை வீழ்த்தி

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அதை அடைவதையே எங்கள் அரசர் பெருமான் பெரிதும் விரும்புவதால் நீ இப்பொழுது இங்கிருந்து தப்பி ஓட உனக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது."

நாகமாலினியின் விளக்கம் வேறு இடையீடு செய்கிறது. பாண்டியன் அவளின் அந்த விவேகமான பேச்சின் நிமித்தம் அவளை மதர்ப்புடன் பார்த்து விழியாலேயே அவளைப் பாராட்ட, நாகமாலினியின் உள்ளக் கூட்டில் மகிழ்ச்சிப் புழுக்கம். அதோடு பல்லவன் நாகாபரணி பற்றியும் பேசியதாலும் அதன் நிமித்தம் பாண்டியர் சிந்தனை வயப்பட்டதாலும் ஏற்பட்ட பயம் வேறு... நடுவில் பல்லவன் பார்வை நாகமாலினியை ஊடுருவுகிறது.

'ஏ பெண்ணே! நீ எல்லாமா எனக்கெதிராகப் பேசுவது?' என்கிற வினா அந்த பார்வையில் தேங்கி நிற்கிறது.

"மாலினி... நாம் வந்த நோக்கம் ஈடேறிவிட்டது. பல்லவர் கண்ணியமாய் இங்கிருந்து விலகி நாம் அளித்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நிச்சயம் படையோடு வருவார் என்று நம்புவோம்.

இனி இதுபோல் யாகம், வேள்வி என்று குறுக்கு வழிகளில் நுழைந்து கால நேரத்தைக் கடத்தமாட்டார் என்றும் நம்புவோம். என்ன சொல்கிறாய்?"

பாண்டியன் நெடுஞ்சடையனின் எகத்தாளமான அந்தக் கேள்வி பல்லவனையும் அவன் கூட்டத்தையும் குடைந்திருக்க வேண்டும். பல்லவன் கணமும் தாமதிக்காமல் அங்கிருந்து கிளம்ப ஆயத்தமானான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கொதித்தெழுந்து நிற்கும் உதயசந்திரனைக்கூட பார்வையாலேயே கட்டிப் போட்டுவிட்டு, தன் புரவிமேல் அவன் ஏறி அமர்ந்து அதைச் செலுத்த விழையவும் அனைவரும் பின்தொடர ஆரம்பிக்கின்றனர்.

கண்கள் விட்டு மறையும் வரை நாகமாலினியும் நெடுஞ்சடையனும் அந்தப் புரவிக் கூட்டத்தைப் பார்த்த படியே இருந்தனர்.

யாக மேடையின் ஹோம குண்டம்கூடப் பாண்டியனின் மறம்போல அமைதியடைந்து தீ ஜ்வாலை குன்றி அடங்கிக் கொண்டிருந்தது.

நாகமாலினி யாக மேடைக்கு அப்பால் உள்ள ஓம்காரக் காளியின் ருத்ர சொரூபம் முன்போய் நின்றிருந் தாள். கைகுவித்த நிலையோடு அவள் முன் குமுறத் தொடங்கினாள்.

அவள் காளியைச் சேவிக்க வந்ததன் நிமித்தம் பல்லவனைக் கண்டு அது இந்த அளவு பாண்டியனுன் தன்னை இங்கேயே இட்டு வந்த செயல் எல்லாம் காளிமாதா அருள் என்பதாக அவளுக்குள் எண்ணங் களின் ஊர்வலம். அதே சமயம் இப்படி வந்த இடத்தில் நாகாபரணியைப் பற்றிய பொய் உடைப்பட்டுப் போன கலக்கம் வேறு.

ஓம்கார காளியின் ரௌத்ர சொரூபம் முன் நிற்கும் நாகமாலினி அருகே பாண்டியனும் வந்து நிற்கிறான். "மாலினி..." என்று அவளை இனிதாய் அழைக்கிறான். அவள் கவனம் உடனே கலைந்து பாண்டியனை நேருக்கு நேர் காணமாட்டாமல் தலை கவிழ்ந்து அவன் பாதங் களைப் பார்க்கிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"மாலினி, உன் உதவிக்கு மிக்க நன்றி..."

பாண்டியனிடம் நன்றியின் கொப்பளிப்பு.

"எதற்கு நன்றியெல்லாம்... நான் என்ன அந்நிய மகளா?"

"யாராய் இருந்தால் என்ன? பல்லவனின் ஊடுரு வலை நுட்பமாய் அறிந்து ராஜ்ஜிய விசுவாசத்துடன் அவனது வேள்வியைத் தடுக்க முனைந்த செயல் மதியூகம் மிக்க செயல். வீரமான விவேகச் செயலுங்கூட..."

"உங்களுக்கு இப்படி உதவி செய்ய கிட்டிய இந்தச் சந்தர்ப்பத்திற்கு நான்தான் நன்றி கூற வேண்டும்."

"உனக்கு மிகப்பெரிய மனசு- அதனால்தான் இப்படி எல்லாம் கூறுகிறாய்."

"உங்களைவிட பெரிய மனசா என்ன? அகப்பட்ட எதிரியைக்கூடத் தப்பவிட்டுப் போர்முனைக்கு வா சந்திப்போம் என்கிற மனப்பாங்கு எத்தனை பேருக்கு வரும்?"

"சராசரி மனிதனுக்கு வராமல் போகலாம்-அதனால் பாதகமில்லை. ஆனால், அரசனுக்கு கட்டாயம் வந்தாக வேண்டும். வந்தாலே அவன் அரசன்."

"வராவிட்டால்?"

"அவன் அரசனாயிருந்து பலனில்லை. வெறும் புருஷனாக இருக்கக்கூடத் தகுதியற்றுப் போய்விடு கிறான்."

"எது புருஷ லட்சணம்-அரச லட்சணம்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

“ஏதேது... என்னை நீ பேட்டி காண்கின்ற மாதிரி தெரிகிறதே! வீரமே புருஷ லட்சணம். அதில் நீதி வழுவாத நிலைதான் அரச லட்சணம்.

சரி, நாம் கிளம்புவோமா?”

“இந்தத் தனிமையில் பல்லவனின் வேள்வியைத் தடுத்து நிறுத்திய வெற்றிக் களிப்பில் ஒரு பழகிய பெண்ணும் உங்களுக்குத் துணையாக இருக்க அதை ஏகாந்தத்துடன் கொண்டாடி மகிழ்வதை விடுத்துக் கிளம்ப அவசரப்படுகிறீர்களே...”

நாகமாலினியின் காதல் இழையும் பேச்சைப் புரிந்தும் புரியாமலும் புறந்தள்ளும் பாண்டியன், ஆலயம் விட்டு வெளியே வந்த ஆட்டுக் கூட்டத்தைப் பார்க்கிறான்.

ஆவாரத்தழைப் புதர்களில் மூடிக்கொண்டு தரைப் புற்களைக் கொரித்துக் கொண்டிருக்கின்றன அந்த வாயில்லாத ஜீவன்கள்.

அவற்றில் ஒரு ஆடு ஓங்கி உயர்ந்த பாம்பின் புற்றருகே துளியும் விதரணையின்றித் தன் தோலின் நமண்டுதலுக்காகப் புற்றுச் சுவர்மேல் உரசிக் களித்துக் கொண்டிருக்க, உள்ளிருந்து சீறிக்கொண்டு வெளியே வந்துவிட்டிருந்தது நாகம் ஒன்று.

அதைக் கண்டு திடுக்கிடுகிறான் பாண்டியன். அனைத்து உயிர்களையும் தன்னுயிர்போல எண்ணும் அவன் நேசம் அந்த ஆட்டிற்காகவும் அலை பாயத் தொடங்குகிறது.

புற்றை நோக்கி ஓடுகிறான். பாம்பையும் கொல்லாமல் ஆட்டையும் காப்பாற்ற முனைகிறான். சீறும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பாம்போ அவன் தன்னை நெருங்கி வருவது ஆட்டைக் காப்பாற்ற மட்டுமல்ல, தன்னையும் கொல்லத்தான் என்பதாகக் கருதி, தன் நீண்ட குழலுடம்பில் காற்றைச் சேமித்து அடக்கி வெறிச் சீற்றத்துக்குத் தயாராகிறது.

நாகமாலினியும் இதைப் பார்த்து விடுகிறாள்.

"அரசே, வேண்டாம், வேண்டாம்... அருகே செல்லாதீர்கள்... அந்த நாகம் பொல்லாத நாகம்..." அரற்றியும் பலனில்லை. பாண்டியன் பாம்பைப் பார்த்த படியே ஆட்டை வாரிச் சுருட்டத் தயாராகிறான்.

ஏதோ ஒரு விபரீத விளையாட்டு; கரணம் தப்பி னால் மரணம் என்கிற ரீதியில் அங்கே அரங்கேற்றமாக ஆரம்பிக்க, ஓடிப் போய்க் குறுக்கில் நுழைந்து அந்த நாகத்தை அசாத்ய துணிச்சலுடன் பிடித்துத் தலையைச் சுற்றி விட்டெறியப் பார்த்தாள் நாகமாலினி.

பலன் இல்லை... அது அவள் கைகளில் தன் பற்களைப் பதித்தே விட்டது!

# 7

அந்தச் சர்ப்பம் அந்தச் சீறு சீறும் என்றோ இத்தனை விரைவாய் அது தன்னைத் தாக்க விழையும் என்றோ, அதனினும் விரைவாய் நாகமாலினி குறுக்கிட்டு தன்னைக் காப்பாள் என்றோ பராந்தக நெடுஞ்சடையன் எண்ணினான் இல்லை.

ஓர் ஐந்தறிவு ஜீவனுக்காய்ப் பரிதாபப்படப் போய் என்னென்னவோ நிகழ்ந்து விட்டதே?

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"மாலினி மாலினி..."-பதறுகிறது பராந்தகனின் உதடுகள். அந்தச் சர்ப்பம் மேலும் சீறித் தலை நிமிர்த்து கிறது. பராந்தகன் கரங்கள் இந்த முறை எந்த அச்சரவமும் இன்றி லாவகமாக அதைப் பிடித்து வீசி எங்கோ எறிகின்றன.

நாகத்தின் தீண்டுதல் நிமித்தம் மயங்கப் போகும் நாகமாலினிக்குத் தனது தொடையையே ஆசனமாக்கு கிறான்.

நாகம் தீண்டிய அந்த இடத்தில் அதன் பல் தடங்கள் பளிச்சிடுகின்றன. பராந்தகன் தாமதியாமல் அந்தத் தடத்தைத் தன் கட்டாரியால் சீறிக் குருதியை வேகமாக இதழ்களால் உறிஞ்சத் தலைப்படுகிறான்.

இயல்பாகவே மாவீரனாய் ஆண்மைக்கேயுரிய கெழுமிய லட்சண சுந்தரனாய் பராந்தகன் இருப்பினும். அவனது முகமும் அதன் மேன்மையும் காந்தம் மிக்கவே. அதிலும் அவனது இதழ்களில் காணும் செம்பருத்திப் பூவின் சிவப்பு மென்மையும் ஆடவர்க்கே ஆச்சரியம் ஊட்டுபவை.

இப்பொழுது அந்த இதழ்கள் குருதிப் புனலால் மேலும் சிவத்து ரத்தக் காடாகி உலகிலேயே ஈடு காண மாட்டா செந்நிறமாய்த் தெரிகின்றன.

அவனது முதலுதவி நாகமாலினிக்கு ஒன்றும் தெரியாமல் இல்லை. நாகவம்சத்து மனிதர்களை நாக விஷம் அவ்வளவாய் ஒன்றும் செய்யாது என்பது பராந்தகனுக்குத் தெரியாது போலும்! அதிலும் இளம் பிராயத்தில் கெங்க நாகர்கள் மான்களோடும் மயில் களோடும் விளையாடுகின்ற மாதிரி பாம்புக் குட்டி

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

களோடும் வாய்ப்புகிட்டும் சமயம் விளையாடி மகிழ் வார்கள். அவற்றால் கடிபட்டுக் கடிபட்டுப் பல நாகரி களின் மானுட தேகமேகூட விஷமாகிவிட்ட விஷயங் களையெல்லாம் ஏனோ தற்போது இருக்கும் பதற்றத்தில் பராந்தகன் எண்ணிப் பார்த்தானில்லை.

தனது உயிரையும், அந்தக் கன்றையும் காக்க மாலினி துணிந்து குறுக்கிட்டு இப்படித் துன்பப்பட்டுக் கிடப்ப தற்காகக் கசிந்து உருகுகிறது அந்த மாமன்னன் நெஞ்சம்.

'இனியும் தாமதிக்கக்கூடாது; இவளை அரண்மனை வைத்தியரின் தீவிர சிகிச்சைக்கு ஆட்படுத்த வேண்டும்' என்று தீர்மானிக்கவும் செய்கிறது அவன் உள்ளம்.

உயிருக்கு ஏதும் உற்பாதமோ?-நாடி பிடித்துப் பார்க்கிறான். பதற்றத்தில் நாடித் துடிப்பைத் துல்லியமாய் அறிய முடியவில்லை.

எதற்கு இருக்கிறது மார்புடை நெஞ்சு?

தன் சிரத்தை அவளின் மார்பு மேல் சரித்து மரங்களில் விளையும் பழத்தை மார்பிலும் விளைத்த அந்தப் பெண்ணின் உயிர்த் துடிப்பைச் சோதித்துப் பார்க்கிறான் பராந்தகன்.

நாகமாலினி அரை மயக்கத்தில் அதை மிக ரசிக்கிறாள். அதிலும் பெண்மையின் வன்மையான சின்னத் தின் மேலேயே அவன் சிரம் சாய்ந்துவிட்ட செயலால் குருதி பூரிக்கக் கொந்தளிக்கத் தொடங்குகிறாள்.

'கடமை நிமித்தமான இந்த ஸ்பரிசமே என்னை இந்தப் பாடு படுத்துகிறதே! மன்னரே, எனை நீங்காதீர்!' என்று மனசுக்குள் ஆசை மிகக் கொள்கிறாள்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இதன் காரணமாகவெல்லாம் அவளின் இதயம் வேகம் மிகக் கொண்டு துடிக்கிறது. அது பராந்தகன் செவிப் புலனை நன்றாகவே தாக்குகிறது.

'அப்பாடா.....;'-பெருமூச்செறிந்து நிமிருகிறான். ஒரு பழக்கொடியாய்க் கிடக்கும் அவளை உடனே இடை தொட்டுத் தூக்கித் தன் தோள் ஏற்றிக் கொள் கிறான்.

கரங்கள் அவள் மேனி மேல் எந்தத் தடையும் இன்றி ஊர்ந்து பற்றுகிறது.

பட்டு முலைக் கச்சு நெகிழ்ந்து பால் பொங்குகின்ற மாதிரி, பவுர்ணமிச் சந்திரன் தலை நிமிர்த்துகின்ற மாதிரி கூச்சம் விட்டு நீங்கி மார்பகங்கள் பராந்தகனின் வன் புயங்களை உரசுகின்றன!

கல்லும் கல்லும் மோதினால்தான் தீ பிறக்கும் என்று சொல்வதைப் பொய்ப்பிக்கும் நிகழ்ச்சி நடந்தேற ஆயத்தமாகிறது.

இடது முன்கரம், பருத்த அவள் தொடை மேல் வளைத்துப் பிடிக்க, வலக்கரம் வீசி வேகமாய் நடக்கிறான் பராந்தகன்.

வனமே துள்ளும் நடை!

அருகாமை வைகை வியந்து நோக்கும் நடை!!

பல்லாயிரம் வீரர்கள் பாண்டிய மன்னனின் ஆணைக்கு ஆட்பட்டு ஓடிவரத் தயாராக இருப்பினும் ஏனோ பராந்தகன் பல்லவனை எதிர்கொள்ள மாலினி யோடு மட்டுமே வனம் புகுந்திருந்தான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கூட்டமாய் வந்து பல்லவனைப் பீதிக்குள்ளாக்கி, அதன் நிமித்தம் அவனை உழலச் செய்வதைவிடத் தனியாய் வந்து இதுபோல் அவனைத் தீரத்துடன் எதிர் கொண்டு திருப்பி அனுப்பிய செயலை எண்ணி ஒரு கணம் தனக்குத் தானே செருமாப்பு கொள்கிறது அவன் நெஞ்சு.

'இந்த மாலினிதான் இம்மட்டில் எத்தனை பெரிய உதவி செய்துவிட்டாள்! பெண்கள் மென்மையானவர்கள் மட்டுமே என்று எண்ணிய எண்ணத்தைப் பொய்யாக்கி பல்லவனின் யாகத்தை அடையாளம் காட்டி, அதைத் தடுக்க உதவியதோடு தன்னை அரவத்திடம் இருந்து காத்துவிட்டாளே! மாலினி! நான் உனக்கு கடமைப் பட்டிருக்கிறேன்.'

நடக்கும் பராந்தகனுக்குள் இதுபோல் எண்ணப் போக்கு-

அதோ வைகைக் கரை ஓரமாய்ப் பண்ணைக்காடு. அங்கிருந்துதானே மாட்டுக் கூட்டத்தை மேய்த்துக் கொண்டு காளியின் ஆலயம் வரை செல்ல முடிந்தது.

பண்ணைக் காட்டு அதிபன் உழவன் பிச்சாண்டி மாடன் வனம் நீங்கி மாலினியைச் சுமந்துவரும் பராந்த கனைப் பார்த்துப் பதைக்கிறான். கைகட்டி விழி விரித்துப் பதற்றம் மிகக் காட்டி, "அரசே, என்னாயிற்று தேவி யாருக்கு- தாங்கள் போன காரியம் ஜெயசித்தி பெற்றதா?" என்று ஒரே சமயத்தில் இரு வினாவைப் பராந்தகன் முன் வைக்கிறான்.

"பிச்சாண்டி, உடனடியாக அரண்மனை வைத்தியரை நான் அழைத்ததாகக் கூறி வேகமாகவும், ரகசியமாகவும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இங்கு அழைத்து வா-மாலினியை நச்சரவம் தீண்டி விட்டது" என்கிறான் பராந்தகன்.

"ஆகட்டும் அரசே" என்னும் பிச்சாண்டி, அடுத்த கணம் புயற்காற்றாய் மாறினதுதான் மிகப் பெரிய ஆச்சரியம். அந்தக் காடே நடுங்கும் வண்ணம் அவனது கரும்புரவி மாமதுரை நகர் நோக்கிப் பறக்கத் தொடங்கு கிறது.

நாகமாலினி, பண்ணையின் கயிற்றுக் கட்டிலில் பூங்கொத்தாய்ப் பராந்தகனால் கிடத்தப்படுகிறாள். நடப்பதை உணர்ந்த நிலையில் கண் திறக்காமல் பாசாங்கு செய்தபடி கிடக்கிறாள் அவள். அவன் தோளில் சாய்ந்து வந்த சுகத்தை எண்ணி எண்ணி நெகிழுகிறாள்.

"அரவமே, நீ வாழி!" என்று மெலிய முணு முணுக்கவே செய்கிறாள்.

இடையனாய்த் தெரியும் பராந்தகன் கட்டிலில் கிடக்கும் மாலினியை உற்று நோக்குகிறான். அவன் காதல் உள்ளம், மாலினியைக் கண்ட மாத்திரம், மதுரவல்லியை நினைக்கத் தொடங்கி விடுகிறது.

மாலினியையே மதுரவல்லியாகப் பார்க்கத் தொடங்கி விடுகிறது. அவளை எண்ணியதாலோ என்னவோ அந்த நண்பகலைக் கடந்து அந்தி நோக்கும் வேளையிலும் பராந்தகன் மோனம் மிகக் கொள்கிறான். அவளது ஜோதி ஸ்வரூபமான ரூபத்தை நினைவில் நிமிர்த்திக் காதல் உணர்வுகளில் நெளிகிறான்.

ஆயிரமாயிரம் பெண்களைத் தாங்கி இந்தப் பிரபஞ்சம் அனுதினமும் சுழன்றாலும் அவர்களில் திலோத்தமை, மேனகை போன்ற தேவகன்னியர்கள்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

ஆயிரமவர் இருந்தாலும் இந்த மனம் மாத்திரம் ஏனோ ஒரு குறிப்பிட்ட பெண்ணிடம் மட்டும் குற்றுயிராகி விடுகிறது. நீ இல்லை என்றால் வாழ்க்கை இல்லை, அதில் ஒளி இல்லை' என்றெல்லாம் எண்ணிக் குமைந்து சோர்ந்து போய் விடுகிறது. இது எதனால்? பூர்வஜன்ம பந்தத்தின் தலையெடுப்பால் நிகழுவதோ இது? விட்ட குறை தொட்ட குறைதான் இப்படி உரியவளைக் காணும் வேளையில் உயிர் வாதை கொள்கிறதோ? மனச் சட்டத் தில் மிகப் பொருத்தமாக அவள் பொருந்துவதால் இருக்குமோ?

அப்படித்தான் தன் மனமும் மதுரவல்லியிடம் மண்டியிட்டு விட்டதோ?

பராந்தகன் கைகட்டி நின்றபடி யோசிக்கத் தொடங்குகிறான். எண்ணங்கள் இப்படியே சென்று, பல்லவன் செருக்கோடும், இளக்காரத்தோடும் கூறிய செய்தியில் போய் நிற்கிறது. மதுரவல்லியைப் பல்லவ ஒற்றன் தாக்கியதாகக் கருதி அவனைக் கைதுசெய்து வைத்திருப்பதன் அபத்தம் மெல்ல புரியத் தொடங்கு கிறது.

'அகப்பட்டிருப்பவன் எனது ஒற்றன் அல்ல..' என்று உறுதிபடப் பல்லவன் சொன்னதில் ஊசலாடத் தொடங்குகிறது.

'என்றால் நாகாபரணி யார்? கெங்கனோ? தனது பாட்டன்மார் வம்சத்தவன் எதற்காகத் தனக்கு எதிராய் இப்படி ஒரு குரூரச் செயலில் ஈடுபட வேண்டும்?'

வினாப் புழுக்கம் அதிகரிக்கிறது பராந்தகனிடம். பண்ணைக்காடு இள வெப்பம் கொண்டு வைகைக் காற்றால் விளாவப்பட்டு வீசிக் கொண்டிருக்கிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தலைப்பாகையை அவிழ்த்துப் பாகைத்துணியைத் தோள்மேல் போட்டுக்கொண்டு நிற்கிறான் பராந்தகன். அவனது நெடுஞ்சடை அவிழ்ந்து நீண்டு வீசும் காற்றில் தோகைபோல் ஆட ஆரம்பிக்கிறது.

கால் அகட்டி, கை கட்டி எதிரே தெரியும் வனம் பார்த்து, அந்த வனம் மேல் வட்டமிடும் வல்லூறு பார்த்தபடி பல்லவனின் எகத்தாளமான, அதே சமயம் அதிர்ச்சியூட்டும் செய்தியை எண்ணிக் குமைந்தபடி நிற்கும் பராந்தகனைக் கட்டிலில் கிடக்கும் நாகமாலினி மெல்ல அரைக்கண் திறந்து பார்க்கிறாள்.

"தன்னை ரசித்துக் கொண்டு நிற்பான் என்று கருதிய இடத்தில், அவ்வாறின்றி இறுக்கமாய் அவன் எது குறித்துச் சிந்தித்தபடி இப்படி வனம் பார்த்து நிற்கிறான்?"

அவளுக்குள்ளும் வினாக் கிளறல். 'பல்லவன் நாகாபரணி பற்றிக் கூறிய நிஜம் குறித்தோ?' - நாகமாலினி சுற்றி வளைக்காமல் மிகச் சரியாகவே பாண்டியனின் அந்த இறுக்கத்திற்குக் காரணம் புரிந்த மாதிரி அந்தச் சயன நிலையிலேயே அதிர்ச்சி கொள்ளத் தொடங்குகிறாள்.

அண்ணன் நாகாபரணிக்கு இத்தனை சீக்கிரம் ஒரு பேராபத்து வந்து சேரும் என்பதை அவள் எந்த விதத்திலும் எதிர்பார்த்திருக்கவில்லை

நிச்சயம் பராந்தகன் அரண்மனையை அடைந்த மறு விநாடியே நாகாபரணி குறித்து, பிரதானிகளுடன் ஆராயத் தொடங்கிவிடும் அபாயம் அவளுக்குப் புரிகிறது. அனைத்தையும் தடுத்தாக வேண்டும். பல்லவன் சொன்னதைப் பொய் என்று ஆக்கவேண்டும். இல்லாவிட்டால் அண்ணனைச் சிறையிலிருந்து தப்புவிக்கச் செய்ய வேண்டும்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

'என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்?'

கயிற்றுக் கட்டிலில் கிடக்கும் அவளுக்குள்ளும் எண்ணக் குதிரைகளின் பாய்ச்சல்.

வெல்லப் போவது பராந்தகனா, இல்லை மாலினியா-

அந்தப் புரவிக் கூட்டம் களைத்து ஓட்டம் சிறுக்க தளிர்நடை போடத் தொடங்கிவிட்டிருந்தது. மதுரை விட்டு நீங்கின விநாடி முதல் இருட்டப் போகின்ற இதோ இந்த அந்திச் சந்தி வரைக்கும் துளியும் ஓய்வேயின்றி அது பயணம் செய்துவிட்டிருந்தது. வாயண்ணங்களில் நுரை தள்ளிப் போயிருந்தது. வாலைக் குழைப்பதில்கூடச் சோர்வு தெரிந்தது.

புரவிகளின் மேல் பிரதானமாகப் பல்லவன் தெரிகிறான். பராந்தகன், யாக வேளையில் இடையிட்டு ஏற்படுத்திய அந்த இடர்ப்பாட்டை எண்ணியே குமைந்து கொண்டிருக்கிறான்.

மிக ஜாக்கிரதையாக இருந்தும் நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. எப்படி இது நடந்திருக்க முடியும்?

இதே கேள்விதான் ஒட்டி உடன்வரும் உதய சந்திரனிடமும்- உதயசந்திரனின் சிந்தையில் இடைச்சியாக வந்து பாண்டியனோடு சரிக்குச் சரி நின்று பேசிய நாகமாலினியின் உருவமும் சேர்ந்தே தளும்புகிறது. அவளது பேச்சும் செயலும் அவனைப் பெரிதும் கவர்ந்து அவனையே நினைக்கச் செய்வதாக ஒரு பிரமைகூடத் தட்டுகிறது. வீரர் கூட்டமும் ஆளுக்கொரு சிந்தையுடன் அமைதி ததும்ப உடன் வந்த போதிலும் புரவிக் குளம்படிச்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

சப்தம் மட்டும் அந்த அமைதிக்குத் தாளகதி சேர்க்கின்ற மாதிரி இருக்கிறது.

அந்தக் குளம்படிகள் புரட்டும் புழுதிக் கவளங்கள் சோழ நாட்டு நெல் உமிகளை வாசத்துடன் கிளறு கின்றன.

பல நாழிகைப் பயணத்தில் பாண்டிய நாட்டை நீங்கியாயிற்று. இதோ சோழவளநாடு! பொங்கிச் செல்லும் பொன்னி நதியால் பொன்னாய்ச் செல்வம் கொழிக்கும் நாடு. எப்பக்கம் பார்த்தாலும் பசுமைதான். அதிலும் மேற்குச் சூரியன் ரத்தப்பழமாய்க் கதிர் பாய்ச்சி மறைந்து போக, அந்த இளவெம்மையில் இதமான இந்தப் பசுமையை அனுபவித்து உணரத் தனி ரசனையே வேண்டும்.

அது இருக்கின்ற மாதிரி ஒரு பரவச உணர்வு உதய சந்திரன் முகத்தில் ஊர்ந்து செல்கிறது. துல்லியமாக அதை உணரும் பல்லவன் அதன் காரணமாக கோபம் கூட மிகக் கொள்கிறான்.

"ஊதுலை போல் நெஞ்சம் கொதிக்க உன்னுள் எப்படி ரசனை பொங்குகிறது உதயா?" என்கிறான்.

"அது என்னவோ அழகைக் கண்டாலே நான் அமைதியாகி விடுகின்றேன். அனைத்து எழுச்சிகளும் அடங்கி அந்த அமைதியில் ஐக்கியமாவதையே என் உள்ளம் குறிக்கோளாக்கிக் கொண்டு விடுகின்றது."

உதயசந்திரனின் பதிலில் உண்மை இருப்பினும் பல்லவனால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

"பாண்டியனோடு போராடித் தோற்றிருந்தால் கூட எனக்கு இத்தனை வருத்தம் இருக்காது. 'இன்று போய்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நாளை வா' என்ற ஸ்ரீராமன், ராவணனை சொன்னது போல், 'படையோடு வா. காத்திருக்கிறேன். களத்தில் சந்திப்போம்' என்றெல்லாம் சொன்ன அவன் சொற்களை ஜீரணிக்க மாட்டாமல் நான் இங்கே தவித்துக் கொண்டிருக்கிறேன். நீயோ இந்த மண்ணை ரசிக்கிறாய், காரணம் கேட்டால் எழுச்சி, ஐக்கியம் என்று கதைக்கிறாய்..."

புரவியை ஒரு புன்னை மரநிழலில் நிறுத்திவிட்டு இறங்கிய வண்ணம் பல்லவன் கேட்கும் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்ல..?

"அரசே! என்னுள்ளும் பாண்டியன் நிமித்தம் வருத்தக் குமுறல் உண்டு. அதற்காக அதையே நினைத்து உழல்வதால் என்ன பயன்?"

"பக்குவம் மிகுந்த துறவிபோலக் கேள்வி கேட்கிறாய்..."

"மாவீரனுக்குள் துறவியின் லயங்களும் உண்டு என்பதை அறியாதவரா தாங்கள்" - உதயசந்திரனும் புரவி நீங்கித் தரையைத் தொடுகிறான்.

"எப்படி?"

"இருவருக்குமே வெற்றிதான் இலக்கு. மாவீரன் இந்த மண்ணை வெற்றி கொள்கிறான், துறவியோ தன்னையே வெற்றி கொள்கிறான். இருவருமே சோதனைகளில்தான் ஒளிருகின்றனர். இருவருக்குள்ளும் மன உறுதி பொதுவாக இருந்து இயக்குகின்றது. இருவரையுமே இந்தப் பூமி வணங்குகின்றது."

"உன் பேச்சு கேட்க நன்றாய் இருக்கிறது. ஆனால், அதை ரசித்து மேலும் மன்றம் கூட்ட என் மனோ நிலையில்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

ஒருமை இல்லை. அது என் யாகத் தோல்வியைக் குறித்தே குமுறிக்கொண்டிருக்கிறது."

"நடந்ததை ஏன் தோல்வியாய் நினைக்கிறீர்கள்? கூர்ந்து கவனித்தால் எனக்கு அப்படித் தெரியவில்லை."

"எப்படி—எப்படி?"

"ஆம். பாண்டியனின் வீரம் எத்தகையது என்பதை நாம் நேரிலேயே அறிய இந்த யாகம் உதவியது. அவனது உளவறியும் சாதுர்யம்-வீரத்தை மட்டுமே நம்பி மோதத் துடிக்கும் நேர்மை-அதோடு அவன் நாட்டில் பெண்டிர் கூட வீரத்துடன் திகழும் செழுமை என்று பல நுட்பங்கள் நமக்குத் தெரியவந்துள்ளன."

"நீ கூறுவது மிகச் சரி. ஆயினும் யாகத்தின் ஆகுதியை யார் விடுகின்றார்களோ அவர்களையே வெற்றித் தேவதை ஆரத் தழுவுவாள் என்று சோதிடர் சொன்னதை மறந்து விட்டாயா?"

நந்திவர்ம பல்லவனின் கேள்வி உதயசந்திரனை பெரிதாகவே கட்டிப் போடுகிறது. அவனது நீண்ட மௌனம் பல்லவனுள்ளும் சோர்வை உண்டாக்குகிறது.

இப்படி இருவரும் பேசிக் கொண்டபோதிலும் அருகில் இருக்கும் பிரதானிகளுக்கும்-வீரர்களுக்கும் அவை காதில் விழாமல் இல்லை. அவர்களில் பல்லவப் படையிலேயே நீந்தி நெடுங்காலம் ஒரு வீரனாகவே கழித்துவிட்டு, ஒரு உபதளபதியாக ஆகவேண்டிய தருணத்திற்காகக் காத்துக் கிடக்கும் ஒரு முதிய வீரன் ஏதோ சொல்ல ஆசைப்படுவது போல் பல்லவனைப் பார்க்கிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அரசே, ஒரு விக்ஞாபனம்!" என்று கைகட்டி எதிர் வந்து தழைவாய்ப் பார்க்கிறான்.

"என்ன அது?"

"தாங்கள் சோதிடர் கருத்தின் காரணமாய் வருந்தி நிற்கக் காண்கிறேன். நமது வேள்வியும் நமது வரையில் பொய்யாகி விட்டது. இந்நிலையில் சோதிடர் கூறியபடி எங்கே பாண்டியன் நாம் வெற்றி கொள்ள முடியாதோ என்று தாங்கள் நினைப்பதில் யாதொரு பிணக்கும் எனக்கில்லை. வெற்றி கொள்ளும் உபாயத்தை நான் கூறலாமா?"

அந்த முதிய வீரனைப் பல்லவன் ஆச்சரியத்தோடு பார்க்கிறான். உதயசந்திரனும் சேர்ந்து நிமிர்கிறான்.

"எந்த ஒரு சோதிட சாஸ்திரத்திலும் எந்த ஒரு இடர்ப்பாட்டிற்கும் மாற்றுப் பாதையும் காட்டப்பட்டிருக்கும். நமது வேள்வி தடைப்படக் காரணம் எது என்பதிலிருந்து அந்தக் காரணத்தைக் கண்டறிந்து வெற்றி கொள்வது வரைக்கும் பரிகாரங்கள் கூறி நம்மை நல்வழிப்படுத்த ஒருவர் தயாராயிருக்கிறார்".

"யார் அவர்?"

"வான சாஸ்திர நிபுணர் காஞ்சி வராக பண்டிதர் என்பது அவர் திருநாமம்."

"வராக பண்டிதர்– நமது அவைக்குப் பரிசயமானவரோ?"

"தங்களின் திருநட்சத்திரம் தோறும் வந்து தங்களை வணங்கிப் பரிசுகள் பெற்றுச் செல்லும் ஓர் அந்தணர் அவர்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அவரது கீர்த்திக்குச் சான்று...?"

"நாம் காஞ்சியை விட்டு நீங்குமுன் அவரைத் தற் செயலாய்க் கண்டேன். ராஜாங்க விஷயமாய்த் தெற்கு நோக்கி பயணம் செய்ய உள்ளேன் என்று மட்டும் சொன்னேன். தெற்கில் சூலை என்று கூறித் தடுத்தார். அது மட்டுமன்று. தங்களின் ஜனன கால தசா புத்திகளின்படி தற்போது எதைத் தொட்டாலும் அதில் எதிர்ப்பு மிகுந்து வரும்; மன்னருக்கு ரட்சை மிக அவசியம் என்றெல்லாம் சொன்னார்."

"நமது அரசவைச் சோதிடரைவிடவும் மேலானவரா என்று கேட்கிறேன்."

"நான் அப்படித்தான் நினைக்கிறேன்."

"என்றால் நாம் காஞ்சியை அடைந்த மறுகணம் அவரைச் சந்தித்தாக வேண்டும்."

"நானே அவரை அழைத்து வருகிறேன்."

அந்த முதிய வீரன் விலகிக் கொண்டான். உதய சந்திரன் ஆழ்ந்த பார்வை பார்க்கிறான்.

"என்ன உதயா... பயம் வந்துவிட்டால் மனிதன் பிடிமானத்திற்காக எவரை வேண்டுமானாலும் நம்பத் தயாராகி விடுவது போல் தோன்றுகிறதா உனக்கு..."

"ஏதாவது ஒன்றை நம்பாமல் எதிலும் வெற்றிபெற முடியாதே."

"நீ பேசுவது மனோதத்துவம். யுத்த களத்துக்கு அது உதவுமா என்ன?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"நிச்சயம் உதவும். என் வரையில் யுத்தகளத்தில் நமது பலத்தை நம்பும் அளவு நாம் எதிரியின் பல வீனத்தையும் நம்பவேண்டும். இரண்டும் சம அளவு சேரும் போதுதான் வெற்றி."

உதயசந்திரன் பேச்சோடு பேச்சாகத் தன் புரவியைப் புன்னை மரத்தில் பிடித்துக் கட்டுகிறான்.

'இன்றைய இரவுப் பொழுதை இங்கேயே கழித்துவிடலாமா?' என்கின்ற மாதிரி பல்லவனைப் பார்க்கிறான். 'வேண்டுமானால் மேலும் சில நாழிகை இங்கு ஓய்வு எடுக்கலாம். ஆனால், பொழுதைக் கழிக்க ஏதாகிலும் சத்திரமே உகந்தது' என்று பல்லவன் நினைப்பதாகவும் தெரிகிறது.

இருள் கவிழ்ந்து சூழ்ந்து கொண்டுவிட்டது. படைக் கூட்டத்தில் ஆணையிடாமலே அடுத்த கட்டச் செயல் முடுக்கிவிட்ட மாதிரி நடக்க ஆரம்பித்துவிட்டது.

பல்லவன் அமர்ந்து கொண்டுவிட்ட மரத்தடிக்கு ஒரு வீரன் தீப்பந்தம் தாங்கிவந்து நிற்கிறான். இன்னொருவன் குடுவை ஒன்றிலிருந்து பழச்சாறு கொண்டு வந்து தரத் தொடங்குகிறான். செல்லும் வழியில் சேகரிக்கப்பட்ட பழங்களை ஒரு தட்டில் வைத்துப் பல்லவன்முன் வைத்துச் செல்கிறான் இன்னொருவன், உச்சிப் பகலாய் இருப்பின் கவரி வீசவும், காற்றைக் கிளறவும்கூடத் தயாராய் இருப்பது தெரிகிறது.

நாழிகைக் கணக்காளன் தனது மணற்கடிகையைக் கொண்டு பொழுதை கூட்டியளக்கத் தொடங்கிவிட்டான். நந்திப் பல்லவன் எப்பொழுது வேண்டுமானாலும் காலம் அறிய விரும்புவான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அருகிலேயே ஒரு குளம் இருப்பதன் பொருட்டுப் புரவிக் கூட்டம் தாக சாந்தி செய்ய ஆயத்தமாகிறது.

வானில் நட்சத்திரப் பட்டாளம்!

அதை அண்ணாந்து பார்த்தபடியே நந்திவர்ம பல்லவன், உதயசந்திரனின் தோளில் கை போட்டு மெல்ல எழுந்து நடக்கத் தொடங்கினான்.

நடையிடும் சமயம் நுட்பமாகக் கேட்கிறான்.

"இடைச்சியாக வந்த பெண்ணைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

"நானும் அவளைப் பற்றித்தான் அதிகம் யோசிக்கிறேன். அசாதாரண பார்வை அவளுடையது. அழகும் இருக்கிறது. அதே சமயம் அதில் ஒரு நளினமற்ற இறுக்கம் இழையோடுகிறது."

"அங்க லாவண்யத்தைக் கேட்கவில்லை அவளது அறிவுத் திறத்தைக் கேட்கிறேன். அவள் யாராக இருக்கும் என்று கேட்கிறேன். வைகைக் கரை ஓரமாய் ஒரு ரதம் ஒன்று தென்பட்டு மறைந்ததாக நமது வீரன் குறிப்பிட்டதையும் இவ்வேளையில் எண்ணிப் பார்."

"அவ்வேளையில் உளவறிய வந்து உளவறிந்தும் சென்றவள் இவள் என்று கருதுகிறீர்களா?"

"ஏன் இருக்கக்கூடாது? பாண்டியனுக்கு மிகு நெருக்கமான ஒரே பெண் மதுரவல்லிதான். அப்படி இருக்க பூப் போன்ற அவளை விடுத்து, இவளின் துணையோடு பான்டியன் நம்மை எதிர்கொண்டதன் பின்புலத்திலும் ஏதோ மர்மம் இருக்கவேண்டும்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"மர்மமா?"

"ஆம்- பாண்டியனை நான் நன்கறிவேன். ராஜ்ஜிய விவகாரங்களில் ஒரு பெண்ணின் துணையை நாடு மளவோ-இல்லை ஒரு பெண்ணை ஏவுமளவிற்கோ அவன் போகவே மாட்டான். அவனது ஒற்றர்களில் சாத்தன் கணபதியை விடவுமா ஒரு உளவாளி தீரத்துடன் செயல் பட்டுவிட முடியும்?"

"நீங்கள் பலவாறு சிந்திப்பதாகத் தெரிகிறது. நேரடியாகக் கூறினாலே என்னால் புரிந்து கொள்ள முடியும்."

"நம்மைப் பொறுத்தமட்டில் இப்போது பாண்டியன் பராந்தகனை விடவும் அதிமுக்கியமானவள் அந்தப் பெண் தான். அவள்தான் நம் விஷயத்தில் பாண்டியனை இயக்குகிறாள்."

"என்னுள்ளும் அந்த யூகம் உண்டு. அந்த இயக்கு விப்பிற்குக் காரணம்தான் நமக்குத் தேவை-அப்படித் தானே?"

"காரணம் என்ன பெரிய காரணம்...? காதல் ஒன்றுதான் காரணம்."

"காதலா?"

"ஆம்! அது ஒன்றுதான் ஒரு பெண்ணை இது போன்ற தருணங்களில் வீராவேசத்துடன் இயக்கும்."

"இருக்கலாம். ஆனால் பராந்தகர், மதுரவல்லியாரை உயிருக்குயிராய் நேசிக்கிறாரே-"

"இது ஒருதலைக் காதல் உதயா."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"இது உங்கள் ஊகமா, இல்லை தீர்மானமா?"

"அதை மட்டும் கேட்காதே. அவள் நாகமாலினி. கெங்கன் ஸ்ரீபுருஷனின் மகள். பராந்தகனுக்கு மாமன் மகள். ஸ்ரீபுருஷன் நமது ஜன்ம வைரி. அவனது வைர மணிமாலை இன்ற என் வசம் உள்ளது. அது வெறும் பொக்கிஷம் மட்டுமன்று. கெங்கனின் பரம்பரைச் சொத்து. அந்த மணிமாலையிலுள்ள வைரங்கள் அதிசய குணம் கொண்டவை. அதை மீட்க வேண்டும் என்பது ஸ்ரீபுருஷனின் லட்சியப் பிரயாசை. அதற்காகக்கூடத் தன் மகளை ஏவி விட்டிருக்கலாம் அவன்-"

"ஒரு பெண்ணை, அதிலும் தன் பெண்ணையே ஏவுமளவு ஸ்ரீபுருஷன் கோழையா?"

"இதில் சோழைத்தனம் எங்கிருந்து வருகிறது? இது ஒருவகை தந்திரம். ஸ்ரீபுருஷனின் படையை நாம் ஊதித் தள்ளிவிடுவோம் என்பது தெரிந்ததுதானே? ஆகவே பாண்டியன் மூலம் காரியம் சாதிக்கப் பார்க்கிறான் அவன்."

"நடக்குமா?"

'ஒரு பெண் மனசு வைத்தால் எதுவும் நடந்துவிடும்.'

"என்ன செய்யலாம்?"

"அப்படிக் கேள். அந்த நாகமாலினியை எப்படி யாவது நீ துண்டிக்கவேண்டும். பாண்டியனுக்கு அவள் எந்த வகையிலும் உதவக்கூடாது."

பல்லவனின் கருத்தைத் தொடர்ந்து உதயசந்திரன் நெடுநேரம் யோசிக்கத் தொடங்குகிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"என்ன யோசிக்கிறாய் உதயா... அவளை எப்படியாவது கொன்றுவிடு." -பல்லவனின் பதிலால் உதய சந்திரன் ஏனோ உதைபட்டது போல் ஆகிறான்.

"என்ன திகைக்கிறாய்-நான் கூறி முடிக்கு முன் செய்து காட்டும் வல்லமை கொண்ட உன்னுள் இப்போது மட்டும் ஏன் திகைப்பு?"

"புரியவில்லை அரசே_"

"புரியவில்லையா_ எது புரியவில்லை?"

"அவளைக் கொல்ல என்னுள் ஏற்பட்ட தயக்கத்தை_"

"என்றால் முதல் பார்வையிலேயே அவள் உன்னைக் கவர்ந்திருக்க வேண்டும்."

"அப்படித்தான் எண்ணுகிறேன்."

"ஆயின் அதுவே காதல்!"

"இதை அப்படிக் கூற முடியாது_"

"வேறு எப்படிக் கூறுவதாய் உத்தேசம்?"

"தெரியவில்லை."

"வேந்தனுக்கும், துறவிக்குமே ஒற்றுமை வேற்றுமை கூறிய மிகத் தேர்ந்த நுண்மான் கலைஞனான நீயா இப்படிக் கூறுகிறாய்_"

"உள்ளதை உள்ளவாறு சொல்லிவிட்டேன்."

"நான் பாண்டிய நாட்டை வெற்றி கொள்ளவும் பல்லவ மண்டபம் தலை நிமிரவுமே சொல்ல வேண்டியதைச் சொன்னேன்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"......"

"என்ன இது அர்த்தமற்ற மௌனம்?"

"அர்த்தமற்ற மௌனமில்லை அரசே- அர்த்தம் மிக உள்ள மௌனம். மாலினி ஒரு அசாத்தியமான பெண்."

"அதனால்தானே அவளுக்கு குறி வைக்கச் சொன்னேன்."

"அந்தக் குறி அவளைக் கொல்லமால் வேறு விதமாய் இருக்கக்கூடாதா?"

"எப்படி...?"

"தாங்கள் சொன்னது போல் காதலாய்..."

"கெங்கன் மகளிடம் காதலா?"

"இனம் பார்த்து வருவதில்லையே அது..."

"நீ விரும்பினாலும் அவள் உன்னை விரும்ப வேண்டுமே...?"

"விரும்பும் வண்ணம் நடப்பேன்."

"ஒரு பெண் நம்மை விரும்பும்படி செய்வது மிக கடினம். அதற்காகச் சர்வ பரித் தியாகங்களும் செய்ய வேண்டும். அதிலும் பராந்தகன் பேரில் அவள் காதல் மிகக் கொண்டிருக்கிறாள்."

"அதைத்தான் நான் பலமாகக் கருதுகிறேன்."

"எப்படி?"

"பராந்தகர், மதுரவல்லியாரை நிச்சயம் நீங்க மாட்டார். இதன் காரணமாக மாலினி துயர் மிகக்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கொள்வாள். அந்தத் துயரத்தையே நான் பராந்தகனின் மேலான வெறுப்பாய் மெல்ல மாற்றுவேன். அவளைக் கொண்டே கூடப் பராந்தகரை வீழ்த்துவேன்."

"நினைக்க இனிக்கும் எதுவும் செயலில் கசந்து விடும்."

"என் வல்லாண்மை அவ்வாறு ஆகவிடாது."

"காலம் மிக ஆகுமே இதற்கு-"

"தற்போது காலம்தான் நம் முதல் தேவை. படை பலம் பெருக்கிக் கொள்ளவும், உகந்த முறையில் மோதத் தயாராகவும் ஒரு பக்கம் நீங்கள் ஆவன செய்யுங்கள். மறு பக்கத்தில் எனது இந்த முயற்சியை நான் செவ்வனே செய்வேன்-"

"உன் முயற்சியில் நீ தோற்றுவிடுவது போல் தோன்றினால் என் எண்ணப்படி நீ நாகமாலினியைக் கொல்லத் தயங்கக்கூடாது."

"அதற்கு அவசியம் வராது. உதயசந்திரனின் ஆத்ம அபிலாஷைகளை அந்த நாரண நாயகி ஈடேற்றி வைப்பாள்."

"சரி, எப்பொழுது பாண்டிய மண்டலம் நோக்கிப் புறப்படப் போகிறாய்"

"இப்பொழுதே கூட நான் தயார்."

"இதே உருவத்திலா?"

"இல்லை, இனி நான் செந்தமிழ்ப் புலவன்."

"பலே- வெற்றி உண்டாகட்டும்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

# 8

விடிந்ததும் விடியாத அந்தக் காலை வேளையில் ஒரு செந்தமிழ்ப் புலவன் போன்ற தோற்றத்துடன் தாடியும் மீசையுமாய்; நெற்றியில் களபச் சந்தனம் எல்லாம் தரித்தபடி, கையில் ஓலைக்கட்டுச் சகிதம் மாநகர் மதுரை யின் பிரதான வாயிலில் நுழைகிறான் உதயசந்திரன். தனது பெயரைக்கூட ஐங்கரன் என்று மாற்றிக் கொண்டு விட்டான். அவனைத் தொடர்ந்து வருகிறது அவனது புரவி.

ஆலவாய் நகரம் அந்த பல்லவ புருஷனை இன் முகத்துடன் வரவேற்கிறது. கழஞ்சுப் பொன் மிகக் கொண்ட இடை மடி அவன் நிலமதிர நடக்கும்போது சலம்பிக் குலுங்குகிறது.

காஞ்சியை விடவும் பல விதங்களில் மாமதுரை அவன் கண் முன்னே விரிந்து தெரிகிறது. அகண்ட வீதிகளில் அசகாய வீரத்துடன் புரவிரதங்கள் குறுக்கும் நெடுக்கும் செல்ல. சின்னஞ்சிறுவர்கள்கூடப் புரவி களைச் சேணம் பிடித்து இழுத்துச் சென்றவாறு உள்ளனர்.

தனவந்தர்களை ஏந்தி வந்த பல்லக்குகள் சேடியப் பெண்களோடு ஆங்காங்கே இருக்கக் காண்கிறான்.

மாடங்களில் எல்லாம் மலர்க் கொடிகள் மதர்ந்து போய் வளர்ந்து கிடக்கின்றன. அவற்றில் பூ பறிக்கும் சில பாண்டியப் பெண்கள் வீதியில் வித்தியாசமான தோற்றத் துடன் நடந்து வரும் உதயசந்திரனைப் பார்த்து நல்ல பராக்கிரமசாலியாகத் தெரிகிறானே- இந்த உயரத்திற்கும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அழகிற்கும் மாவீரனாகத் திகழாமல் இப்படிப் புலவ னாகி விட்டானே?" என்று வருந்துவது போல் பார்க் கிறார்கள்.

உதயசந்திரன் அனைத்தையும் ரசிக்கிறான்.

காஞ்சியை ஒப்பிடுகிறான். காஞ்சியில் எந்த ஒரு வீதியின் முடிவிலும் ஏதாவது ஒரு ஆலயம் தட்டுப்படும். ஆலயமணிச் சப்தம் சதா காதுகளில் விழுந்த வண்ணம் இருக்கும்.

இங்கு அவ்வாறு இல்லையாயினும் செல்வச் செழிப்புக்குச் சான்றாக மாடமாளிகைகள் பல வண்ணச் சுதை பூசி மிளிரக் காண்கிறான்.

வியப்பில் விரிந்த விழிகளை மூடாது நடக்கும் உதயசந்திரனைத் திடும்மென்று ஒரு பெருஞ்சலசலப்பு ஆட்கொள்கிறது. என்ன என்று திரும்பிப் பார்க்கும்போது பல்லக்கு ஒன்று வெகு வேகமாக அவனைத் தாண்டிச் செல்ல, பல்லக்குத் தூக்கிகள் அவசர கதியில் செல்வது தெரிகிறது. 'பல்லக்கினுள் யார்? எங்கு செல்கிறார்கள்?'

பாதசாரி ஒருவரைத் தடுத்து நிறுத்தி உதய சந்திரன் கேட்டபோது, அந்தப் பாதசாரி ஆச்சரியத்துடன் உதயசந்திரனைப் பார்த்துவிட்டு, "நீ ஊருக்கு புதிதா?" என்று பதில் கேள்வி கேட்கிறான்.

"ஆமாம்."

"அதனால்தான் இது கூடத் தெரியவில்லை உனக்கு. பல்லக்கினுள் இந்த மதுரைக்கே ராஜகுருவாய்த் திகழும் பச்சைமால் தீர்த்தர் செல்கிறார்."

"சரி, எங்கே செல்கின்றார்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"எங்கள் அரசரின் அவசர அழைப்பிற்கு இணங்கி ஆலோசனை மண்டபத்திற்குத்தான் செல்ல வேண்டும். யார் கண்டார்கள். பாண்டிய மண்ணில்தான் ஏதேதோ நடக்கத் தொடங்கி விட்டதே_"

"எங்கிருக்கிறது ஆலோசனை மண்டபம்?"

"ஏன் நீயும் ஆலோசனையில் பங்கு கொள்ளலாம் என்று பார்க்கிறாயா? உன்னைக் காவலன் உள்ளே விட மாட்டான். ஆமாம் யார் நீ?"

"நானொரு புலவன் பெயர் ஐங்கரன்_"

"எந்த நாடு?"

"பாண்டி நாட்டான்தான்! தெற்கில் ராமன் நாட்டை ஒட்டிய திருப்புல்லாணிக்காரன்."

"மதுரை வந்த காரணம்_?"

"புலமைக்கு இங்கு நல்ல மதிப்பிருப்பதாக அறிந்தேன்."

"அது ஒரு காலம். இப்பொழுது தமிழ்ச் சங்கம் தூங்கி வழிந்து கொண்டிருக்கிறது அப்பனே. எங்கள் அரசர்க்கு ராஜ்யபாரமே பெரிதாகிவிட்டது."

"எந்தப் பாரத்தையும் துரும்பாக்குவது தமிழாயிற்றே."

"உண்மைதான் உனக்கு ஒரு வரவேற்பு இருக்க வேண்டுமென்றால் அதற்கு ஒரே வழி. நீ கூடல் அழகர் ஆலயம் சென்று அங்குள்ள அழகர் பெருமானைப் பற்றி தோத்தரித்துப் பாடு. அது ஒருகால் மதுரவல்லி தேவியார் காதில் விழுந்தால் உன் விருப்பம் ஈடேறலாம். உனக்கு

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அதிர்ஷ்டம் இருந்தால் நீ அரண்மனைப் புலவனாகவே ஆகலாம்."

"நல்லது நண்பரே! நற்செய்தி தந்தீர்-" உதயசந்திரன் அவரை வணங்கிவிட்டு, கூடலழகர் ஆலயம் இருக்கும் திக்கை நோக்கி, அதையும் கேட்டறிந்தபடி நடக்கத் தொடங்கினான். புரவியும் உடன் நடக்கத் தொடங்குகிறது.

அப்பொழுது ஒருவன் அவனைத் தாண்டி மிக வேகமாக ஓடி, எதிரே வர்த்தகர்களின் சுமைகளைச் சுமந்து நிற்க வேண்டிய கல் தூண் ஒன்றின் மேல் மோதித் தலை குப்புற விழுந்தான். அவனது தோள் பட்டையின் மேல் வலுவாய் ஒரு கட்டாரி தைத்திருந்தது.

அதைக் கண்ட உதயசந்திரன் திடுக்கிட்டுப் போகும் போது அவன் உதயசந்திரனைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டு, "ஐயா! ஐயா! எப்படியாவது என்னை உங்கள் புரவி மூலம் இங்கிருந்து மீட்டுச் செல்லுங்கள். என்னை அரண்மனை வீரர்கள் துரத்தி வருகிறார்கள். நான் ஒரு குற்றமும் அறியாதவன். என்னைக் காப்பாற்றுங்கள்- காப்பாற்றுங்கள்."

அவன் கை எடுத்துக் கும்பிட்டுக் கதறித் துடிக்கிறான்.

"நீ யார்?"

"அனைத்தையும் விரிவாகக் கூறுகிறேன். முதலில் என்னைக் காப்பாற்றுங்கள்."

உதயசந்திரனும் எதுவாயினும் சரி என்று அவனைத் தன் புரவி மேல் அள்ளிப் போட்டபடி அதைத் துரித கதியில் செலுத்த ஆரம்பித்தான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உதயசந்திரன் அகன்ற சில விநாடிக்கெல்லாம் அரண்மனை வீரர்கள் அங்கும் புரவிமேல் சிட்டாய் வந்து கை பிசைய நின்று, அவன் உதயசந்திரனின் புரவியில் ஏறிச் சென்றதை அறிந்து பதறுகின்றனர். "அந்தப் புலவன் புரிந்திருப்பது ராஜ்ய துரோகம்! அவன் காப்பாற்ற விழைந்த நபர் யார் தெரியுமா? மதுரவல்லி தேவியாரைக் கொல்ல முயன்ற பல்லவ ஒற்றன் வஜ்ரகேது!" என்று கூப்பாடு போட்டபடியே உதயசந்திரன் திக்கை அறிந்து. அந்தப் பக்கமாய்த் தங்கள் புரவிகளைச் செலுத்தத் தொடங்கினர்.

எப்படியோ வஜ்ரகேது என்னும் நாகாபரணி சிறைச் சாலையிலிருந்து தப்பி விட்டதன் எதிரொலி உடனேயே மாமதுரையைப்பதற்றத்துடன் கவ்வத் தொடங்கிவிட்டது

இனி என்ன என்ன நடக்கப் போகிறதோ?

என்னென்ன நடக்கப் போகிறதோ என்கிற மலைப் புக்கும் அதிர்ச்சிக்கும் நடுவே உதயசந்திரனின் புரவி நாகாபரணியைச் சுமந்து கொண்டு ஓடிக்கொண்டே யிருந்தது.

நாகாபரணி மயங்கிப் புரவி மேல் கிடப்பதை ஓட்டத்தின்போதே அநுமானிக்க முடிந்தது. புரவியை எங்கு ஒதுக்கி நிறுத்த? புரியாத கேள்வியோடு புரவி போய்க் கொண்டே இருக்கிறது.

எதற்கோ வந்து எங்கோ போகும் உணர்வு உதய சந்திரனுக்குள்... ஆயினும் ஆபத்துக்கு உதவும் கருணை உள்ளத்துக்கு ஒரு கேடும் வந்திடாது என்கிற ஒரு நினைப்பு அவனுக்குள் பலமாகவே இருப்பதால் புரவியை நிறுத்தாமல் செலுத்திக் கொண்டிருந்தான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

யாரும் பின்தொடர்ந்து வருகிறார்களா என்று திரும்பிப் பார்க்கிறான். மதுரை நகரம் கண்ணுக்குத் தொலைவாகிவிட்டது தெரிகிறது.

கூடல் அழகர் ஆலயக் கோபுரம் வாழைத் தோப்பு நடுவே-வளைந்து ஓடும் கிரிதிருமால் நதி தீரத்தில் பளிச் சென்று தெரிகிறது.

மாட மாளிகைகளைக் கூடக் கதலி வனங்களின் பசும் இலைக்கூட்டம் மறைந்து மூடப் பார்க்கிறது.

வாழைத் தோட்டம் மிகுந்து காணப்பட்டாலே அங்கே கிளிக் கூட்டமும் மிகுந்துவிடும் என்பதகேற்ப, பசும் கிளிக் கூட்டம் குறுக்கும் நெடுக்குமாய் அவனைத் தாண்டி பறந்து கொண்டிருக்கிறது.

எதிரே யானை ஒன்று படுத்துக் கிடக்கும் வடிவில் மலை ஒன்று... யானை மலை என்றே அதற்கு சிறப்புப் பெயர் இருப்பது உதயசந்திரனுக்குத் தெரியுமோ தெரியதோ? அந்த மலையின் சாரல்தான், ஒதுங்கி ஒளிய தோதான இடம் என்பதாக உணருகிறேன்.

மலையின் சருக்கமும் பசும் கழனிகளால் பச்சைக் கம்பளமுமாய்த் தெரிகிறது. வைகை நதியின் கிளை ஓட்டங்கள் வாய்க்கால்களாய்க் கொக்குக் கூட்டத்தோடு காத்துக் கொண்டிருக்கின்றன.

அளாவி வளர்ந்து அகண்டு நிற்கும் ஆலமரம் ஒன்றும் அடிவாரச் சருக்கத்தில் தெரிகிறது. அங்கே ஏகமாய்ச் சுமைதாங்கிக் கற்கள்; என்றால் இங்கேதான் பாண்டி நாட்டவர்கள் தன் சுமைகளை இறக்கிக் களைப்பாற வேண்டும்.

நாம் களைப்பாறவும் இது ஏற்ற இடந்தானா?

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உதயசந்திரன் புரவியின் வேகத்தைக் கட்டுப்படுத்திச் சுற்றுமுற்றும் பார்க்கிறான். யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. மெல்ல புரவி நீக்கம் செய்து நாகா பரணியையும் சுமந்து அந்த ஆலமர நிழலில் கிடத்து கிறான்.

நாகாபரணிக்கு ஆழ்ந்த மயக்கம். அருகில் நண்டுகள் ஓடி விளையாடும் வரப்பு நீரைக் கைகளில் ஏந்தி வந்து நாகாபரணியின் மயக்கம் நீக்குகிறான்.

"நாம் இப்பொழுது எங்கிருக்கிறோம்?" கண் மலர்த்திய பரணியிடம் முதல் கேள்வியே இதுதான்.

"யாருக்குத் தெரியும்.. உன்னைச் சுமந்த நிலையில் புரவியைப் போகும் திசையில் போகவிட்டேன். அது இங்கு வந்து நின்று விட்டது.."

"வீரர்களின் துரத்தல்.."

"இந்த ஐங்கரன் புரவி ஏறினால் பின்தொடர்ந்து வர அந்தப் பாரதத்து ரத சாரதியான கண்ணபிரானே அஞ்ச வேண்டும்."

"உன் பெயர் ஐங்கரனா... அந்த ஆனை முகனின் இன்னொரு பெயர். என்றால் நிச்சயம் மாநகர் மதுரை வாசியாக இருக்க வாய்ப்பேயில்லை." மெல்ல நிமிர்ந்தபடி நாகாபரணி ஊகத்துடன் பேசும் பேச்சு உதயசந்திரனை ஆச்சரியப்படுத்தாமல் இல்லை.

"அனுமானம் மிக சரி. என் பெயர் ஆராய்ச்சி இருக்கட்டும். நீ யார்? எதற்காக ஓட்டம்? ஏன் துரத்தி வந்தது பாண்டியர் படை?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அது ஒரு பெரிய கதை..." இப்படிச் சொல்லும் போதே நாகாபரணியிடம் பெருமூச்சு வேறு.

"அதில் பொய் கலக்காமல் கூறு."

"வேண்டாம், வேண்டாம் என்னைக் காப்பாற்றிய் உனக்கு கோடி நன்றிகள். நான் இப்பொழுதே பாண்டிய நாட்டை விட்டு நீங்கியாக வேண்டும்."

"அப்படி என்ன அவசரம்?"

"உன்னிடம் சொல்லக்கூடிய விஷயமல்ல அது."

"ஏன்?"

"ராஜ்ய விவாதங்களும் விவகாரங்களும் அந்நியர் களுக்குத் தெரியத் தேவையில்லை."

"ஆனால், உயிரைப் பணயம் வைத்து அந்நியர் ஒருவர் காப்பாற்றினால் மட்டும் ஏற்றுக் கொள்வாயோ?"

"அதற்குத்தான் நன்றி பாராட்டிவிட்டேனே..."

"இந்த மூன்றெழுத்துச் சொல்தான் சிலருக்கு என்னமாய்ப் பயன்படுகிறது! நன்றி என்பது வெறும் சொல் அல்ல நண்பனே-அது மிகப் பெரிய உணர்வு. தாய்மை உணர்வுக்கும், குருவின்பால் நாம் பூணும் பக்தி உணர்வுக்கும் ஈடு கொடுத்து நிற்கக்கூடிய பவித்ரமான உணர்வு. மிருகங்களிடம்கூட நான் இதைச் செயல்பூர்வ மாகப் பார்க்கிறேன். ஒரு மனிதனாகிய நீ வெறும் சொல்லோடு தப்பிக்கப் பார்க்கிறாயே?"

உதயசந்திரனின் விளக்கம் கேட்டு நாகாபரணி நிமிர்ந்து அமர்ந்த நிலையில் பெரிதாகச் சிரிக்க ஆரம்பித் தான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"ஏன் சிரிக்கிறாய்?"

"உன் விளக்கம் கேட்டுத்தான் சிரித்தேன்."

"அதில் சிரிக்க என்ன இருக்கிறது?"

"நன்றியை வெறுஞ்சொல்லாக மட்டும் உதிர்க்கத் தெரிந்திருந்தால் இன்று நான் இப்படி பாண்டியர் படை தேடும் ஒரு கைதியாக இருந்திருக்க மாட்டேனே.. அதை எண்ணினேன், சிரித்தேன்."

நாகாபரணியின் விளக்கம் உதயசந்திரனை இம்முறை பெரிதாக யூகிக்க விடுகிறது.

"..என்றால் நீ ஒரு கைதி."

"ஆம்.. ஆனால், நன்றியுணர்வுள்ள ஒரு கைதி."

"உன் உணர்ச்சியைக் கொஞ்சம் விவரியேன்."

உதயசந்திரன் விடுவதாக இல்லை. ஆனால், நாகா பரணிக்கோ பேசும் மனநிலையே இல்லை. அதிலும் ஊர் பேர் தெரியாத அந்நியனிடம் தான் ஒரு கெங்க புருஷன் என்று ஆரம்பித்து, தன் மனக் குறையைக் கொட்டித் தீர்ப்பது உசிதமாகப் படவில்லை.

முதலில் தப்பித்தாக வேண்டும். எல்லை விட்டு நீங்கி எப்படியாவது கெங்க நாட்டை அடைந்து விட வேண்டும். இனி இங்கு இருந்தால் நிச்சயம் நடக்கக் கூடாததெல்லாம் நடந்து விடும்.

'தப்பவே முடியாது...தொலைந்து போய்விட்டோம்' என்று கருதிய வேளையில்தான் அதிசயமாய்த் தப்பியிருக்கிறோம். அதுவும் நாகமாலினியின் புத்தி சாலித்தனமான செயலால்...

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"ஏய் ஒற்றனே! யார் நீ? உண்மையைக் கூறு...நீ பல்லவ தேசத்தவன் இல்லை...?" என்ற போலியாய்க் கர்ஜித்தபடி நாகமாலினி சிறைக் கோட்டத்தில் போட்ட கூச்சலும் கும்மாளமும்தானே தன்னைக் காப்பாற்றின!

விசாரிக்கவும், தண்டிக்கவும் வந்தது போல் வந்து கை விலங்குகளை அவிழ்த்துத் தப்பி ஓடவிட்ட அவள் சாதுர்யத்தை என்னவென்ற சொல்ல... எப்படி விவரிக்க?

"அண்ணா, தப்பி ஓடி விடுங்கள்... எக்காரணம் கொண்டும் பாண்டி நாட்டில் தங்கி விடாதீர்கள். என் காதலில் வெற்றி பெற எனக்குத் தெரியும். நீங்கள் பல்லவ ஒற்றர் இல்லை என்பது பாண்டிய மன்னருக்குத் தெரிந்துவிட்டது. பல்லவ மன்னனே அதை உடைத்து விட்டான். நீ ஒரு கெங்க புருஷன் என்பது தெரிந்து விட்டால் ஏழு தலைமுறைக்கும் நம் கெங்க நாடு பாண்டியருக்குப் பகையாகி விடும். உயிரை விட்டாவது நம் நாட்டின் மீது கறை படாதபடி பார்த்துக் கொள்ளுங் கள், ஓடுங்கள்."

தப்பி ஓடவிட்டபோது மாலினி இப்படித்தானே காதோரமாகக் கிசுகிசுத்தாள்.

உயிரை விட்டாவது மண்ணின் பெயரில் கறை படாதபடி பார்த்துக் கொள்ளச் சொன்னாளே... நானோ இங்கே ஓர் அந்நியனுடன் விவாதித்துக் கொண்டிருக் கின்றேனே...?

நாகாபரணி உடனேயே சுண்டி விட்டது போல் எழுந்து நின்றான். அருகில் உதயசந்திரனின் புரவி இளைப்பாறிக் கொண்டிருந்தது. உதயசந்திரனோ, நாகா பரணி எதாவது பேசட்டும் என்பது போல் அந்த நிழலில்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

முளைவிட்டிருக்கும் அருகம்புல் ஒன்றைப் பிடுங்கி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆஹா! தப்பி ஓட இதுவே வாய்ப்பு...

நாகாபரணி விநாடியும் தாமதிக்காமல் உதய சந்திரனின் புரவி மேல் ஏறி, அதைச் செலுத்தத் தொடங்க, அது தட்டுத் தடுமாறிப் பெரிதாகக் கனைத்தபடி ஓடாமல் சண்டித்தனம் செய்ய ஆரம்பித்தது.

"ஏ புரவியே! ஓடு!ஓடு..." நாகாபரணியிடம் ஆவேசம். 'ஊஹூம்-நான் எஜமான விசுவாசியாக்கும்' என்பது போல் அது அந்த மரநிழலை விட்டு நீங்காமல் சுற்றிச் சுற்றி வந்தது.

அதன் விசுவாசம் நாகாபரணியைப் பெரிதும் ஆச்சரியப் படுத்தியது.

"நண்பனே... உன் குதிரையை ஓடச் சொல். நான் இந்தப் பாண்டிய மண்ணை விட்டு உடனே தப்பித்தாக வேண்டும். அப்படித் தப்பிக்காவிட்டால் என் நாட்டு மானமும், மரியாதையும், காற்றில் பறந்துவிடும். தயவு செய்து கட்டளையிடு..."

உதயசந்திரன் அவன் பேச்சைக் கேட்டு அதிர்ச்சி யோடு சிரம் நிமிர்த்துகிறான்; கூர்மையாகப் பார்க்கிறான். 'இவன் தன் நாடு மானம் மரியாதை என்றெல்லாம் பேசுவதை பார்த்தால் இவன் பாண்டிய நாட்டான் இல்லை போலும்..."

"நீ யார், உன் பெயர் என்ன? அதை முதலில் கூறு..." உதயசந்திரனும் விடுவதாக இல்லை.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"தெரிந்து என்ன செய்யப் போகிறாய்? என்னைப் போக விடு-உனக்குக் கோடி புண்ணியம்."

"புண்ணியம் உன்னிடமே இருக்கட்டும். கதையைக் கூறு. நீயும் என்னைப் போல ஒரு பாண்டி நாட்டான் இல்லை-அப்படித்தானே?"

உதயசந்திரன் கேள்வி நாகாபரணியை அப்படியே பிடித்து நிறுத்துகிறது.

"நீ பாண்டி நாட்டான் இல்லையா? என்றால்.."

"நான் யாரென்பது இருக்கட்டும்.. உன்னைப் பற்றி முதலில் கூறு. பிறகு என்னைப் பற்றி நான் கூறுகிறேன்."

"நான் ஒரு பல்லவன்.." தட்டுத்தடுமாறி நாகாபரணி சொன்ன பொய் கேட்டு உதயசந்திரன் பெரிதாகச் சிரிக்கத் .தொடங்குகிறான். நாகாபரணியும் புரவியை விட்டு இறங்கி கொள்கிறான்.

"ஏன் சிரிக்கிறாய் நண்பா?"

"நண்பா என்றபடி நீ கூறும் பொய்மை எண்ணி.."

"சரி.. அது பொய்யாகவே இருக்கட்டும். நீ யார்?"

"உண்மையில் நான்தான் பல்லவ தேசத்தவன்."

"என்னது நீ பல்லவனா? எங்கள் கெங்க நாட்டினை ஒரு எச்சிற் கலயம்போல் கருதி சதா இடர் தரும் அரக்க தேசத்தவனா..?"

நாகாபரணியிடம் முறுக்கேற ஆரம்பிக்கிறது.

"அப்படி வா வழிக்கு.. நீ கெங்க நாட்டான் என்று சொல்.. மற்ற உன் கதையை கூறுகிறேன்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"நீ எதுவும் கூறாதே... நான் நடந்தோ ஓடியோ கூடத் தப்பித்துவிடுவேன். எதிரியாக இருந்தாலும் என் உயிரைத் தருணத்தில் காப்பாற்றியவன் நீ. அதனால் உன்னை இங்கே உயிரோடு விட்டுச் செல்கிறேன்."

நாகாபரணி ஆவேசத்தோடு நடக்க ஆரம்பித்தான்.

"நில் நண்பா.. நீ நினைப்பது போல் நான் உன் எதிரி இல்லை. பல்லவ தேசத்தவனாக இருந்தாலும் மன்னர் நந்தியின் போக்குப் பிடிக்காதவன்."

எதிர்பாத்தபடியே அந்தப் பதில் நாகாபரணியை உடனே நிறுத்தியது.

"என்ன பசப்புகிறாய்?"

"பசப்பவில்லை. நிஜத்தையே கூறுகிறேன். மாமன்னர் நந்திவர்ம பல்லவர் பேச்சே எனக்குப் பிடிக்கவில்லை. அவரது திட்டமிடலோ போராட்டமோ எதிலும் நேர்த்தியில்லை."

"நீ கூறுவதைப் பார்த்தால் நீ நந்திக்கு மிக நெருக்க மானவன் போலத் தெரிகிறதே.."

"அப்படி அவசரப்பட்டு நினைத்துவிடாதே. நான் நந்திக்கு நெருங்கியவனோ இல்லையோ, அவரது உடைவாள் என்றும், இரு விழியில் ஒரு விழி என்றும் வர்ணிக்கப் படும் உதயசந்திரனுக்கு மிக நெருங்கியவன்."

தன்னையே அந்நியப்படுத்திச் சாதுர்யமாகப் பேச ஆரம்பித்த உதயசந்திரனின் வலையில் மெல்ல விழ ஆரம்பிக்கிறான் நாகாபரணி.

"உதயசந்திரனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் உனக்கு நண்பனா?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"ஆம்... நாங்கள் இருவரும் ஒன்றாகக் குரு குலப் பயிற்சி பெற்றவர்கள். வில், வாள், களரி, கைக் கோல் என்று கரப்போர் மட்டுமல்ல, மல்லாடவும் மதயானை ஏறவும் கூடப் பழகியவர்கள்."

"ஆனால், பார்க்க... ஒரு புலவன் போல் தெரிவது எதற்காக?"

"இது புனைந்த வேடம்?"

"காரணம்?"

"நானே பேசிக் கொண்டிருக்கிறேன். உன்னைப் பற்றியும் நீ கூறலாமே..."

"நானொரு கெங்கன். அவ்வளவுதான்... அதற்கு மேல் நான் கூற ஒன்றுமேயில்லை."

"நான் இத்தனை பேசியும் நீ அழுத்தக்காரனாகவே இருக்கிறாய். நிராதரவாக இந்தப் பாண்டிய நாட்டுக்கு வந்த எனக்கு ஒரு நல்ல நண்பன் கிடைத்தான் என்று கருதியிருந்தேன். ஆனால் ஏமாந்துவிட்டேன்."

"நீ ஒரு பல்லவன். எனக்கு நண்பனாக முடியாது?"

"கெங்கன் பாண்டியனுக்கே பகையாகும்போது பல்லவன் நண்பனாக முடியாதோ?"

"நான் எங்கே பகையானேன்?"

"என்றால், எதனால் கைதியானாய்? தப்பி ஓடி வந்தாய்?"

"உனக்குத் தேவையில்லாத விஷயங்கள் இவை."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உதயசந்திரன் எவ்வளவோ அசைந்து கொடுத்துப் போராடியும் நாகாபரணியைப் பற்றி முழுவதுமாய்த் தெரிந்துகொள்ளவே முடியவில்லை. 'ஒருவேளை நான் அவசரப்பட்டுப் பல்லவன் என்று கூறியிருக்க வேண்டாமோ?'

எதிரே தெரியும், ஆனைமலையைப் பார்த்து யோசிக்கத் தொடங்குகிறான். அதேசமயம் 'இவனை விட்டுவிடக் கூடாது. நாகமாலினியும் கெங்க நாட்டுக் காரிதானே? எனவே தன் துளிர்விட்ட காதல் நிமித்தம் அவளை அடைய இவன் ஏதாவது ஒருவகையில் நிச்சயம் பயன்படுவான்' என்றும் கருதுகிறான்.

'இவனிடம் இவன் தேசம் பற்றியும்-நாகமாலினி பற்றியும் சற்று உயர்வாகப் பேசினால் ஒரு வேளை இசைந்து கொடுப்பானோ?'

உள்ளுணர்வு அவ்வாறே செய் என்கிறது.

"நண்பா... அரசர்கள் அவரவர் தேசத்தை நீதி வழுவாமல் ஆளவேண்டும் என்பதுதான் என் அடிப் படை கொள்கை. அதிலிருந்து வழுவி நாடு பிடிக்கும் ஆசைக்கு இந்த மன்னர்கள் தாவும்போது அதை என்னால் சகிக்கவே முடிவதில்லை. அதிலும் குறிப்பாக, கெங்க நாட்டைப் போன்ற குறுநிலங்களைக் கைப் பற்ற மாமன்னர்கள் விழைவதை நான் ஒருபோதும் விரும்பியதில்லை.

அம்மட்டில் உங்கள் நாட்டிற்குத் தம் நாட்டை ஒரு மெய்க்காவல் நாடாக ஆக்கி அளித்திருக்கும் பாண்டிய மகாராஜா நெடுஞ்சடையர், நந்திவர்ம பல்லவருக்கு முன்னால் ஒரு படி மேலானவரே- எனவே இந்தப் புலவன்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பாண்டியரைக் கண்டு பாராட்டவும் எண்ணியிருந்தான். அனைத்துக்கும் மேலாகப் பாண்டியருக்கும் பல்லவருக்கும் இடையே நிலவும் பகை உணர்ச்சி குறைக்க முனைவதும் என் நோக்கம்."

உதயசந்திரன் பேசப் பேச இறுகிய முகமாகிவிட்ட நாகாபரணி மெல்ல இளகிச் சாந்த நிலையை எட்டி சற்று இளக்காரமாகச் சிரிக்கவும் செய்தான்.

"உன் புன்னகைக்கான பொருள் எனக்கு நன்கு புரிகிறது. ஒரு சாதாரண புலவன் எப்படி இதையெல்லாம் செய்ய முடியும் என்றுதானே எண்ணிச் சிரிக்கிறாய்?"

நாகாபரணியிடம் இசைவான ஆமோதிப்பு.

"ஒரு பெண்மகள் வீராவேசத்துடன் பாண்டிய மன்னரையே உடன் அழைத்துச் சென்று, எங்கள் பல்லவர் அதிரகசியமாய் நிகழ்ச்சிய வேள்வியையே தடுத்து நிறுத்த முடியுமென்றால், நல்லெண்ணம் கொண்ட ஒரு புலவனால் இந்த நோக்கம் மட்டும் ஈடேறாதோ?"

உதயசந்திரன் தன் பேச்சின் முக்கிய கட்டத்தைத் தொட்ட மறுவினாடியே நாகாபரணியின் முகம் திக்கு முக்காடிப் போகிறது.

"ஏ புலவா-என்ன சொன்னாய் நீ? உனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்-?"

"உதயசந்திரன்தான் கூறினான். பெண் என்றால் அவள் பெண்-வீரத்தின் இலக்கணம்-விவேகத்தின்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பிறப்பிடம், அழகின் சொரூபம் என்றெல்லாம் பேசி என்னிடம் குமைந்து போனானே..."

உதயசந்திரன் பேசப்பேச நாகாபரணி மிகவும் இளகிவிட்டான். ஆழ்ந்து யோசிக்கத் தொடங்கி விட்டான். ஆனைமலையைப் பார்த்து- புஜம் நிமிர்த்தி, கரம் இரண்டைப் பின்னால் கட்டிக்கொண்டு வெறிக்கிறான்.

# 9

**சி**றைக் கோட்டத்தில் குளிக்கவும் மறந்தும் ஆடை துவர்ப்பிக்க இயலாமல் போயும், அழுக்கேறியும் நிலம் உழுது மீண்ட ஒரு கடும் விவசாய உழைப்பாளியைப் போலத் தெரிபவன், உதயசந்திரனை விட்டு நீங்க முடியாதபடி அவனது சொல் வளையத்தில் விழுந்து விட்டதை எண்ணிப் பெருமூச்சு விட்டபடி அவனைப் பார்க்கிறான்.

"நீ குறிப்பிட்ட அந்தப் பெண் வேறு யாருமல்ல, என் உடன்பிறவா தங்கைதான்!"

"அப்படியா?" ஆயிரம் மடங்கு ஆச்சரிய பாவங்களை உதயசந்திரனின் முகமும் விழிகளும் காட்டுகின்றன.

"அவளது பெயர் நாகமாலினிதானே?"

"ஆமாம்... நாகா வீரம் மிக்கவள் மட்டுமல்ல, கெங்க நாடு வாழத் தன் இன்னுயிரைத் தரவும் சித்தமாய் இருப்பவள்..."

"எல்லாம் சரி... அவளது அண்ணனாகிய உன்னையே பாண்டியர் படை துரத்தக் காரணம்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"என் தங்கையை விட்டு விட்டு ஒரு பட்டரின் திரு மகளை நெடுஞ்சடையர் நேசிக்கிறார். எப்படித் தாங்கு வேன் இதை? எடுத்தேன் கட்டாரியை. தொடுத்தேன் அவள்மீது- ஆயினும் தப்பி விட்டாள் அவள். ஆனால், நானோ அகப்பட்டுக் கொண்டேன்."

"புரிகிறது- புரிகிறது- மீதத்தை நான் சொல்கிறேன். தங்கையின் காதல் நிமித்தம் இது நிகழ்ந்ததாக நெடுஞ் சடையருக்குத் தெரியவந்தால் அனைத்துமே கெட்டுவிடும். அதனால்தான் அகப்பட்டுக் கொண்டவுடன் கெங்க நாட்டானாகிய நீ பல்லவ ஒற்றன் என்று பொய் உரைத்தாயோ?"

நாகாபரணியின் தலை தாழ்கிறது.

"எப்படியோ அகப்பட்டுக் கொண்ட உன்னைக் கூட உன் .தங்கைதான் மதியூகத்துடன் காப்பாற்றியிருக்க வேண்டும்?"

தாழ்ந்து போன நாகாபரணி தலை அசைத்து ஆமோதிக்கிறான்.

"மீண்டும் அகப்பட்டுக் கொண்டால் தப்பிக்கவே இயலாது என்பதால் தப்பித்தால் போதும் என்று கெங்க நாட்டுக்கு ஓடிவிட எண்ணுகிறாய்-அப்படித்தானே?"

"மனசில் இருப்பதை மிகத் துல்லியமாகக் கூறு கிறாய் புலவனே- உனக்குச் சோதிடமும் கைவருமோ?" நாகாபரணி இப்படிக் கேட்டதுதான் தாமதம், அதையே உறுதியாகப் பற்றிக் கொள்கிறான் உதயசந்திரன்.

"ஆம்- முகத்தை வைத்து, நாடித் துடிப்பை வைத்து ஏன், சமயங்களில் கால் விரல்களின் அமைப்பை வைத்தும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கூட ஒருவரை நான் எடை போட்டு விடுவேன். அன்னை கலைமகளின் கருணை அம்மட்டில் எனக்கு நிறையவே உண்டு."

"நிஜமாகத்தான் சொல்கிறாயா?"

"வேண்டுமானால் சோதித்துப் பாரேன்-"

"எங்கே என் நிஜப் பெயரைக் கூறு பார்ப்போம்-" உதயசந்திரன் உடனே கண்களை மூடித் தியானிக்கத் தொடங்கினான். பெரும்பாலும் நாகவம்சத்தவர்கள் தங்கள் பெயரின் முன்னால் 'நாக' என்கிற பதத்தைச் சேர்த்தே வைத்துக் கொள்வார்கள் என்கிற பொது வான சிந்தனையோடு பல்லவ ஒற்றர்கள் அவ்வப்போது திரட்டி வந்து தந்த தகவல்களை அசைபோட்டுவிட்டு, எதுவும் பிடிபடாமல் 'உனது பெயரின் முன்னால் நாகம் இருக்கும்' என்று மட்டும் கூற, நாகாபரணி நிஜமாலுமே வியந்து போனான்.

"ஆமாம்... நான் நாகாபரணி-அற்புதம். உன் ஆற்றல்!" என்ற நாகாபரணியின் முகத்தைக் கூர்ந்து நோக்கிய உதயசந்திரன், "நண்பா, நீ வெற்றிமேல் வெற்றி பெறுவாய்; தோல்வி என்பதே உனக்குக் கிடையாது. அதனால்தான் இருமுறை அகப்பட்டும் நீ தப்பிவிட்டாய்..." என்ற அடுத்த கட்டமாய்த் தனக்குத் தோன்றியதைச் சோதிடம் போல் கூறவும் நாகாபரணி முகம் மகிழ்ச்சிப் பிரகாசமடைகிறது.

"எனக்கு என்றும் வெற்றிதானா?"

"ஆம்... நான் கூறுவதைக் கேள். நாம் இருவரும் பல விஷயங்களில் ஒத்த கருத்து உடையவர்கள். நீ கெங்க நாடு திரும்பும் எண்ணத்தைக் கைவிடு. என்னைப்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பயன்படுத்தி உன் எண்ணத்தைக் ஈடேற்றிக் கொள். முதலில் என்னை அரண்மனைக்குள் நுழையவிடு. உன் தங்கை அதற்கு உதவி செய்தால் போதும். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்."

"மற்றதை என்றால்?"

"பாண்டியர் நெடுஞ்சடையருக்குள் இருக்கும் பல்லவ வெறுப்பை ஒரு பக்கம் அகற்றுவேன். அதே சமயம் நாகமாலினியின் காதலுக்கும் உதவிகள் செய் வேன்_"

நாகாபரணி அதைக் கேட்டுப் புளகாங்கிதப்பட்டுப் போனான்.

"மிக்க மகிழ்ச்சி புலவனே_" என்று உதயசந்திரனை ஆரத் தழுவும்போது உதயசந்திரனிடம் வெற்றிப் புன்னகை!

பஞ்சணையில் மயங்கிய நிலையில் கிடக்கிறாள் நாகமாலினி_ தோள் பரப்பில் அரண்மனை வைத்தியர் போட்டிருக்கும் கட்டு அவளுக்கு ஏதோ நேரிட்டு விட்டதை கூறாமல் கூறுகிறது.

அருகே தோழி கோமளம்.

சற்று முன்தான் ராஜமாதா பூசுந்தரி தேவியார் வந்து போயிருந்தாள்.

இப்பொழுது நெடுஞ்சடையனின் சோகப் பிரவேசம்.

கட்டியக்காரனின் குரலொலி அதை ஊர்ஜிதம் செய்ய கோமளம் எழுந்து கொள்கிறாள். நெடுஞ்சடையன் உள்ளே நுழைந்து நாகமாலினியைப் பார்க்கிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"நாகா.. அளவிற்கதிகமான உனது தன்னம்பிக்கை இன்று என்னாயிற்று என்று பார்த்தாயா?"

உதடுகள் முணுமுணுக்கின்றன. 'கோமளத்தை ஏறிட்டு கவனமாகப் பார்த்துக் கொள்' என்று கட்டளையும் இடுகின்றன.

பின்னர் திரும்பி நடக்கும்போது பச்சைமால் தீர்த்தர் வந்து இணைந்து கொள்கிறார்.

"முன் ஒரு பெண்ணால் விரோதியாய் உணரப்பட்டவன் பின் ஒரு பெண்ணால் தப்பிவிட்டான். மொத்தத்தில் பெண்களால் குழப்பங்களே நேரிடுகின்றன.." என்று மெல்ல தன் கருத்தைப் பொறுமையாக கூறியபடி பதிலுக்கு நெடுஞ்சடையனைச் சற்றுப் பணிவோடு பார்க்கிறார்.

"தீர்த்தரே. என்ன இது பூடகமான பேச்சு?"

"மாமனார் எதிரே எப்படி வெளிப்படையாகப் பேசுவது?"

"நீங்கள் ராஜகுரு-எப்படி வேண்டுமானாலும் பேசும் உரிமை உங்களுக்கு உண்டு."

"மிக்க நன்றி. ஒரு வேண்டுகோள்; இனி எக்காரணம் கொண்டும் ராஜ்ய விஷயங்களில் பெண்களை நுழைத்துப் பார்க்க வேண்டாம்."

"நான் எங்கே நுழைத்தேன்?"

"பல்லவன் வேள்விக்கு நாகமாலினியுடன் சென்றதை கூறுகிறேன்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அவளுக்கு அந்த ரகசியம் தெரிந்திருந்ததால் அழைத்துச் சென்றேன்."

"நமது வல்லபன் கணபதி அறியாத ரகசியமா?"

"என்றால் ஏன் கணபதி கூறவில்லை?"

"படுவேகமாய் முந்திக்கொண்டு விட்டாள் நாக மாலினி."

"அதிலென்ன தவறு..."

"அதில் தவறு இல்லை. தனித்துத் தங்களை அழைத்து சென்றது தவறு. பல்லவனிடம் ஏக வசனம் பேசியது தவறு. அதன் நிமித்தத்தால் வந்த மமதைதான் சிறைக் கொட்டடிவரை அவள் சென்று சந்தேகத்திற் குரிய அந்த ஒற்றனிடம் விசாரணை நடத்தச் சொல்லி யிருக்கிறது. அதன் எதிரொலியாக அவனை தப்பவும் விட்டிருக்கிறது..."

"சற்று விளக்கமாகக் கூறுங்களேன்..."

தீர்த்தர் சுற்று முற்றும் பார்த்துவிட்டு நெடுஞ் சடையன் காதோரமாக எதையோ கூற, நெடுஞ்சடையன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கத் தொடங்கு கின்றன.

"இது நிஜமா?"

"சத்தியம்..." என்கிறார் பச்சைமால் தீர்த்தர். கூடவே, "பல்லவன் மிகமிகப் புத்திசாலியாகி வருகிறான். அவ னது தூதுவன் ஒருவன் இப்பொழுது பாண்டிய நாட்டுக்குள் இருப்பதை அறிவீரா."

"யார் அவன்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"மிக வேகமாக அது தெரிந்துவிடும்."

"இப்போதே தெரிந்தாக வேண்டும்..."

"பதற்றம் வேண்டாம் நெடுஞ்சடையா!" என்று தீர்த்தர் கூறும்போது, ராஜதந்திரம் மிக்க நெடுஞ்சடையன் முகம் உடனேயே அமைதியை எட்டிப்பிடித்துப் பொருளுடன் தீர்த்தரைப் பார்க்கின்றது.

ராஜ்ஜிய பாரம் மிகுந்து விட்டாலே இளைப்பாறல் வேட்கை தலை எடுத்துவிடுகின்றது. அதிலும் அன்னக் கிளியாய்க் காதலி இருக்கும்போது... அவள் மடி தேடிச் சென்று, அதில் தலை சாய்த்தபடி ஆழ்ந்து யோசிப்பது தான் ராஜாதி ராஜர்களுக்கெல்லாம் வழக்கமோ?"

"எதற்காக இத்தனை ஆழ்ந்த யோசனை? என் மடி என்ன உங்கள் சிந்தனை மேடையா?" கேட்டவள் மதுரவல்லி.

இணங்கிச் சிரிக்கும் நெடுஞ்சடையனின் ஸ்ரீசூர்ண நெற்றியை ஏறிட்டு மதுரவல்லி முகம் நோக்குகிறாள்.

"இன்று அமாவாசை என்று தர்ப்பிக்கச் சென்றிருக்கிறார் உன் தந்தை. ஆனால், முழுநிலாவோ என் எதிரில்... என்ன ஆச்சரியம்..." என்று சிலாகிக்கிறான்.

"சூரியனை யாரும் நெருங்கவே முடியாது; பொசுங்கி விடுவார்கள் என்கிறார்கள். ஆனால், அந்தச் சூரியன் என் மடிமீது தலையைச் சாய்த்துக் கொண்டு கதை பேசும் போது இந்த நிலவும் கருகாமல் இருப்பதைவிடவா அது ஆச்சரியம்?" என்று எதிர்க்கேள்வி கேட்கிறாள் மதுர வல்லி...

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"நன்றாக பேசுகிறாய் மதுரவல்லி.."

"எல்லாம் உங்கள் காதல் கற்றுத் தந்ததுதான்."

"காதல் இதையெல்லாம் கற்றுத் தருகிறதா?"

"அது கற்றுத் தராத வித்தை எது, புலியைப் பூனையாக்கவும், பூனையைப் புலியாக்கவும் அதனால் அல்லவோ முடிகிறது- இப்பொழுது நீங்கள் இல்லையா?"

"என்ன சொல்கிறாய் மதுரா?"

நிமிர்ந்தபடி நெடுஞ்சடையன் விடைப்புடன் கேட்கும் கேள்வி முன் நெடுநேரம் மௌனம் சாதிக்கிறாள் மதுரவல்லி.

"கேட்டதற்கு நீ பதிலே கூறவில்லையே.."

"நீங்கள் வீரத்தில் புலி போன்றவர். அதில் தன்னிலை மாறக்கூடாது என்று விரும்புகிறேன்"

"எங்கே மாறினேன்?"

"என் மடி கிடந்து நம் நாட்டை மறந்து விடுவீர்களோ என்று அச்சமாய் இருக்கிறது."

"என்ன இது பிதற்றம்?"

"பிதற்றல் இல்லை...இப்படித்தான் பலரும் நினைக்கிறார்கள்."

"யார் என்று சொல். நினைக்க நெஞ்சில்லாதபடி நிர்மூலமாக்கி விடுகிறேன்."

"நிர்மூலமாக்க வேண்டியது அவர்களை அல்ல... பல்லவனை... காதலி நான் மனைவியாகிவிட்டால்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அனைத்தும் சரியாகிவிடும். பல்லவனை வெல்லும் உங்கள் சபதத்தை ஈடேற்றிவிட்டு விரைந்து வந்து மாலை சூட்டுங்கள் எனக்கு-"

"அது நிச்சயம் நடக்கும். அதில் என்ன கவலை உனக்கு?"

"இல்லை, யாரோ ஒரு பெண் புதிதாக உங்களுக்குத் துணை சேர்ந்திருப்பதாக அறிந்தேன்-"

"ஓ... உன் வரை வந்துவிட்டதா அந்தச் செய்தி? அவள் யாரோ அல்ல, என் மாமன் மகள் நாகமாலினி."

"அறிவேன்... அவர்களுக்குக்கூட ஏதோ ஆபத்து என்று அறிந்தேன்."

"ஆம்! உன்னை முதலில் தாக்கிய அந்த ஒற்றன் இப்பொழுது நாகமாலினியையும் தாக்கிவிட்டுத் தப்பி விட்டான்."

"தப்பிவிட்டானா? இல்லை, தப்ப விடப்பட்டதா?" மதுரவல்லியின் பொருள் செறிந்த அந்தக் கேள்வி முன் துணுக்குற்று நிமிர்கிறது நெடுஞ்சடையன் முகம்!

'தப்பித்தானா? இல்லை, தப்பிவிக்கவிடப் பட்டானா?'

- மதுரவல்லியின் கேள்வி பாண்டியன் பராந்தகன் நெடுஞ்சடையனை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது.

"மதுரா! என்ன இது... உன் கேள்வியின் உட் பொருள் எனக்கு அதிர்ச்சி தருகிறது" நெடுஞ்சடையன் விதிர்த்துப் போய் மதுரவல்லியை நோக்குகிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அவளிடமோ சலனமற்ற தன்மை. தீர்க்கமும் தெளிவுமாய்ப் போசுபவள் போலவும் தெரிகிறாள். என் கேள்வி ஒன்றும் ஊகத்தில் பிறந்ததில்லை என்கிற மாதிரி நெடுஞ்சடையனை நிமிர்ந்து நோக்குகிறாள். அழகிய அவள் நிலா முகத்துக் கண்களில் ஈரம் சேரத் தொடங்கு கிறது.

"மதுரா, என்ன இது கலக்கம்? உன் செய்கை இன்று எனக்கு மிகுந்த வியப்பும் வருத்தமும் அளிக்கிறது" என்கிறான் பாண்டியன்.

"ஆனால், நாமோ பலருக்கு வியப்பும் வருத்தமும் தருவதை அறிவீரா?"

"எப்படி என்று கூறுவாயா?"

"நீங்கள் என் மடியில் மயங்கிக் கிடப்பதால் ராஜ்ய பாரத்தை அறிய முடிவதில்லை என்று சிலரும், நான் மட்டும் உங்கள் வாழ்வில் குறுக்கிடாதிருந்தால் ஜென்ம பகைவனான பல்லவனை நீங்கள் எப்போதோ வென்றிருப்பீர்கள் என்று மேலும் சிலரும்-"

"போதும் நிறுத்து... எக்காலத்திலும் எல்லாக் கருத்துகளுக்கும் எதிரானவர்கள் இருந்தே வந்திருக் கிறார்கள். அந்த ஒற்றன் தப்பிவிட்டது பற்றிய உன் கருத்தை மட்டும் தெளிவாகக் கூறு-"

"அவன் தானாகத் தப்பவில்லை... தப்பிவிடப் பட்டிருக்கிறான் என்று அறிந்தேன்."

"யார் அப்படிச் சொன்னது?"

"சற்று முன் தீர்த்தர் ஆலயத்திற்கு வந்திருந் தார். அப்பாவைக் கண்ட இடத்தில் என் நிமித்தம்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

எச்சரிக்கையாக இருக்கச் சொன்னார். காரணம் கேட்ட போது, உங்கள் மகளைக் கொல்ல முயன்ற ஒற்றன் சிறையிலிருந்து தப்பிவிட்டான் என்றார்."

"அவன் தப்பிவிக்கப்பட்டதாகக் கூறினாயே?"

"நான் கூறவில்லை. இதையும் தீர்த்தரே கூறினார். பாண்டியச் சிறைக் கோட்டத்தில் இருந்து காற்றுக்கூட விலகி வீச முடியாது. அப்படி இருக்க ஒருவன் தப்புகிறான் என்றால் அவன் தப்பவில்லை! தப்பிவிக்கப்பட்டிருக் கிறான் என்று தீர்க்கமாய்க் கூறினார்."

"அப்படியானால் இது தீர்த்தர் கருத்து; உன் கருத்தில்லை அப்படித்தானே?"

-மதுரவல்லி ஆமோதிப்பதாய்த் தலையசைக் கிறாள்.

"தீர்த்தர் பெரும் ஞானியாயிற்றே; அவர் கருத்தை எப்படிப் புறக்கணிக்க முடியும்?" என்று எதிர் கேள்வியும் கேட்கிறாள்.

"யார் புறக்கணிக்கச் சொன்னது? பரிசீலிப்போம்" என்கிறான் நெடுஞ்சடையன். அப்படியே கவிழ்ந்த அவள் முகத்தை இரு கன்னம் பற்றி நிமிர்த்துகிறான். சுடர் மணியாய் விழி இரண்டும் பராந்தக நெடுஞ்சடையனை ஜொலிப்புடன் தாக்க நிலா வட்டத்தை ஏந்திப் பிடித்த எண்ணத்தை மேற்கொள்கிறான். சற்று அமைதி கொள்கிறான்.

"நான் தீர்த்தர் கருத்தைப் பரிசீலிக்கச் சொன்னேன். என் முகலாவண்யத்தை அல்ல..." மதுரவல்லியிடம் சிணுங்கல்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

“தெரியும்... அந்தப் பரிசீலனைக்கு மனோபலம் வேண்டாமா? அது எனக்கு இந்த இன்முகத்திடம்தானே இருக்கிறது..!”

“அது உறுதி என்றால் தாங்கள் பல்லவனை வெல்ல வேண்டும். எட்டுத் திக்கிலும் ஒரு எதிரிகூட உங்களுக்கு இருக்கக்கூடாது. எதிரிகளின் பயம் இல்லாதிருந்தால்தான் நிறைய அறப்பணிகள் செய்ய இயலும். இந்த மாநகர் மதுரையில் வைகுண்ட நாயகன் ஸ்ரீமந் நாராயணனுக்கு தாங்கள் ஒரு மாபெரும் ஆலயம் அமைக்க வேண்டும். பெரிய கோவிலான திருவரங்கத்தைவிடவும் அந்த ஆலயம் பெரிதாய் ஜீவ களையுடன் திகழவேண்டும்.

பாண்டியப் பேரரசர்களிலேயே தங்கள் புகழ் காலம் விழுங்கி விடாதபடி நிலைபெற்று நிற்கவேண்டும். அதற்கு இந்த மதுரவல்லி துணை செய்தாள் என்று வரலாறு கூறினால் போதும்.”

“உனக்குள்ளும் ஆசைப்புனலா...! ஆச்சரியமாய் இருக்கிறது மதுரா..”

“நான் வெளிப்படுத்தியிருப்பது ஒரு துளிதான் அரசே, உள்ளுக்குள் ஒரு கோடி உண்டு..”

“அதில் முதல் ஆசை எது?”

“உங்கள் பல்லவ வெற்றி.”

“அதில்தான் நமது திருமணம் இருக்கிறது என்ப தாலா?”

-நாணத்துடன் தலை கவிழ்கிறாள் மதுரவல்லி. கவிழ்ந்த வேகத்தில் நிமிர்ந்து, “எத்தனைதான் கண்ணிய மாய் நீங்கள் என் வரையில் காதல் உறவு கொண்டாலும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அதில் சிலர் கற்பனையைத் தங்கள் விருப்பத்துக்கும் கலந்து சிந்திப்பதை நாம் தடுத்தாக வேண்டும். தங்கள் தந்தையர் கோச்சடையர் இருக்கும் நாளில் தாங்கள் என்னைக் காதலித்திருந்தால் அதற்குப் பொருளே வேறு. ஆனால், இன்று ஆட்சிப் பொறுப்பில் மாமன்னனாய் என்னை நாடிவருவது தங்கள் மாட்சிமைக்கு அழகூட்டக் கூடியதாய் இல்லையே... அது முற்றுப் பெற வேண்டாமா?"

"மன்னனுக்குக் காதல் உணர்ச்சியே கூடாது என்கிறாயா?"

"தப்பாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள் அரசே! காதல் உணர்வென்பது கங்குகரை காணாத காட்டாற்று வெள்ளம். மனித உணர்வில் அது ஒரு தனிக் கம்பீரம் மிக்கது. காதல் உணர்வில்லாதவன் ஆறாம் அறிவு இருந்தும் அதைப் பயன்படுத்தாதவன். காதல் ஒரு மனிதனுக்கு உணவு உடை போன்ற ஒரு கட்டாயத் தேவை."

"அற்புதமான விளக்கம். அது இந்த மாமன்னனுக்கு எப்படி இழுக்குச் சேர்க்கிறது என்று கூறவில்லையே நீ."

- நெடுஞ்சடையன் விடை தெரிந்தும் தெரியாதவன் போல் கேட்ட கேள்வி மதுரவல்லியைச் சலனப் படுத்துகிறது.

"அரசே, நான் இன்று அதிகம் பேசிவிட்டேன். மன்னிக்க வேண்டும்" என்று அரசர் கரம் பற்றுகிறாள்.

"இன்றுதான் நீ அழகாகவே பேசியிருக்கிறாய். உம்- பேசு!"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"என்ன ஆழம் பார்க்கிறீர்களா?"

"இல்லை மதுரா... உன் பொறுப்புணர்ச்சியை என் மேலான காதல் சிந்தனைகளை மிக ரசிக்கிறேன்."

"எப்படி முடிகிறது?"

"நான் முதலில் நல்ல ரசிகன். பிறகுதான் பாண்டியன், மாமன்னன், பராந்தக நெடுஞ்சடையன் எல்லாம்."

"ஆனால், நான் உங்களை ரசிகனாக மட்டும் காணவில்லை. இந்தத் தேசத்தின் ஒவ்வொரு குடிமகனுக்கும் காவலன் நீங்கள்."

"மறுக்கவில்லை நான்..."

"ஏனோ காவலனாகத் தென்படுவதைவிட அதிகம் காதலனாகவே தெரிவதாக உள்ளுணர்வு கூறுகிறது."

"உனக்கு என்னைவிடவும் இந்த மண்ணின் மேல் காதல்... அதனாலேயே அப்படித் தெரிகிறது."

"அது தவறா?"

"அது சரியென்பதால்தானே அரண்மனை விட்டு உன்னை நானே தேடி வருகிறேன். என்னை அடைய துடிக்கும் ஒரு பெண்ணை விட்டு ஓடி வருகிறேன்." பாண்டியனின் விளக்கத்தால் துணுக்குற்று நிமிர்கிறது மதுரவல்லி முகம்.

"அவள் யாரோ?"

"உறவில் எனக்கு மாமன் மகள்..."

"அப்படியானால் அது கெங்க தேச உறவாயிற்றே..."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"சரியாகச் சொன்னாய்... நாகமாலினி கெங்க நாட்டுப் பெண்தான்."

"அம்மையார் பெயர் நாகமாலினியோ?"

"பெயரில் மட்டுமில்லை மதுரா... பல விஷயங் களிலும் குணத்திலும் அவள் அந்த நாகம் போன்றவள் தான்."

"அவளைத்தான் அந்தக் கைதி குத்திவிட்டுத் தப்பி விட்டதாய்..."

"ஆம்! அவளைத்தான்-அவளையேதான்! தப்பித் தானா இல்லை தப்பிவிக்கப்பட்டானா என்கிற உன் ஐயப்பாட்டிற்கு இன்று எனக்கு விடை கிடைத்துவிடும்."

-இப்படிப் பேசும்போது நெடுஞ்சடையன் பெரு மூச்செறிகிறான். மார்பு விரிக்கிறான். முத்துச்சரம் சப்திக்க இரு கை தூக்கி இடுப்பில் நிறுத்தி மதுரவல்லியை அர்த்த புஷ்டியுடன் காண்கிறான்.

"நான் நல்ல காதலன் மட்டும் இல்லை. காவலனும் கூட என்பதை மிக விரைவில் உணர்வாய்" என்ற தன் நெடுஞ்சடை நீவிக் கிளம்பத் தயாராகிறான்.

"நான் ஏதும் தவறாகப் பேசியிருந்தால் என்னை மன்னிக்க வேண்டும்" என்கிறாள் மதுரவல்லி.

"என் காதலிக்குத் தவறாக பேசத் தெரியாது" என்று நம்பிக்கை ததும்பப் பேசிவிட்டுப் பிரியாவிடை பெறுகிறான்.

ஏதுமறியாதவன் காதல் மயக்கம் உற்றவன் என்று கருதிய நினைவுகள் மாறி மாமன்னன் ஒரு புதிர்வடிவம் பெற்றுவிட்டதை எண்ணி அதிசயிக்கிறாள் மதுரவல்லி.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நாகமாலினையை நாகம் போன்றவள் என்று கூறிய அவன் வீரத்தை எண்ணிச் சற்று ஆறுதல் கொள்கிறாள்.

அந்த நாகம் மாமன்னனை நேசிக்கிறதாமே? அதை எண்ணக் கலக்கம் படர்கிறது, அவள் நெஞ்சுக்குள்! என்னாகும்? ஏதாகும்?

"ஏதுவும் ஆகிவிடாது. நீ கவலையே கொள்ளாதே! நிச்சயம் நாகாபரணி இந்த பாண்டிய தேசம் விட்டு நீங்கியிருப்பான். இந்த முறை நிச்சயம் அகப்பட மாட்டான்?"

- பஞ்சணையில் நாகமாலினிக்கு அருகில் அமர்ந்த படி ஆறுதல் கூறிக் கொண்டிருக்கிறாள் கோமளம். ஏனோ நாகமாலினி முகம் அதனால் எல்லாம் சமாதானம் அடையாமல் அலமலந்து கிடைக்கிறது.

நினைவில் நெடுஞ்சடையன் உண்மை தெரிந்து மார்பில் எட்டி உதைப்பதாய்க் கற்பனைச் சித்திரம் விரிகிறது.

'உங்கள் காதலைப் பெறவே இந்தத் தவறைச் செய்தேன். உங்கள் அன்புக்காகவே இந்தத் தவறைச் செய்தேன். என்னைப் புறக்கணித்து விடாதீர்கள்! புறக் கணித்து விடாதீர்கள்' மனசு பதைபதைத்துக் கொண்டே யிருக்கிறது. அது கோமளத்திற்கும் புரியாமல் இல்லை.

"மாலினி! என்ன இது... ஏன் இத்தனை பீதி? நீ கற்பனை செய்து பார்ப்பது போல் எதுவும் நடந்திடாது கவலையே படாதே."

"இல்லை கோமளம்- பாண்டியர்களைச் சாதாரண மாக எடையிட்டு விடாதே. இத்தனை நடந்திருக்கிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

ஒருவர்கூட என்னைக் குறுக்கு விசாரணை செய்யவில்லை. என் பெயரில் துளிக்கூட அவநம்பிக்கை படாதவர்கள் போல் எனக்காக அனுதாபப்படுகிறார்கள். அத்தனை பேரும்- அதனாலேயே என் சந்தேகம் வலுக்கிறது.

"பைத்தியம் நீ... அதனால்தான் உன் பெயரில் அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையைக்கூடச் சந்தேகப் படத் துணிந்துவிட்டாய். நல்லது நடந்திருக்கிறது; பரணி இனி அகப்படமாட்டான். மன்னனும் உன்பால் கரிசனம் கொண்டு விட்டார். துணிந்து பல்லவனை அடையாளம் காட்டி மாமன்னன் மனசில் ஓர் உயர்ந்த இடத்தைப் பிடித்துவிட்டாய். அதையே தொடர்ந்து செய்து விரைந்து காதலைப் பெற முயற்சி செய்."

"நடக்குமா கோமளம்?"

"நிச்சயமாக..." கோமளம் அப்படிச் சொன்ன மறு விநாடியே அவர்களின் அறைக்கு வெளியே இருக்கும் தாமிரத் தட்டில் யாரோ வந்திருப்பதற்குக் காரணமான அழைப்பொலி!

"யார் என்று பார்!"

-கோமளம் வேகவேகமாகக் கதவைத் திறந்து பார்க்கிறாள். கட்டியங்காரன் தெரிந்தான்.

"என்ன விஷயம்?"

"நாகமாலினி தேவியாரைக் காணக் கெங்க நாட்டிலிருந்து ஒருவர் வந்துள்ளார். ஆலோசனை மண்டபத்தில் காத்திருக்கிறார்."

- தகவலைத் தந்துவிட்டுக் கட்டியங்காரன் விலகிக் கொள்ள கோமளம் ஆச்சரியம் மிகக்கொள்கிறாள்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"என்ன கோமளம்?"

"உன்னைக் காணவும் ஒருவர் வந்திருக்கிறார். நம் கெங்க நாட்டுக்காரராம்."

"பெயர்?"

"ஆலோசனை மண்டபத்தை அடைந்தால் தெரிந்து போய்விடுமே... ஸ்ரீபுருஷ மகாராஜா உன் உடல்நலத்தை அறிந்துவர ஆள் அனுப்பியிருக் கிறாரோ என்னவோ-"

"அவரிடமிருந்து நேற்றுக்கூட ஓலை வந்திருந்ததே- இது வேறு யாரோவாகத்தான் இருக்க வேண்டும்."

"முதலில் நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்." கோமளம் வேட்கையோடு கிளம்பி நடந்தாள்.

# 10

ஆலோசனை மண்டபத்தில் உதயசந்திரன் தெரிந்தான்.

புலவன் வேடமிட்டு ஐங்கரன் எனும் பெயருக்குள் முற்றும் உருமாறியிருந்தவன் இப்பொழுது மேலும் மாறியிருந்தான். கெங்க நாட்டவன் என்பதற்குத் தோதாக நெற்றியில் அரவப் பொட்டெல்லாம் தரித்து காணப் பட்டான்.

எதிர்ப்பட்ட கோமளத்தைப் பார்த்து இலகுவாக வணங்கினான்.

"தோழியர்க்கு என் வணக்கங்கள். நான் ஐங்கரன். தழைக்காட்டிலிருந்து வருகிறேன்" என்றவன், சற்று

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

முற்றும் பார்த்துவிட்டு இடுப்பிலிருந்து ஒரு மோதிரத்தை எடுத்துக் கோமளத்தின் எதிரே நீட்டவும், அதைப் பார்த்துக் கோமளம் திகைத்துப் போனாள். அந்தத் திகைப்பு அடங்கும் முன்பே உதயசந்திரன் பேசலானான்.

"நான் நாகமாலினி தேவியாரைச் சந்தித்தாக வேண்டும். அவரது சகோதரன் நாகாபரணி ஒரு முக்கிய லிகிதம் ஒன்றைத் தந்திருக்கிறார்" என்றான் மிக மெலிந்த குரலில்.

கோமளம் அதைக் கேட்டுப் பதறிப் போனாள். உதட்டில் ஆட்காட்டி விரலை வைத்து அவனை அமைதியாக இருக்கச் சொல்லிப் பின் வருமாறு சைகை செய்தாள்.

வேகமாக நடந்தாள்.

உதயசந்திரன் பின்தொடர்கிறான். பாண்டிய அரண் மனையின் சுந்தர லாவண்யங்கள் அவனைச் சுண்டி இழுக்கின்றன. ஆயினும் சிற்ப நுட்பங்கள் இல்லாத தைல ஓவியங்களே மிகுதியும் அரண்மனை வளாகமெங்கும் தென்படுகின்றன.

அம்மட்டில் பல்லவர் கலைத் திறனுக்கு ஈடு கூற முடியாது என்று தனக்குத் தானே எண்ணிக் கொள் கிறான். காவல் வீரர்களின் வேல் பிடித்த கோலமும், கட்டுறுதியும், பாண்டி நாட்டு வீரர்கள் ஏர் பிடிக்கும் காளையொத்த சூரர் என்று அவன் கேள்விப்பட்டதற்குத் தோதாகவே தெரிகிறார்கள்.

இன்று மாறுவேடமிட்டு நடந்தாலும், நாளை உதய சந்திரனாய், மாவீரனாய் இந்த அரண்மனைக்குள் வீர நடை போட்டால்தான் இப்படி ஒளிந்து செல்லும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வீரத்தின் நேர்எதிர் நிலைக்குப் பரிகாரமாய் இருக்க முடியும் என்று எண்ணிக் கொள்கிறான்.

இப்படிப் பலவிதமான எண்ணக் கூட்டங்கள் மனசில் மண்டியிட்டுத் திரிய, நாகமாலினி இருக்கும் இடம் வந்ததே தெரியவில்லை.

அதோ நாகமாலினி.

பஞ்சணை மேல் அமர்ந்த நிலையில்...

ஆஹா, என்ன ஒரு காட்சி! அன்னப்பட்சி ஒன்று நீர் நிலை மேல் நின்றிருக்கிறதா, அமர்ந்திருக்கிறதா என்று தெரியாதபடி சிரம் தூக்கிப் பார்க்கும்போது எப்படி இருக்கும்? அப்படி இருக்கிறது நாகமாலினி அவனைப் பார்க்கும் காட்சி.

"தாங்கள்...?"

"பெயர் ஐங்கரன், தங்கள் சகோதரர் நாகா பரணியை உற்ற சமயத்தில் காப்பாற்றிய அவர் நண்பன்."

"அண்ணன் இப்பொழுது எங்கே?"

"நாட்டின் எல்லையில் நலமாகவே இருக்கிறார்."

அவன் பேசுவது பிடிபடாமல் அவனை ஆழமாய் ஊடுருவுகிறது நாகமாலினியின் பார்வை. பாண்டிய நாட்டான்தான் இப்படிப் பொய் கூறி உளவறியப் பார்க்கிறானோ என்பது போன்ற அச்சமும், எச்சரிக்கையும் கூடவே விழிகளில் பரவ ஆரம்பிக்கின்றன.

"சத்தியமாய் நான் பாண்டிய நாட்டவன் இல்லை." உதயசந்திரன் தந்த விளக்கத்தில் அதிர்ந்து செருமு கிறது அவள் முகம். அந்த வேளையில் உயர்ந்து தழைந்த

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அவள் மார்பகங்களைப் பார்த்து உதயசந்திரன் பெரு மூச்சு விடுகிறான்.

"நான் கேட்காமலே என் எண்ணம் உங்களுக்கு எப்படிப் புலப்பட்டது?" அவனை அமரச் சொல்லி ஓர் இருக்கையைக் காட்டியபடி பேச்சைத் தொடங்குகிறாள் நாமாலினி.

"இப்படி முகக் குறிப்பறிவதுதான் என் பலமே..." என்று உதயசந்திரனும் பீடிகை போடத் தொடங்கு கிறான்.

"அண்ணனை எப்படித் தெரியும்?"

"தப்பி வந்த ஒரு கைதியாக..."

"காப்பாற்றியதோடு என்னைத் தேடி அரண்மனை வந்ததன் காரணம்...?"

"தாங்கள் காதல் வெற்றி பெற உதவத்தான்."

"ஆச்சரியமாய் இருக்கிறதே- அண்ணன் இத்தனை தூரம் உங்களை நம்பிப் பேசியிருக்கிறாரா?"

"நான் நம்பினவர்க்கு நடராசன்."

"அதை நம்புபவரும் கூற வேண்டும். இப்போதைக் குத் தாக சாந்தி செய்து ஓய்வெடுக்கவும். பிறகு சந்திக்கிறேன்."

பேசிவிட்டுக் கைதட்டுகிறாள் நாகமாலினி. முதிர்ந்த தாதி ஒருத்தி தென்படுகிறாள்.

"இவர் ஓய்வெடுக்கவும், தாக சாந்தி பெறவும் ஆவன செய்" என்று கட்டளை இடுகிறாள்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உதயசந்திரனுக்குள் அவள் வேகம் புதிராகிப் போகிறது.

தன்னை அவள் நம்பாமல் குழப்பத்தில் வீழ்ந்து விட்டது புரிந்து போகிறது. இந்த நிலையில் அவள் போக்கில் போவதே உசிதம் என்றும் படுகிறது தாதியின் பின்னால் நடக்கத் தொடங்குகிறான் உதயசந்திரன்

"மாலினி என்ன இது? அண்ணனின் தூதுவனை இப்படித்தான் என்ன ஏது என்றுகூடக் கேட்காமல் துரத்தி விட்டாயே..."

"எனக்குக் குழப்பமாக இருக்கிறது கோமளம். இந்தப் பாண்டியர்களை நம்புவதற்கில்லை. இவர்களேகூட இப்படி ஏதாவது வேஷம் போட்டுக் கொண்டு வரக் கூடும்."

"எனக்கும் அது தெரியாதா? அண்ணனின் முத்திரை மோதிரத்தைப் பார்த்துத்தானே நான் அவருடன் பேசவே செய்தேன்."

"முத்திரை மோதிரம். பெரிய முத்திரை மோதிரம். ஏன் அண்ணனிடம் இருந்து அதைக் கைப்பற்றிக் கொண்டு உண்மையை அறியக்கூட இப்படி வேடம் போட்டுக் கொண்டு வரலாமே..."

"உனக்கு ஆனாலும் சந்தேகம். அதே சமயம் அது வலுவாக இருப்பதையும் மறுப்பதற்கில்லை. சரி, என்ன செய்யப் போகிறாய்?"

"அண்ணனே வந்து சொன்னால்தான் நான் நம்புவேன். அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லை துரத்திச் சென்ற பாண்டிய வீரர்கள் கொன்று போட்டு

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

விட்டார்களா என்பதே புரியாத நிலையில் நான் எதையும் யாரையும் நம்பத் தயாரில்லை."

அதற்கு மறு பதிலாய் அங்கே பலத்த சிரிப்பொலி கேட்டது. உதயசந்திரன்தான் சிரித்துக் கொண்டிருந்தான்.

"நீங்கள் போகவில்லையா?"

"போனவன் இப்படிச் சந்தேகப்படுவது தெரிந்து பாதியிலேயே திரும்பி விட்டேன். உங்கள் சந்தேகத்தை நீக்கிவிட்டுதான் இனி மறு பேச்சே."

"என்னுடன் வந்தால் உங்கள் அண்ணனை நீங்கள் காணலாம். ஆனால், நம்பி வர மறுப்பீர்கள் என்பது தெரியும். எனவே உங்கள் அண்ணனுடன் நானே நாளை இங்கு வருகிறேன். இப்போது விடை பெற்றுக் கொள் கிறேன்."

"நில்லுங்கள், நில்லுங்கள்... அலறினாள் நாக மாலினி."

"அண்ணன் இங்க வந்து மீண்டும் அகப்பட வேண்டாம்."

பதறினாள்.

"அகப்படும் கோலத்தில் அவர் வரமாட்டார்."

"வேண்டாம் எனக்குப் பயமாக இருக்கிறது. நான் வேண்டுமானால் உங்களுடன் வருகிறேன்."

"நல்ல முடிவு. சரி, எப்பொழுது?"

"இரண்டு தினம் செல்லட்டும். நான் இப்பொழுது கைதி தாக்கியதால் சிகிச்சை பெறுபவள்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அதுவரையில்?"

"தாங்கள் என் விருந்தினர்."

உற்சாகமாய் அதைக் கேட்டுச் சிரித்தான் உதய சந்திரன்.

நங்கூரம் பலமாய் விழுந்ததில் புளகாங்கிதம் அவன் முகத்தில் பொங்கி வழிந்தது.

நாகமாலினிகூட அதை ரசித்தாள். நாகாபரணி உயிரோடு தப்பிவிட்டமை குறித்து நிம்மதிப் பெரு மூச்செறிந்தாள். கூடவே விலகி ஓடினாலும் உதவிக்கு ஒருவனை அனுப்பிய அவன் அன்புள்ளத்தை எண்ணி பெரிதும் வியந்தாள்.

"அண்ணா, நீ இத்தனை உதவி செய்தும் என் காதல் ஈடேறாமல் போய்விடப் போகிறதே என்று கலக்கமாக இருக்கிறது" என்று வாய்விட்டுப் புலம்பு கின்றாள்.

உதயசந்திரன் காதிலும் அது விழாமல் போக வில்லை. "கவலையேபட வேண்டாம்; உங்கள் காதல் நிச்சயம் ஈடேறும்" என்று தீர்க்கமாக நாகமாலினியைப் பார்க்கிறான் உதயசந்திரன்.

"எதை வைத்து இத்தனை நம்பிக்கையோடு பேசுகின்றீர்கள்?"

"நம்பிக்கை இழந்து போகுமளவுக்கு அது என்ன பெரிய பிரச்னை?"

"ஒரு வரியில் சொல்லி முடியக்கூடியதா அது? அண்ணனை ஒரு பல்லவ ஒற்றன் என்று கருதியிருந்தார்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பாண்டியர். ஆனால், அவன் எனது ஒற்றனே அல்ல என்று பல்லவரே அதை நேரில் உடைத்து விட்டார். இந்நிலையில் அவன் பல்லவன் அல்ல என்றால் வேறு யார் என்பது கேள்வி. அண்ணன் ஒரு கெங்கன் என்று தெரிந்து விட்டால் என் நிலை என்னாகும் என்பது அடுத்த கேள்வி."

"எந்தக் கேள்விக்குமே இடம் இல்லாதபடி சூழ்நிலை செம்மையாகிவிடும். கவலை விடுக."

உதயசந்திரன் மிகுந்த நம்பிக்கையோடு பேசுவதை ஆச்சரியத்தோடு ஏற்றுக் கொள்ளும் நாகமாலினி, முதல் முறையாக தன்னம்பிக்கையூட்டும் அந்தப் பேச்சின் நிமித்தம் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

இது நீடிக்க வேண்டுமே?

**ஆ**லோசனை மண்டபத்தில் என்றைக்கும் இல்லாத கொந்தளிப்போடு பராந்தகன் தெரிகிறான். இடவல ஆசனங்களில் தீர்த்தர், மதுரகவி, சாத்தன் கார்கோடன், வல்லபன் கணபதி என்று அவனது உற்ற கூட்டம்.

அதிசயமாகச் சிறைத்தலைமைக் காப்பாளன் ரங்க மல்லனும் அழைக்கப்பட்டிருந்தான். நாகாபரணியைத் தப்பவிட்ட பாவத்திற்காகத் தலை கவிழ்ந்திருந்தான்.

மன்னன் தன்னை நிச்சயம் பதவி நீக்கம் செய்து நாடு கடத்துவான் என்பதுவரை எண்ணமும் கொண்டிருந்தான்.

தீர்த்தர் தாம்பூலச் சிவப்பு உதடுகளைப் பிரித்து ஒன்றுபட்ட நோக்கம் பற்றிப் பேச ஆரம்பிக்கிறார்.

"பராந்தகா...என்ன இது அத்தனை பேரையும் அழைத்து விட்டு எதற்காக மௌன ஊஞ்சல் ஆடுகிறாய்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பராந்தகன் பார்வை அடுத்த வினாடியே தீர்த்தரைப் பார்த்து முறைக்கிறது. பின்னர், "தீர்த்தரே! ஊகங்களை நான்கு பேர் அறிய பேசலாமா?" என்று பேச்சைத் தொடங்குகிறான் பராந்தகன்.

"அது ஊகத்தின் உட்பொருளைப் பொறுத்தது."

"பொதுவில் அரசுப் பொறுப்பில் இருப்பவர்கள் வார்த்தைகளை அளந்து பேச வேண்டும்."

"யார் அளக்காமல் பேசியது?"

"நீங்கள்தான்!"

"எப்படி?"

"பட்டரிடம் ஒற்றன் தப்பிவிட்டது பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறீர்கள்."

"ஆம். பிரஸ்தாபித்தேன். அதில் என்ன தவறு?"

"என்னிடம் பேச வேண்டிய விஷயத்தை ஏன் பட்டரிடம் பேச வேண்டும்?"

"நான் எதிர்பார்க்கும்படி நல்ல விளைவுகளை அது உருவாக்கித் தர வேண்டுமல்லவா?"

"பட்டரால் ஆக வேண்டியது என்ன இருக்கிறது, இம்மட்டில்?"

"நிறைய இருக்கிறது. அது போகப் போகத் தெரியும். நீ விஷயத்துக்கு வா பராந்தகா. தப்பித்தவன் பல்லவனா கெங்கனா என்றறியத்தானே இந்த ஆலோசனைக் கூட்டம்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அதற்காக மட்டுமில்லை. பல்லவனை இனியும் விட்டு வைத்திருந்தால் ஆபத்து. எக்காலமும் பல்லவன் பாண்டிய பூமியைப் பற்றி நினைத்தே பார்க்கக்கூடாது. அப்படி ஒரு தோல்வியை அவனுக்கு அளிக்க வேண்டும்."

"அதற்கு என்ன செய்வதாக உத்தேசம்?"

"போர்தான்– அதுவும் உடனடியாக."

"இம்மட்டில் நமது படை பலம் மட்டும் போது மானதா? பல்லவன் வலு அறியத் தேவையில்லையா?"

"நிச்சயமாய்த் தெரியத்தான் வேண்டும்."

"ஆகக் கூடிப் பாண்டியன் போர் முரசு கொட்டத் தொடங்கிவிட்டான். இனி எதிரிகளை வைத்து அவர்கள் வாலை நறுக்குவதே நமது பணி அப்படித்தானே?"

"ஆமாம். மேலும் தாமதிப்பது நல்லதல்ல. விட்டால் இந்த முறை பல்லவன் என் மண்ணில் யக்ஞம் வளர்த் தது போல் வேறு ஏதும்கூடச் செய்ய ஆயத்தமாவான். ஒற்றர்களின் பிரவேசங்களும் அவர்களது குழப்பங்களும் வேறு நம்மைக் குலைய வைத்துவிடலாம்."

"தற்போதைக்குப் பல்லவன் மட்டும்தான் நமது எதிரியா, பராந்தகா?"-தீர்த்தரின் அந்த அர்த்தச் செறிவுள்ள கேள்வி முன் பராந்தகன் அர்த்தபுஷ்டியுடன் பார்க்கிறான்.

"உங்கள் கேள்வியைப் பார்த்தால் வேறு யாரும் எதிரிகளாக உருவாகி வருகின்றனரோ?"

தீர்த்தரின் பொருள் பொதிந்த பேச்சு சாத்தன் கார் கோடனை, வல்லபன் கணபதியை என்னவோ செய்கிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பாண்டிய நாட்டைச் சுற்றிய அண்டை நாடுகளில் சோழனுக்குச் சுத்தமாக போராடும் திராணி கிடையாது. சேரர்களில் அதியமான் மட்டுமே அடங்காப்பிடாரி. ஆனால், அவனும்கூட குறுநில மன்னனைப் போன்றவனே!

வேறு நாட்டுக்காரர்களுக்கு யுத்தம் பற்றிய நினைப்பே கிடையாது. கெங்கர்களுக்கு நம்மை விட்டால் நாதியும் இல்லை. எங்கோ இருக்கும் சாளுக்கியர்கள் சரியான பேராசைக்காரர்கள்தான் - ஆனால் பல்லவ னையே அவர்களால் ஏதும் செய்ய முடியாதபோது நம்மை நினைத்துக்கூடப் பார்க்கும் நிலையில் அவர்கள் இல்லை.

வல்லபன் கணபதி சுற்றி வளைத்து யோசித்துப் பார்க்கிறான். பாண்டியர்களுக்கான இடர்ப்பாடு வந்தால் உடன் பல்லவனால்தான் என்பதாகவே படுகிறது.

பல்லவப் பகை என்பதும் இன்று நேற்று பகையல்ல. ஜென்மப் பகை!

கோச்சடையார் காலத்துப் பகை... பராந்தகன் நெடுஞ்சடையன் முடித்துக் கொள்ள வேண்டிய பகை.

நிலம் பிடித்துக் காஞ்சியில் பல்லவன் மீன் கொடியைப் பறக்கவிட்டுப் பார்க்க வேண்டும் என்பதை விடவும் குறுநில அரசர்களைக் கொன்று குவித்து அவர் களைப் படாதபாடு படுத்தும் நந்திவர்ம பல்லவனைக் கொஞ்ச காலமாவது பாண்டியச் சிறையில் வைத்துப் பார்க்க வேண்டும்.

இதைத் தவிர இப்போது வேறு எது பகையாக-பாதகமாக இருக்க முடியும்?

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இருக்கிறது என்பது போல் பார்க்கிறார் தீர்த்தர்.

"தீர்த்தரே, அதை உடைத்துவிடுவது நல்லது. உங்கள் அறிவார்ந்த விளக்கத்தை அறிய நான் காத்திருக்கிறேன் நான் மட்டுமல்ல. இந்த அவையே..." என்கிறான் பராந்தகன்.

"பராந்தகா, முதலில் இந்தச் சிறைக்காவல் மல்லனை மன்னித்து அனுப்பு; பிறகு பேசலாம்" என்கிறார் தீர்த்தர்.

"அவ்வாறே ஆகட்டும்" என்று பராந்தகன் கூறி முடிக்கவும், மல்லன் அங்கே அவைக்குப் பொதுவாக காலில் விழுந்தான்.

"பாண்டிய வரலாற்றில் சிறையில் இருந்த ஒருவன் தப்பிப்பது இதுவே இறுதியாக இருக்கட்டும்" என்கிறார் தீர்த்தர்.

"அவ்வாறே ஆகட்டும்" என்ற மல்லன், வணங்கி விடை பெற்றுக் கொண்டான்.

அனைவர் பார்வையும் தீர்த்தரை நோக்கி ஆவலுடன் குவிகிறது.

"தீர்த்தரே, பல்லவனை விடவும் பெரிய எதிரி யார்? கூறுங்கள். இந்த ராஜ்ய சபைக்கே தெரியாத அந்த ரகசியம் எது? உங்களுக்கு அது எப்படித் தெரிய வந்தது என்பதையும் கூறிவிடுங்கள் தீர்த்தரே."

- பராந்தகனின் உற்சாகத்தைப் பார்த்துவிட்டுத் தம் வெண்தாடியினை நீவி விட்டுக்கொண்ட தீர்த்தர், வாய் திறக்கத் தொடங்கியபோது—

"பாண்டி மாதேவி...

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பராந்தகர் ஜெயமாதா...

கோச்சடையர் நாயகி...

கோகிலமணி மொழியார்...

சுந்தரி தேவியார் பராக்... பராக்... பராக்"

-என்கிற கட்டிய ஒலி தீர்த்தரின் வாய்க்குப் பூட்டு போட்டது.

என்ன இது அதிசயமாக ராஜமாதா ஆலோசனை மண்டபத்துக்கு வந்து விட்டார்கள்?

அனைவரும் மெலிதாகத் திகைக்க, பராந்தகன் வரப் போகும் தாயை வரவேற்கக் கம்பீரமாக எழுந்து நின்றான்.

அதோ பூசுந்தரி தேவி!

அட, யாரது கூட— நாகமாலினியா?

ராஜமாதா பூசுந்தரி தேவியின் வருகை பராந்தகனை மிக ஆச்சரியப்படுத்தியது, அவள் அவைக்கு வந்ததால் பணிவோடும் பாசத்தோடும் எழுந்து நின்று தாயை வணங்கத் தொடங்கினான் பராந்தகன்.

உடன் வந்திருந்த நாகமாலினியும் மரபு பிசகாதபடி அவையைப் பணிந்து வணங்கினாள்.

"மங்களமான ஆசீர்வாதங்கள்" என்கிற தீர்த்தரின் ஆசிநிமித்தம் நாகமாலினி மீண்டும் ஒருமுறை அவரை மட்டும் தனியே வணங்கினாள். பூசுந்தரி நடந்து சென்று பராந்தகனை ஒட்டியுள்ள ஆசனத்தில் உரிமையோடு அமர்ந்து கொண்டாள்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பொதுவில் ராஜ்ய விவகாரங்களில் அவள் தலையிட்டதே கிடையாது. இன்று என்ன அதிசயமாய்...?

"உங்கள் ஆலோசனையை என் வருகை குலைத்து விடவில்லைதானே?" கேட்கிறாள்.

"அம்மா, இதென்ன விசித்திரப் பேச்சு?" பராந்தகன் வருத்தம் இழையக் கேட்கிறான்.

"அநேகமாய் ஆலோசனையின் உட்பொருள், தப்பி விட்ட அந்த ஒற்றன் குறித்தே இருக்கும் என்று கருது கிறேன்." ராஜமாதாவின் அடுத்த கேள்விக்கு ஆமோதிப்பு பராந்தகனிடம்.

"ஒரு வேண்டுகோள் விடுக்கவே நான் இங்கு வந்தேன்..."

"என்ன அம்மா?"

"நந்திப் பல்லவன் ஒரு மண்ணாசை பிடித்த மூர்க்கன். இந்த மதுரையைக் கைக்கொள்ள எதையும் செய்யத் துணிந்தவன். அவன் எந்த நிலையிலும் வெற்றி பெற்று விடக்கூடாது."

"இந்த நெடுஞ்சடையனை அவன் வெற்றி கொள்ளவே இயலாது தாயே... அதில் தங்களுக்கு ஐயமே வேண்டாம்."

"மகனே, உன் வீரத்தின் மேல் எனக்கு எல்லையில்லா நம்பிக்கை உண்டு. ஆனால், நந்தி. வீரத்தை நம்பாமல் சூதுவாதுகளில் நுழைந்துவிட்டால் அதை எதிர் கொள்ளவும் நாம் தயாராய் இருத்தல் வேண்டும்."

பூ சுந்தரியின் அந்தக் கருத்து பராந்தகனை விடவும் தீர்த்தரைத்தான் அதிகம் யோசிக்க வைக்கிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

'நந்திப் பல்லவன் வீரத்தின் மேல் நம்பிக்கை வைக்காமல் சூதுவாதுகளில் நுழைந்தாவது வெற்றி பெற்றிடக் கூடியவன் என்கிற கருத்தும் நம்பிக்கையும் எதனால் இந்த ராஜமாதவிடம் ஏற்பட்டிருக்கும்? யார் இதை ஏற்படுத்தியிருக்கக் கூடும்?'

அந்த சிந்தனையுடன் தீர்த்தரின் பார்வை நாக மாலினி பக்கம் திரும்புகிறது. தீர்த்தர் தன்னை கூர்ந்து நோக்குவதைப் பார்த்து நாகமாலினியே விதிர்த்துப் போகிறாள்; தடுமாறத் தொடங்குகிறாள்.

ராஜமாதா பூசுந்தரியிடமோ கருத்தின் தொடர்ச்சி_

"தப்பி ஓடிய ஒற்றன் பல்லவ தேசத்தவன்தான் என்பது என் கருத்து. பல்லவனே அவன் வேறு யாரோ என்று கூறியது நமக்குள் குழப்பத்தை உருவாக்கத்தானே யன்றி வேறில்லை. எனவே அவனைப் பற்றி ஆராய்ந்து காலநேரத்தை வீணாக்காமல் நந்தியைக் களத்தில் சந்திக்க நீ தயாராக வேண்டும். இந்தப் பாண்டிய மண்டலத்தை அவன் கனவிலும் நினைத்துப் பார்க்காத வண்ணம் பாடம் புகட்ட வேண்டும்."

தாயின் கருத்தையறிந்து சற்றே விக்கித்துப் போகி றான் பராந்தகன். அவையேகூட ஆச்சரியம் குன்றாது பூசுந்தரியைப் பார்க்கிறது.

"ஒரு கெங்க நாட்டுப் பெண்ணாய் எங்கள் பகைவனாய் மட்டும் நான் பல்லவனை உணரவில்லை. அவனை நான் நன்கறிவேன். உன் தந்தை கோச்சடையர் காலத்திலிருந்தே பாண்டி நாட்டுப் பகையை அவர்கள் ஊதிஊதி வளர்த்து வருகிறார்கள். தந்தைக்குப் பின்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

மகன். அவனுக்குப்பின் அவன் மகன் என்று நாடு பிடிக்கும் ஆசை அவர்களிடம் பாரம்பரியமாய் வளர்ந்து வருகிறது.

"ஏகதேச சக்ரவர்த்தியாக எதையும் செய்யத் துணிவது அவர்களின் நோக்கம், உன் தந்தை இருந்த வரையில் அவன் நோக்கம் ஈடேறுமா என்று பார்க்கிறான். எக்காலத்திலும் அது ஈடேறாது என்று நீ நிரூபிக்க வேண்டும்."

"அம்மா தாங்களா இத்தனை தூரம் பேசுவது? தங்களுக்குள்ளும் இத்தனை எண்ணக் கொந்தளிப்பா?"

"கொந்தளிப்பு என்கிற வார்த்தைகூடச் சாதாரண மானது. இது அதற்கும் மேல்! மாளிகைக் கிழத்தியாய் எனக்கென்ன என்று நான் இருப்பதாக உனக்குத் தெரிய லாம். எனது காதும் கண்ணும் எத்தனை கூர்மையானவை என்பது உனக்குத் தெரியாது. உனக்கு இப்பொழுது ஒரு பெரிய உண்மையைக் கூறப்போகிறேன்.

நந்திக்கு இப்போது யாருமே நட்பு கிடையாது. அவனது மனைவி வழி நாடான ராஷ்ட்ரகூடர்கள்கூட அவனை நேசிக்கும் நிலையில் இல்லை. சாளுக்கியர்கள் முதல் சேர சோழர் வரை சகலரும் பகைமை பாராட்டும் நிலையில் இருக்கிறான் நந்தி."

"அனைத்தையும் நானும் அறிவேன் அம்மா."

"அறிந்தால் போதுமா? ஏகதேச சக்கரவர்த்தியாகத் துடிக்கும் அவன் வெறியை அடக்க வேண்டாமா?"

"அடக்கத்தானே போகிறேன்."

"எப்போது? நந்திப் பல்லவன் நமக்கிணையாக வலுப்பெற்ற பின்பா?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"தங்கள் பேச்சு எனக்குப் புரியவில்லை தாயே..."

"உன்னிடம் வேகம் போதாது என்கிறேன். நந்தி நம்மோடு மோதும் முன் நாம் அவனுடன் மோதிவிட வேண்டும்."

"தகுந்த காரணம் வேண்டுமே..."

"காரணங்களுக்கா பஞ்சம். இந்த ஒற்றன் விவகாரம் ஒன்று போதும்."

ராஜமாதாவின் பேச்சு அவையையே அதிசயத்தில் மூழ்கடித்திருந்தது. தீர்த்தர் மௌனமாய் அரைக்கண் மூடி அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தார்.

ராஜமாதா தானாய்ப் பேசவில்லை. பேசவைக்கப் படுகிறாள் என்கிற அவர் யூகத்துக்குத் தோதாக நாக மாலினி அவரை ஏறிட்டே கூசுகிறாள்.

'இந்தப் பெண் ஏன் இப்படிச் செயல்படுகிறாள்?'

அந்தக் கேள்வி தீர்த்தருக்குள் பிரதானமாகி அது அவளையே தொடர்ந்து வெறிக்கச் செய்கிறது.

"தீர்த்தரே...!" இடையில் பராந்தகனிடம் இருந்து விளிப்பு.

"என்ன பராந்தகா...?"

"அம்மாவின் பேச்சு பற்றித் தங்கள் கருத்து..."

"அவர்கள் கூறுவது மிகச் சரி... பல்லவன் விஷயத்தில் நமக்கு வேகம் போதாதுதான்..."

"அமைச்சரே, தங்கள் எண்ணம்..." பராந்தகன் பார்வை மதுரகவியார் பக்கம் திரும்புகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

மதுரகவியார், வல்லவன் கணபதியையும் சாத்தன் கார்கோடனையும் பார்த்துவிட்டு, "தீர்த்தர் கருத்தே என் கருத்து" என்கிறார்.

நாகமாலினி யாரும் எதுவுமே கேளாமலே தன் கருத்தைக் கூறினாள். "அந்த ஒற்றன் பல்லவ நாட்டவன் தான். அத்தை கூறுகிற மாதிரி பல்லவ அரசர் நம்மைக் குழப்பவே அவன் யாரோ என்று கூறியிருக்க வேண்டும். அவன் என்ன ஆனான். எங்கே போனான் என்பது ஒரு புறம் இருக்கட்டும். அவனை ஏவிய குற்றத்திற்காகப் பல்லவனை நாம் தண்டித்தே தீரவேண்டும்."

மிக ஆவேசமாகப் பேசினாள் நாகமாலினி.

"ஆம். அதுதான் மிகச் சரி." பராந்தகனிடம்கூட இறுதி முடிவு.

"என்றால் அடுத்த கட்டம் போர்தானே?" இது நாக மாலினி.

"அதற்கும் முன்பாக ஒரு சிறு செயல் புரிந்தாக வேண்டும்."

"என்ன அது?"

"அதை நான் பிரதானிகளிடம் கூடிப் பேசித் தீர்மானிப்பேன். நீ வந்த நோக்கம் முடிந்ததென்று கருதுகிறேன்."

பராந்தகனின் பதிலால் நாகமாலினியின் வதனம் பெரிதும் வாடிப் போகிறது.

பூசுந்தரி எழுந்து கொள்கிறாள்.

ராஜாங்க நாகரிகம் அவளிடம் கொப்பளிக்கிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கட்டிய ஒலிகள் புலர்ந்தெழுகின்றன.

பூசுந்தரியோடு நாகமாலினியும் அந்த ஆலோசனை மண்டபம் விட்டு நீங்கத் தொடங்குகிறாள். செல்லும் போது பராந்தகனைப் பரிதாபமாகவும், கோபமாகவும் பலவிதமாய்ப் பார்த்த வண்ணம் செல்கிறாள்.

"பராந்தகா! இந்தப் பெண்மேல் உனக்கொரு கண் இருக்கட்டும்" - தீர்த்தரிடம் இருந்து வந்த கருத்துக்கு இசைவான சிரிப்பு பராந்தகனிடம்.

"தீர்த்தரே, நாகமாலினியை விடுங்கள். மிகவும் சரா சரியான ஒரு பெண். பல்லவனோடு மோதுவது குறித்து வேகம் போதாது என்றீர்களே-அது உள்ளபடியே எனக்குக் கூறப்பட்டதா? இல்லை அம்மாவைத் திருப்திப் படுத்தவா?"

"இரண்டிற்காகவும் தான்!"

தீர்த்தர் எப்பொழுதும் இப்படித்தான். அவரது பதில்களில் எப்பொழுதும் இரட்டைப் பொருள் ஒட்டியிருக்கும் எதை எடுத்துக்கொள்வது என்பதில் குழப்பம் தலை விரிக்கும், இம்முறை அந்தக் குழப்பம் பராந்தகனையும் ஆக்கிரமிக்கிறது.

"தீர்த்தர். சற்றுத் தெளிவாகப் பேசிவிடுவது நல்லது..." என்றபடி தனது நெடுஞ்சடையை நீவிக் கொள்கிறான் பராந்தகன்.

"பல்லவன் முந்திக் கொள்ளுமுன் நாம் முந்திக் கொள்வது சாலச் சிறந்தது ராஜமாதா கருத்துப்படி அவன் ஏகதேச சக்ரவர்த்தியாகும் எண்ணத்தோடும். பாண்டிய மண்ணின் பழைய பகைக்கு பழி வாங்கவும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

எதையும் செய்வான். அவனது வேள்வி தோல்வி கண்டிருக்கலாம். ஆனால், அதன் நிமித்தம் அவன் மேற் கொள்ளும் பரிகாரங்கள் தோல்வியடையும் என்று சொல்வதற்கில்லை..”

“வேள்வியின் தோல்விக்குப் பரிகாரமா?”

“ஆம்.. பரிகாரம் கண்டுவிட்டுத் திரும்பவும் மோத விழைந்தால் ஆயிரம் படைபலம் நம்மிடம் இருந்தும் கால நேர வர்த்தமானங்களின் துணையோடு பல்லவன் நம்மை வெற்றிகொள்ள வகையுண்டு...அதோடு இன்று நம் நாட்டுக்குள் இன்னும் எத்தனை அகப்படாத பல்லவ ஒற்றர்கள் திரிகிறார்களோ யார் கண்டது? அவர்கள் மூலம் செல்லும் தகவல்களும் நம்மைப் பலவீனப்படுத்தி விடும்..”

“அது சரி... அது என்ன பரிகாரம் தீர்த்தரே...?” இந்தக் கேள்விக்கு வல்லவன் கணபதி பதிலளித்தான்.

“பேரரசே... காஞ்சியில் இருந்து நமது ஒற்றர்கள் மூலமாகவும்-எனது தனித்த பிரயாசையாலும் சில நுட்பமான தகவல்களை அறிந்தேன். அதன்படி வராக பண்டிதர் எனும் ஜோதிடரின் கூற்றுப்படி பல்லவ மன்னர் ஸ்ரீசுதர்ஸன மகா வேள்வியின் தோல்விக்குப் பரிகாரம் மேற்கொள்ள உள்ளார்.

அதன் நிமித்தம் சாமுத்ரிகா லட்சணங்கள் பெரிதும் கொண்ட கற்புள்ள நங்கையையோ, ஆடவனையோ சூரியோதய வேளையில் களபலியாய்க் கொடுத்தும். நவதான்யப் படுக்கை விரித்து அதன்மேல் அமர்ந்து அன்ன ஆகாரமின்றி ஒரு மண்டலம் கோடி நாம ஜபம் செய் வதும், பல்லவன் தனக்கு மிகப் பிரியமான ஒன்றையோ

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அல்லது பண்டிதர் கேட்பதையோ கொடுத்து விட்டால் பரிகாரம் செய்ததாகிவிடும் அதன்பின் அவர் மேற் கொள்ளும் எந்த ஒரு செயலும் தோல்வியைத் தழுவாது என்பதாக அறிந்தேன்."

வல்லபனின் பதில் பராந்தகனைக் கட்டிப் போடு கிறது; மௌனத்தில் புதைக்கிறது; விழிமணிகளில் வெம்மையேற்றுகிறது.

"கலங்காதே பராந்தகா! நமது கூடலழகர் பெருமான் உன் கலக்கம் போக்கி இந்தப் பாண்டிய மண்டலத்தின் மேன்மைக்கு வழி செய்வார். வாவென அழைத்து வரம் தரும் ஒரே தெய்வம் ஆயூக வரதனான அழகர் பிரானே..! சூரிய நாராயணனாய் நின்றும், க்ஷீராப்தி நாதனாகச் சயனித்தும், அழகன் சுந்தரனாய் அமர்ந்தும் அந்த வேத மூர்த்தி அருள் சாதிக்கும்போது உனக்கேன் கலக்கம்?"

ஆமோதிப்பது போல் கூடல் அழகர் ஆலய மகா கோபுர மணி சப்தம் அந்த ஆலோசனை மண்டபம் வரை கேட்கிறது.

சிலிர்த்துப் போகிறான் பராந்தகன்.

உடனேயே சுந்தரமூர்த்தியைத் தரிசிக்கும் ஆவல் எழுகிறது. மனசில் மதுரவல்லியும் மலர்ந்து சிரிக்கத் தொடங்குகிறாள்.

'மதுரா, உன்னை அடையும் நோக்கிற்காகவாவது நான் வேகமாக அந்தப் பல்லவனை அடக்கித்தான் ஆக வேண்டும்' என்று சபதம் எடுக்கிறது மனசு.

"அந்த ஒற்றனின் விவகாரத்தை விட்டு விட்டோமே-" - தீர்த்தர் மட்டும் விடாது வளைத்துப் பிடிக்கிறாா

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"விட்டுவிடவில்லை தீர்த்தரே-விடவும் கூடாது!"

பராந்தகன் அர்த்தபுஷ்டியுடன் சாத்தன் கார்கோடனைப் பார்க்க, அந்தப் பார்வையின் உட்பொருள் புரிந்த மாதிரி ஒரு ஆமோதிப்பு கார்கோடனிடம்.

இரவுக் காலம்!

தேய்ந்த சந்திரனின் ஒளித்துணுக்குகளால் பிரபஞ்சம் உறங்கிவிட்ட வேளை.

மாமதுரை மட்டும் விலக்கா என்ன?

அதிலும் அர்த்த ஜாமப்போது ஆலிங்கன வேளை அல்லவா? காற்றும் குளிரும், நிலவும், ஒளியும், ஆணும் பெண்ணும் கூடிக்களிக்கும் அந்த இராப்போதில் அரண்மனைக் களரிக் காவலர்கள் சிலர் மட்டும் புரவிமேல் தளர் நடை போட்டு நகர வீதிகளில் சுற்றி வந்து கொண்டிருக்கிறார்கள். காவற்பணி!

ஆங்காங்கே கற்தூண்களின் மேல் எண்ணெய்த் தீபங்கள் கற்சட்டிகளில் எரிந்து அடங்கித் தழல் வாடையைக் கக்கிக் கொண்டிருக்கின்றன.

சில இடங்களில் அதன் வாடையைப் பிச்சிக் கொடியின் மலர்கள் தங்கள் வாசத்தால் அடக்கியும் விடுகின்றன.

ரம்மியமான ஏகாந்தம்-

"என்ன கிளம்பலாமா?" - உதயசந்திரன், நாகமாலினியைப் பார்த்துக் கேட்கிறான், அவள் அஞ்சுகிறாள்.

"எனக்குப் பயமாயிருக்கிறது."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"உனக்கும் பயமா?"

"ஏன் நான் அச்சப்படல் ஆகாதா?"

"வீரத் திருமகள் அஞ்சுவதா... அதை எண்ணியே அப்படிக் கேட்டேன்."

"ஏதேது பீடிகை பலமாயிருக்கிறது..."

"நிஜங்கள் சமயங்களில் பீடிகை போல் தெரிவது வாடிக்கை போலும்... சரி, சரி. நேரமாகிக் கொண்டிருக் கிறது. உன் அண்ணன் இந்நேரம் வைகையின் வட கரையில் நாகர் ஆலயம் அருகில் காத்திருப்பான். சந்திக்க வேண்டாமா?"

"சந்திக்கத்தான் வேண்டும். அதே சமயம் பாண்டியர் கள் குறித்துச் சிந்திக்கவும் வேண்டியிருக்கிறதே..."

"ஒரு நேரத்தில் ஒன்றைத்தானே செய்ய முடியும்?"

"அது நன்றாய் இருத்தல் அவசியமாயிற்றே!"

"பெண்ணே... செம்பொன்னே! எனக்கு உன்னுடன் வாதிக்கப் பொறுமையில்லை. உடன் என்னுடன் கிளம்பி வந்து அண்ணனைக் கண்டு பேசு. அதன் பிறகாவது என்னை நம்பி இதயம் திறந்து பேசு..."

"நான் தயார். காவலர்கள் கண்ணில் படாமல் தப்ப வேண்டும் அதற்கு வழி..."

"நான் இருக்கிறேன். மதி மயக்கும் மூலிகைப் பொடி இருக்கிறது; எதற்குக் கவலை?"

"மதி மயக்கும் மூலிகைப் பொடியா?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"ஆம், இந்தப் பிரபஞ்சம் இதுபோல் பல விசித்திரங்களை உடையது, மதிமயக்கி மூலிகையின் வாசம் நினைவுகளை உறங்கச் செய்துவிடும். எதிர்ப்படுவோர் ஏதும் சண்டித்தனம் செய்தால் அப்படி உறங்கட்டுமே..."

"முதலில் அது எனக்குத்தான் தேவை. என் நினைவுகள் உறங்காமல் என்னைப் பாடாய்ப்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பொழுதும் எப்படி முடியுமோ, எப்படி முடியுமோ என்று கலக்கமாய் இருக்கிறது."

"அதுதான் காதலின் ஜாதகம்!"

"காதலித்த அனுபவமோ."

"ஊஹூம்... காதலிக்கும் அனுபவம்..."

"உங்கள் காதலி எந்த தேசத்துப் பெண்?"

"பருவத்தில் எல்லாப் பெண்களும் காதல் தேசத்தவர்கள்-அதன் பின் காதலன் தேசத்தவர்கள்..."

"பொடி வைத்துப் பேசாமல் நேராகக் கூறக் கூடாதா...?"

"நேராகத்தான், அதிலும் நேருக்கு நேராகத்தான் கூறுகிறேன். உனக்குத்தான் புரியவில்லை. சரி, சரி. கிளம்பு..."

இருவரும் புறவழிகளில் பூனை போல் ஊர்ந்து அரண்மனையின் பிரதான வாயிலை எட்டிவிட்டார்கள். காத்திருந்தது இரண்டு புரவி.

ஏறிக்கொண்டு விரையத் தொடங்கினார்கள்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

# 11

மேகத்துண்டு ஒன்று நிலாவை மூடி ஒத்துழைத்தது. நாகமாலினி ஒரு சால்வையால் தன் மேனி மூடியிருந்த போதிலும் அடக்கிக் கட்ட மறந்த கூந்தம் அலைபாய்ந்து பயணிப்பது ஒரு பெண் என்று கூறாமல் கூறியது.

வைகை மெல்ல தவழ்ந்து கொண்டிருந்தது. கரையோரம் உச்சமான சில்லிப்பு.

நாகமேடு தொலைவில் தெரிந்தது. நாகர் ஆலயம் ஒன்றும் அங்கே தெரிந்தது. பெரிதாக இல்லாவிட்டாலும் சிறிதாகவும் இல்லாமல் பாண்டியப் பெண்களின் நாகதோஷ பரிகாரங்களுக்கு உதவும் ஒரு இடமாக அது இருந்தது.

நூறு ஆண்டுகளை கடந்துவிட்ட பல நாகங்கள் அங்கு வசிப்பதாகவும், அவை பௌர்ணமி இரவில் மெல்ல வெளிப்பட்டுத் தங்கள் இரையைத் தேடி அலைவதையும் பலர் பார்த்ததுண்டு.

மற்றபடி அனைத்துச் சாதி நாகங்களும் அலைந்து திரியும் அந்த இடத்திற்கு மாலைப் போது கடந்து விட்டாலேகூட யாரும் போகத் துணிவது கிடையாது.

சீறி வரும் சர்ப்பங்களைத் தாக்கித் தங்களைச் சாபத்துக்கு உட்படுத்திக் கொள்ளவும் யாருக்கும் விருப்பம் கிடையாது.

இதனால் எல்லாம் ஜன சந்தடியற்ற ஓர் இடமாக அந்த நாகர் ஆலயம் இருப்பது நாகாபரணிக்கு மிக வசதியாகிவிட்டது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

ஆலயத்தை ஒட்டியுள்ள ஒரு மகிழ மரக்கிளை மேல் அமர்ந்தபடி ஆற்றோரமாகவே பார்த்த வண்ணம் அமர்ந்திருக்கின்றான்.

அதோ.. இரண்டு புரவிகள்!

அலை பாயும் கூந்தலோடு வருபவள் நாக மாலினியாகத்தான் இருக்க வேண்டும்.

அருகில் ஐங்கரன் எனும் உதயகுமாரன்.

இருவரையும் பார்த்துப் பரவசப்படுகிறான்.

'இந்த உதயகுமாரனை அந்தத் தெய்வம்தான் அனுப்பித் தந்திருக்கிறது. இல்லாவிட்டால் இத்தனை தூரம் உதவிக் கொண்டிருப்பானா?'

நெகிழ்ச்சியில் நாகாபரணி நெஞ்சு நிமிர்ந்து புடைக்கிறது. தோளில் கட்டாரி தைத்த இடத்தில் மிதமான வலியின் வேதனை.

மதுரவல்லியைக்கூட இதே மாதிரிதான் தாக்கியிருந்தான்... அவளுக்கும் இப்படித்தான் வலியெடுத்திருக்கும். பாண்டியர்கள் ஏதோ ஒரு வகையில் பழிக்குப் பழி வாங்கி விட்டார்கள்.

நினைத்துப் பார்த்துச் சற்றுக் கோபமும் கொள்கிறான்.

மதுரவல்லி என்கிற அந்த ஒரு பெண்ணால் தானே இவ்வளவும் -அவள் மட்டும் அன்று இறந்து விட்டிருந்தால்?

நினைக்கும் அவ்வளவும் ஈடேறிவிடுகிறதா என்ன?

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நாகாபரணியின் பார்வை சோர்வை எட்டி அப்படியே கீழே செல்கிறது.

நாகமும் சாரையும் ஓரிடத்தில் புணர்ந்து கொண் டிருக்கின்றன. ஒரு குட்டி நாகம் முகர்ந்து முகர்ந்து பார்த்த படி ஊர்ந்து கொண்டிருக்கிறது.

நாகர் ஆலயத்தின் மணித் தீபம் அணையுமாப் போலே எரிய அதன் ஒளியோடு நிலவொளியும் கலந்து ஓரளவு மரத்தின் கீழ் நடப்பவற்றைப் பார்க்க முடிகிறது.

இந்த நிலையில்தான் உதயசந்திரனும், நாக மாலினியும் புரவிக் கனைப்போடு அங்கு நுழைந்திருந் தார்கள்.

புரவியை விட்டு இறங்கும் உதயகுமாரன் சுற்றிச் சுற்றிப் பார்க்கிறான்.

'எங்கே இந்த நாகாபரணி?'

நாகமாலினியும் தேடுகிறாள்.

"அண்ணன் இங்கிருப்பதாகக் கூறினீர்களே...?" உதட்டில் கேள்வியோடு பார்வையைச் சுழல விடுகிறாள்.

நாகாபரணிக்கு அவர்கள் தவிப்பு மகிழ்ச்சி தருகிறது. சற்று விளையாட்டுப் புத்தி எட்டிப் பார்க்கிறது. மரத்தை விட்டு இறங்காமல் இருவரும் என்ன செய்கிறார்கள் எப்படித் தவிக்கப் போகிறார்கள் என்பதைப் பார்க்கும் ஆவல் கிளர்ந்தெழுகிறது.

மகிழ மரத்தின் பருத்த கிளையில் பாம்பைப் போல் படுத்துக்கொண்டு அப்படியே மறைந்து அவர்களை ஏமாற்றப் பார்க்கிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"நாகாபரணிக்கு ஏதும் ஆபத்தா...? ஏன் இங்கு வந்திருக்கவில்லை" இருவரும் வாய்விட்டே முணு முணுத்துக் கொண்டு அந்த நாகர் ஆலயத்தைச் சுற்றிச் சுற்றி வரும்போது அவர்கள் அதிர்ச்சி கொள்ளும் வண்ணம் வைகைக் கரையோரமாக ஒரு மாபெரும் புரவிக் கூட்டமே வந்து கொண்டிருந்தது.

அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவனாய்க் காற்றென முன்வந்து கொண்டிருந்தான் சாத்தன் கார் கோடன்!

"ஐய்யய்யோ... பாண்டியர் படை!" பதறினாள் நாகமாலினி.

"பதட்டப்படாதே. சமாளித்து விடலாம். நல்ல வேளையாக உன் அண்ணன் இங்கு இல்லை. இருந்திருந் தால் நம் கதி மிக மோசமாயிருக்கும்."

"இப்பொழுது மட்டும் என்னவாம்? அர்த்த ராத்திரியில் ஒரு ஆண்மகனுடன் என்னைக் கண்டால் என்ன நினைப்பார்கள்? நான் பயந்தது போலவே ஆகி விட்டது.."

"இதைப் போன்ற வேளையில்தான் நெஞ்சுரம் மிகுதியும் தேவை. அஞ்சாதே.."

கீழே இருவரும் பேசுவதும்-மிக அருகாமைக்குள் பாண்டியரின் புரவிக்கூட்டம் நுழைந்துவிட்டதும் மரத்தின் மேல் விளையாட்டாய்ப் பதுங்கியிருந்த நாகாபரணிக்குள் நெருப்பை மூட்டி விட்டிருந்தன.

மரக்கிளையில் அட்டை போல் ஒட்டிக்கொண்டு தெய்வங்களை வேண்டத் தொடங்கினான் நாகாபரணி.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நாகர் ஆலயமே புழுதிக்களத்தில் மூடும் வண்ணம் பாண்டியப் புரவிக் கூட்டம் வட்டம் கட்டி நிற்கத் தொடங்கியது. தீப்பந்தம் எந்திய ஒரு சில வீரர்கள் ஆலய வளாகத்தில் வெட்ட வெளியில் நிற்கும் உதய சந்திரனையும், நாகமாலினியையும் சுற்றி வளைக்க சாத்தன் கார்கோடனின் புரவி வாலைக் குழைத்தபடி அவர்கள் இருவரையும் நெருங்கியது.

நாகமாலினி மிரண்டுபோய் விட்டிருந்தாள்.

நள்ளிரவில்.. வைகைக் கரை ஓரமாய் உள்ள நாகர் ஆலயத்திற்கு நாகாபரணியைச் சந்திக்க சென்ற இடத்தில் நாகமாலினியையும் ஐங்கரன் எனும் புலவன் வேடத்தில் இருக்கும் உதயசந்திரனையும் சாத்தன் கார் கோடனின் தலைமையில் வந்த பாண்டியர் படை சுற்றி வளைக்கிறது.

நாகர் ஆலயத்தை ஒட்டி வளர்ந்துள்ள மரத்தின் மேல் ஒளிந்திருக்கும் நாகாபரணி இதைப் பார்த்து அதிர்ந்து மரத்தின் மேலேயே ஒரு அட்டையைப் போல் ஒட்டிப் பதுங்கத் தொடங்குகிறான்.

சுற்றிலும் தீப்பந்தம் திகுதிகுக்கப் பாண்டியர் படை!

அவர்களின் மையத்தில் பிரதானமாய்ச் சாத்தன் கார்கோடன்! அவன் முகத்தில் கடூரக் கொந்தளிப்பு.

"இந்த நள்ளிரவில் நாகமாலினி தேவியார் ஒரு கள்வனைப் போல் அரண்மனை நீங்கி இந்த நாகர் ஆலயம் வந்திடக் காரணம்?"

அவன் உதட்டில் கேள்வியின் வியாபிப்பு.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

சாத்தன் கார்கோடனின் அந்த வளைப்பும் கேள்வியும் அச்சம் மூட்டிட அதிர்ந்துபோய் அவனை வெறிக்கிறாள் நாகமாலினி. உதயசந்திரனையும் மிரட்சியுடன் பார்க்கிறாள்.

உதயசந்திரனிடம் சூட்சம அறிவு உடனடியாகச் செயல்படத் தொடங்குகிறது.

"இன்று பஞ்சமி திதி. அதிலும் நாகபஞ்சமி வேறு. இன்று நாக தேவதையை வழிபட்டால் நினைத்த காரியம் எல்லாம் நடக்கும் என்பதால் இங்கு வந்துள்ளோம்" என்று எடுத்துக் கொடுக்கிறது அவன் உதடு.

"அது சரி, யார் நீ?" -சாத்தன் கார்கோடன் கேள்வியை அவனை நோக்கி அம்பாய்ப் பாய விடுகிறான்.

"நான் ஒரு செங்கன். தேவியாரின் உறவினன். அடிப்படையில் புலவன்."

"பூஜிக்க வேண்டும் என்றால் பூசனைப் பொருட்களுடன் தேவியார் பல்லக்கு பரிவாரத்துடன் அனைவரும் அறிய இங்கு வரலாமே... இப்படிக் கள்வர் போல் வரக் காரணம்?"

"இந்தப் பூஜை அந்தரங்கமானது; யாரும் அறியாமல் புரிய வேண்டியது."

உதயசந்திரனின் உடனுக்குடனான பதில்களால் சாத்தன் சற்றே குழம்பிப் போகிறான்.

"உன் பேச்சும் விளக்கமும் நம்பக் கூடியதாய் இல்லை. நாளைய அவைதான் உங்கள் விளக்கத்தைப் பரிசீலித்து முடிவெடுத்தாக வேண்டும். அதுவரை நீங்கள் என் கைதிகள்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"சாத்தா- என்ன இது? நான் மாமன்னரின் முறைப் பெண்." நாகமாலினி வீறிட்டுப் பார்க்கிறாள்.

"யாராக இருந்தாலும் இந்தப் பாண்டிய மண்ணில் நீதிநெறிகள் பொதுவானவை... கள்வர்களைப் போலச் செயல்பட்டுள்ள உங்களை அவை முன் நிறுத்துவது என் கடமை."

"ஆம்- நாம் அதை அனுசரித்து நடப்பதே நமக்கு மாண்பு. அன்பரே, உமது விருப்பம் போல் நான் உங்கள் கைதியே-" -உதயசந்திரன் முன் வந்து விழுகிறான்.

அவனது பேச்சின் உட்பொருள் நாகமாலினிக்குப் புரிந்தும் புரியாமல் சண்டித்தனம் செய்கிறது.

மனசோ இவ்வேளையில் நாகாபரணி வந்து சிக்கிக் கொண்டுவிடக் கூடாதே என்று பிரார்த்தனை செய்ய ஆரம்பிக்கிறது.

ஏறத்தாழ உதயசந்திரனும் அதே மனநிலையோடு உடனடியாக அங்கிருந்து கிளம்ப ஆயத்தமாகிறான். தன் புரவி மீது தாவி ஏறிக் கொள்கிறான். நாகமாலினியும் வேறு வழியின்றிப் புரவி மேல் ஏறிச் சயனிக்க, சுற்றி வளைத்த பாண்டியர் புரவிப்படை இருவரையும் அழைத்துச் செல்லத் தொடங்குகிறது.

வைகைக் கரையோரமாய்த் திமுதிமுக்கும் தீப்பந்தங் களின் ஒளி வெள்ளத்தின் நடுவில் அவர்கள் ஆலவாய் நகர் நோக்கிச் செல்வதை மரத்தின்மேல் இருந்து பார்க்கும் நாகாபரணி, ஆழ்ந்த பெருமூச்சு விட்டு மரத்தை விட்டுக் கீழே இறங்குகிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உதயசந்திரனின் சமயோசிதத்தை எண்ணி நெகிழ்ந்து போகிறான். காலமாய்ப் பார்த்து அனுப்பி வைத்திருக்கும் இந்த வீர இளைஞன்தான் நமக்கு என்னமாய் உதவு கிறான்?

நினைக்க நினைக்கச் சிலிர்த்துப்போகும் அதே சமயம் கைதிகளாகிவிட்ட அவர்கள் நிலை என்னாகுமோ ஏதாகுமோ என்ற பதைப்பும் நாகாபரணியை ஆக்கிர மிக்கத் தொடங்குகிறது.

ஒவ்வொரு கட்டமாய் அகப்படுதல்களும் தப்பித்தல் களும் தொடர்ந்தாலும் எப்பொழுதும் அப்படியே நிகழ்ந்து விடுமா என்ன? நெஞ்சத்தில் பேதலிப்பு-

விடிந்தும் விடியாத அந்தக் காலைப் போதிலேயே நாகமாலினியின் செயல் பராந்தகனை எட்டி விடுகிறது.

தைல நீராடும் முனைப்பில் தன் நெடுஞ்சடை முழுக்க அந்த வாசனாதி திரவியம் மூலிகை வாசம் செழுமப் பூசிய நிலையில், புஷ்கரணியின் மாடம் அருகே குறுக்கும் நெடுக்கும் நடந்தபடியே யோசனையில் உழன்று கொண்டிருக்கிறது அந்த மாமன்னன் மனது.

அதில் முந்தின தினம் நிகழ்ந்த உரையாடல்கள் அனைத்தும் உலாப் போகின்றன.

இத்தனைக்கும் நடுவில் நாகமாலினி ஒரு புதிர் போல் தோற்றம் தருவதன் காரண காரியங்களை மனசு பிட்டுப் பிசைந்து பார்த்துக் கொண்டேயிருக்கிறது.

புஷ்கரணி நீரில் நீலோற்பல மலர்களின் வாசம் கலந்து மிதந்து வந்து, அந்த மாமன்னனின் நாசியைக் குடைந்து மனதைச் சாந்தப்படுத்தப் பார்க்கிறது. பட்டுத்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

துவட்டலுடன் பணிக் காப்பாளர்கள் நெடுந் தொலைவில் தெரிகிறார்கள்.

அந்தக் காலைப்போது இப்படி ஒரு சிக்கலுடன் தொடங்கும் என்று யாரும் எதிர்பார்த்திருக்காத நிலை...

சிறையிலோ உதயசந்திரன் துளியும் உற்பாதம் இன்றி உலாத்திக் கொண்டிருக்கிறான். சிறை அமைப்பை-வீரர்களின் காவல் லட்சணங்களை நுட்பமாய்க் கவனிக்கிறான்.

அருகிலேயே வேறொரு சிறைக்கூடத்தில் நாக மாலினி அடைக்கப்பட்டுப் பெரிதும் சோர்ந்து கிடக்கிறாள்.

நள்ளிரவில் ஆயிரம் எச்சரிக்கை உணர்ச்சிகள் இருந்தும் வெளியே புறப்பட்டு இப்படி அகப்பட்டுக் கொண்டுவிட்ட பாதகத்தை என்னவென்று சொல்ல...

மதியூகமற்ற செயலா? இல்லை. இதுதான் வினைப் பாடா?

பாண்டியர்களுக்குப் பருந்துப் பார்வை என்று தெரிந்தும் புரிந்தும்கூட இப்படியாகி விட்டதா... இந்தப் புலவனை நம்பி மோசம் போய்க் கொண்டிருக்கிறோமோ?

நாகமாலினிக்குள் ஆயிரம் எண்ணங்கள்... அதன் நிமித்த அலைபாயுதல்கள்!

மருகி மருகி மனது ஒரு குழப்பச் சமுத்திரமாகிவிட்ட நிலையில் அந்தச் சிறையின் கதவு திறக்கப்படும் அரவம்-மறுமுனையில் சாத்தன் கார்கோடன்!

அவனை முறைக்கிறது நாகமாலினியின் பார்வை!

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அவன் அதை லட்சியம் செய்யாமல் அவை மண்டபத்திற்கு அவளை அழைக்கிறான்.

"அவை கூட்டி விவாதிக்குமளவிற்கு நான் என்ன பெரிய குற்றம் புரிந்து விட்டேன்?"

-நாகமாலினியின் புலம்பலுக்குச் சாத்தனிடம் ஓர் இளக்காரப் புன்னகைதான் பதிலாகிறது.

அவை வழக்கம் போல் பிரதானிகளின் சங்கமத்தில் புத்துணர்ச்சியோடு சாணப்படுகிறது. அதே சமயம் அன்பிற்கினியவள் என்று கருதிய நாகமாலினியே அவைப் பொருளாகிவிட்ட விந்தையில் ஆச்சரியமாச்சரியங்களும் கொண்டிருக்கிறது.

உதயசந்திரனும் இழுத்து வரப்பட்டிருக்கிறான்.

கைகளில் காப்பு!

அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் பராந்தகனின் பார்வை அதைக் கண்டு, "புலவர்க்குக் காப்பிடுதல் புண்ணியமற்ற செயல்" என்று கூறியதன் நிமித்தம், காப்புகள் நீக்கப்பட்டு உதயசந்திரனை வியப்புக்குள்ளாக்குகிறான்.

அடுத்த கணமே உதயசந்திரன் சிரம் பராந்தகனைக் கூர்ந்து பார்த்து விட்டு வணங்கி நிமிர்கின்றது.

உள்மனம் அவன் புலவர்களுக்கு அளிக்கும் மதிப்பின் நிமித்தம் சற்று நெகிழவே செய்கிறது. அதன் பொருட்டே வணங்கியதாக எண்ணியும் கொள்கிறது.

"இந்த அவை முன் நீ நிறுத்தப்பட்டிருக்கும் நோக்கம் தெரியுமா?" பச்சைமால் தீர்த்தர் சிக்கலை சிக்கெடுக்கத் தொடங்குகிறார்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அறிவேன்- நள்ளிரவில் யாரும் அறியாத நிலையில் நாகமாலினி தேவியாருடன் நான் நாகர் ஆலயம் சென்றதற்காக..." உதயசந்திரனின் விளக்கம் அவையை அமைதிக்குள்ளாக்குகிறது.

"நாகபஞ்சமி என்றும் அந்தரங்க பூஜை என்றும் அதற்கு விளக்கம் தந்தாயாமே..?"

"ஆம்- அதிலென்ன சந்தேகம்?"

"சாஸ்திரப்படி நள்ளிரவில் பஞ்சமி திதி கழிந்து விடுகிறதே-"

"சரியாகச் சொன்னீர்கள். -கழியும் வேளையில்தான் அந்தப் பூஜையைச் செய்ய வேண்டும்."

"நாக மரபில் இப்படி ஒரு பூஜை பற்றி நான் கேள்விப் பட்டதேயில்லையே..."

"இது அபூர்வமான விஷயம். மண்டல மண்டலங்கள் தவமியற்றிப் பெரும் வரத்துக்கு இணையான விஷயம். ஒரு சந்நியாசி தன் திருஷ்டியில் அறிந்து என்னிடம் கூறிய ஒன்று. நள்ளிரவில் நாக தேவதையை இப்படி விசேஷமாக வழிபடுபவர்க்கு அவர்கள் கேட்டது கிட்டுமாம்."

"இதில் ரகசிய முயற்சி ஏன்?"

"மற்றவர்கள் அறிவதால் அந்தப் பூஜையின் பவித்ரம் குன்றிப் போய்விடும். அத்துடன் பூஜிப்பவர்களின் நோக்கம் குறித்துக் கேள்விகள் எழும். அது திருஷ்டிக்கு உள்ளாகும்..."

"ஆயின் அந்தப் பூஜை புரியக் காரணமான உங்கள் நோக்கம்..."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அருள் கூர்ந்து அதை நாகமாலினி தேவியாரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இம்மட்டில் நான் அவருக்குத் துணை புரிந்தவன் மட்டுமே-"

-தீர்த்தரின் பார்வையோடு அவையே நாக மாலினியைப் பார்க்கிறது. அவள் குன்றி நிற்பது தெரி கிறது. மார்பகங்களில் விம்மல் நடுக்கம் வேறு.

"நோக்கத்தை அறியலாமா?" - தீர்த்தர் சற்று உரக்கமாகவே கேட்கிறார். மதுரகவியார் நிமிர்ந்து அமர்ந்து அவள் கூற்றுக்குத் தன் செவிப்புலனைத் தயார்படுத்திக் கொள்கிறார்.

பராந்தகனிடமும் கூர்மை!

"மாமன்னரின் ஆசைகள் அனைத்தும் ஈடேற வேண்டும். குறிப்பாக, பல்லவனை நாம் வெற்றி கொண்டாக வேண்டும். பல்லாண்டாய் நிலவி வரும் அந்தப் பகையை முடித்தாக வேண்டும். இதன் நிமித்தங் களே நான் பூஜிக்கச் சென்றேன்."

"இதை இந்த அவை முன் சத்தியப் பிரமாணமாக்கித் தர முடியுமா?"

அரை மனதாய்த் தலை அசைகிறது நாக மாலினியிடம்.

அடுத்த கணமே இந்தப் பதிலை எதிர்பார்த்தது போலவும், பிரமாணம் நிச்சயம் தேவைப்படும் என்பது போலவும், அதன் நிமித்தத்தில் தயாராகக் கொண்டு வரப் பட்டிருந்த பூஜைக்குரிய ஸ்வர்ண நாக விக்கிரகம் ஒன்று அந்த அவையில் ஒரு பண்டிதரால் ஏந்தி வரப்படுகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அதைப் பார்த்த மறுவிநாடியே விக்கித்துப் போகத் தொடங்குகிறாள் நாகமாலினி.

தங்களது இஷ்ட தெய்வத்தின்மேல் சத்தியம் செய்து பிரமாணமா? தான் கூறியது தன் உள்ளக்கிடக்கை என்கின்ற போதும் அது சத்தியமில்லையே-

நாகாபரணியைச் சந்திக்க அல்லவா நாகர் ஆலயத்திற்குச் சென்றேன்-

இப்பொழுது என்ன செய்வது? பதைத்துப் பதறத் தொடங்குகிறது நாகமாலினியின் உள்ளம்.

உதயசந்திரன் முற்றிலும் அந்தப் பிரமாணத்தை அவை கோரியிருப்பதைச் சற்றும் எதிர்பார்த்திராத நிலையில் நாகமாலினியின் நிலை அறிந்து உடனடியாக அதைத் தவிர்க்க ஆயத்தமாகிறான்.

"இப்படி ஒரு பிரமாணத்தை இந்த அவை எதிர் பார்க்கும் என்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை" என்று குறுக்கிடுகிறான்.

"வேறு எப்படி எதிர்பார்த்தீர்?" - இது பராந்தகனே உதயசந்திரனைப் பார்த்துக் கேட்ட கேள்வி.

"நாகமாலினி தேவியார் மாமன்னரின் உறவினர், அத்துடன் அவர்தான் பல்லவனின் வேள்வியைப் பற்றி முன்பே அறிந்து அதைத் தடுக்க மாமன்னரையே அழைத்தும் சென்றவர். அடிப்படையில் பாண்டியர்களை விடவும் பல்லவனைப் பழி வாங்கும் வெறியில் கெங்கர்கள் ஒரு மாற்றுக் கூடுதலானவர்களும்கூட.... இந்நிலையில் அவர் கருத்தைச் சந்தேகித்து அதற்காகப் பிரமாணம் கோருவது இந்த அவைக்கு நாகரிகமான செயல் அல்ல..."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

“இயல்புக்கு மாறுபட்ட செயல்கள் வழக்குக்கு உட்பட்டுவிட்டால் அங்கு வெள்ளிடை மலையென நிமிர்ந்து நிற்க வேண்டும் நியாயம். நாகரிக அநாகரிகங் களைப் பற்றிய விளக்கங்களுக்கு இங்கே இடமில்லை.”

-கணீரென்று உட்புகுகிறது வல்லபன் கணபதியின் குரல்.

“இருக்கலாம்... சத்தியப் பிரமாணம் செய்துதான் தனது சித்த சுத்தியை இங்கு தேவியார் நிரூபிக்க வேண்டுமென்றால் அதற்கு அவர் பேசாமல் தான் ஒரு குற்றவாளி என்று பொய் கூறி, தண்டனை பெறுவது ஆயிரம் மடங்கு மேல் என்று நான் கருதுகிறேன்.”

உதயசந்திரனின் கருத்துதான் சரி. நாகமாலினி அதை இறுகப் பற்றிக் கொள்கிறாள்.

“நான் இந்த நாட்டுக்கு வந்திருக்கும் விருந்தினர். இதன் நலனிலும், மாமன்னன் மாண்பிலும் மாபெரும் அக்கறை கொண்டவள்; என்னைச் சந்தேகித்து இப்படிப் பிரமாணம் கோருவது அந்தப் புலவர் கூறியதுபோல அநாகரிகம். இதற்கு நான் ஆட்பட்டுப் பிரமாணமெடுத்து விடுதலை பெறுவதைவிட மறுத்துக் கொடுஞ்சிறையில் வெந்து மடிவதைப் பெரிதாய்க் கருதுகிறேன்.”

ஆவேசமாய்ப் பேசிவிட்டு அப்படியே மூர்ச்சித்தும் விழுகிறாள்.

அவையே அந்தப் பதிலால் அதிர்ந்து போகிறது.

என்ன செய்யப் போகிறான் பராந்தகன்?

கார்கோடன் பதற்றத்துடன் மாமன்னனைப் பார்க்க, அவன் பார்வை உதயசந்திரனையே ஊடுருவுகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அர்த்தபுஷ்டியுடன் ஒரு மென்னகை அந்த விநாடியில் பராந்தகன் உதட்டில் தொற்றிக் கொள்ள, "இருவரையும் விடுவியுங்கள்" என்று மட்டும் கூறிவிட்டு நிமிருகிறான் பராந்தகன்.

தீர்த்தர் அதைக் கேட்டுத் திடுக்கிடுகிறார்.

மாரிக்காலம் தொடங்கி விட்டதோ?

கிரிதிருமால் நதியில் புதிய மழை நீரின் பாய்ச்சல் தெரிகிறது. செம்பழுப்பு நிறத்தில் புரவிக் கணக்காய் ஓடிக்கொண்டிருக்கிறது அது.

இந்திரன் படித்துறையில் பட்டர் அழகர் நம்பி கூடல் அழகர் பெருமானின் திருமஞ்சனத்திற்கெனப் பொற்குடத்தில் நீர் முகந்த வண்ணம் தெரிகிறார். முகத்தில் சோபையிழைந்த தன்மை. உதட்டிலோ பாசுரப் பெருவெள்ளம்.

அழகர் நம்பியின் பொலிவிழந்த கோலம் அவரைக் குடைந்ததோ என்னவோ?

"ஏன் பட்டர்பிரான் சோபையிழந்து தெரிகிறார் எம்பெருமான் நாரணனின் திருக்காரியம் அவருக்குக் கசந்துவிட்டதோ?" என்று கேட்கிறார்.

அடியவர் கோஷ்டி அதைக் கேட்டு விதிர்க்கிறது. "நாவை அடக்கிப் பேசுமய்யா.. பட்டர் காதில் விழுந்து விடப் போகிறது" என்று எச்சரிக்கிறது.

அந்த முதியவரிடம் ஏளனச் சிரிப்பு!

"நீர் சிரிப்பதைப் பார்த்தால் இந்த மதுரைப் பட்டினத்தைச் சார்ந்தவர் இல்லை என்று நன்கு

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தெரிகிறது. ஆனால், நெற்றித் திருமண்ணும் பன்னிரு காப்புகளும் தேவரீர் ஒரு வைணவ சிகாமணி என்பதைப் பறைசாற்றுகின்றன. இந்தப் பாண்டிய நாட்டிலேயே மதுரையை விட்டால் தெற்கில் திருவில்லியும் வட கிழக்கில் திருவரங்கமும்தான் வைணவக் கலை வாழும் இடங்கள். தாங்கள் இதில் எந்த ஊரைச் சேர்ந்தவர்?"

கோஷ்டியின் கேள்விக்கு எதைப் பதிலாகச் சொல்ல.. மீண்டும் அந்தப் பெரியவரிடம் சிரிப்பு.

"இப்படிச் சிரித்தால் எப்படி?"

-பாசுரம் பாடியபடி கோஷ்டி, நடையிடத் தொடங்க பட்டர் அழகர் நம்பி திருமஞ்சன தீர்த்தமுடன் யானைமேல் ஏறி அமர, மதுரை நகர வீதிகளில் நடையிடத் தொடங்கும் அந்தக் காலை வேளையில் அந்த முதியவரை, கோஷ்டி, கேள்விகளால் வளைக்கத் தொடங்கினாலும் அவரிடம் களைப்போ சலிப்போ தெரியவேயில்லை.

அனைத்திற்கும் ஒரு சிரிப்பே பதிலாகி வருகிறது அவரிடம்..

"சிரிக்கும்படியாக எதைக் கேட்டுவிட்டோம்?"

"இந்தப் பிரபஞ்சம் அந்த நாரணன் சொத்து தானே? இதில் திருவில்லியும், திருவரங்கமும் மட்டுமே அவன் வாழும் இடமென்று தாங்கள் கருதுவதைக் கேட்டு எப்படிச் சிரிக்காமல் இருப்பது?"

"நாங்கள் அப்படிக் கூறவில்லை. இங்கேதான் அவன் குடிகொண்டிருக்கும் பூஜைக்குரிய ஆலயம் உள்ளது. அவன் தன் இன்னருளை வழங்கிடும் கருவறை உள்ளது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அவனது அடியவர் குழாமும் அந்த ஆலயம் சார்ந்து உள்ளது என்றோம்."

முதியவர் அதைக் கேட்டுத் தன் வெண்ணிறத் தாடியை நீவி மீண்டும் மென்னகை வயப்படுகிறார்.

"நகைப்பதோடு தாங்கள் யாரென்றும் கூறலாமே?"

"கூறுவேன்- வேளை வரும்பேது கூறுவேன்" என்று அந்த முதியவர் பூடகமாய்ப பேசுவது கேட்டு, கோஷ்டி சற்றே சலனம் கொள்கிறது. இவர் யாராய் இருக்கும்? ஆலய வாசலில் உள்ளே திருச்சந்நிதி முன் கூடி நிற்கும் வரை அந்த முதியவரும் மென்னகை ததும்ப உடன் வந்தார்.

திடுமென்று மத்தள முரசங்களின் முழக்கம்... துந்துபியின் பீறிட்ட ஓசை!

"மகாராஜா வருகிறார்... மகாராஜா வருகிறார்..." என்கிற கூக்குரல்கள் வேறு!

"யாரது- பராந்தகனா இங்கு வரப்போவது?"

முதியவர் ஏக உரிமையுடன் வினவுகிறார்.

"என்ன ஆச்சரியம், மாமன்னர் பெயரையே உச்சரிக் கிறதே இந்தக் கிழம். யாராக இருக்கும் இது?" கோஷ்டி யிடம் ஆச்சரிய வியாபிப்பு.

"பொறுத்திருந்து பார்ப்போம்-" கோஷ்டி அமர்ந்த கோலத்து நாயகனைக் கண்டு பக்தி செய்வதை விடவும், அந்த முதியவரைப் பார்த்து அவரது செயல்பாட்டிற்கு அர்த்தம் சேமிப்பதிலேயே குறியாக இருக்கிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பராந்தகனும் கட்டியக் குரல்களுக்கு நடுவே பட்டுக் குடை நிழலில் வீர நடை போட்டுத் திருச்சந்நிதி வந்து சேர்ந்துவிடுகிறான். உடன் மதுரகவியாரிலிருந்து சாத்தன் கார்கோடன் வரை சகலரும்-

சேர்ந்தவன் கூடல் அழகனை வணங்கிய கையோடு அடியவர் கூட்டத்தையும் பார்த்து வணங்கிட, அந்த முதியவர் பராந்தகனை அர்த்தபுஷ்டியுடன் பார்த்து நகைக்கத் தொடங்குகிறார்.

பராந்தகனை ஒட்டி உடன் நிற்கும் சாத்தன் கார் கோடனையும் பார்த்துச் சிரிக்கிறார்.

சந்நிதிக் கருவறையிலோ திருமஞ்சனத்தின் தொடக்கம். பெரியவரோ நகைத்துக் கொண்டேயிருக் கிறார். ஒரு எல்லை வரை பொறுத்த சாத்தன், அவரை அணுகி முறைக்கத் தொடங்கினான். முறைக்கத் தொடங்கிய மறுவிநாடியே சித்தம் கலங்கிச் சூன்யமான மனநிலையை எட்டியவன் போல் தன்னையும் தன் பெயரையும் மறந்தவனாக மௌனிக்கத் தொடங்கினான்.

சாத்தனின் அந்த மௌனம் மதுரகவியாரைச் சஞ்சலப்படுத்தவே அவன் தோளைப் பற்றி, "சாத்தா" என்று மெலிதாக அழைத்துப் பார்த்தார். அவனிடம் எந்தப் பதிலும் இல்லாமல் போகவே, எச்சரிக்கையுடன் பராந்தகனை நெருங்கி, "மன்னவரே.." என்று பணிவாக அழைத்தார். பராந்தகனும் இயைந்து கொடுக்கிறான்.

"நமது சாத்தன் மாந்திரீக வயப்பட்டது போல தெரிகிறான். அனைத்துக்கும் காரணம் அவன் அருகில் நிற்கும் ஒரு கிழட்டு மனிதர் என்று அறிகிறேன். அவரிடம் ஏதோ சூது இருப்பதாய் உணருகிறேன்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அடுத்த விநாடியே பராந்தகனின் விழியிரண்டும் விரிந்து அந்த முதியவரை ஆட்கொள்கிறது. அவரது வதனமோ நகைத்துக் கொண்டே இருக்கிறது.

பராந்தகன் அவரை ஆழ்ந்து நோக்கிக் கை எடுத்து மார்பு நிமிர்த்தி வணங்கினான். அதைக் கண்டு அந்த முதியவர் சற்று மிரண்டது போலானார்.

"தேவரீர் திருவடிகளுக்கு இந்தப் பாண்டியாதி பதியின் பணிவான வணக்கங்கள். தங்களைப் பார்த்தால் பழுத்த ஒரு ஞானியைப்பார்ப்பது போல் ஒரு பிரமை ஏற்படுகிறது. தாங்கள் யாரென்று அடியேன் அறிய லாமா?"

பராந்தகனின் வினாவைத் தொடர்ந்து அந்த முதியவர் விக்கித்துப் போகிறார்.

"இந்தப் பாண்டிய தேசத்தில் ஒருவரும் என்னை வணங்கவில்லை; வெறித்தனர்; விதிர்த்தனர்; நகைத்தனர். ஆனால், பேரரசன் நீயோ உன் மாண்பிற்கு மாண்பு சேரும் விதமாய்த் துளியும் கர்வமின்றி என்னை வணங்கினாய்- பரிவாக என்னை அறியவும் முனைந்தாய்-

"பராந்தகனே... வைணவத்தின் தனிச் சிறப்பே செருக்கறுத்தலும் சிரம் பணிதலுமே- உன்னிடம் அதை இன்று காண்கிறேன். வாழ்க உன் மாண்பு!

நானொரு பைராகி! எனது பெயர் நற்கொற்றன். ஸ்ரீ ஸ்ரீ நரசிம்ம உபாசகன்!"

"அடியேன் பாக்கியசாலி! ஸ்ரீமந் நாராயணனின் தனிப் பெரும் சொரூபம் நரசிங்க ரூபம்-அதையே

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உபாசிக்கும் தாங்கள் அவனது பேரருள் பெற்றவர் என்பதில் ஐயமில்லை. தங்களது திவ்ய தேசம் எதுவோ?"

"சோழ வளநாட்டின் சோதிடச் சிறப்புக்குப் பெரும் பெயர் வடுவூர்வாசி நான். எனது ஆத்ம நிவேதனத் துக்குரிய நரசிம்ம மூர்த்திக்கொரு கருவறை தேடி யாத்திரை மேற்கொண்டேன். இன்று உன் எதிர் நிற்கின்றேன்."

"அந்தச் சிம்ம சொரூபிக்குக் கருவறையா...? இந்த உலகே அவனது கருவறைதானே...!"

"அது உன் சித்தாந்த சிந்தை கூறும் ஒரு சத்தியம். ஆயினும் வேதாந்த பரிமாணம் வேறு விதமானது. பசுவின் திருமேனி முழுக்க அதன் பாலின் சஞ்சாரம் இல்லாமல் இல்லை. ஆயினும் அது வெளிப்பட மடி என்று ஒன்று வேண்டுமல்லவா? அதுபோலத்தான் மூர்த்திகளின் கீர்த்தி வெளிப்பட ஆலயமும் உபாசிப்புகளும் உலகில் நடந்த வண்ணம் உள்ளன."

"நல்லது- இந்தப் பராந்தகன் தங்களுக்கு அம்மட்டில் என்ன செய்ய இயலும்?"

"பேரரசனே... நீ சாமான்யன் இல்லை. சைவ சித்தாந்தம் துள்ளி விளையாடிய இம்மண்ணில் வைணவ நெறிக்கு வாசல் திறந்தவனே நீ ஒருவன்தான். இதுவும்கூட அந்த நாரணனின் திருவுள்ளமே.

சைவ - வைணவ பேதம் மிகுந்த நிலையில் உன்னால் வைணவ நெறி இந்தப் பாண்டி நாட்டில் காலாகாலத் துக்கும் பேர் சொல்லும் விதமாக நின்றாக வேண்டும்.

வருங்காலம் இரண்டின் பேதத்தையும் நீக்கி அரியையும் சிவனையும் ஒன்றாயறிந்து உய்வு பெற்றிட நீ

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இந்த மண்ணில் வைணவ நெறி விதைகளைத் தூவியாக வேண்டும்.

இந்தப் பைராகி கூறுகிறேன். எனது ஆத்ம நிவேதனத்துக்குரிய நரசிங்கமூர்த்திக்கொரு ஆலயம் எழுப்பித் தருவாய். பதிலாக நானுனக்கு நீ கோரும் வரத்தைத் தருவேன். இந்தப் பைராகி வாக்கு பொய்க்கவே பொய்க்காது."

அந்த முதிய பைராகியின் பேச்சால் பராந்தகன் ஆழ்ந்த யோசனை வயப்பட்ட அந்த நிமிடத்தில் உதய சந்திரனும் திட்டமிட்டு அங்கு வந்து சேர்ந்திருந்தான். கூடல் அழகரைத் தரிசிக்கும் ஆவலுடன் வந்தவன் நடப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனான்.

பைராகிகளை பற்றி நன்கு அறிந்திருந்த அவன் உள்ளம், அவர்களின் வாக்கு பலித்துவிடும் சத்தியத்தையும் உணர்ந்தே வைத்திருந்ததால் மெல்ல நடுங்க ஆரம்பித்தது. எங்கே பராந்தகன், பல்லவனை வெற்றி கொள்ளும் செயலுக்குப் பைராகியிடம் ஆசி கோருவானோ என்று அஞ்சும்போது, பட்டர் அழகர்நம்பி திருமஞ்சனம் முடித்துத் திரைச்சீலை அகற்றிக் கூடல் அழகனின் திவ்ய சொரூபம் முன் தீபாராதனை காட்டத் தொடங்கி யிருந்தார்.

அனைவரும் கூடல் அழகனின் தரிசனத்தில் ஆழ்ந்து மெய்ம்மறந்த வேளை... பைராகியும் இமை மூடித் தியானிக்கத் தொடங்கினார்!

'இதுதான் தருணம்' என்று அப்பொழுது ஒரு அம்பு பெரும் வேகத்துடன் எங்கிருந்தோ வந்து அந்தப்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பைராகியின் திருமண் காப்பிட்ட மார்பில் ஆழப் புதைந்து அவரை அலறவிட்டது!

"நரசிங்கமே.. நாராயணா.."-அலறினார் பைராகி.

# 12

மார்பில் அம்பு பாயத் துடிதுடித்து விழத் தொடங்கிய அந்த பைராகியைத் தாங்கிப்பிடிக்கிறான் பராந்தகன்.

கார்கோடனும் வல்லவன் கணபதியுமோ சுற்றுச் சூழலைப் பார்த்து அம்பெய்தவன் யாராயிருக்கும் என்பதைக் கண்டறிவதில் துடிப்பாய் இருக்கின்றனர்.

ஆலயத் தூண்கள் அம்பெய்தவன் ஒளிந்து கொள்ள மிக வசதியாக அடுத்தடுத்து தெரிய, வைணவ கோஷ்டியும் பக்தர் குழாமும் நடந்த அநீதியான செயலைப் பார்த்து அதிர்ந்து போய் நிற்கின்றன.

பராந்தகனின் மடிமேல் விழுந்த பைராகி தானே தைத்த அந்த அம்பைப் பிடுங்க எத்தனிக்கிறார்.

"பெரியீர், வேண்டாம் இந்த விபரீதச் செயல்! சற்றுப் பொறும், வைத்தியர் வந்திடுவார்." என்று கூறும் முன்பே அரண்மனை வைத்தியர் வந்து சேருகிறார்.

"பராந்தகா.. கவலை கொள்ளாதே! என் உயிர் என்று எப்பொழுது, எப்படிப் பிரியும் என்பதை நான் நன் கறிவேன். என்னை உடனடியாக அரண்மனைக்குக் கொண்டு செல். என்மேல் அம்பெறிந்தது யார் என்பதை நான் திருஷ்டியில் கண்டறிந்து விடுவேன் என்பது மட்டும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உறுதி. நீ இந்த விநாடியே பல்லவனை எதிர்க்க ஆயத்த மாகி விடு... தாமதித்தால்... தாமதித்தால்..." பைராகி அம்பைப் பிடுங்கி எடுத்த நிலையில் ஏக பொருள்படப் பேசிவிட்டு மயங்கிச் சாய்கிறார்.

'எல்லாமே விசித்திரமாய் இருக்கிறது. யார் இந்த பைராகி? வந்தார்-சிரித்துக் கொண்டே இருந்தார்-இப்பொழுது பல்லவனை எதிர்க்க ஆயத்தமாகு' என்று ஆணையை விடுத்துவிட்டு மயக்கமாகி விட்டார்!

இவரை மறைந்து நின்று தாக்கவும் ஒருவன்.

அவன் குறிவைத்தது இவருக்குத்தானா?

இல்லை, வேறு யாருக்காவதா?'

- குழுமி நிற்பவர்களிடம் வினாக்களின் சரவரிசை-பராந்தகனுக்குள்ளும் இதுபோன்ற வினாக்கள் இல்லாது போகுமா என்ன?

ஆயினும், அது குறித்து விடை தேடுவதையும்விட பைராகியைக் காப்பதுதானே தற்போது முழுமுதற் செயல்.

அதற்கான ஆயத்தங்களில் முதலுதவி செய்யப் பெற்ற பைராகியின் திருமேனியைப் பல்லக்கு ஒன்று சுமந்து கொண்டு அரண்மனை நோக்கி ஓடத் தொடங்குகிறது.

ஆலயத்தில் அனைவர் அறிய நடந்த விஷயம் ஆகையால் ஆலவாய்ப் பட்டினம் முழுக்க அதன் பரவலும் ஆரம்பமாகிறது.

நடந்து முடிந்த விபரீதங்களைப் பார்த்து விதிர்த்து நிற்கிறான் உதயசந்திரன்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

'யார் அது பெரியவர்? எதற்காகப் பல்லவனைத் தாக்க ஆயத்தமாகு...' என்று முனைப்போடு கூற வேண் டும்? அதனினும் கொடுமையாக இருக்கிறதே அவர் தாக்கப்பட்ட செயல். தாக்கியது யார்?

ஒவ்வொரு மனத்துள்ளும் இதுதான் கேள்வி. அம்பு பட்டு ஒழுகிய குருதி ஆலயச் சந்நிதி முன் சிந்திக் கிடக்க, அதைப் பார்த்த பட்டர் அழகர் நம்பி முகம் சுண்டிச் சுருங்குகிறது.

"பேரரசே! இனி எம்பெருமாளுக்குப் பூஜைகளோ திருமஞ்சனங்களோ பெரிதல்ல. ஆலயம் அசுத்தமாகி விட்டது. இதைத் தூய்மைப்படுத்திய பிறகே மற்ற செயல்கள்..."

"அவ்வாறே ஆகட்டும்!" - பராந்தகன் அதை ஆமோதித்துவிட்டு அங்கிருந்து புறப்பட ஆயத்தமாகு முன் தீர்த்தரைப் பார்க்கிறான்.

"எதுவாயினும் ஆலோசனை மண்டபத்தில் பேசிக் கொள்ளவதே உசிதம்" என்கிற தொனி மிக்க பார்வை அவரிடம்.

அம்பெய்தவனை நாடி ஓடிய வல்லவனும் கார் கோடனும் என்ன ஆனார்கள் என்பது தெரியாத நிலை.

"வேந்தே! மேற்குப்புறம் இருந்தே வந்தது அந்த அம்பு. எய்தவன் உடனேயே பிராகாரக் கூரையின் மேல் ஓடித் தப்பிக்க பல மார்க்கங்கள் இருக்கின்றன."

"ஆனாலும் துணிச்சல்தான். மாமன்னர் இருக்கை யிலேயே இப்படி நடந்தால் இல்லாதபோது எதுவும் நடக்குமோ?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"ஆலயம் பொதுவிடம் என்கிற பாகுபாடு அற்றுப் போய்விட்டது. பாண்டிய ராஜ்ஜியத்தில் துரோகிகள் பெருகி வருவதை இது ஊர்ஜிதம் செய்கிறது"

நுட்பமாக உளவுப்படை நம்மிடம் இல்லாத குறை."

"எதிர்பாராத விளைவுகளுக்கு யார் என்ன செய்து விட முடியும்? சாவடிக் காப்பாளர்கள், அந்நிய புருஷர்கள் ஆலவாய் நகர் வரும்போது கண்காணித்து அனுப்புதல் நலம்."

பலரும் பலவிதமாய்ப் பேசிக் கொள்ள, உதய சந்திரன் மட்டும் மிக இறுக்கமாய்த் தெரிகிறான். அவன் அங்கு வந்ததையும் அதுபோல் நிற்பதையும் தீர்த்தரும் பார்க்காமல் இல்லை. அவர் முகத்தில் அந்தச் சூழ்நிலையிலும் ஒரு இனம் புரியாத புன்னகையின் வியாபிப்பு!

பாண்டிய அரண்மனையின் விருந்தினர் கோட்டத்தில் பச்சிலைக் கட்டப்பட்ட நிலையில் சயன நிலையில் இருக்கிறார் அந்த பைராகி. அருகிலேயே அரண்மனை வைத்தியர் தனந்த சித்தர்.

பராந்தகன், தீர்த்தர் சகிதம் அவர் முன் வந்து சேர்கிறான்.

"நன்றி வேந்தனே- இந்த கிழத்தின் ஜீவஹிம்சையைப் போக்கியமைக்கு என் மனமார்ந்த நன்றிகள்." என்றார் பைராகி.

"நல்லது... தங்கட்கு நேர்ந்த விபரீதத்திற்காக மிக வருந்துகிறேன். அதே சமயம் ஏன் இப்படி நேர்ந்தது என்ற வினாவையும் புறந் தள்ள முடியவில்லை. தாங்கள்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கூடப் பல்லவனை வெற்றி கொள்ள இன்றே ஆயத்தமாகு என்று கூறித்தான் மயங்கிச் சாய்ந்தீர். உண்மையில் தாங்கள் யார்?"

பராந்தகனின் வினா அந்த பைராகியை முதலில் நகைக்கத்தான் விட்டது. நகைப்பா அது? ஆழ்ந்த யோசனைகள் ஆயிரம் முகிழ்க்கும் அர்த்தபுஷ்டிச் சிரிப்பு அது.

"என்னை யார் என்று கேட்டறிவதை விட்டு விடு. நான் ஒரு பைராகி. என் ஞானதிருஷ்டியில் நான் இப்பொழுது உனக்கொரு முக்கிய சேதி கூறப் போகிறேன்.

வரும் பௌர்ணமியன்று மஹா சுதர்ஸன வேள்வி முடித்து நீ பல்லவனை வெற்றி கொள்ளக் கிளம்பினால் நிச்சயமாய் வெற்றி உனக்கே..."

"இல்லாவிட்டால்?"

"வெற்றிக்கனியைப் பறிக்க பல்லவன் பரிகார பூஜைகளில் மூழ்கிவிட்டான். பூஜை பலன்களைவிடப் பரிகார பலன்கள் வலுவானவை."

"இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் யார்?"

"திரும்பவும் கூறுகிறேன், என்னை அறிய முயலுவதைக் கைவிடு."

"அறியாத நபர் கூறுவதைச் செயல்படுத்த நினைப்பது மட்டும் செம்மையான செயலோ?"

"நான்தான் ஒரு பைராகி என்று கூறினேனே..."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"பைராகி என்றால்..."

"மந்திர தந்திரங்களில் வித்தகர்களை பைராகி என்பார்கள்."

"நீங்கள் வித்தகராயிருக்க உங்களை ஒருவன் வீழ்த்தப் பார்த்தது எதனால்?"

"நான் உனக்கு உதவி செய்துவிடக் கூடாது என்பதனால்."

"உங்கள் உதவி இல்லாவிட்டால் இந்தப் பராந்தகன் தோற்றுப் போய்விடுவானா என்ன?"

"நிச்சயமாக... நந்திப் பல்லவன் இன்று தன்னை நம்புவதைவிட அதிகம் கால நேரங்களையும் நவநாயகர் களையும் பெரிதும் நம்புகின்றான்."

"நான் அந்த நாரணனை மட்டுமே நம்புகின்றவன். அவனைவிட எதுவும் பெரிதில்லை; எவரும் பெரிதில்லை."

"இருக்கலாம். ஆனால், நாரணனும் நவநாயகர் களைக் கொண்டே நமக்கு இன்ப துன்பம் தருகின்றார் என்பதை மறந்துவிடாதே..."

"அந்த விளக்கங்களை விட்டுத் தள்ளுங்கள். தங்களைக் கொல்ல முயன்றவனைத் திருஷ்டியில் அறிய முடியும் என்று கூறினீர்கள். அவன் யார்?" பைராகி கண்களை மூடித் தியானித்து விட்டு...

"அவன் ஒரு பல்லவன்..." என்கிறார்.

"அவனைப் பிடிக்க வேண்டும்."

"பிடித்து விட்டார்கள் உனது மெய்க் காவலர்கள்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"எனது காவல் வீரர்கள் பிடித்து விட்டார்களா?"

"ஆமாம்... ஆவலாய் நகரே காணுமாறு அவனைப் பற்றி இழுத்துக் கொண்டு வந்தது கொண்டிருக்கிறார்கள்."

"நிஜமாகவா?"

"ஆம்... உனது அரண்மனையின் தென்கோடி மாடத்தின் மேல் நின்று வடம் போக்கி வீதியைப் பார். அவர்கள் வந்து கொண்டிருப்பது தெரியும்."

பராந்தகனின் கால்கள் உடனேயே விரைகின்றன. வடம் போக்கி வீதியே நின்று வேடிக்கை பார்க்க, அம்பெறிந்தவனைச் சங்கிலிகளால் கட்டிப் பிணைத்து இழுத்து வருகின்றனர் வல்லவன் கணபதியும், சாத்தன் கார்கோடனும்.

புலியைக் கட்டி இழுத்து வருவதுபோல் இழுத்து வர வேண்டியுள்ளது.

மாடங்கள் மிகுந்த வீட்டில் எல்லாம் அதன் வழியே நின்று செல்வந்தர்கள் உற்று நோக்க, பல நோக்கங் களுக்காகப் பயணம் மேற்கொண்டிருக்கும் சீமான்கள் தங்கள் பல்லக்கின் திரைச்சீலையை விலக்கிப் பார்க்க, புரவியேற்றம் பழகும் விடலைகள் புரவியை இறுகப் பற்றியபடி ஓர் ஓரமாய் ஒதுங்கிப் புலி போல் நடந்து வரும் அந்த அம்பெய்த கைதியைப் பார்த்து செரும, வீட்டின் முகப்பையே மறைத்தபடி வளர்ந்து நிற்கும் செம்பருத்திப் பூச்செடிகளையும், பிச்சிக் கொடிகளையும் ஒதுக்கிப் பாண்டியப் பெண்டிர்கள் வியந்து நோக்க... பராந்தகனும் அரண்மனை மாடத்தில் நின்றபடி அவர்களைப் பார்க் கிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"சாந்தனும் வல்லபனும் இம்முறை ஏமாறவில்லை. தங்கள் வல்லாண்மையை நிரூபித்து விட்டனர்" என்ற கருத்தோடு வந்து சேர்ந்து கொள்கிறார் தீர்த்தர்.

"ஆம்... ஆனால், அந்த பைராகியைத்தான் புரிந்து கொள்ளவே முடியவில்லை."

"பொறு பராந்தகா! அகப்பட்டவனை விசாரித்தால் அனைத்தும் தெரிந்து விடுமல்லவா?"

"யார் நீ?" பராந்தகன் முன்னிலையில் மதுரகவியார் கேட்க, அவன் நிமிருகிறான்.

ஆறடி உயரம். கறுத்த சரீரம், மார்பு நிறைய கேசம். மதர்த்த மீசை, கூரிய விழிகள், தலையில் பாகை: பாகைக்குள் பல்லவ இலச்சினை...

"பார்த்தாலே தெரியவில்லையா? நான் ஒரு பல்லவ புருஷன்..."

"பைராகியை ஏன் தாக்கினாய்?"

"அவரைக் கொல்லச் சொல்லி ராஜ கட்டளை. அதன் நிமித்தம் அவ்வாறு செய்தேன்."

"அவரைக் கொல்வதால் ஆவதென்ன?"

"அவர் யாரிடம் துணை சேர்கிறாரோ அவர்கள் பலம் பெற்று விடுவார்கள்..."

"அவர் பாண்டியனுக்கு உதவப் போவது பல்லவனுக்கு எப்படித் தெரியும்?"

"அதெல்லாம் ராஜாங்க ரகசியங்கள்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இதற்கு மேல் எதையும் கேட்கத் தேவையில்லை என்கிற சமிக்ஞை தீர்த்தரிடம் இருந்து வருகிறது.

அந்தக் கைதியைச் சிறைக்கோட்டம் நோக்கி அனுப்பிவிட்டு ஆயாசத்துடன் திரும்பும் தீர்த்தர், பராந்தகனை அர்த்தபுஷ்டியுடன் பார்க்கிறார். ஆயிரம் அர்த்தங்கள் கொப்புளிக்கும் அற்புதப் பார்வை அது.

"தீர்த்தரே! என்ன பார்வை இது- என்னால் புரிய முடியாத பார்வையாய்..."

தீர்த்தர் அதைக் கேட்டுச் சிரிக்கிறார்.

"சிரிப்பதால் ஆவதென்ன- நினைப்பதைக் கூறும்..."

"அது சரி, பைராகி எப்படி இருக்கிறார்?"

"ஆரோக்கியமாய் அனந்த சயனததில்..."

"எதை வைத்துக் கூறுகிறீர்கள்?"

"அவர் கூறுவதைக் கேட்போம். பிறகு நீயே ஒப்புக் கொள்வாய்."

"பிரம்மதத்துவம் போல் புதிராகத் தெரிகிறார் அந்தக் கிழவர். ஆராயாமல் ஏற்க தயக்கமாய் இருக்கிறது."

"ஏன் ஆராயாமல் ஏற்க வேண்டும். எதையும் ஆய்ந்தே ஏற்கலாம். அவர் கூறுவதையும் ஆய்ந்து பார்த்து விட்டால் போயிற்று.

"வரும் பௌர்ணமியன்று நான் மகா சுதர்ஸன வேள்வி முடித்துப் பல்லவனை எதிர்க்க ஆயத்தமானால் வெற்றி எனக்குத்தானாம்" என்றான் பராந்தகன் வியப்புடன்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"போர் கொள்ள ஆயத்தமாவது அத்தனை சுலபமா என்ன?"

"அனைத்திற்கும் விடையை அவரிடம்தான் கேட்க வேண்டும்."

"கேட்டுவிட்டே ஒரு முடிவிற்கு வருவோம். ஆமாம், இந்தக் களேபரத்துக்கு நடுவிலே நீ முன்பு தப்பிய அந்தக் கைதியை மறக்கவில்லைதானே?"

"இதென்ன விசித்திரமான கேள்வி?"

"விசித்திரமில்லை பராந்தகா- அரசியலார் வாழ்வில் எப்பொழுதுமே அடுக்கடுக்காய் உற்பாதங்கள். இதில் ஒன்று சமயங்களில் மற்றொன்றை மறக்கச் செய்துவிடும்- அதனால் கேட்டேன்."

"தீர்த்தரே! எந்த அளவுக்கு நீங்கள் ஆழமும் அகலமு மானவரோ அதற்கு நான் துளியும் சளையாதவன்! என் கவனமும் எட்டுத் திக்கும் செல்லும். எது எதன் பொருட்டு... எதனால் அசைகிறது என்பதை நானும் சரியாகவே கணித்து வருகிறேன். ஆகையால் என்னிடம் பூடகமாய்ப் பேசத் தேவையில்லை."

"உன் தன்னுணர்ச்சிக்கு என் பாராட்டுகள் பாராந்தகா! ஆனால், சில கணக்குகளை அனுபவஸ்தர் களால் மட்டுமே போட இயலும். இன்றுகூட நான் ஒரு கணக்கு போட்டுள்ளேன். இதனை வகுத்துப் பார்த்தால் மீதம் ஒன்றுமேயில்லை."

"எனக்கும் அதே விடைதான்."

"அந்தக் கணக்கைச் சொல்லேன் பார்ப்போம்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"சிறந்த அனுபவஸ்தரான நீங்களே முதலில் கூறுங்களேன்"

"எதற்கு?"

"கணக்கு நிரூபணமாகவே போட்டுக் காட்டி விடுகிறேனே..."

- பராந்தகன் ஆமோதிப்பாய்ச் சிரிக்கிறான். மதுர கவியார் மட்டும் பலத்த மௌனம் சாதிக்கிறார்.

"மந்திரியாரின் மௌனம் எதன் பொருட்டோ?"

"என்னை மன்னிக்க வேண்டும் அரசே.. தங்களின் அறிவு பலத்தையும் அனுமானத்தையும் சோதித்துப் பார்க்க இது உகந்த வேளையல்ல. கணக்கில் பிழை வராதவரை பாதகமில்லை. வந்துவிட்டால் அதன் பாதிப்புகள் உங்கள் இருவரை மட்டும் அல்லாது இந்தப் பாண்டிய தேசத்தையே பாதிக்குமோ என்று அஞ்சுகிறேன்."

"எப்படி?"

"பைராகி தம்மை ஒளித்துக் கொண்டு நமக்கு உதவ முன்வந்திருப்பதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது... அவர் அத்தனை நல்லவராய் எனக்குத் தெரியவில்லை."

"ஏன் அப்படி?"

"அதைச் சொல்லத் தெரியவில்லை. பல்லவனை நோக்கி நம்மைத் தவறாக அவர் செலுத்த நாம் இடம் கொடுத்துவிடக்கூடாது. வரும் பௌர்ணமியன்று நாம் ஆயத்தமாக ஜாதக பலன்கள் உதவுகின்றனவா என்று பார்க்க வேண்டும்"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"யாரைக் கொண்டு?"

"நானறிந்தவரை நமது கூடலழகர் ஆலயத்துப் பட்டர் அழகர் நம்பியேகூட மிகத் திறமையாய் ஜாதக பலன்களைச் சொல்பவர்."

"நிஜமாகவா?"

"ஆம்- அவர் ஜாதக சாஸ்திர விற்பன்னர். ஆயினும் எவருக்கும் அதன் பலாபலன்களைக் கூறித் தம்மை ஒரு சோதிடராய்ப் பிறர் புகழ இடம் கொடாதவர்."

"அதற்குக் காரணம்?"

"அந்த நாராயணன் திருவடியைத் தொழுது வாழும் காலநேரத்தை அவர் வேறு எதற்கும் செலவழிக்கத் தயாரில்லை, ஆயினும் ராஜாங்க நலன் நிமித்தம் அவர் தம் முடிவை மாற்றிக் கொண்டு நமக்கு உதவலாம் என்பது என் எண்ணம்."

"பட்டர் இத்தனை பெரிய மேதையா- மதுரகவியார் இதனை என்னிடம் தெரிவித்ததில்லையே- யாரங்கே-?"

-பராந்தகன் வியப்புடன் விளிக்கிறான்; பறந்து வந்து நிற்கிறது சேவகர் கூட்டம்.

"பட்டர் அழகர் நம்பியைத் தகுந்த மரியாதையுடன் நான் காண அழைத்து வாருங்கள்."

தீர்த்தரும், மதுரகவியாரும் அதைக் கேட்டு ஒருவரை ஒருவர் பார்த்து மௌனிக்க, கூட்டத்திடம் அதற்கான ஆயத்தம்.

மாடங்களில் உலா வந்து கொண்டிருக்கிறது மாலைத் தென்றல் அருகாமை வனத்து மலர்களின் வாசச்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தலைவையைச் சுமந்து கொண்டு அது இலகுவாய் வீசும் போது இளகாத மனமும் இருக்க வாய்ப்பே இல்லை.

மேற்குச் சூரியனைப் பொன்மேகக் கூட்டம் பொத்தி மூடியதால் எங்கும் இதம் பதமான வெளிச்ச நிலை. புள்ளினங்களுக்குப் பிடித்த கால நிலை. யாரும் கற்பிக்காமலே அவை அணிவகுத்துப் பறந்தபடி ஆலவாய் நகரைப் பார்த்து வலம் வருகின்றன. கதலிவனத்துக் கிளிக்கூட்டம் வேறு.

அரண்மனையின் அந்தப்புரத்து மூன்றாம் மாடத்தின் உச்சியில் ஊஞ்சலில் சாய்ந்தவாறு இவற்றைப் பார்த்தால் இரும்பும்கூட இளகிப் போகும்.

ஆனால், நாகமாலினி ஊதுலை போல் உள்ளம் கொந்தளித்துக் கிடக்கிறாள். அவளுக்குச் சமாதானம் கூறப் பார்த்து முடியாது போய் ஓய்ந்து கிடக்கிறாள் தோழி கோமளம்.

உதயசந்திரன் அவளுக்குள் அனல் மூட்டிக் கனலைப் பாய்ச்சிக் கொண்டேயிருக்கிறான்.

"இந்தப் புலவனை நம்பி நான் நள்ளிரவில் வெளியேறியதே தவறு. எவ்வளவோ எச்சரிக்கையாக இருந்தும் காலம் என்னைக் கவிழ்ந்து விட்டது கோமளம்."

பொருமுகிறாள் நாகமாலினி.

"இப்பொழுது என்ன ஆகிவிட்டதென்று இத்தனை மூர்க்கம்?"

"என்ன ஆகவில்லை? ஏதோ பிச்சையிடுகின்ற மாதிரிதான் எங்களை விடுவித்திருக்கிறார் அரசர்பிரான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அவர் என்னைப் பார்த்த பார்வையே சரியில்லை கோமளம், காதல் பார்வைக்கு ஏங்கிதான் காரியங்கள் நிகழ்த்த கனல் பார்வையாகவல்லவா அது போய்விட்டது. பாண்டியர்களின் உளவுத் திறன் தெரிந்தும் நான் தோற்று விட்டேன்."

"என்ன பெரிய உளவுத் திறம்?"-கேள்வியுடன் பிரசன்னமாகிறான் ஐங்கரனாகிய உதயசந்திரன்.

"வாருமய்யா வாரும்... என்ன பெரிய உளவுத் திறம் என்றா கேட்டீர்? அத்தனை சாமர்த்தியமாக நாம் கிளம்பியும் மோப்பம் பிடித்து வந்து நம்மைக் கைது செய்தானே கார்கோடன். அவன் செயலில் உளவுத் திறம் இல்லையா?"

"அவன் கடமையை அவன் செய்துள்ளான். இதில் உளவுத் திறம் எங்கிருந்து வருகிறது?"

"நாம் செல்வது அவனுக்கு எப்படித் தெரியும்?"

"இயல்பான நகரப் பிரவேசத்தில் இரவுக் காவலர் பணியில் நேர்ந்த செயலைப் பெரிதாக வர்ணிக்கா தீர்கள்... கார்கோடன் ஒரு நல்ல உளவாளியாக இருந் திருந்தால் நம்மைக் கைதுசெய்த அதே இடத்தில் தங்கள் சகோதரர் நாகாபரணியையும் அல்லவா கைது செய்திருக்க வேண்டும்."

"அண்ணன் எங்கே அங்கு வந்தார்?"

"அண்ணன் அங்கே எங்கு இருந்தார் என்று கேட்டால் அது பொருத்தமாய் இருக்கும்?"

"நீங்கள் சொல்வது புரியவில்லை."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அங்கே நமக்கு முன்பே உங்கள் சகோதரர் வந்து விட்டார். நாம் நின்று விவாதித்த இடத்திற்கு மேலே பரவிய மரத்தின் கிளையில்தான் அவர் சயனித்திருந்தார். சாத்தன் அண்ணாந்து பார்த்தாலும் அகப்படாதபடி ஒரு உடும்பைப் போல் ஒட்டிக் கிடந்தார்."

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"தெரிந்ததால்தான் நான் புலவனாக இருக்கும் போதிலேயே வரும் சிக்கல்களை சமாளிக்கும் வல்லவனாகவும் இருக்கிறேன். அவையில் கேள்வி கேட்டபோது நாகபஞ்சமி என்று கூறி நம்மை மீட்டேன்."

"என்ன பயன்? அரசரின் சந்தேகப் பார்வைக்கு நான் ஆளாகி விட்டேன். காதல் வலுப்பெற வேண்டிய வேளையில் மோதல் அல்லவா வலுப்பெற்று விட்டது."

"எதுவும் மோசமாக நடந்துவிடவில்லை. எல்லாம் நல்ல விதமாகவே நடந்து வருகிறது."

"ஹூம்! இதென்ன பேச்சு... மனத்துக்கு ஆறுதல் தேவைதான். அதற்காக இப்படியா நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கின்ற மாதிரி பேசுவது?"

"நிச்சயமாகவும் சத்தியமாகவும் கூறுகிறேன். நடப்பதெல்லாம் நன்மைக்கே."

"இது பொதுத் தத்துவம். பரதத்துவம்."

"இருக்கலாம். ஆனால், நமக்கு மிகவும் பொருந்தும் தத்துவம்."

"பேரரசர் கோபத்தில், சந்தேகத்தில் இருக்கிறார். என் காதல் அவரிடம் எப்படித் துளிர்க்கும் என்றே

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

புரியவில்லை எனக்கு. புதிதாய் பைராகி ஒருவர் முளைத்துள்ளார். ஆலயத்திலேயே அவரது உயிருக்கு அம்பு வருகிறது. தேசத்தில் எதெல்லாமோ நடக்கத் தொடங்கியுள்ளது. ஆரோக்கியமாய் ஒரு நிலையும் இல்லை. இதில் நடப்பதெல்லாம் நன்மைக்காம்..

அய்யா! புண்ணியவானே சற்று வாயை மூடித் திரும்புகிறீரா?"

"உங்களுக்கு இப்பொழுது தேவை பேரரசரின் கனிவான பார்வை.. அவ்வளவுதானே?"

"கனிவான பார்வை மட்டுமல்ல... காதல் பார்வையாகவும் அது இருக்க வேண்டும். அது மதுரவல்லி உயிருடன் இருக்கும் வரை சாத்தியமில்லை."

"அதனால்தான் அவளைக் கொல்ல நாகாபரணி திரும்பவும் திட்டமிட்டுள்ளான்."

"என்னது... அண்ணன் அவளைக் கொல்லப் போகிறாரா?"

"ஆம்... தனது தோல்விக்குப் பரிகாரம் தேடப் போகிறான் பரணி."

"ஆபத்தான செயலில் திரும்பவும் ஈடுபாடா?"

"என்ன செய்வது...தங்கையின் காதல் அவனுக்கு அத்தனை பெரிது."

"எப்படிக் கொல்லப் போகிறார்?"

"இந்த முறை அதை மிக ரகசியமாய் வைத்துச் செயல்படுத்த உள்ளான் பரணி."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"தோற்று விட்டால்."

"நடக்கவே நடக்காது. நான்தான் துணைக்குப் போகின்றேனே."

உதயசந்திரனின் பதிலால் விக்கித்துப் போகிறாள் நாகமாலினி. மதுரவல்லி இறந்தால்தான் அவளைப் பராந்தகன் மறப்பான் என்பது எந்த அளவு உறுதியான விஷயமோ, அதற்குப் மேலாக அந்த விஷயத்தைச் செயல்படுத்துவதில் குளறுபடிகள் ஏற்பட்டால் நாம் அனைவருமே ஒழிந்துபோவதும் உறுதி என்று அவளுக்குள் எச்சரிக்கை உணர்ச்சி எழுப்புகிறது.

உதயசந்திரனை மலங்க மலங்கப் பார்க்கிறாள். மாலைப்போதும் மந்தமாருதமும் சிந்தனைக்கு அப்பால் போய்விட உதயசந்திரன், நாகமாலினியை ஊடுருவிப் பார்க்கிறான்.

"சரி, நான் கிளம்புகிறேன்."

"எங்கே?"

"பரணியைப் பார்த்து வரத்தான்."

"எச்சரிக்கையாய்ப் பார்த்துத் திரும்பி விடுவீர்களா?"

"எனக்கு இன்னொரு பெயரே எச்சரிக்கை, அது தெரியுமா உங்களுக்கு?"

- எகத்தாளமாய்ப் பதிலளித்துவிட்டுக் கிளம்பிய உதயசந்திரனை ஆச்சரியம் குன்றாமல் பார்க்கிறாள் நாகமாலினி.

"நாகா... இவன் வல்லாளன்; அற்புதச் சொல்லாளன்" என்று வக்காலத்து வாங்கியபடி முன்வருகிறாள் கோமளம்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அரண்மனையை விட்டு நீங்கிடப் பார்க்கும் உதய சந்திரன் உள்ளத்திலோ இப்பொழுது புதுவிதமான வினா ஒன்று.

"அன்றைய பகல்பொழுதில் கூடல் அழகர் ஆலயத்தில் பைராகி ஒருவரை அம்பெய்து கொல்லப் பார்த்துப் பின் அகப்பட்டுக் கொண்டு விட்ட அந்த கைதி தன்னைப் பல்லவ புருஷன் என்று கூறிக் கொண்டா னாமே..?"

நந்திவர்மப் பல்லவர் தனக்கே தெரியாமல் இப்படி ஏதாவது ஏற்பாட்டில் இறங்கி விட்டாரா... இல்லை, வேறு எவனாவது தன்னைப் பல்லவ புருஷன் என்று கூறி ஏமாற்றப் பார்க்கிறானா?

பைராகி வேறு பல்லவனை எதிர்க்க ஆயத்தமாகு என்று ஏன் துரிதப்படுத்த வேண்டும்?

இந்த வினாக்களுக்கு விடை காணும் பொறுப்பு தனக்கிருப்பதாக உணர்ந்த போது "உதயசந்திரா..!" என்று அவனது இயற்பெயரைச் சொல்லி ஒரு குரல் அவனை அழைத்தது!

# 13

உதயசந்திரா, என்று தனது இயற்பெயரை சொல்லி அழைத்தது யார்?

திடுக்கிட்டுப் போகிறான் உதயசந்திரன்.

ஒருவேளை இந்தப் பாண்டிய உளவாளி எவனாவது தன்னை இனங்கண்டு கொண்டு விட்டானா?

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அதிர்ச்சியோடு சுற்று முற்றும் பார்க்கிறான். நீண்ட பிராகார வெளி போன்ற அரண்மனை. வரிசையாய்க் கல் தூண்கள் - அண்ணாந்தால் விதானத்தில் வண்ணப் பூச்சு- ஆங்காங்கே கிளிக் கூண்டும் அதில் அஞ்சுகங்களின் கூப்பாடும் என்கிற சூழலில் எவரையும் காணோம்?

'யாராக இருக்கும்?' மனசு பதைத்துப் போகிறது. கையும் களவுமாய் அகப்பட்ட தருணங்களில் எல்லாம் ஏற்படாத சலனமும் குழப்பமும் இப்போது மனத்தை ஆக்கிரமிக்கின்றன, பயத்தில் உடலில்கூட நடுக்கம் பரவும் போல் தெரிகிறது.

இதற்க மேல் தாமதித்தால் உதயசந்திரன் மூர்ச்சிக் கலாம் என்பதையறிந்த அந்தக் குரலுக்குரிய தேகம் இப்பொழுது தூண் ஒன்றின் பின்னால் இருந்து வெளிப் படுகிறது.

பார்க்க பாண்டிய நாட்டானாய்த் தெரிகிறது. ஆனால், அந்தப் பார்வையின் கூர்மையும் மினுமினுப்பான தலைமுடியும் வேறு மாதிரி சிந்திக்க வைக்கின்றன உதயசந்திரனை..

"யார் நீ? உதயசந்திரன் என்று என்னையா அழைத்தாய்... நான் ஐங்கரன் அப்பனே!" சமாளிக்கப் பார்க்கிறான் உதயசந்திரன்.

அதைக் கேட்டு ஏளனச் சிரிப்பு அந்த மனிதனிடம்.

"இது என்ன சிரிப்பு. யார் நீ சொல்லிவிட்டுச் சிரி."

அடுத்த நொடியே அந்த மனிதன் தன் மோதிர விரலை உதயசந்திரன் எதிரே நீட்டுகிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அதில் பல்லவ சக்கரவர்த்தி நந்திவர்மப் பல்லவனின் முத்திரை மோதிரம்.

"...நீ பல்லவ சக்கரவர்த்தியின் தூதனா? இதென்ன பாண்டியரின் அரண்மனையில் ஆபத்தான சூழலில் எல்லாம் என்னை வந்து சந்தித்துக் கொண்டு..."

"நான்தான் இரு தினத்திற்கொரு முறை மாமதுரையின் புரவிச் சந்தைக்கும், அதன் அருகிலுள்ள வாணிப வைசியனின் அங்காடிக்கும் உங்களைச் சந்தித்து செய்தி பரிமாறிக் கொள்ளவென்றே வந்து கொண்டிருக்கின்றேனே..?"

"அது எனக்கும் தெரியும். ஆயினும் நான் அரண்மனை உள்ளேயே நுழைந்துவிட்டிருப்பதில் ஒரு பெரிய பொருள் இருப்பதாக உங்களுக்குத் தோன்றவில்லையா உதயசந்திரரே..?"

உதயசந்திரன் பார்வை அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டே சுற்றும் முற்றும் அலை பாய்கிறது.

"மூடனே.. பாண்டிய அரண்மனைக்குச் சுவர்களுக்கெல்லாம்கூடக் காதும் வாயும் உண்டு என்பது தெரியாமல் இப்படிப் பெயரை சொல்லி அழைத்ததுடன், நின்றுகொண்டும் விலாவாரியாகவா பேசுவாய்..? முதலில் நட.... என் இருப்பிடம் அடைந்து அனைத்தையும் பேசுவோம்."

பேசிய வேகத்துடன் நடக்கும் உதயசந்திரனிடம் அந்த அரண்மனையின் எல்லாப் பகுதிகளும் துல்லியமாய்த் தெரிந்துவிட்டது போன்ற வேகம் தெரிகிறது.

நல்லவேளை புதிதாக எவரும் எதிர்ப்படவில்லை.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வீரர்களின் காவல் பணியும் பாராக்களும் மட்டுமே ஆங்காங்கே..

தனது இருப்பிடம் ஏகிக் கதவைத் தாழிட்டுக் கொண்ட பிறகே உயிர் மூச்சில் ஓர் ஒழுங்கு ஏற்படுகிறது உதயசந்திரனிடம்.

"சரி, இப்போது பேசு. பேரரசர் உன்னை எதற்காக அனுப்புவித்துள்ளார்?"

"புதிதாக முளைத்துள்ள அந்தப் பைராகியைக் கொல்ல..!"

"அப்படியானால் அவர் மேல் கூடலழகர் ஆலயத் தில் மறைந்திருந்து அம்பெய்தது நீதானா?"

"ஆமாம்."

"ஏற்கெனவே ஒருவன் இப்படி மறைந்திருந்து தாக்கி விட்டு இந்த மண்ணில் படும் பாடு தெரியாமல் இதென்ன மூடத்தனமான செயல்?"

"நான் விஷ்ணுபதி-ராஷ்ட்ரகூடன். ஒரு பல்லியைப் போல் எச்சரிக்கையில் பெரும் பகுதி நேரத்தையும் செயலுக்குச் சில துளி நேரத்தையும் ஒதுக்கும் பயந்த வீரனல்ல. யானை போல் மோதி எதிரிகளை வதம் செய்துவிட்டுப் போய்க்கொண்டேயிருப்பவன். அதனால் தான் பைராகி விஷயமாய்ப் பேரரசர் உங்களிடம் எந்தப் பொறுப்பையும் விடவில்லை.

"அப்படி என்ன அந்தப் பைராகி ஒரு பெரிய மனிதர்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"பைராகி ஒரு மந்திர புருஷராம். காஞ்சியில் அத்திகிரி வரதனைத் தரிசிக்க வேளைகெட்ட வேளையில் வந்திருக்கிறார்."

"புரியும்படி சொல்."

"அன்று ஏகாதசி காலம். பேரரசர் நந்திப் பல்லவர் விரதமிருந்த நிலையில் எம்பெருமானைத் தரிசிக்கச் சென்றுள்ளார் அதன் நிமித்தம் பைராகி தடுக்கப்பட பைராகியின் கோபம் எல்லை மீறிவிட்டது-

வைணவ நெறியில் எப்பொழுதும் சந்நியாசி களுக்கும், அடியார்களுக்கும் முதலிடமாம். 'இது தெரி யாமல் அரசன் என்கிற அகந்தையில் என்னைத் தடுத்த உன்னை வருத்தாமல் விடமாட்டேன்' என்று பைராகி சபதம் செய்யுமளவு போய்விட்டது விஷயம்."

"இதற்காகவா பைராகி இந்த மண்ணை அடைந்து பாண்டிய மன்னனைச் சந்திக்க வந்தார்?"

"அதற்கு மட்டுமல்ல- பைராகியின் விருப்பம் ஒரு தனிப்பெரும் வைணவ ஆலயத்தை எழுப்பி, அந்த ஆலயம் சார்ந்த பரப்பிலேயே சமாதி ஆகிவிட வேண்டும் என்பதுதான்.

இந்த விருப்பத்திற்கு நமது ராஜகுரு ஒப்புதல் தரவில்லை. அப்படி ஒப்புதல் தந்தால் எதிர்காலத்தில் பல்லவரின் பெயர் அங்கிருக்காது-சரித்திரம் பைரா கியைத்தான் பேசும் என்பது அவர் கருத்து. எனவே அதற்கும் மறுத்து விட்டனர். 'பல்லவனே! நீ இல்லா விட்டால் இந்தப் பூவுலகில் யாருமே இல்லை என்று எண்ணிவிடாதே' என்ற கருவிக்கொண்டே அந்தப் பைராகி இங்கு வந்துள்ளான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வந்த நோக்கத்தை ஈடேற்றிக் கொள்ளவும் தொடங்கி விட்டான்."

விஷ்ணுபதி பேசப் பேச உதயசந்திரனின் முகத்தில் எண்ண ரேகைகளின் வியாபிப்பு.

"என்ன உதயசந்திரரே, என் பேச்சில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை போல் தெரிகிறதே... என் மேலாவது நம்பிக்கையுண்டா... இல்லை. என்னையும் பாண்டிய உளவாளிகளில் ஒருவனாகக் கருதுகின்றீரா? உதயசந்திரன் அடுத்த நொடியே விஷ்ணுபதியைக் கூர்ந்து பார்க்கின்றான்.

"இல்லை, இல்லை, அப்படியெல்லாம் இல்லை. பைராகியைக் கொன்று வருமளவு அரசர் உன்னை அனுப்ப நீ சொன்ன காரணங்கள் வலுவாக இல்லை. அதனால்தான் யோசித்தேன்."

"காரணங்களை ஆராய்வதல்ல என் வேலை. இடும் பணியை முடிப்பதே இந்த இராட்டிரகூடன் செயல்."

"அப்படியானால் தப்பிவிட்ட அந்தப் பைராகியை திரும்பவும் கொல்லப் போகிறாயா?"

"ஆமாம். இந்த அறையில் உங்களோடு தங்கியிருந்து அதைச் சாதிக்கச் சித்தம்."

"சாதித்துவிட்டு?"

"உடனே காஞ்சிக்குப் பயணத்தை தொடங்கி விடுவேன்."

"அரசர் இவ்வளவுதான் கூறினாரா-இல்லை மேலும் செய்தி உண்டா?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"மாமன்னருக்குச் சதா இந்த மதுரை பற்றித்தான் எண்ணமே. வெற்றிகளிலேயே வெற்றியாக அவர் கருதப் போவது மதுரை மீட்சியைத்தான்."

"பைராகியை நீ கொல்வது ஒன்றும் எளிதான செயல் அல்ல..."

"விஷ்ணுபதி எதையும் கடினமாய்க் கருதுபவன் கிடையாது. ஒரு முக்கிய விஷயம்..."

"என்ன?"

"நான் இங்கே பைராகியைக் குறி வைக்கும் அதே தருணத்தில் நீங்கள் பாண்டியனின் ராஜகுருவான பச்சைமால் தீர்த்தருக்குக் குறி வைக்க வேண்டும். இரண்டு கிழங்களும் ஒருசேர இந்தப் பூவுலனக விட்டு நீங்க வேண்டும்."

"தீர்த்தரைக் கொல்வதா? இதென்ன விபரீதம்?"

"பேரரசர் கூறியதைச் சொல்லி விட்டேன். அதன் பின் உங்கள் பாடு-அரசர் பாடு."

**உ**தயசந்திரன் மீண்டும் ஆழ்ந்து யோசனை வயப்பட்ட அந்த நொடிகளில் விஷ்ணுபதி என்னும் அந்த வீரன் உதயசந்திரன் தங்கிருந்த அறையைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான்.

விதவிதமான ஓவியங்கள் திரைச்சீலையில் மின்னும் அந்த அறைக்குள்ளே யானை உடலும் யாழியின் தலையுமான ஒரு பிரமாண்ட ஓவியம்... முதல் முறை பார்க்கும் ரசனையே இல்லாத மனிதன்கூட வாய்பிளக்க வைக்கும்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அந்த ஓவியத்தின் அருகில் சென்று நிற்கும் விஷ்ணு பதி எனும் அந்த வீரன் துளியும் ரசனைக் சிலிர்ப்பின்றி உதயசந்திரனைத் திரும்பிப் பார்த்தான்.

உதயசந்திரனுக்கு அவனது செயல் ஆச்சரியம் அளித்தது.

"இந்த ஓவியம் உன்னைக் கவரவில்லையா விஷ்ணு பதி?" என்று வினாவத் தொடங்கினான்.

"இல்லை..."-ஒரே வரியில் விஷ்ணுபதியிடம் பதில். "சரி, இளைப்பாறலாமா?"

"உம்..."

கதவைத் திறந்து உதயசந்திரன் கை தட்டுகிறான். எங்கிருந்தோ தாதியர் வருகின்றனர்.

"பாலும் பழங்களும் வரட்டும்" என்கின்ற கட்டளையை அவர்களுக்கு விதித்துவிட்டு திரும்பியபோது விஷ்ணுபதி தன் மேலங்கியைக் கழற்றி உரிப்பெட்டிக்குள் போட்டுவிட்டுக் கட்டிலின் மேல் மல்லாந்து படுத்தபடி சயனிக்கத் தொடங்கியிருந்தான்.

பல நாட்களாய் அங்கிருக்கும் தனக்கே தெரிந்திராத உரிப்பெட்டி புதியவனான இந்த விஷ்ணுபதிக்கு எப்படித் தெரிந்தது?

கேள்வியை விழியில் தேக்கினாலும் பார்வையில் அதை வெளிக்காட்டாத சாதுரியம் உதயசந்திரனிடம் இழையோடுகிறது.

'இந்த விஷ்ணுபதி நிச்சயம் பல்லவபுருஷன் இல்லை. இதே பாண்டி நாட்டான்தான். அதிலும் குறிப்பாக இந்த

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அரண்மனையின் மூலை முடுக்குகளையெல்லாம் துல்லிய மாய்த் தெரிந்து வைத்திருக்கும் ஒரு பாண்டிய உள வாளியோ?"

"என்ன உதயசந்திரரே- உங்களுக்குக் களைப்பாய் இல்லையா?"- விஷ்ணுபதியிடம் வினாவல் தொடங்கு கிறது.

"நான் எப்பொழுதும் உடல் களைப்பைவிட உள்ளக் களைப்பைத்தான் களைப்பாய்க் கருதுபவன்."

"அதனால்தான் நந்திப் பல்லவர் தாங்கள் அருகில் இல்லாதபோதும் வார்த்தைக்கு வார்த்தை உதய சந்திரன், உதயசந்திரன் என்று புலம்புகின்றார் போலும்."

"பல்லவ மாமன்னர் என்னைப் போன்ற தனி மனிதர்களை நம்பித் தன் தேசத்தைக் காத்து வரவில்லை விஷ்ணுபதி."

"வேறு யாரை நம்பி?"

"அவர் முதலில் தம்மை நம்புபவர். பிறகு அந்தத் திருமலை-அதற்கும் பிறகே மற்றவர்களை நம்புகின்றவர்."

"மொத்தத்தில் வேறுபட்டவர், நுட்பமானவர் என்று கூற வருகின்றீர் அப்படித்தானே?"

"அதில் சந்தேகமென்ன...? இல்லாவிட்டால் ஒரு ராஷ்ட்ரகூடன் மகளை அவர் விரும்பி மணம் செய்து கொண்டிருப்பாரா? பல்லவ தேசத்தில் இல்லாத பைங்கிளிகளா என்ன?"

"எட்டுத் திக்கும் தன் வயப்பட வேண்டும். அதன் பொருட்டுச் சுற்றியுள்ள வலுவான ராஜ்யாதிபதிகளை

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இப்படி உறவு முறையில் வசப்படுத்திக் கொள்வது ஒரு வகை ராஜதந்திரம். பாண்டியனும்கூட அந்த வகையில் தான் கெங்க நாட்டோடு உறவுகொண்டு பூசுந்தரி தேவியாரை மணந்தாரோ என்னவோ?"

"கெங்க மண்ணும் ராஷ்ட்ர பூமியும் ஒன்றா என்ன? அது குறுநிலம்-ராஷ்ட்ரம் மாநிலம் ஆயிற்றே. உனக்குத் தெரியாதா என்ன?"

உதயசந்திரனின் கேள்வி முன் விஷ்ணுபதியிடம் மெலிதான தடுமாற்றம்.

"ஆமாம்.. ஆமாம்.. எங்கள் மாநிலம் மகா பெரியது. இந்த நாவல பூமியின் வடக்கில் எங்கள் ஆதிக்கம்தான் இமயம்வரை. நாங்கள் வைக்கப்பபோவதுதான் சட்டம்.

"ஆமாம்.. ராஷ்ட்ரத்தில் எந்த ஊரைச் சார்ந்தவன் நீ? எப்படி மாமன்னர் பார்வையில் பட்டு இத்தனை வலுவான ஒரு பணிக்கு ஆட்பட்டாய்?"

"அது ஒரு பெரிய கதை... பெரிய்ய கதை." விஷ்ணுபதி சொல்லும்போதே களைப்பின் நிமித்தம் கொட்டாவி பிரிகிறது அவன் உதட்டில்.

தாதியரும் பழரசங்களுடன் வந்துவிட்டது ஒலிப் பேழையால் தெரிய வருகிறது.

"விஷ்ணுபதி.. பாலருந்திவிடு. இளைப்பாறு" என்று கூறி வெள்ளிக் குவளையில் சுண்டக் காய்ச்சிய பாலை வளாவிவிட்டு விஷ்ணுபதி எதிரே நீட்டுகிறான் உதய சந்திரன்.

"வேண்டாம் உதயசந்திரரே... எனக்குப் பசியே இல்லை. அத்துடன் பாலுண்ட வீட்டிற்குப் பகை

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நினைக்கக்கூடாது என்பார்கள். ஆகவே நான் இந்த அரண்மனையில் என் நோக்கம் ஈடேறும்வரை பச்சைத் தண்ணீரைக்கூடக் குடிப்பதாக இல்லை. நீங்கள் சாப்பிட்டு விட்டு இளைப்பாறுங்கள்..." - விஷ்ணுபதியின் பேச்சு உதயசந்திரனுக்கு வியப்பு ஊட்டுகிறது.

அதற்குமேல் அவனை வற்புறுத்துதல் ஆகாது என்பதையறிந்து தான் பசியாறிவிட்டுச் சயனிக்கத் தொடங்குகிறான் உதயசந்திரன்.

சாளரங்களில் பாண்டிய நாட்டை வளைய வரும் ஈரக்காற்றின் ஓடித் திரியும் விளையாட்டு.

அதில் எங்கிருந்தோ இழைந்து வருகிறது அகிற் புகையின் வாசம்.

அருகிலேயே நாகமாலினியின் இருப்பிடம்... அவள்தான் தன் கூந்தலுக்கு அகிற் புகை போக்கிக் கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணி அவள் நினைப்பில் விழுகிறான்.

வீரம் மிக்க அந்தப் பெண் நடந்து முடிந்த நிகழ்வுகளால் மிகமிகச் சோர்ந்துவிட்டாள். பாண்டியனின் உள்ளத்தில் நேசப்பதிவெடுக்க வேண்டியவள் வேஷப் பதிவெடுத்துவிட்டதன் நிமித்தம் கலங்கிப் போய் விட்டதை அவனால் உணர முடிகிறது.

ஆனால், இன்னமும் அவள் காதல் நதி வற்றாது அவனை நோக்கியே பாய்ந்து கொண்டிருக்கிறதே! அதை எப்படித் திசை திருப்பித் தன்னை நோக்கிப் பாய விடுவது?

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அவன் தன்னைக் காதலிக்கத் தொடங்கினால் மட்டும் போதுமா? உனக்குப் பல்லவன் ஆயிரம் மடங்கு மேல் என்று சொல்ல வைத்து, பாண்டியன் உள்ளத்தில் சோர்வுக் குழம்பைப் பூச வேண்டும்.

மிகமிக ராஜதந்திரமாய் நாகமாலினியைக் கொண்டே படை பலம் முதல் சகலத்தையும் அறிந்து கொண்டாக வேண்டும். அதற்கு இடையூறாக வேறு எந்தப் புதிய செயல்களிலும் சென்று சிக்கிச் கொண்டு விடக்கூடாது.

இந்த நாகாபரணி வேறு–

இந்த விநாடி எங்கிருக்கின்றானோ– என்ன செய்து கொண்டிருக்கின்றானோ?

மல்லாந்த நிலையில் கண் மூடி எண்ண ஊர் வலத்தில் உதயசந்திரன் ஓடிக்கொண்டிருந்த வேளை–

விஷ்ணுபதி மெல்லக் கண் திறந்து பார்க்கிறான்.

உதயசந்திரன் உறங்கிவிட்டதாகக் க்ருதுகிறான்.

அருகிலேயே பாலும் பழமும் தாங்கிய தாமிரத் தட்டுக்கள்.

முதல் காரியமாய்ப் பாலைக் குடித்துப் பழத்தை சுவைக்கத் தொடங்குகின்றது அவன் நாவு.

அத்தனை பசி போலும்..?

சப்தம் உதயசந்திரன் காதிலும் விழுகிறது.

மெல்லக் கண் திறந்து ஓரக்கண்ணால் நோக்கினால் விஷ்ணுபதியின் பசியாற்றல் தெரிகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"இதென்ன கூத்து.. பால், பகை என்று அந்த பேச்சு பேசிவிட்டு இப்பொழுது இப்படி ஒரு பிடி பிடிக்கிறான் இவன்!"

உதயசந்திரன் கண்களைத் திறந்தும் திறவாமலும் நடக்கப் போவதை நோட்டமிடத் தொடங்குகிறான்.

விஷ்ணுபதி பசியாறிய கையோடு உதயசந்திரன் பக்கம் திரும்பி ஆழமாய் அவனை ஒரு பார்வை பார்க்கிறான்.

பிறகு அந்த அறையை நோட்டமிட்டுச் சுற்றிச் சுற்றி வருகிறான். இவன் எதைத் தேடுகிறான்?

அறையின் மாடத்தில் ஒரு பிறை; அதனுள் தாழிடப்பட்ட ஓர் உண்டிக் குழி.

அதனுள் விலை உயர்ந்த வைர வைடூரியங்களை அங்கே தங்கியிருப்பவர்கள் வைத்துக் கொள்ளலாம் என்பதற்கு இசைவாகவே அது கட்டப்பட்டது போல் தெரிகிறது. அதன் திறவுகோல்கூட அருகிலேயே இருக்கிறது.

விஷ்ணுபதியின் பார்வை அங்கேயும் செல்கிறது. உண்டிக் குழியைத் திறந்து பார்த்துவிடலாமா எனும் போது யாரோ வருவது போன்ற அரவம்.

உடனேயே ஒரு பூனையைப் போல் மாடத்தை விட்டுக் கீழிறங்கித் தன் கட்டிலின் மேல் ஏதும் அறியா தவன் போல் சயனிக்க ஆரம்பித்தான்.

வந்து கொண்டிருந்தாள் நாகமாலினி.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

ஒலிப்பேழையைத் தொட்டு வந்திருப்பதை உணர்த்தினாள்.

உதயசந்திரன் அப்போதுதான் கண் விழித்தது போல் கண் திறந்து கொண்டான்.

"யாரது இந்த ஒய்வெள்ளலின்போது..." என்று வினாவை முன்னுக்கு வைத்துக் கதவைப் பின்னுக்கு இழுத்தான்.

நாகமாலினி!

ஆழ்ந்த சோகத்தில் புதையுண்டது போல் தெரிந்தாலும் அதிலும் தனி அழகோடு தெரிபவள்.

"என்ன இவ்வேளையில்..?"

"மனநிலை சரியில்லை, எனவே சற்றே உரையாடிச் செல்லலாம் என்ற வந்தேன்.." என்றபடி உள் நுழைகிறாள் நாகா.

நுழைந்த வேகத்தில் உள்ளே தெரிந்த விஷ்ணு பதியைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போகிறாள்.

"யார் இந்த மனிதர்?" வினாவலில் அதிர்ச்சியும் ஆச்சரியமும் சமவீதக் கலவையாய் இழைகின்றன.

"சொல்கிறேன் சொல்கிறேன்-இவன் என் நண்பன்" என்கிறான் உதயசந்திரன்.

"நண்பரா.. எப்படி உள்ளே நுழைந்தார்?"

"ஏன் உள்ளே நுழைவது என்ன அவ்வளவு கடினமா?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அந்நியர்கள் வகை தொகையில்லாமல் பாண்டிய அரண்மனைக்குள் புகுந்து தங்கிவிட முடியாது என்பதால் அப்படிக் கேட்டேன்." நாகமாலினியின் சமாளிப்பை அவன் ஏளனமாய் எதிர்கொள்கிறான்.

"உங்கள் புன்னகைக்குப் பொருள்?"

"எப்பேர்ப்பட்ட கோட்டை வாயிற் கதவாய் இருந்தாலும் அதனுள் இலகுவாய்ப் போய்வர ஒரு திட்டிவாசல் கதவிருக்கும் அம்மணி; அதை நீங்கள் மறந்துவிட்டீர்கள்" என்கிறான்.

"அப்படி என்றால் முறையாக வரவில்லை என்று கூறுங்கள்."

"தேவியார் இந்த விஷயத்தை விடாமல் நீட்டிக் கொண்டு போவது சரியல்ல"-உதயசந்திரன் குறுக்கிடு கிறான். நாகமாலினி அவனைக் கோபத்துடன் பார்க்கிறாள்.

"நீங்களே என் விருந்தினர் போல் தங்கியிருப்பவர். புதிதாய் ஒருவரை உங்களோடு தங்க வைத்துக் கொள்ள உங்களுக்கு யார் அனுமதி தந்தது?"

அவள் எதற்காக இப்படிக் கேட்கிறாள் என்பது உதயசந்திரனுக்குத் தெரியாமல் இல்லை. புன்னகை யோடு நாகமாலினியின் அந்தக் கோபத்தை ரசிக்கத் தலைப்படுகின்றான்.

"என் கேள்விக்கு என்ன பதில்?"

தனது நோக்கில் பேசத் தொடங்கியவள் எதிரில் உதயசந்திரன் வாயை மூடச் சொல்லிச் சமிக்ஞை செய்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கிறான். அதை அவள் புரிந்து கொள்ளாதது போல் கோபத்தில் அக்கினிப் பூவாய்த் தோற்றம் காட்டி அவனை வெறிக்கிறாள்.

"சாந்தி.. சாந்தி.."

"போதும் உங்கள் பேச்சு. அமைதியாய்ச் சென்று கொண்டிருந்த வாழ்க்கைப் போக்கில் உங்கள் குறுக்கீடுகள் பலத்த சலனங்களை உருவாக்கி விட்டு விட்டன."

"இதைப் போல் பேசுவதுதானா மனம் விட்ட பேச்சு? இது மனம் கெட்ட பேச்சல்லவா? அத்துடன் ஓர் அந்நியர் இங்கிருக்கையில் நிதானமாய்ப் பேச வேண்டியது எத்துணை அவசியம்?"

"நண்பர் என்கிறீர்கள். இப்பொழுது அந்நியர் என்கிறீர்கள்? தெளிவாகக் கூறுங்கள். யார் இவர்?"

"அம்மணி! நானே கூறிவிடுகிறேன்... என் பெயர் விஷ்ணுபதி. இவரது நண்பன்தான் நான். அதில் உங்களுக்கென்ன சந்தேகம்?"

அவன் பேசப் பேச நாகமாலினியின் உள்ளுக்குள் பிரளயம் மூள்வது போல் ஒரு பிரமை.

இதே குரலை இதற்கு முன் பல முறை கேட்டிருப்பது போல் ஒரு மாய உணர்ச்சி வேறு.

நெற்றிச்சுட்டியை மீறிக் களபத் திலகம் சுருங்க அந்தப் பிறைப் பகுதி நசிய யோசிக்கத் தொடங்குகிறாள்.

நினைவலைகளின் பின்னோட்டத்தின் நாகமாலினிக்குள் அவனும்கூட அகப்பட்டுக் கொண்டான்! அடுத்த விநாடியே அவள் கண்களில் பயத்தின் மருட்சியும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உடம்பில் நடுக்கமும் ஒரு கலவை உணர்ச்சியாய்ச் தோன்றி அவளை அப்படியே உறைய வைத்தன.

இவன்— இவன்?

# 14

உதயசந்திரனாகிய ஐங்கரனின் நண்பன் என்று சொல்லிக் கொண்டு தன் கண்முன் அறிமுகமாகி நிற்கும் விஷ்ணுபதியைப் பார்த்து நாகமாலினி திடுக்கிட ஆரம்பிக்கிறாள்!

இவன்— இவன்—

இவனை அனேக முறை தீர்த்தருடன் பார்த்திருப்பது போலவும், தீர்த்தருடன் இவன் பேசக் கேட்டிருப்பது போலவும் ஒரு பிரமை அவளுக்குள் துள்ளி எழுகிறது. அதன் எதிரொலி அவள் முகமெங்கும் பரவுகின்றது. பளபளப்பான விழிகள் படபடத்து அவள் அஞ்சுவதையும் கலங்குவதையும் நிரூபிக்கின்றன.

ஆயினும் இதுபோல் கலங்குவதை எதிரி உணர்ந்து கொண்டால் அவனது நிலைப்பாட்டிலும் அவன் மாறுதல்களைக் கொண்டு வரலாம் அல்லவா?

நாகமாலினியின் உள்ளம் விநாடியில் அதை உணர்ந்து சகஜ நிலைக்குத் திரும்புகிறது முகத்தில் செயற்கையாகப் புன்னகையை உருவாக்கிக் கொண்டு நகைக்கிறாள்.

உதயசந்திரன் மட்டும் அவள் மன மாற்றத்தைத் துல்லியமாகப் புரிந்து கொண்டு விட்டவனாய் அவளைக் கூர்ந்து பார்க்கிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"எனது நண்பனைப் பார்த்த மாத்திரத்தில் பலப்பல எண்ணங்கள் உள்ளத்தில் அலைமோதியது போல் தோன்றுகிறதே?"

அவன் கேள்வி முன் தடுமாறுகிறாள் நாகமாலினி.

"ஆம்... ஆம்... இப்பொழுதெல்லாம் பாண்டிய ராஜ்யத்தில் யாரைப் பார்த்தாலும் அரவமேற்படுகிறது. எங்கு பார்த்தாலும் பல்லவ ஒற்றர்களின் விளையாட்டு வேறு. யார் பாண்டியர், எவர் பல்லவர் என்று அறிவது பெரும் பாடாக இருப்பதால் நானும் சற்று அலைமோதி விட்டேன்" என்கிறாள் நாகா.

அதைக் கேட்ட விஷ்ணுபதி சிரித்தான்.

"தேவியார் எவ்வளவுதான் அஞ்சினாலும் கலங்கினாலும் உங்களால் ஒற்றர்களை இனம் காணவே முடியாது" என்றான் உதயசந்திரன். பதிலுக்கு விஷ்ணுபதியை வெறிக்கிறான். இருபொருள்பட அவன் பேசிய பேச்சின் பொருள் அவனுக்கு மட்டும்தானே தெரியும்.

"என்ன விஷ்ணுபதி... உன் பேச்சு என்னையே குத்துவது போல உள்ளதே?" அவன் காதோரமாகச் சென்று மெல்ல வினவுகிறான்.

விஷ்ணுபதியிடம் இளக்காரச் சிரிப்பு.

"உங்களுக்குள்ளேயே ஏதோ பேசிக் கொள்கின்ற மாதிரி தெரிகிறதே.." நாகா இடையிடுகிறாள்.

"ஒன்றுமில்லை... ஒன்றுமில்லை..." உதயசந்திரன், நாகாவைச் சமாளிக்கப் பார்க்கிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"ஆமாம் நிறைய இருக்கிறது..." அலுப்புடன் சலித்துக் கொள்ளும் உதயசந்திரனை நாகமாலினி சற்றுச் சினத்துடன் பார்க்கிறாள்.

"புலவரே, நான் உங்களுடன் சற்றுத் தனிமையில் பேசிட வந்தேன்" என்கிறாள்.

விஷ்ணுபதி உடனேயே நான் வெளியேறிவிடவா என்பது போல் பார்க்கிறான். உதயசந்திரனின் பார்வையும் அதே கட்டளையையே இடுகின்றது.

விஷ்ணுபதி உடனேயே அறைக்கு வெளியே போய் நிற்கத் தொடங்கினான்.

"நண்பரே, இப்படி நினைத்த இடத்திலெல்லாம் இந்த அரண்மனையில் நிற்கக் கூடாது. அருகில் சித்ரகூடம் உள்ளது. அங்கு சென்று சித்திரங்களைப் பார்த்த வண்ணம் இருங்கள்- யாரும் சந்தேகிக்க மாட்டார்கள்."

நாகமாலினியின் கட்டளைக்கேற்ப அரைமனதாய் அவன் அங்கிருந்து நகர்ந்தான்.

உதயசந்திரன், நாகமாலினியை விழுங்குவது போலப் பார்க்கிறான். 'உம் பேசு..' என்கிறது அவனது நயனங்கள். இருவருக்கும் தர்க்கம் ஆரம்பிக்கிறது.

"உண்மையைச் சொல்லுங்கள், யார் இவன்?"

"உண்மையைச் சொல்கிறேன் எனக்கே தெரியாது."

"என்ன இது தெரியாத நபரை எதற்கு நண்பர் என்கிறீர்கள்?"

"தெரிந்து கொள்ளத்தான்..."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"புதிர் போலப் பேசுவது எப்பொழுதுமே உங்கள் வாடிக்கை. இவனைப் பார்த்தால் ஆபத்தானவன் போல் தெரிகிறது. இவனை நான் தீர்த்தருடன் பலமுறை பார்த்திருக்கிறேன் அல்லது இவன் அவருடன் பேசக் கேட்டிருக்கிறேன்."

"இதைக் கூறத்தான் இங்கு வந்தீர்களா?"

"இல்லை... நான் பேச வந்தது அண்ணன் நாகா பரணியைப் பற்றி-"

"நாகாபரணி பற்றிப் பேசிட என்ன உள்ளது?"

"மெதுவாகப் பேசுங்கள். அவனைப் பற்றி நன்றாகத் தெரியும் வரை இனி ஒரு வார்த்தை கூட நான் உங்களுடன் பேசத் தயாரில்லை. அந்த நண்பனை - முதலில் நன்கு கவனியுங்கள்."

"நன்கு கவனியுங்கள் என்றால்_"

"அவன் தீர்த்தரின் கையாள்."

"அவனோ பைராகியைக் கொல்வதே தன் நோக்கம் என்கிறான்! நான் தீர்த்தரைக் கொல்ல வேண்டுமாம்_"

"இது என்ன புதுக் கதை. நீங்கள் எதற்குத் தீர்த்தரைக் கொல்ல வேண்டும்?"

"அவன் சொன்னதைச் சொன்னேன்."

"அவ்வளவும் பொய். அப்படிச் சொல்லிக் கொண்டு உங்களை ஆழம் பார்க்க வந்திருக்கிறான்."

"தெரியும்."

"தெரிந்துமா என்னிடம் தர்க்கம்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"உங்களுக்கு எவ்வளவு தெரியும் என்று எனக்குத் தெரிய வேண்டாமா?"

"பேச்சில் உங்களை வெல்ல முடியாது என்று கோமளம் சபதம் செய்தது சரிதான்."

"கோமளத்திற்கு என் நன்றிகள்."

"நன்றி கிடக்கட்டும். பூ நாகத்தைப் பிடித்துக் கொஞ்சிக் கொண்டிருப்பதா?"

"சிலர் அதைக் காதலிக்கவே செய்கிறார்களே..?"

உதயசந்திரன் தன் நிலைப்பாட்டைக் கேள்வி யாக்கினான்.

"என்ன உளறுகிறீர்கள்..?"

"ஒன்றுமில்லை. ஒன்றுமில்லை... இப்படிப்பட்ட நண்பனுக்கும் ஒரு காதலி இருக்கலாம் அல்லவா. அதைச் சொன்னேன்."

"எதையோ சொல்ல வந்து நடுவிலேயே திரும்பி விடுவது உங்கள் வழக்கம்."

"போகட்டும். இந்த அரண்மனையில் அனைத்துப் பகுதிகளும் உங்களுக்குத் தெரியுமா?"

"ஓரளவு தெரியும்."

"முதலைகள் திரியும் அகழிப் பாதைக்கு வழி தெரியுமா?"

"எதற்கு?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"தெரியுமா, என்று முதலில் கூறுங்கள்; மற்றதைப் பொறுத்திருந்து பார்த்து அறியுங்கள்."

"தெரியும்?"

"வழியில் காவல் சாவடி உண்டா?"

"உண்டு. அதே சமயம் நேராக எதிரிகள் அகழியில் போய் விழும் வண்ணம் அமைக்கப்பட்ட சருக்குப் பாதைகளும் உண்டு."

"எங்கிருக்கிறது அது?"

"எதற்குக் கேட்கிறீர்கள்?"

"நண்பனாய், நம் இருவரிடையே உளவு பார்க்க வந்துள்ள அந்த நண்பனை, அதாவது விஷ்ணுபதியை அகழி முதலைகளின் பசிக்கு இரையாக்க..."

அதைக் கேட்ட நாகமாலினி பதைத்துப் போய்த் தன் அகண்ட நயனங்களில் அதிர்ச்சி கூட்டி இதழ்களைச் சுழித்தபடி பிளந்தாள்.

"பதைக்காதீர்கள்... கிட்டத்தட்ட நம் இருவரின் நிலையை ஊர்ஜிதம் செய்து கொண்டுவிட்டான். அவன் வந்தது முதலே அவன் பேச்சும் செயலும் வினோதமாய்ச் சந்தேகிக்கும் விதமாகவே இருந்தன."

"எப்பொழுதும் ராஜாங்க ரகசியங்களைப் பொறுத்தமட்டில் நீதிமன்றம் என்றால் சந்தேகப்படுபவன் அதன் பலனால் விடுவிக்கப்படுவான். ராஜமன்றத்திலோ அவனுக்கு மரணதண்டனைதான் ஏற்ற பரிசு."

"இது எப்படிச் சரியாகும்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"உங்களுக்கு அனுபவக் குறைவு உள்ளதால் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டு விட்டீர்கள். இவனை இனி தப்ப விட்டால் நம் இருவரின் நிலையும் மிக விபரீத மாகிவிடும்."

"அதுவும் சரிதான். மாமன்னர் கருணையால் நாம் ஒருமுறைதான் தப்ப முடியும். அடுத்த முறையும் அது சாத்தியம் என்று கூறுவதற்கில்லை."

"சரி, சரி, இங்கேயே இருங்கள். ஓவியச் சாலையில் உள்ள அவனை அழைத்து வருகிறேன்.

உதயசந்திரன் அந்த அறையைவிட்டு வெளியேறி னான். உள்ளே மருகிய விழிகளுடன் தத்தளிக்கத் தொடங்கியிருந்தாள் நாகமாலினி.

அருகிலேயே பழரசம் மணந்து கொண்டு அவள் நாசியைச் சிமிட்டியது. எடுத்துப் பருகும் ஆசை வற்றிப் போயிருந்தது.

ஏனோ அந்த மனிதனை உதயசந்திரன் கொன்று விடுகிறேன் என்று சொன்னதை ஜீரணிக்க மாட்டாத அவதி மனதில் புரண்டு நெளிந்தது. கொல்லாமல் விடுவதும் பேராபத்தில் கொண்டு சேர்க்கும் என்பதும் அவளுக்குள் வருத்தத் தொடங்கியது.

பொதுவாக இந்தப் புலவன் வந்தது முதலே பிடிபடாத சிக்கல்களும், அவற்றை விடுவிக்க குழம்புவதும் ஒரு தொடர்கதையாகிக் கொண்டு வருவதையும் எண்ணிப் பார்க்கிறாள்.

இதற்கெல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். அண்ணன் நாகாபரணி வேறு இந்தப் பாண்டிய மண்டலத்தில் எங்கு, எப்படியிருக்கிறான் என்றே தெரிய

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வில்லை. திரும்பவும் அவன் மதுராவைக் கொன்றுவிடும் முடிவுக்கு வந்துவிட்டதை ஒரு புறம் எண்ணி மகிழ்கிறாள். மறுபுறமோ நெஞ்சு பதைக்கிறாள்.

மாமன்னர் பராந்தகருக்கோ இப்பொழுது பல்லவன் பற்றியே கவலை..

நாகாபரணி தன்னைப் பல்லவ புருஷனாகக் காட்டிக் கொண்ட வேளை இப்பொழுது அடிக்கொரு பல்லவ ஒற்றன் இந்த மண்ணில் நடமாடுவது போல் தெரிகிறது.

பைராகி ஒருவர் முளைத்து, போருக்கு ஆயத்த மாகு என்று கூறுகிறார்.

பாண்டிய ராஜ்ஜியத்தின் அரசியல், அறிவுக் கணக்கு களுக்கு அகப்படாமல் கண்ணாமூச்சி ஆடுவதாகவே அவளுக்குத் தோன்றுகிறது.

குழப்பம், சலனம்.

நாகமாலினி இரண்டின் நிமித்தம் பெருமூச் செறிந்து அந்தப் புலவன் சயனித்த கட்டிலின் பஞ்சணை யில் சரிகிறாள்.

நசிந்தபடி எரிந்து கொண்டிருக்கும் சுடராழிப் பந்தம் அவள் மனதிலும் நெருப்பை மூட்டிய அந்த அர்த்த ஜாமம் நோக்கிய அகால இராப் போதில் உதயசந்திரன் ஓவியச் சாலையில் விஷ்ணுபதியைத் தேடிக் களைத்து விட்டுத் திரும்பியிருந்தான்.

தனி மனிதனாக வந்து நிற்பவனைப் பார்த்து திடுக்கிடுகிறாள் நாகா.

"என்ன நீங்கள் மட்டும்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"மெல்லப் பேசு நாகா- அவனைக் காணவில்லை. நாம் கொல்லப் போவது தெரிந்து தப்பி விட்டான் போலும்-"

"நாம் அல்ல. நான் என்று கூறுங்கள்."

"எப்படியோ- தப்பிவிட்டான்!'

"இப்பொழுது என்ன செய்வது?"

"அதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

"தப்பியதிலிருந்தே அவன் தீர்த்தரின் கையாள் என்பது ஊர்ஜிதமாகி விட்டது. இப்பொழுது அவர் இருப்பிடத்திற்குத்தான் சென்றிருப்பான்."

"ஆம்- விஷயம் கைமீறி விட்டது. முதல் முறையாக உங்கள்மேல் எனக்கு இப்பொழுது அதிக ஆத்திரம் வருகிறது."

"நான் என்ன செய்தேன்?"

"நீங்கள் இந்த இராப்போதில் என்னைத் தேடிவந்து ரகசியம் பேசவேண்டும் என்று கூறி அவனை வெளி யேற்றி- கூண்டுக்குள் வந்த புலியை மறுபடியும் திரும்பவும் தப்பவிட்டதைப் போல் இருக்கிறது."

"நன்றாய் இருக்கிறதே உங்கள் பேச்சு? நான் வந்ததால்தான் அவன் தீர்த்தரின் கைப்பாவை மனிதன் என்பதே ஊர்ஜிதமாயிற்று, அதை மறந்து விடாதீர்கள். நண்பன் என்று நம்பி அடைக்கலம் கொடுத்தது உங்கள் குற்றம்."

"நண்பன் என்றீர்களே முன்பின் பழகியிராதவன் எப்படி நண்பனாக முடியும்? எதை வைத்து நம்ப முடிந்தது

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உங்களால்? - பாண்டிய நாடே அரசியல் குழப்பத்தில் மூழ்கி இருக்கிறது.

அப்படி இருக்க எச்சரிக்கை மிகக்கொண்டு செயல்பட வேண்டிய தாங்கள் எப்படி ஒரு புதிய மனிதனை உங்கள் இருப்பிடத்தில் அனுமதிக்கலாம்..?"

வினாக்களாய் அடுக்குகிறாள் நாகமாலினி. இவ ளிடம் எப்படி தான் நினைப்பதையெல்லாம் பேசிட முடியும்?

அவன் தன்னை ராட்டிரகூடன் என்று கூறிக் கொண்டதையும் - நந்திப் பல்லவர் அனுப்பிய மனிதர் என்று முத்திரை மோதிரம் காண்பித்ததையும் தானே கூடப் பல்லவரின் பரிவுக்கும் பாசத்திற்கும் உரிய தளபதி உதயசந்திரன் என்பதையும் எப்படிக் கூறுவது..?

அதே வேளையில் நடந்துவிட்ட விபரீதத்தில் தீர்த்தர் தன்னை இனங்கண்டு கொண்டு, தன் ஒற்றன் மூலம் அதை ஊர்ஜிதமும் செய்து கொண்டுவிட்டதை எண்ணிப் பார்க்கிறான்.

இனி ஒரு விநாடி இந்த இடத்தில் இருந்தாலும் ஆபத்து சுற்றி வளைத்து விடும் என்பது புரிகிறது.

"நாகமாலினி தேவியாரே! நீங்கள் முதலில் உங்கள் இருப்பிடத்திற்குச் செல்லுங்கள். ஆபத்து நம்மை வளைக்கப் போகிறது. நம்மை நமக்குள் நிலவும் உறவை தீர்த்தர் இந்த விநாடி முதல் நன்கு தெரிந்து கொண்டிருப் பார் என்று கருதுகிறேன்.

"அவர் அரசியல் சதுரங்கத்தில் அற்புதமாய்க் காய்களை நகர்த்தி வருகிறார். நடப்பது அனைத்தும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நன்மைக்கே என்று இதுவரை எண்ணியிருந்தேன். இனி என்னால் அவ்வாறு எண்ண முடியாது. நான் உடனடியாக இங்கிருந்து கிளம்பியாக வேண்டும்."

"எங்கு?"

"தங்கள் சகோதரர் நாகாபரணியைப் போல் எங்காவது தலைமறைவாகத்தான் நான் இருந்தாக வேண்டும். எனக்கு ஒரு உதவி மட்டும் அவசியம் செய்ய வேண்டும்."

"என்ன?"

"தீர்த்தர் தங்களை ஒரு குற்றவாளியாக்கி விசாரணைக்கு உட்படுத்தலாம். எந்த நிலையிலும் நாகாபரணியைப் பற்றியோ, என்னைப் பற்றியோ தெரிந்தது போல் பேசிவிடாதீர்கள்."

"குழப்பத்திற்கு மேல் குழப்பம், இப்படியா என்னை இங்கே சிக்கவைத்து விட்டுச் செல்வீர்கள்?"

"என்ன செய்ய? என்னை நம்பித் தாங்கள் வர மறுக்கலாம் அல்லவா?"

"நான் உங்களுடன் வந்தாலும் குற்றமாகிவிடும், வராவிட்டாலும் குற்றமாகி விடுகிறதே?"

"வந்தால் குற்றமாகாதபடி செயல்பட ஓர் உபாயம் இருக்கிறது. கூறவா?"

"முதலில் அதைக் கூறுங்கள்."

"நீங்கள் என்னுடன் வந்தால்தானே குற்றம்? உண்மை தெரிந்துவிட்டால் அஞ்சி ஓடிவிட்டதாகத்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தீர்த்தரும் மன்னரிடம் கூறலாம். ஆனால், நான் உங்களைக் கடத்திச் சென்றுவிட்டால்...?"

"எப்படி, எப்படி?"

"ஒரு விருந்தினனைப் போல வந்து உங்களைத் தவறாக வழி நடத்தப் பார்த்து முடியாமல் போய் உங்களையே கடத்திச் சென்றுவிட்டதாக நாளை இந்தப் பாண்டிய மண்டலமே பேசட்டும், எதற்கு இருக்கிறாள் இந்தக் கோமளம்?"

"நாம் நினைப்பது போலவே பேசுமா... பயந்து ஓடியவர்கள் என்று தீர்த்தர் கூறும்போது இந்தக் கருத்து நிற்குமா?"

"இது போன்ற தருணங்களில் அதிர்ஷ்டத்தை நம்பி இறங்குவதைத் தவிர வேறுவழியே இல்லை. நாம் தாமதிக்கும் விநாடிகளில் எதிரி மிக வேகமாக செயல்பட அது காரணமாகிவிடும். நாம் நல்லதையே நினைப்போம்; நல்லதே நடக்கும்."

"எல்லாம் சரி- இங்கிருந்து தப்பி எங்கே செல்வது?"

"நாகாபரணி இருக்குமிடத்திற்கு-"

"அண்ணன் இருக்கும் இடம் தங்களுக்குத் தெரியுமா?"

"இது என்ன பேதைமையான கேள்வி- நான் தங்களுக்கு உதவி செய்ய வந்ததே அவரது கட்டளையால் தானே? அப்படி இருக்க ரகசியத் தொடர்பு இல்லாது போகுமா? நிச்சயம் பரணி இருக்குமிடத்தைக் கண்டறிந்து விடுவேன்-"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நாகமாலினி அவன் கேள்விமுன் பெருமூச்செறிந்தாள், எதற்கோ தயங்குகிற மாதிரி தெரிந்தது.

"இன்னும் என்ன தயக்கம்? நாகர் ஆலயத்திற்கு நாகாபரணியைச் சந்திக்கச் சென்று சாத்தன் கார்கோடன் வசம் அகப்பட்டுக் கொண்டுவிட்டதுபோலத் திரும்பவும் ஆகிவிடுமோ என்று அச்சமா?"

உதயசந்திரன் கச்சிதமாகத்தான் கேட்கிறான்; வாடிய வதனத்தில் அதற்கான இசைவு நாகமாலினியிடம்.

"நிச்சயம் அகப்பட மாட்டோம். கோமளத்தை முதலில் கூப்பிடுங்கள்."

அடுத்த சில நொடிகளில் கோமளம் வந்து விட்டாள். அவள் காதுகளில் நாகமாலினி ரகசியம் பேசுகிறாள். அதன் நிமித்தம் அவளது கரிய பெரிய விழிகள் மேலும் அகண்டு போகின்றன.

"நாகா! எனக்கென்னவோ விபரீதமாகத் தோன்றுகிறது" என்கிறாள் பதற்றத்துடன்.

"இங்கே இருந்தால் அது அதைவிட விபரீதம்... தீர்த்தரின் கையாள் சகல ரகசியங்களையும் அறிந்து கொண்டு விட்டான். அவனைக் கொன்றுவிட முடிவெடுத்தோம். அது தெரிந்தது போலத் தப்பியும் விட்டான். வேறு வழியே இல்லை."

"உங்களைவிட வேறு யாரோ ஒருவர் அதி புத்திசாலித்தனமாய்ச் செயல்பட்டு, தொடர்ந்து உன்னைச் சிக்கலில் சிக்க வைக்க முயற்சிப்பதை நான் இப்பொழுது நன்கு உணர்கிறேன்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அதை நாங்களும் உணர்ந்து கொண்டதால்தான் இங்கிருந்து வெளியேற விரும்புகிறோம்."

உதயசந்திரன் நிதானமாய்க் குறுக்கிட்டு எடுத்துக் கூறுவதை ஏனோ கோமளத்தால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. "புலவரே, நீங்கள் மட்டும் வேண்டு மானால் செல்லுங்கள். தேவியார் அரண்மனை விட்டுத் தங்களுடன் வருவது நல்லதற்கல்ல."

"அட.... அவர் எங்கே வருகிறார்? நான் அல்லவா கடத்திச் செல்கிறேன்."

"எப்படிச் சொன்னாலும் சரி! ஆயிரம் இடர்கள் வந்தாலும் நாகமாலினி அதை இங்கே இருந்துதான் சமாளிக்க வேண்டும்."

"முடியாது கோமளம்... எப்படிச் சமாளிப்பேன்? நாளையே நான் விசாரணைக்கு ஆட்பட்டுக் கைதாகும் நிலையில் உள்ளேன். தீர்த்தர் என்னைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் குடைவார்? இந்தப் புலவர் வேறு அந்த ஒற்றனிடம் அவனை ஒற்றன் என்றறியாமல் அனேக விஷயங்களை மறைமுகமாய் ஒப்புக் கொண்டிருக்கிறார். அதில் அண்ணன் நாகாபரணியைப் பற்றி வினா எழுப்பினால் என் கதியும், என் கெங்க நாட்டின் நிலையும் என்னாவது- எண்ணிப் பார்."

நாகமாலினியின் பேச்சால் கோமளத்திடம் குழப்பம் கூடிப்போகிறது. ஆனாலும் உள்மனம் நாகமாலினியை வெளியேறவிடக்கூடாது என்றே எச்சரிக்கை செய்கிறது.

"நாகா ஆயிரம் நீ சொன்னாலும் சரி, நீ வெளி யேறுவதை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அது மேலும் விபரீதத்தில்தான் முடியும்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"ஒரு விபரீதமும் கிடையாது. நான் கடத்திச் செல்கிறேன், பராந்தகர் வந்து நாகமாலினியைத் துணிவிருந்தால் மீட்டுச் செல்லட்டும்.

தன் நாட்டிற்கு விருந்தினனாய் வந்து தங்கியிருக்கும் தன் மாமன் மகளை மீட்டுச் செல்வதுதான் அவரது வீரத்துக்கு அழகு என்று நான் கூறியதாய்க் கூறுங்கள்."

"அது சரி, நீங்கள் எதற்கு கடத்திச் செல்கிறீர்கள் என்று கேட்டால் என்ன காரணத்தைச் சொல்வது?"

"காரணத்தை நான் கூறவே வேண்டாம் கோமளம் அது பொழுது விடியும்பொழுது தானாகவே எல்லோருக்கும் தெரிந்துவிடும். தேவியாரே... என் பேச்சை நம்பி என்னுடன் வரப்போகிறீர்களா? இல்லை, நான் கிளம்பவா?"

"வருகிறேன்... வருகிறேன்..." என்று அவன் அருகே செல்கிறாள் நாகமாலினி.

உதயசந்திரன் அந்த உற்பாத வேளையிலும் எதன் நிமித்தமோ அர்த்ததுடன் சிரித்துக் கொள்கிறான்.

"பார்த்து... காவல் வீரர்கள் கண்ணில் படாமல் செல்லுங்கள்..." வேறுவழியின்றி எச்சரிக்கிறாள் கோமளம்.

"நான் செல்வதிருக்கட்டும். அரண்மனையின் போக்கை நீ உள்ளிருந்தபடியே கவனித்து அன்றாடம் எனக்குத் தெரிவிக்க வேண்டும்."

"எப்படி?"

"இதற்கு நீங்களே பதில் கூறுங்கள்" என்று உதயசந்திரனைப் பார்க்கிறாள் நாகமாலினி.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அவசியமில்லை..." என்று ஒரு வார்த்தையில் பதில் கூறிய உதயசந்திரன், வேகமாக அங்கிருந்து கிளம்ப ஆயத்தமானான்.

சில விநாடிகளில் நாகமாலினியுடன் அவன் கண் களை விட்டு மறைந்தும் விட்டான்.

விடியும் பொழுது இனி எப்படி விடியுமோ?

இதுவரை அரண்மனைக்கு வெளியில்தான் பராந்தகனுக்கு எதிரான செயல்கள் நடந்தன. அது இப்போது அரண்மனைக்குள்ளேயே நிகழத் தொடங்கி விட்டது.

'பராந்தகன் இதை எப்படி எடுத்துக் கொள்ளப் போகிறானோ?' பதைத்துப் போகிறது கோமளத்தின் மனசு.

பராந்தக மாமன்னனுக்காகவும், பாண்டிய தேசத்துக்காகவும் கவலை மிகக் கொள்கிறது அவள் பேருள்ளம்.

அந்தக் கரிய இரவைப் போலவே முகம் கறுத்து மனமும் இருண்டு போகிறாள் கோமளம்.

ஆனால், நிஜத்தில் எந்தவித இடருமின்றி அரண் மனையை விட்டு வெளியேறிவிட்டிருந்தனர். உதய சந்திரனும் நாகமாலினியும்!

"அதிசயமாய் இருக்கிறது– ஒரு காவற்சாவடி வீரன் கூட நமக்குத் தொல்லை தரவில்லை. தூங்கி விழித்த படி நம்மைச் சுலபமாகத் தப்பவிட்டு விட்டனர். இப்படி இருந்தால் இந்தப் பாண்டிய தேசம் எப்படி உருப்படும்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அந்த அல்லற்போதிலும் உதயசந்திரனிடம் இளக்காரம். இருவரும் தப்பிச் செல்ல வருவார்கள் என்கிற மாதிரி காத்திருக்கிறது இரண்டு புரவிகள் - ஒரு கடம்ப மரத்தின் கரிய நிழலின் கீழ் கட்டப்பட்டிருக்கின்றன.

"தெய்வம் நமக்கு மிகவும் பக்கத் துணை தேவியாரே! பார்த்தீர்களா- பாண்டிய வீரர்களின் புரவிகள் இரண்டும் லாயச்சாலையில் கட்டப்படாமல் அரண்மனை வெளி வளாகத்தில் இப்படி ஒரு கடம்ப மரத்தினடியில் கட்டப்பட்டிருப்பதை?"

ஓடிப்போய் ஒரு கறுப்புப் புரவியைப் பற்றி, அதன் பிடரியை வருடி அதன் குணத்தை முதலில் ஆராய்ந்தான் உதயசந்திரன்.

அது அவன் வரையில் எந்தப் பிணக்கும் செய்யாமல் அவனுக்கு இசைவாக அசைபோட்டபடி நின்றது. தண்ணொளி வெண்ணிலவின் தகைவான ஒளி வழி காட்ட அதன் மேல் ஏறி அமர்ந்து அதைச் செலுத்தத் தொடங்கினான்.

தொடரத் தொடங்கினாள் நாகமாலினி, "நேராக அண்ணனின் இருப்பிடத்திற்கே புரவிகளைச் செலுத் துங்கள்" என்றாள் சற்றுப் பயந்த நிலையிலும் தழைந்த குரலிலும்.

உதயசந்திரனிடம் அர்த்தச் சிரிப்பு.

"அதற்கென்ன- போனால் போகிறது-" என்று உதடு கூறினாலும் உள்ளம் நந்திப் பல்லவன் நினைப்பில் விழுகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

மாமன்னவரே-

உங்கள் விருப்பப்படியே நாகமாலினியைப் பாண்டியனிடம் இருந்து துண்டித்துவிட்டேன். நம்மை பற்றிய கவலைக்கு நடுவில் இனி நாகாவும் ஒரு கவலைப் புயலாகப் பாண்டியன் உள்ளத்தில் வீசப் போகிறாள்.

அகப்பட்டுக் கொள்ளவிருந்தேன். நல்ல வேளை தப்பிவிட்டேன். என் வரையில் இவ்வளவு நாள் நான் புலவன் வேடத்தில் தாக்குபிடித்ததே பெரிய விஷயம்.

விடியும்போது நான் பல்லவன் உதயசந்திரன்! பாண்டிய ராஜ்ஜியத்தில் இது நாள்வரை ஒற்றனாய் நடமாடியதோடு பாண்டியனின் ஆசை மாமன் மகளைக் கடத்தியும் சென்றுவிட்டதாக ஊரே பேசப்போகிறது.

நிச்சயம் பராந்தகனால் இந்த அதிர்ச்சியை தாங்க முடியாது. பல்லவ வீரம் நாளை பாண்டிய மண்ணில் விரிவாக பேசப்படும் ஒரு விஷயமாகிவிடும்.

இந்த நாகாபரணி வேறு திரும்பவும் மதுர வல்லியைக் கொல்வது என்ற வெறியில் இருக்கிறான். கொன்றாலும் கொல்லாவிட்டாலும் அவன் பாண்டியர் வசம் அகப்பட்டுக் கெங்க நாட்டின்மேல் பாண்டியன் கோபம் கொள்ள ஒரு வலுவான காரணமாகிவிடுவான்.

நாகாபரணியை அதற்காகத் தூண்டிவிடுவதே தற்போது என் முழு முதல் பணி. அவனைத் தூண்டிவிட்டகையோடு, நாகமாலினியோடு நான் நாளையே காஞ்சிக்குள் நுழைந்து விடுவேன்.

எண்ணப் பந்துகளின் துள்ளல்களோடு புரவியைப் புயல்போலும் செலுத்திக் கொண்டிருக்கிறான் உதய சந்திரன்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அவன் நினைத்த மாதிரியே ஒரு விஷயம்கூட நடந்து விடக்கூடாது என்கிற எச்சரிக்கையில் அந்தப் புரவிகள் செல்லும் பாதையில் ஆங்காங்கே சிலர் வெளிப்பட்டு, பாண்டிய அரண்மனை நோக்கி உற்சாகமாய்த் திரும்பிக் கொண்டிருந்தனர்.

எல்லைப் பலகையைப் புரவி இரண்டும் தாண்டி எதிரே உள்ள வைகை வனக்காட்டுக்குள் நுழையும்போது உதயசந்திரனே அறியாவண்ணம் அவர்களை இன்னொரு புரவி தொடரத் தொடங்கியிருந்தது.

அந்தப் புரவியின் மேல்..?

# 15

அந்த அர்த்த ஜாமத்தில், அவனியைக் குளிர் தென்றல் நுகவித் திரியும் காலத்தில் கதளி வனத்தையும் கடம்பவனத்தையும் தன்னகத்தே கொண்டு வைகை வளாவித் திரியும் வளமதுரை விட்டு நீங்கி உதயசந்திரனும் நாகமாலினியும் தப்பி ஓடுவதை ஒரு புரவி பின்தொடர-அதை உணரா நிலையிலேயே அவர்கள் முன் தொடர..

"நெடுந்தூரம் வந்துவிட்டதாகக் கருதுகிறேன். இப்பொழுது எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?" - நாகமாலினி வினவத் தொடங்குகிறாள்.

"இதெல்லாம் ஒரு தூரமா.. பாண்டிய வீரர்களின் புரவிப் பாய்ச்சலுக்கு இதெல்லாம் சட்டென அகப்படும் விஷயங்கள். நாம் சென்று மறைய வேண்டிய இடம் இன்னும் தொலைவில் இருக்கிறது..." ஐங்கர

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

னாகிய உதயசந்திரன் பேசுவதில் அர்த்தச் செறிவு இருந்தபோதிலும் ஆபத்தும் இருப்பதாகவும் ஓர் உள்ளுணர்வு நாகமாலினியை நினைக்கச் செய்கிறது.

"இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டுமா?"

"ஆம்... இப்பொழுதுதானே நாகமலையைக் கடந்துள்ளோம். நாகமலைக்கு அப்பால் ஒரு சிறு குன்று உள்ளது. அங்கே ஒரு குகை இருப்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். நாம் சென்று பதுங்க அதுதான் தோதான இடம்."

"அண்ணன் நாகாபரணி இருக்குமிடம் செல்வீர்கள் என்றல்லவா கருதினேன்."

"எப்படியும் பரணி அங்கு வந்துவிடுவான். ஐயம் வேண்டாம்."

"அண்ணனுக்கு ஜோசியமா தெரியும்?"

"விடிந்தால் ஊரே பேசப் போகும் விஷயம் நாம் தானே? அது அவன் செவிக்கும் சென்று சேரும். அதன் நிமித்தம் நிச்சயம் அவன் அந்தக் குகைக்கு வந்துவிடுவான்; கவலை வேண்டாம்."

- உதயசந்திரன் பேச்சோடு பேச்சாகச் சேணங்களை வேகமாய் முடுக்கி, பிடறியை உசுப்பி அந்த அரபு தேசத்து குதிரையைச் சிட்டெனவே பாயவிடுகிறான்.

நாகமாலினியும் அந்த வேகத்துக்கு ஈடு கொடுத்து அவனுடன் பயணிக்கிறாள்.

பின் தொடரும் அபாயத்தைத் துளிக்கூட உணராமலே...

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

ஆலவாய் நகரம் விழித்தெழும் காலை வேளை... ஆதவனின் பொற்கிரணம் பட்டுக் கூடலழகர் ஆலயக் கோபுரமும் அதன் தங்கக் கலசங்களும் தகத்தகாயமாய் மின்னத் தொடங்குகின்றன.

கோபுரச் சருக்கத்து புறாக்களுக்கெல்லாம் புத்துணர்ச்சி கிட்டினாற் போன்ற நிலை... கிரிதிருமால் நதியை வருடி நீந்தும் சக்கரவாகங்களும், நாரைக் கிடாக்களும் அருகாமை கதலி வனத்து தழைந்த இலைக்கூட்டம் மறைக்க வனம் பிரவேசித்து, அங்கே செவ்வாழையையும் பூவன் கனியையும் புசிக்கத் தவம் கிடக்கும் கிளிக்கூட்டத்தின் கண்டனத்திற்கு உள்ளானது போல் வனத்துக்குள் அவற்றின் அலகு பிளந்த சப்த ஒலிகள்!

பொழுதுகளில் அழகு மிக்கது மாலைப்பொழுது என்றால் எழுச்சி மிக்கது காலைப்பொழுது என்பதற் கேற்பக் கட்டடங்களில் மாமதுரை துயில் நீக்கம் செய்கிறது.

நதிக்கரைக்கு விழையும் நங்கையர்களும் பட்டர் பிரான்களுமாய் ஆற்றுச் சாலை சுறுசுறுப்பிற்குள்ளாக, கூடல் அழகர் ஆலயத்து வேழம் அழகர் பெருமானின் திருமஞ்சன நிமித்தம் தீர்த்தவாரிக்கென அதே சாலையில் பட்டர் அழகர் நம்பியின் திருவெள்ளளுடன் கம்பீர நடை போட்டுக் கொண்டிருக்கிறது.

பட்டரிடம் பழைய உற்சாகமோ கம்பீரமோ துளியும் இல்லை. பன்னிரு திருமண் காப்பும்கூட ஒரு பவித்திர மற்றுத் தெரிகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அன்றாட அனுஷ்டானங்களில் அநிச்சையாய் ஈடுபாடு காட்டிக் கொண்டிருக்கிறார். மனதென்னவோ முந்தைய இரவில் நிகழ்ந்த சம்பவத்தையே வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.

பேரரசு அழைப்பதாக அகத்தின் வாயிலுக்கு ராஜப் பல்லக்கு வந்து நின்றதும், அதில் ஏறி அரண்மனையை யடைந்ததும், பராந்தகனும் நெடுசாண்கிடையாக விழுந்து வணங்காத குறையாக அவரை வரவேற்றதும்-

"வரவேண்டும், வரவேண்டும்! பட்டர் பிரானின் திருவடிபட்டு இந்தப் பாண்டியப் பேரவை வைகுந்த வாசம் கொள்வதாக..."

"நன்றி பேரரசே... எனக்கெதற்கு இத்தனை உபசரணை..?"

"இது தங்கள் தன்னடக்கத்தைக் காட்டுகிறது. அது குறித்து மிக மகிழ்கிறேன். தங்களை அழைத்து வர உகந்த காரணம் இருக்கிறது பட்டரே-"

இப்படி இடையிட்டுப் பேசுபவர் ராஜகுரு பச்சைமால் தீர்த்தர். என்ன காரணம் என்ற வினா வேந்திப் பராந்தகன் நெஞ்சடையனை நோக்குகிறார் பட்டர்.

அதிசயமாக ராஜமாதாவும் அங்கு அருகே வீற்றிருக்கக் காண்கிறார்.

"பட்டர்பிரான் நல்ல சோதிட வல்லுநர் என்றும் அறிந்தேன்..." பராந்தகனிடம் காரணத்தின் துவக்கம்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"ஓரளவுக்குச் சோதிடக் கல்வி கற்றவன் என்பது உண்மையே."

"அந்தக் கல்வியால் பேரரசின் ஜாதகத்தைப் பார்த்தும் அவர் போர்க்களம் புகுந்தால் வெற்றி கொள்ள உகந்த காலம் எது என்றும் அறிந்து கூறப் பிரார்த்திக் கிறோம்." பட்டர் அழகர் நம்பி அதைக் கேட்டு சற்றுத் திகைக்கிறார்.

"ஏன் திகைக்கிறீர்கள்?"

"எவ்வளவோ பெரிய சோதிடர்கள் இந்தப் பாண்டி நாட்டில் இருக்க, என் சோதிடத்தைப் பெரிதாய்க் கருதி விட்டீர்களே?"

"காரணம் இருக்கிறது பட்டர் பிரானே! தாங்கள் அந்த வைகுண்ட நாதனான கூடலழகன் திருச்சந்நிதி யில் கைங்கர்யக் கர்மம் புரிபவர். தெய்வீக ஊழியமே ஊழியத்தில் உன்னதமான ஊழியம். அத்துடன் அந்தக் கருவறையின் அருள் அலைகள் தாலாட்ட, அங்கு பணிபுரிவதால், தங்கள் திருவாக்கிலும் அந்த அருள் வெளிப்படும் என்று நம்பியே அழைத்துள்ளோம்."

தீர்த்தரின் விளக்கத்தைத் தொடர்ந்து பட்டு மெத்தை விரிப்பில் வட்டமிட்டு அனைவரும் அமர, பராந்தகனின் ஜனன கால ஜாதகம் தீர்த்தர் மூலமாய்ப் பட்டர் கரத்துக்கு வருகிறது.

நம்பெருமானைப் பிரார்த்தித்த நிலையில் ஜாதகக் கட்டங்களில் நுழைகிறார் பட்டர்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இறுதிவரை அனைத்திலும் வெற்றியே கிட்டும் என்பதற்குத் தோதாகவே கிரகபலன்கள் தென்படுகின்றன.

தொடும் அனைத்தும் வெற்றி... வெற்றியைத் தவிர வேறில்லை. நவநாயகர்களில் சுபக் கிரகங்களின் வலுத்த பார்வை நான்கு இடங்களில் இருந்தும் கிட்டும்போது தோல்விக்கு இடம் ஏது?

- பட்டரின் முகத்தில் பிரகாசமான உணர்ச்சிகள் பொங்கி வழியத் தொடங்குகிறது.

"என்ன பட்டரே! யுத்தப் பிரவேசம் செய்யலாமா?"

"ஆஹா... நாள் கிழமை பாராமல் களத்தில் இறங்கினாலும் வெற்றி உமதே. அத்தனை வலுவான ஜாதகம் இது."

"எனில், வரும் பௌர்ணமிக்குப் போர் முரசு ஒலிக்கலாம்."

"திவ்யமாக..."

"அந்தப் பைராகி கூறியதும் மிகச் சரியே. தெய்வம் போல் வந்த அந்தப் பைராகி வாழ்க."

தீர்த்தரின் இசைந்த கருத்தோடு அனைவர் முகத்திலும் ஆனந்த உணர்வுகள் எச்சரிப்போடு வெளிப்படத் தொடங்குகின்றன.

பட்டர் ஜாதக ஓலையைச் சுருட்டப் போகும் வேளை ராஜ மாதாவிடம் இருந்து ஓர் ஆக்ஞை பிறக்கிறது.

"பட்டரே, ஜாதகத்தில் நான் வேறு சில விஷயங்களையும் அறிய வேண்டியுள்ளது. பராந்தகனுக்கு

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

திருமணக் காலம் எப்போது என்று பார்த்துச் சொல்லுங்கள் பார்ப்போம்..."

ராஜமாதாவின் அந்த ஆக்ஞை தீர்த்தருக்குக் கூடப் பிடித்த ஒன்றாகவே இருப்பதை அவரது முகக்களிப்பில் உணர முடிகிறது. "ஆம்... எம் அரசரின் மண வாழ்வு குறித்தும் அறிதல் அவசியமே! பட்டரே சற்றுப் பார்த்துக் கூறும்."

பட்டரும் மிகுந்த கவனத்துடன் திரும்பவும் அந்த ஜாதக ஓலையை ஆராயத் தலைப்படுகிறார். ஏனோ முகம் கறுத்துக் கலங்கிப் போகத் தொடங்கு கிறது.

முகக் குறிப்பாலேயே பட்டர் கூறப்போவதில் ஏதோ அபாயம் இருப்பதாக உணருகிறார் தீர்த்தர்.

"என்ன பட்டரே, ஏன் கலக்கம்?" ராஜமாதாவிடம் கூடக் கலக்கம் மிகுந்த கேள்வி.

"தாயே... என்னென்பேன்! இது செவ்வாய் தோஷ ஜாதகம். தோஷம் கடுமையாக உள்ளது. ஆகவே இதற் கேற்ற தோஷமுள்ள ஜாதகமே பேரரசர் இல்வாழ்வுக்கு ஏற்றது..."

பராந்தகனும் அதைக் கேட்டு திகைக்கிறான்.

"தோஷம் இருக்கிறதென்றால் பரிகாரம் செய்தால் தீர்ந்துவிடப் போகிறது. இதில் கலங்கி நிற்க எதுவும் இல்லை" என்கிறான் மிக வேகமாய்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தீர்த்தரின் உதட்டில் அர்த்தபுஷ்டியுள்ள சிரிப்பு. 'பராந்தகா. உன் காதலுக்கு உன் ஜாதகமே எதிராகி விட்டதே. பலே!' என்கிற நினைப்புடன் கலந்த சிரிப்பு.

"தீர்த்தர் நகைக்க காரணம்?" வேகமாய் வினவு கிறான் பராந்தகன்.

"காதல் சிலரை எப்படியெல்லாம் பேச வைத்து விடுகிறது என்று எண்ணினேன், நகைத்தேன்."

"நான் பேசியதில் பொருள் இல்லாதுபோனால் மட்டுமே நகைக்கலாம். இப்படித் தொடர்புபடுத்திச் சிந்திப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் தீர்த்தரே. அதிலும் அரச காதலை விமரிசிக்க யாருக்கும் நான் உரிமையளித்ததில்லை."

பராந்தகனிடம் கர்ஜனை.

"தேசம் பற்றிப் பேசவந்த இடத்தில் நேசம் கெடுவது போல் இதென்ன பேச்சு..? நமது முதல்குறி பல்லவ வெற்றி. அந்த நந்திப் பல்லவனை நசுக்குவது பற்றி மட்டுமே இனி அனைவரும் சிந்திக்க வேண்டும். மற்றதெல்லாம் பிறகு.." என்று பராந்தகனுக்கும் தீர்த்தருக்கும் இடையில் குறுக்கிடுகிறாள் ராஜமாதா பூசுந்தரி தேவியார்.

"எப்போது யுத்த ஓலை போக்கலாம் பட்டரே?" என்கிற அடுத்த வினாவும் உடனேயே பராந்தகனிடம் பிறந்து விடுகிறது.

"அதற்கு முன் பைராகியையும் கலந்துகொள்வது உசிதம்" என்கிறார் தீர்த்தர்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"இப்பொழுது பைராகி எங்கே?"

"கத்திக்காயம் பட்ட இடத்தில் சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது. ஓய்வில் இருக்கிறார் அவர்" என்கிற பதில் தீர்த்தரிடம் பிறக்கும்போது...

"பேரவைக்கு என் அனந்தகோடி வந்தனங்கள். வீர பராக்கிரமன் பராந்தக பாண்டியனுக்கு என் கோடி கோடி வந்தனங்கள்" என்கிற வாழ்த்தொலி கேட்கிறது.

- வாழ்த்தொலியோடு வந்து கொண்டிருப்பவர் பைராகிதான்!

பராந்தகன் எழுந்து நின்று பைராகியைப் பார்த்து புன்முறுவலுடன் வரவேற்கிறான்.

"வாருங்கள் பைராகி! உங்களைப் பற்றித்தான் இப்பொழுது பேசிக் கொண்டிருந்தேன். உங்களுக்கு நூறு வயது" என்கிறான்.

"நூறு வயதெதற்கு பராந்தகா...? பல்லவனை நீ வெற்றிகண்ட மறுகணம் என் ஆவி நீங்கினாலும் அது எனக்குப் பேரானந்தமே. தனக்கு இணையாக எவரும் இருந்துவிடக் கூடாது என்கிற மமதைக்கும் நாடு பிடிக்கும் ஆசைக்கும் நீ பாடம் கற்பித்தே தீரவேண்டும். உன்னால் மட்டுமே முடியும்" என்கிற பைராகியின் கிழட்டுப் பார்வை பட்டரைப் பார்க்கிறது.

"என் கருத்தோடு இசைந்து போகிறதா பட்டரின் கருத்து?" என்று உதட்டில் கேள்வி வேறு பிறக்கிறது.

"ஆஹா... எதைத் தொட்டாலும் வெற்றி என்று கூறிவிட்டார் பட்டர்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"பிறகென்ன... நாள் பார்க்க வேண்டியதுதானே?"

"நிச்சயமாக... ஆனால், அதற்கு முன்பாக சில காரியங்கள் பாக்கி உள்ளது பைராகி. அவற்றைச் செம்மையாக முடித்த பிறகு ஓலை போக்கிக் கொள்வோம்" எனும் பராந்தகனின் அந்த வியப்பூட்டும் முடிவைத் தீர்த்தரும் ராஜமாதாவும்கூட அதிர்ச்சியுடன்தான் அங்கீகரிக்கின்றனர்.

அன்று இரவே பராந்தகன் பல்லக்கில் ஏறிப் பட்டரின் இல்லம் விழைந்து மதுரவல்லியைக் காண முனைந்ததில்தான் பட்டர் அதிகம் நிலை குலைகிறார்.

பாலும் பழமும் தந்து விருந்தோம்பிய நிலையில் கலங்கிய விழிகளோடு கேட்கிறாள் மதுரவல்லி.

"தங்கள் ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் இருப்பதாக..."

"அதற்குள் உன் தந்தையார் அதை உன்னிடம் கூறிவிட்டாரா மதுரா?"

"எப்படிக் கூறாமலிருக்க முடியும்? மிகக் கொடிய தோஷமாயிற்றே அது. ஆணுக்கிருந்தால் பெண்ணுக்கும், பெண்ணுக்கிருந்தால் ஆணுக்குமாய்ப் பாதிப்பை உருவாக்கி இல்வாழ்வே நிலை குலையுமாமே?"

"கலங்காதே... பரிகாரங்கள் அனைத்தையும் நிவர்த்தி செய்துவிடும்."

"அது என்ன என்று அறிவீர்களா?"

"அதை அறிவதை விடவும் பெரிய பணி ஒன்று உள்ளது..."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"தெரியும், பல்லவ யுத்தம்தானே?"

"ஆம்... யுத்தம் செல்லும் முன் உன்னைக் கண்டு பேசிச் செல்ல விரும்பினேன். உனது புத்துணர்ச்சியூட்டும் பேச்சு எனக்குள் எழுச்சியூட்டி என்னை உற்சாகம் குனறாமல் பார்த்துக் கொள்ளும் என்று நம்புகிறேன்."

"உற்சாகத்திற்கு உற்சாகம் தரும் சக்தி என்னிடம் இருப்பதாக தாங்கள் நம்புவது என் பாக்கியம். தங்களை நான் தழுவாவிடினும் வெற்றித் தேவதை தழுவியே தீருவாள்."

"இன்னொரு முறை அப்படிக் கூறாதே.. உன்னைத் தழுவத்தான் வெற்றியையே நான் தழுவத் துடிக்கிறேன். உன்னைத் தழுவ இயலாத வெற்றி எனக்கு மாபெரும் தோல்வியே..'

பராந்தகன் அப்படிப் பேசிச்சென்றது வரை நடந்தவை அனைத்தும் பட்டருக்குள் நினைவலையாய் அலைந்து கிளர்ந்து அவருக்குள் துயர மூட்டமாய்ப் படிகின்றன.

அரசனின் காதலுக்கு ஆசாரமும் அந்தஸ்தும் மட்டுமே குறுக்கே நின்ற நிலை மாறி, கூட தோஷமெனும் விஷயமும் சேர்ந்திருக்கிறதே.

இது எதில் போய் முடியும்?

கலங்கிய மனசோடு ஆலயத்தை அடைகிறார் பட்டர்.

தீர்த்தர் வந்திருக்கிறார் என்பதற்கு இசைவாக வாயிற்புறம் பல்லக்கும் பல்லக்குத் தூக்கிகளின் குழுமமும் தெரிகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தீர்த்தக் குடத்துடன் உள்ளே நுழைபவரைத் தீர்த்தரும் பிரகாசமான புன்னகையுடன் வரவேற்கிறார்.

இத்தனை பிரகாசமாய் தேஜோமயமாய் அவரை இதற்குமுன் பார்த்திராத கோலத்தில் வெண்பட்டுக் கச்சமும் சிவப்புத் துவட்டலுமாய்த் தெரிபவரைப் பார்க்க பட்டருக்கே ஆச்சரியமாகிப் போகிறது.

"வரவேண்டும்! வரவேண்டும்! இதோ சில நொடிப் பொழுதில் பெருமானின் திருமஞ்சனம் துவங்கிவிடும்" - என்கிறார், தீர்த்தரிடம் அழியாப் புன்னகை.

"எம்பெருமானை இன்று இருந்து சேவிக்கவே வந்துள்ளேன் பட்டரே" என்று உற்சாகமாய்த் தொடங்கு கிறார்.

"மிக மகிழ்ச்சி. எம்பெருமானின் கிருபாகடாட்சம் உங்களுக்குக் கிட்டட்டும்." பட்டரின் கால்கள் பேச்சோடு பேச்சாகக் கருவறை நோக்கிக் காலெடுக்கின்றன.

ஆலவாய் நகரத்து வைகை வனத்துப் பூக்க ளெல்லாம் குடலை குடலையாய் ஒருபுறம் குவிந்து கிடக்க, ஆலயத்து மடப்பள்ளி கர்த்தாக்கள் அரைத்து வைத்த சந்தனமும் பசும்பால் செம்புகளும் கருவறை ஓரமாய்க் காத்திருக்கின்றன.

பட்டரின் உதட்டில் மந்திரப் பாசுரங்களின் பிரசவம்.

மதிமயக்கத்துடன் அதைத் தீர்த்தர் அனுபவிக்கும் போது ஒரு மத்யதர வீரன் ஆலய வாசலில் புரவி நீக்கம் செய்கிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இறங்கிய வேகத்தில் தீர்த்தரைக் காணும் ஆவலுடன் உள் நுழைகிறான். அவன் நடையில் வேகமான வேகம்.

தீர்த்தர் திருச்சந்நிதி முன் கூப்பிய கரத்துடன் நிற்பதைப் பார்த்து வந்தன முழக்கங்களுடன் அவர் முன் செல்கிறார்.

"வா வனமாலி..."

"வந்தனம் தீர்த்தரே... அந்தப் பல்லவ தளபதியும் நமது நாகமாலினி தேவியாரும் நாகமலைக்கு நான்கு காதத் தொலைவில் உள்ள ஒரு குன்றின் குகையில் அடைக்கலமாகியுள்ளனர். நந்தி பல்லவனுக்கும் ஓலை போக்கியுள்ளனர். ஓலை இந்த விநாடி சோழ நாட்டைத் தொட்டிருக்கும்."

"நல்லது அரண்மனையின் நிலை என்ன?"

"தோழி கோமளத்தின் பிலாக்கணம், ராஜமாதா பூசுந்தரி தேவியாரின் கலக்கம் என்று சோகமயமான நிலையை எட்டியுள்ளது. பேரரசர் அனைத்தும் புரிந்த மாதிரி அமைதியாய்த் தங்கள் வருகைக்குக் காத்திருக்கிறார்."

அர்த்தபுஷ்டியுள்ள புன்னகையுடன் கூடல் அழகர் பிரான் பக்கம் திரும்புகிறார் தீர்த்தர்.

வனமாலி எனும் அந்த வீரன் குறிப்பறிந்து ஒதுங்கி நின்று கொள்கிறான்.

திருச்சந்நிதியோ எம்பெருமானின் திருமஞ்சன நிமித்தம் வாசனாதி திரவிய மணத்தோடு கமழும் அந்த

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நற்காலை வேளையில் அங்கே திடுமென முரசொலி கேட்கிறது.

"யாரது?" நிமிர்ந்தால் நேரில் மதுரவல்லி. வைகுண்டம் விட்டுப் பரந்தாமனை மறந்து பூவுலகம் வந்துவிட்ட ஸ்ரீதேவி சொரூபத்துடன் அவளைப் பார்த்தக் கால் தீர்த்தருக்கே நிலை தடுமாறிப் போகிறது.

மதுரவல்லி தீர்த்தரை மென்னகையுடன் வணங்கி விட்டு, சந்நிதியை நோக்கத் தொடங்குகிறாள். கிரிதிருமால் நதி நீர்ப் பொட்டுகள் இன்னமும் கூந்தலைவிட்டு நீங்காமல் அங்கங்கே தேங்கியொழுகும் நிலையில் பின்னிக் கட்டப்பட்ட பிச்சியரும்புகள் கூந்தலில் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக்கின்றன.

ஏனோ அவள் முகத்தில் சோகம் பூசி மெழுகப் பட்ட மாதிரி தெரிகிறது. அதையும் மீறி எழில்வனப்பு பிரகாசிக்கிறது.

"மதுரா..." தீர்த்தரிடம் விளிப்பு. மதுரவல்லி திரும்புகின்றாள்.

"ஏன் உன் வதனத்தில் சோகம் ததும்புகிறது."

அந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்ல. அவள் கருவிழிகளில் வேகமாக மருட்சி பரவுகிறது.

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்கிற பதில் இதழ்க் கனி பிளந்து வெளிப்படுகிறது.

"பராந்தகன் யுத்த சாரம் புகப் போவதை எண்ணிய கலக்கமா?" தீர்த்தரின் வினா எதிரில், எந்தப் பேச்சுமின்றி

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அவரையே வெறித்துக் கொண்டு நிற்கிறாள் மதுர வல்லி.

"இந்த யுத்தம் வெற்றியில் முடியுமோ இல்லை தோல்வியில் முடியுமோ என்றெல்லாம்கூட எண்ணங்கள் எழலாம். ஆனால், பராந்தகனிடம் தோல்விக்கு இடமே யில்லை. அவன் சுத்த வீர புருஷன். அத்துடன் இந்த வைகுண்ட மூர்த்தியின் பக்த முக்தன். நுண்ணறிவாளன்."

- தீர்த்தர் உற்சாகப் பிரசங்கமே நிகழ்த்தத் தொடங்குகிறார், மறுப்பாக அதை ரசிக்காத பார்வை மதுரவல்லியிடம்.

"நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லாதது போல் தெரிகிறதே..?"

"தீர்த்தர் பிரானே! அருள் கூர்ந்து தங்கள் திரு வாயை மூடி என்னைப் பெருமானைச் சேவிக்கவிடு கின்றீர்களா?" என்று சற்றுச் சப்தமாகவே கேட்டு விடுகிறாள்.

"எதற்கு இத்தனை கோபம் மதுரா?" பட்டரும் கேள்வியுடன் சந்நிதி விட்டு வெளிவந்து சேர, மதுர வல்லியின் நயனங்கள் அவரை மிகுந்த சோகத்துடன் நோக்குகின்றன.

"அப்பா. இந்தத் தீர்த்தரின் பேச்சு ஏனோ எனக்குள் புயலைக் கிளப்பி விட்டு விட்டது. சற்றுமுன்தான் பாண்டிய அரண்மனையில் பல்லவ தளபதி ஒருவன் நாகமாலினி தேவியாரையே சிறையெடுத்து சென்று விட்டதாகத் தகவலறிந்தேன்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

'ஒரு பல்லவன் நாட்டுக்குள் நுழைந்து அரண் மனையிலும் இடம்பிடித்து, இப்படிச் சிறையெடுத்தும் செல்லுமளவு நிலை இருப்பதை எண்ணி நான் குமைந்து கொண்டிருக்கும்போது இவர் என்னவென்றால், நமது அரசர்பிரானை நுண்ணறிவாளன், பக்தமுக்தன் என் றெல்லாம் கூறி என்னைச் சமாதானிக்கப் பார்க்கிறார்.

நடப்பதைப் பார்த்தால் யார் வல்லாளர் என்றே கணிக்க முடியவில்லை. பல்லவர்கள் கரமே ஓங்கித் தெரிகிறது. இப்படியே போனால் காலம் நாளை என்னையல்லவா குற்றம் சொல்லும் என்பாலுற்றமை யலால் அரசர் பல்லவனிடம் தன்னை இழந்தார் என்று..?"

- மதுரவல்லியின் குமுறலை எவ்விதப் பதற்றமு மின்றி எதிர்கொள்ளும் தீர்த்தரின் முகத்தில் அதே அழியாத அர்த்தச் செறிவுள்ள புன்னகை.

"உன் உள்ளுணர்ச்சி புரிகிறது மதுரா. ஆனாலும் ராஜவியூகங்களை பற்றி நீ எதையும் அறியாய்..." என்று தீர்த்தர், மதுரவல்லியைத் தேற்றும்போது ஆலய வாயிலில் ஒரு புதிய கிழட்டு மனிதர் முளைத்திருந் தார். காவி உடையும் திரிசடையுமாய்த் தெரிந்த அந்த மனிதரை ஆலயப் படிக்கட்டுகள் தடுமாற்றத்துடன் வரவேற்கின்றன.

"ஏய் யார் நீ?" தீர்த்தரைத் தொடர்ந்து வந்திருந்த காவற்பணியாளனின் வினாமுன் அந்தக் கிழட்டுச் சந்நியாசி தடுமாற்றத்துடன் நிமிருகிறார்.

"நானொரு சந்நியாசி, பார்த்தால் தெரிய வில்லையா? பெருமாளைத் தரிசிக்க வந்திருக்கிறேன். காசியிலிருந்து வருகிறேனப்பா..." என்று நடுக்கத்துடன்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பேசும் அவனைக் காவற்பணியாளன் சந்தேகமான பார்வையுடன் உள் அனுப்ப, உள்ளே திருச்சந்நிதிமுன் தீர்த்தர், மதுரவல்லியுடன் விவரிப்பில் இருந்தார்.

"மதுரா, நீ நினைப்பது மிகத் தவறு. அந்தப் பல்லவ தளபதி அரண்மனைக்குள் நுழைந்த கணம் முதல் இப்பொழுது அவன் எங்கிருக்கிறான் என்பது வரை அனைத்தையுமே இந்தப் பாண்டிய அரசு அறியும். இதற்குமேல் நான் உன்னிடம் பேசினால் அது குற்றமாகும். பொறுத்திருந்து பார்... பல்லவனா, ராஜபாண்டியனா என்று-"

- தீர்த்தர் அப்படிக் கூறியதைக் கேட்டு அந்தக் கிழட்டுச் சந்நியாசி முகம் உடனேயே இறுகிப் போய்க் குமையத் தொடங்குவது துல்லியமாகத் தெரிந்து போயிற்று.

# 16

கூடல் அழகர் ஆலய திருச்சந்நிதி முன் தீர்த்தரும் மதுரவல்லியும் புதிர்படப் பேசுவதைக் கேட்ட அந்தக் கிழட்டுச் சந்நியாசி முகம் ஏன் அப்படி இறுகிற்றோ தெரியவில்லை.

அந்தச் சந்நியாசியும்கூடச் சந்நிதி வரை சென்று அழகர் பெருமாளை வணங்காமல் பாதியிலேயே திரும்பி நடக்கத் தொடங்குகிறார்.

'முன் உள் நுழைகையில் எங்கே செல்கிறாய்?' என்று வினவிய காவற் பணியாளனுக்கு அந்தச் சந்நியாசியின் போக்கு சந்தேகத்தைத் தருகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"ஏ கிழட்டுச் சந்நியாசி... யார் நீ? எதற்காக வந்த வேகத்தில் திரும்புகிறாய்?" - காவற்பணியாளன் தன் வேற்கோலை இறுகப் பிடித்தபடி எதிர்வந்து நின்று கேட்கும் கேள்விக்கு எந்தப் பதிலைச் சொல்ல...

சந்நியாசியிடம் உரக்கவே சிரிப்பு.

"சொல்லி விட்டுச் சிரி... இல்லாவிட்டால் இந்த வேல் கம்பாலேயே உன்னைக் கொன்றுவிடுவேன். பெருமாளை வணங்க வந்தாயா, இல்லை யாரையாவது உளவு பார்க்க வந்தாயா?"

"அப்பனே... பொறு... பொறு... நான் பெருமாளைத் தரிசிக்கவே வந்தேன். ஆனால், வந்த இடத்தில் சந்நிதி வாயிலிலேயே வைணவச் செம்மலான தீர்த்தரையும் இந்த மாமதுரை நாயகியான மதுரவல்லியையும் பார்த்ததுடன் அவர்கள் இருவரும் அரசியல் பேசிய வண்ணம் இருப்பதால் நான் இடையூறாக இருக்கக் கூடாது என்று திரும்பி விட்டேனப்பா... இது புரியாமல் நீ கூப்பாடு போடுகின்றாயே!"

சந்நியாசியின் பேச்சில் தெரிந்த அந்த நியாயத்தைக் கேட்டு அந்தக் காவற்பணியாளன் சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டவனாய் அவர் வெளியேறத் தடையின்றி வழிவிடுகிறான்.

அந்தக் கிழட்டுச் சந்நியாசியும்கூட ஆலயத்தை எதிர்நோக்கி நீண்டு கிடக்கும் சந்நிதித் தெருவில் இறங்கி வேகமாக நடக்கிறார்.

நடையா அது? ஒரு விடலை வாலிபன் ஏறு தழுவும் போதோ, இல்லை விழாக்காலங்களில் ரதங்களை இயக்கும்போதோ காட்டும் வேகம் மிக்க ஓட்டம் அது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அந்த ஓட்டத்தையே பார்த்து அதிசயித்து நிற்கும் அந்தக் காவற்பணியாளனின் மேல் இப்பொழுது தீர்த்தரின் செம்பவழ மோதிரம் தரித்த விரல்களைக் கொண்ட கரத்தின் பற்றுதல்.

"வீரனே- யாரை அப்படிப் பார்க்கிறாய்?"

"ஐயா... ஒரு கிழட்டுச் சந்நியாசி பெருமாளைத் தரிசிக்க வந்துவிட்டுத் தரிசியாமலே தாங்கள் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டுத் திரும்பி விட்டார். அவர் நடையின் வேகம் எனக்கு ஆச்சரியம் தருகிறது.

ஆகவேதான் அதிசயித்து நின்றுவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்."

"முதலில் கிழட்டு வேடத்தில் இருப்பவருக்கும் நிஜமான கிழவனுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நீ தெரிந்து கொள்ள வேண்டும்.

இன்னும் உன்னைப் போல எத்தனை வீரர்கள் ஏமாளிகளாகவே இருக்கிறார்களோ தெரியவில்லை. அதிலும் பல்லவனுக்கு எதிராக யுத்தம் புரிய வேண்டிய வேளையில் இத்தனை பசலிகளாய் வீரர்கள் இருப்பது இந்த மண்ணுக்கு நல்லதல்ல."

தீர்த்தர் பேசப் பேச அந்தக் காவல் வீரன் கதிகலங்கிப் போகிறான்.

'வந்து சென்ற மனிதர் கிழவேடம் தரித்தவரா? அது எப்படி அவரைப் பாராமலே தீர்த்தர் அறிவார்?'

அவனுக்குள் வினாப் புரவிகளின் பாய்ச்சல்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

ஆனால், அப்படிப் பேசினபோதிலும் தீர்த்தர் பதற்றம் கொண்ட மாதிரியே தெரியவில்லை.

தன் அடியை ஒற்றித் தன்னைத் தொடர்ந்து வரும் தனது உளவாளியை மட்டும் தீர்த்தர் பார்க்கும் விதமே வேறு விதமாக இருக்கிறது.

அவன் முகத்திலும்கூட அது புரிந்த மாதிரி ஓர் அர்த்தச் செறிவுள்ள புன்னகை?

**கா**ஞ்சி! பருவம் தப்பி வீசும் வேகக் காற்றுக்கு ஈடுகொடுத்தபடி மாளிகைக் கொடிகள் சடசடத்துக் கொண்டிருக்க, மலர்க்கொடிகள் எல்லாம் கொழு கொம்பை நீங்கிவிடுவோமோ என்று அஞ்சியவாறு தங்களின் பிஞ்சுத் தளிர் நுனிகளில் தவிப்பைச் சுமந்து நிற்க– காஞ்சி மாநகர் மேலே மேகங்களின் குழுமம்.

மெலிந்த சாம்பல் வர்ணம் பூசப்பட்டது போன்ற அந்த மேகங்கள் மழையாய்ப் பொழியுமா, இல்லை, காஞ்சி மாநகர் மக்களின் உள்ளத்தை இருள் சூழப் போவது போல் தெரிவதை உத்தேசிக்க அவையும் வந்து சங்கமித்து விட்டதா என்பது தெரியவில்லை.

வாணிப நிமித்தமாகவும் வேறு பல நோக்கங் களுக்காகவும் புரவிகள் மேல் ஏறி அமர்ந்தும், அவற்றில் சேணம் பிடித்தும் சாலைகளில் விரையும் ஒவ்வொரு குடிமகன் முகத்திலும் ஏதோ இனம் புரியாத ஒரு சோகம் பரவிக் கிடப்பதைப் பார்க்க முடிகிறது.

குமரக் கோட்டம் செல்லும் பாதையை ஒட்டி பெரிய திருக்குளம் ஒன்று உண்டு. அபூர்வ ஊற்று ஒன்று

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அங்கிருப்பதை அறிந்து நந்திப் பல்லவனின் தந்தையான முதலாம் நந்தி அந்த ஊற்றுப் பகுதியை நாற்புறமும் விரித்தடக்கித் திருக்குளமாக்கினான்.

காஞ்சி நகர மக்களின் தண்ணீர்த் தேவைக்கு உதவியாக அந்தத் திருக்குளம் விளங்கிற்று. அந்த குளத்தின் ஒரு கரையில் புரவியும் பசு மாடுகளும் விலை போகும் தாவணிச் சந்தை ஒன்று உண்டு. மறு கரையிலோ ஆடை அணிகலன் முதல் வர்ணச் சுதை முதல் சகலமும் விற்பனைக்குக் கிடைக்கும்படியான ஒரு வணிக வளாகம் இருக்கிறது; மூன்றாம் பக்கத்தில்தான் பண்டமாற்றுச் சந்தை இருக்கிறது.

நெல்லுக்குப் பருத்தியும், பருத்திக்கு நவதானியமும், நவதானியங்களுக்கு மண்பாண்டங்களும் என்று எதை வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளும் விநோதச் சந்தை அது.

நான்காம் பக்கத்தில் இருப்பதுநான்கு பேரச் சந்தை, பெரும் செல்வர்கள் மட்டுமே வந்து தங்கம் வைரம் என்று வாங்கிச் செல்ல முடிந்த சந்தையாக அது இருக்கிறது.

வண்ண வண்ணக் கூடாரம் அமைத்துக் கூடாரத்தின் வெளியில் காவல் வீரர்கள் நிற்க, வைர வியாபாரிகள் உள்ளிருந்து நிகழ்த்தும் வைர வைடூரிய வியாபாரம் முன்பெல்லாம் மிக்க களையோடு நடைபெறும்.

இப்பொழுது ஏனோ அதில் வேகமில்லை. சேர சோழ பாண்டி நாட்டவர்கள் என்றில்லாமல் கெங்கர்கள், ஹீனர்கள், ராஷ்ட்ரகூடர்கள். சாளுக்கியர்கள் என்று வகை தொகையில்லாமல் எல்லாருமே வர்த்தகத்துக்கு

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வந்து போகும் அந்தச் சந்தை ஏனோ சுரத்தில்லாமல் இயங்குகிறது.

எல்லாருக்குள்ளுமே யுத்த கவலை வந்து விட்டது போலும்.

எந்த நாளிலும் யுத்தம் தொடங்கலாம் என்று எப்படித்தான் வதந்தி பரவியதோ?

அப்படி யுத்தம் தொடங்கினால் யார் வெற்றி அடைவார்கள்; அது பல்லவனுக்கு சாதகமாக இருக்குமா, இல்லை பாண்டியருக்குச் சாதகமாக இருக்குமா என்றெல்லாம் கவலை மிகக் கொண்ட வாதப்பிரதி வாதங்களை அநேக மன்றங்களில் கேட்க முடிகிறது.

பல்லவ தேசமெங்கும் இப்பொழுது இதே கவலைதான்.

அந்தக் கவலை நந்திக்கு மட்டும் இருக்காதா என்ன?

தனது உப்பரிகையில் இதுகுறித்த ஆழ்ந்த சிந்தையுடன் ஒரு கூண்டுப் புலி போல் நடைபோட்டபடி இருக்கிறான் நந்தி.

உதயசந்திரனிடமிருந்து இதுவரை நற்செய்தி எதுவும் வந்தபாடில்லை. அவனது மதியூகம் பாண்டிய தேசத்தில் எந்த அளவு செயல்பட்டிருக்கும்?

கேள்விப் புழுக்கம் தாளாமல் துக்கம் மிகக் கொள்கிறான் நந்தி. நடுநடுவே யாக வேளையில், 'இன்று போய் நாளை வா' என்கிற ரீதியில் பராந்தகன் பேசிய பேச்சு மனத்துள் எழும்பி ஊசியாய்க் குத்துகிறது. தனக்கு எதிராகவும் ஒருவன் மார் தட்டுவதா? மனத்தை வினா

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

முள் தைக்கிறது. ஏகதேச சக்கரவர்த்தியாகத் தன்னை கற்பனை செய்து பார்த்திருக்கும் நினைவில் பராந்தகன் நெருடுவதைச் சகியாது பெருமூச்சு, பரந்த மார்பைத் தழைத்து உயர்த்துகிறது.

ஊடே கொலுசுச் சப்தத்தின் குறுக்கீடு. சப்தம் முதலாகவும் மனோரஞ்சித மலர் வாசம் சற்றுப் பின்தங்கியும் வருகின்றன.

ரஞ்சிதமலர் சூடிக் கொலுசு சப்திக்க வருபவள் நந்தியின் இதயநாயகி! பல்லவ தேசத்துக்கே தாய் என்று அவன் கருதும் சகதர்மினி.

ரீவா என்கிற பெயரில் மட்டும் அந்நியத் தன்மை யில்லாமல் உருவம், உடை என்று சகலத்திலும் அவள் மாறுபட்டுத்தான் தெரிகிறாள்.

பால்போன்ற தேகம் நெடிதுயர்ந்த உயரம் நிகர்த்த கூந்தல் சற்றே செம்பழுப்பில் விழிப்புலன் என்று அழகின் சொரூபமாய்த் தெரிகிறாள். மதர்த்த மார்பு பால்குட மாய்த் தளும்ப. மெல்லிய ஆடைகொண்டு அதை பொத்தி அவள் நடையிடும் தோரணையில் கலாபங்களின் தோல்வி தெரிகிறது.

பல்லவ மகளிர் தங்களின் அடர்ந்த கூந்தலைப் பிணைத்து நீவியிருப்பார்கள். அன்றேல் ஒரு கொண்டை போல் அதை விதவிதமாய் வளைத்துக் கட்டியிருப்பார்கள்.

விரிசடையாய் ஒரு அருவி சரிவது போல் கட்டாமல் விட்டிருக்க மாட்டார்கள். நீராடிக் கழிந்த நிமிடங்களில்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அது உலரும் வரை சடை விரிந்தும் தளர்ந்தும் கிடப்பதும் கூட அமங்கலம் என்பதாக ஓர் எண்ணம் சிலரிடம் உண்டு. ஆனால், ரீவாபிராட்டி அதை நம்பாதவள் போல் விரிசடை கெழும நடையிட்டு வந்து, நந்தி எதிரே நின்ற நிலையில் நந்திக்கே கூட ராஜ்ய சிந்தனைகள் பின்னோக்கியும் ஏகாந்த சிந்தை முன்னோக்கியும் வருகிறது.

ரீவாவின் பார்வையோ நந்தியை அதே ஏகாந்தத்துடன் சேர்க்காமல் சற்று மருட்சியுடன் வெறிக்கிறது.

அருகாமைப் பஞ்சணையின் விளிம்பில் அமர்ந்தவாறு வெறிப்பைத் தொடருகிறது அவள் பார்வை.

"ஏன் வெறிக்கிறாய் ரீவா?" நந்தி மென்மையாக இதழ் பிரிக்கிறான்.

"தளர் நிலையில் உங்களைப் பார்க்கும்போது வெறிக்காமல் இருக்க முடியவில்லை அன்பே..."

"தளர்ச்சி, எழுச்சி எல்லாம் ராஜ்யபாரம் சுமப்பவர்களுக்கு இயல்பான ஒன்றுதானே...?"

"இயல்பு மீறிய விஷயமாய் இருக்கிறதே இன்று நம் நிலை... பல்லவ தேசமெங்கும் இருள் படிந்த மாதிரி ஒரு தோற்றம் தெரிகிறது, எங்கு பார்த்தாலும் யுத்தம் பற்றிதான் சிந்தனை. கல்வியும் கலையும் ராஜநடை போடும் காஞ்சியில் வதந்தியும் கவலையும் ராஜநடை போடக் காரணம் என்ன?"

"மாமதுரையில் எனக்கு வேள்வி நிமித்தம் நேர்ந்த தோல்வி இன்று இப்படி எல்லாம் உருமாறிவிட்டது ரீவா. சோதிடமும் எதிராக இருக்கிறது. பரிகாரங்களில்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நம்பிக்கை வைத்தும், எனது வீரத்தில் அதனினும் கூடுதலாய் நம்பிக்கை வைத்தும் நான் யுத்தம் பற்றிச் சிந்தித்த வண்ணம் இருக்கிறேன்.

"இன்றைய இருள் படிந்த நிலை நிச்சயம் நாளை மாறத்தான் போகிறது. நான் மாற்றத்தான் போகிறேன். உதயசந்திரனின் ஓலைக்காகக் காத்திருக்கிறேன். மிகத் தேர்ந்த மதியூகி அவன். நிச்சயமாக நற்செய்தி தருவான்..."

நந்தியின் நம்பிக்கை வீண் போகாதது போல் அந்த அரண்மனையின் உப்பரிகை வளாகத்தில் வீரன் ஒருவனின் வேகநடை...

உப்பரிகை முகப்பில் நிற்கும் வீரர் காவலைத் தாண்டி நந்தி ஓய்வெடுக்கும் மாடம்வரை வந்துவிட்ட அந்த வீரன், மிக உற்சாகமாய், "வீர பல்லவ ஏகதேச வேந்தர் மாமன்னர் நந்திவர்மருக்கு மனம் பணிந்த வந்தனங்கள்" என்கிற கட்டியத்துடன் எதிர்வந்து நிற்கும் அந்த வீரனை பார்த்த மாத்திரத்தில் நந்திப் பல்லவன் முகத்தில் அதுகாறும் தாண்டவமாடிய களைப்பும் அலுப்பும் தூர ஓடியது போல ஓர் உற்சாகம்.

"வா ஜெயந்தா, வா. உதயசந்திரனிடமிருந்துதானே செய்தி...?"

"ஆம் அரசே; சற்றுமுன்தான் கிட்டியது. உடனேயே ஓடிவந்தேன்."

"நன்று, மிக நன்று."

சேதியை வாங்கி வாசிக்கத் தலைப்படுகிறது நந்தியின் உதடுகள்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

'மாமன்னர் வீரக்கழலடிக்கு உதயசந்திரனின் பணிவான வந்தனங்கள்.

எந்த நோக்கிற்காக மதுரையை அடைந்தேனோ அதில் ஏறத்தாழ வெற்றி கண்டுவிட்டேன். எனது அறிவின் வலையில் நாகமாலினியும் விழுந்துவிட்டாள். இன்று அவள் என் கைப்பாவை. அதுமட்டுமல்ல... உறவுக்காரனான செங்கனே பாண்டியாதிபதிக்கு எதிராக மாறி பராந்தகர் உள்ளம் நோகும்படி குழப்பம் விளைவிக்கப் போகிறான். இங்கே தீர்த்தர் என்னும் ஒரு கிழட்டுப் புலி மட்டும் சற்றுப் புத்திசாலித்தனமாய் விளையாடிக் கொண்டிருக்கிறது.

நான் காஞ்சி நோக்கி வரும் நாள் மிக மிகச் சமீபத்தில். நாகமாலினியுடன் வருவேன். வருமுன் அவளைக் காந்தர்வ மணம் புரியவும் விருப்பம். உங்கள் எதிரில் அதி விமரிசையாக மணம் புரிந்துகொண்டு ஆசிபெற இயலாத நிலைக்காக மட்டுமே வருந்துகிறேன்.

எனது சபதத்தை ஈடேற்றி நம் பல்லவப் பெருந் தேசத்தின் வியாபிப்பை நாம் மதுரையிலும் உருவாக்கும் நாள் தொலைவிலில்லை.

நமது அவைக்கும் மகாமந்திரி உள்ளடங்கிய பிரதானிகளுக்கும் எனது வணக்கங்களையும் கனிவான விசாரிப்பையும் கூறவும்... தாசானுதாசன் வீரபல்லவ திலகன் உதயசந்திரன்..'

அந்த லிகிதத்தை வாசித்த நொடியில் நந்தியின் முகத்தில் ஆனந்தச் செருக்கு பெருக்கெடுத்தோடுகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"பலே, உதயசந்திரா! பலே.. தளபதிகளின் திலகம் என்று மட்டுமே உன்னை எண்ணினேன். ஒரு ராஜ குருவைப் போன்ற மதியூகியாக, மாவீரனாக உன்னை இப்பொழுது உணருகிறேன், பலே.. பலே.."

நந்திப் பல்லவனின் உற்சாகப் பேச்சு ரீவா பிராட்டியையும் எழுச்சிக்குள் தள்ளுகிறது.

"நீங்கள் எதிர்பார்த்தது போன்ற நற்செய்தியோ?"

"ஆம் அன்பே. ஆனந்தச் செய்தி இது! தனி ஒருவனாக உதயசந்திரன், பாண்டியனின் கண்ணில் விரலைவிட்டு ஆட்டிக் கொண்டிருப்பதை இங்கிருந்தே உணருகிறேன். அந்தக் கெங்க நாட்டுப் பெண் பாம்புப் பாவை நாகாவையே தன்வசமாக்கி விட்டானே."

"படை பலம் பற்றி ஏதும் தகவல் உண்டா?"

"நீயே வாசித்துப்பார்.." - லிகிதத்தை ரீவா எதிரே நீட்டிய பல்லவன் தமிழறியா அவள் நிலை உணர்ந்து, "உனக்குக் கிரந்தம் மட்டுமே வாசிக்கத் தெரியும் என்பதை மறந்துபோய் விட்டேன்" என்று அந்த லிகிதத்தைச் சுருட்டிக் கையில் அடக்கிக் கொள்கிறான்.

அவையைச் சந்திக்கும் ஆவல் அவனுக்கு வந்து விட்டதை ரீவாலால் உணர முடிகிறது.

"அவை கூட்டப் போகிறீர்களா?"

"ஆம்... மதுரை வசமாகும் வரை இனி அந்தச் சிந்தனைதான்."

"அப்படி என்ன அந்த மதுரைமேல் மட்டும் உங்களுக்கு அத்தனை ஈடுபாடு?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"மதுரை என் லட்சியக் கனவு ரீவா! அடுக்கடுக்கான தோல்வியைத் தந்துவிட்டு நான் மிக விரும்பும் வெற்றித் தேவதை அங்கேதான் கொலுவிருக்கிறாள் அவளைத் தேரில் ஏற்றி நான் காஞ்சிக்கு அழைத்து வந்தாக வேண்டும்.

மதுரை மட்டும் வசப்பட்டு விட்டால் மற்றவை தானாய் வசப்பட்டு விடும். ஒரு தேசம், ஒரே தேசம், ஒரே அரசன், அவன் பல்லவன் என்று மட்டுமே எதிர்கால வரலாறு பேச வேண்டும்.

அதைப் பார்த்து உன் தந்தை தண்டி முதல் சாளுக்கியவர்கள்வரை சகலரும் என்னை நாடித் தாங்களாகவே வந்து கோடிப் பொன்னால் என் சேவடி தொழுது பாவடிகளால் பாராட்டி மகிழ வேண்டும்."

- நந்தியின் குரலில்தான் எத்தனை உற்சாகம்... கம்பீரம்!

**ம**ழை வரும்போல் தெரிகிறது. வானில் கப்பிய இருள்போல் மேகக் கூட்டம். அந்த மலைக் குகைக்குள் மருண்டபடி பதுங்கிக் கிடக்கும் நாகமாலினி, நாகாபரணி அதுகாறும் வந்திராத கவலையில் சோர்ந்து தெரிகிறாள்.

எதிரே யோக நிஷ்டையில் இருக்கும் உதய சந்திரனைக் கோபமாய்ப் பார்க்கிறாள்.

அந்த குகைக்குள் வந்தது முதல் உதயசந்திரன் போக்கே விசித்திரமாக இருக்கிறது. உடுப்புகளைக் களைந்த நிலையில் ஓர் உத்தரீயம் மட்டும் உடுத்தி... அதையும் கச்சைபோல் கட்டிக்கொண்டு பார்க்க ஒரு மல்யுத்த வீரனைப் போல் தோற்றம் காட்டுகிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பரந்து விரிந்த மைதானம் போன்ற மார்பில் வீரத் தழும்புகளின் வரிசை. இவன் புலவனா இல்லை வீரனா...? ஐயப்பாடு அப்பொழுதே வந்துவிட்டது நாகமாலினிக்கு.

தலைப்பாகையையும் களைத்துவிட்டு நெடுநேரம் மூச்சுப் பயிற்சி செய்தவன் இப்பொழுது யோக நிஷ்டை புரிகிறான்.

பேச்சில் மதியூகம்-

உருவில் வீரலட்சணம்-

செயல்பாட்டில் யோக விலாசம்-

உண்மையில் யார் இவன்?

கலங்காமல், சோராமல் இவனால் எப்படி இப்படி இருக்க முடிகிறது?

வெளியே சென்று அண்ணனை அழைத்து வராமல் இங்கே இது என்ன புதுப்புதுச் செயல்களில் விநோதமாய் ஈடுபட்டுக் கொண்டு?

"புலவரே... புலவரே!" நாகமாலினி வினவத் தொடங்குகிறாள்.

அப்பொழுது குகை வாயிலில் யாரோ வரும் அரவம். திடுக்கிட்டு எட்டிப் பார்த்த நாகமாலினியின் விழியிரண்டும் அதிர்ச்சியில் மேலும் அகண்டு விரிந்தன.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

# 17

அண்ணன் நாகாபரணிதான் வந்துவிட்டான் என்று ஆவலுடன் குகையின் வாசற்புறத்தில் நோக்கிட அங்கே வந்து நின்ற உருவத்தைப் பார்த்த மாத்திரத்தில் நயனக் கூரைப் படபடக்க விதிர்விதிர்த்துப் போகிறாள் நாகா.

யோகம், தியானம் என்று தன்னிலை மறந்து நிற்கும் உதயசந்திரன்கூட எட்டிப் பார்த்துவிட்டுச் சற்று குமைந்து போகிறான்.

என்ன ஆச்சரியம்!

இது நம்ப முடியாத அதிசயம்கூட!

அங்கே நின்றுகொண்டிருப்பவர் பட்டர் அழகர் தம்பி.

"ஸ்வாமி தாங்களா?"

"நானேதான்... என்னை உள்ளே அழைக்க மாட்டாயா நாகா!"

"வாருங்கள்! வாருங்கள்-"

இந்தக் கரடுமுரடான குகையின் உட்பாகத்தை உற்றுப் பார்த்தபடியே உள் நுழைகிறார் பட்டர். வேப்பெண்ணெய் குடித்துச் சுடர்விடும் தீப்பந்தத் தகிப்பில் அதன் கசந்த வாசம் மூக்கை நிரடுகிறது.

வவ்வால்களும் வந்து தஞ்சம் புகுந்து சென்றிருக்க வேண்டும். ஆங்காங்கே கோவைக் கனியின் பழுத்திராத பச்சைக்காய் பகுதிகளும், சீதாப் பழத்தின் தோலுறைகளும் காணப்படுகின்றன.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உதயசந்திரன் கனகம்பீரமான இறுக்கிய கச்ச உத்திரியத்துடன் மார்பில் வியர்வை ஒழுகக் காட்சி தருகிறான்.

முகத்தில் அசாத்திய அதிர்ச்சியைச் சுமக்க மாட்டாமல் சுமந்தபடி நிற்பது தெரிகிறது.

"என்ன பல்லவ தளபதி- என்னை இங்கே நீர் சற்றும் எதிர்பார்க்கவில்லைதானே?"

அழகர் நம்பியின் வினாவில் அதிகம் விதிர்ப்பவள் நாகாதான்.

"யார் அது பல்லவ தளபதி?"

"இதோ எதிர் நிற்கிறாரே இந்த யுவன்தான்."

"என்ன இது புதுக்குழப்பம்?"

"ஒரு குழப்பமுமில்லை.வீரபல்லவ தேசத்துச் சூர தீர தளபதி உதயசந்திர பிரதாப மூர்த்திதான் இவர்."

"பட்டரே! என்ன இது- இதைக் கூறத்தான் இங்கு வந்தீர்களா...? இந்த இடத்தில்தான் நாங்கள் இருக்கிறோம் என்பதை எப்படி உணர்ந்தீர்கள்?"

"கூடல் அழகர் ஆலயத்தில் தீர்த்தரின் கையாள் வனமாலி தீர்த்தரிடம் ரகசியமாகக் கூறியது எப்படியோ என் காதில் விழுந்துவிட்டது. அதை வைத்துத் தேடி வந்தேன்."

அடுத்த நொடியே உதயசந்திரன் பக்கம் திரும்பு கிறாள் நாகா. அவள் பார்வையில் அனலின் வெம்மை.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"பட்டர் கூறுவதெல்லாம் உண்மையா?" உதட்டில் வெடிப்பு. உதயசந்திரன் மௌனம் சாதிக்கிறான். அது அங்கீகார மொழியல்லவா?

"நாகா... அவர் பல்லவ தளபதியாகவே இருந்து விட்டுப் போகட்டும் - இல்லாமலும் போகட்டும். நான் உன்னைத்தான் காண வந்தேன்."

"என்னைக் காணவா?"

"ஆம்... உன்னால்தான் என் மனக் குமைச்சலுக்கு மருந்திட முடியும்."

"உங்கள் பேச்சு புரியவில்லையே..."

"இப்பொழுது அப்படித்தான் தெரியும். ஆனால், புரியும்படி பேசிவிடத்தான் பார்க்கிறேன். பல்லவ தளபதியின் மௌனம் என்னைத் தடுக்கிறது."

"என் மௌனம் உங்களை ஏன் தடுக்க வேண்டும்?" உதயசந்திரன்கூட இதழ் திறந்து விடுகிறான்.

"உதயா, உங்கள் ஆசை பாண்டியனை வெல்ல வேண்டும் என்பதுதானே?"

"ஆம்... அது எங்கள் லட்சிய வெறி."

"நாகா, உன் ஆசை பாண்டியன் பராந்தகனை அடைய வேண்டும் என்பதுதானே?"

"ஆம். அது என் உயிரின் வெறி."

"இரண்டும் ஈடேற நான் வழி கூறுகிறேன் கேட்பீர்களா?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"பட்டரே- இதென்ன பச்சைத் துரோகமான ஒரு பேச்சு?"

"மேலோட்டமாகப் பார்த்தால் பச்சைத் துரோகமாகத் தெரியும். ஆனால், எனக்கல்லவா தெரியும் அதன் நியாய தருமம்."

"சற்று விளக்கமாகக் கூறுங்கள்."

"பராந்தகன் என் மகளை மணப்பதில் எனக்கு உடன்பாடில்லை. மீறி அப்படி ஒரு மணம் நிகழ்ந்தால் என் மகளை நான் உயிருடன் காண இயலாது."

"இது என்ன சிந்தை கலங்கிய பேச்சு?"

"கலங்கி பேச்சல்ல... ஜாதகம் கணித்த பேச்சு; பராந்தகனின் ஜாதகத்தில் கடும் தோஷம் இருக்கிறது; என் மகளுக்கு எதிரானது.

"அந்த ஸ்ரீதேவி போல் நான் கருதும் என் மகளை மன்னனுக்குத் தருவதாய்க் கருதி எமனுக்குத் தர எனக்கு உடன்பாடில்லை நாகா."

"ஆகையால்-"

"ஆகையால் எப்பாடு பட்டாவது நீ பராந்தகனை அடைய நான் வழி செய்வேன்."

"அதற்காகப் பேரரசர் இந்தப் பல்லவனிடம் தோற்க வேண்டும் என்பதுபோல பேசினீர்களே- அது ஏன்?"

பராந்தகன் தோற்க வேண்டும் அப்பொழுதுதான் மதுராவை நான் அவனிடம் இருந்து பிரிக்க இயலும், உன்னைக் காதலித்து - உனது மையலில் திளைத்ததால்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

போரில் பராந்தகன் தன்னை இழந்தான் என்கிற பழி வரவேண்டும். அப்பொழுதே மதுரா, பராந்தகனை மறக்கத் துணிவாள்."

"உங்கள் மகளின் உயிருக்காக இத்தனை விலைகளா?"

"அப்படிக் கூறாதே- உன் காதலுக்காகவும் என்று சொல். உன் மையலெல்லாம் அரசன்மேல்தானே. அவன் மண்மேல் அல்லவே-?"

பட்டர் பேசப் பேச உதயசந்திரன் முகத்தில் சிந்தனை ரேகைகளின் கூட்டம்.

நாகமாலினி அதைக் கேட்டுப் பதறித் துடிக்கிறாள்.

"பட்டரே... என்ன கடுமையான பேச்சு. ஏதோ ஜாதகம் ஜோதிடம் என்று கதைத்தபடி உங்கள் மகள் ஒருத்திக்காகப் பேரரசர் பல்லவனிடம் தோற்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீரே. நீங்கள் ஒரு பாண்டியப் பிரஜைதானா?"

- நாகாவின் ஆவேசம் பட்டரைச் சிரிக்க விடுகிறது.

"உணர்ச்சி வயப்படாதே நாகா. வெற்றிதோல்விகளை அடுத்தடுத்துப் பெற்றுவிடலாம். உயிர் அப்படியல்ல. அதிலும் என் மகளின் உயிர் எனக்கு உன்னதமானதே."

"பட்டர் கூறுவதுதான் சரி. வெற்றி தோல்விகள் வீரர்கள் வாழ்வில் சகஜமாகிவிட்டவை. அதை ஒருமுறை விட்டாலும் மறுமுறை பெற்றுவிடலாம். ஆனால், உயிர் அப்படியல்ல."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"பேசாதே... மாபெரும் துரோகி நீ, உன்னைப் பேரறிவாளன் என்று எண்ணி ஏமாந்து நிற்கிறேன். நீ எங்களின் பரம எதிரி..." - நாகாவின் குரல் உதயசந்திரனை இடியென இடிக்கிறது.

ஆனால், அவனிடம் எந்தச் சலனமும் இல்லை.

"நாகா... ஒரு விஷயம் நீங்கள் நன்கறிய வேண்டும். பாண்டியரும் தீர்த்தரும் உங்களின் சூழ்ச்சியைத் தெரிந்துதான் வைத்திருக்கின்றனர். நீங்கள் எதுவரை போகிறீர்கள் என்று பார்ப்பதுதான் அவர்கள் எண்ணம்."

- பட்டரின் கருத்தைக் கேட்டுப் பதைத்துப் போகிறான் உதயசந்திரன்.

எந்நிலையிலும் எதற்கும் பதற்றப்பட்டிராதவன் முகத்தில் சலனம். சஞ்சலம்!

"பட்டரே, தாங்கள் கூறுவது சத்தியமா?"

"அந்த அழகர் பெருமாள்மேல் ஆணை!"

"என்ன... அரசர் நான் இவளுடன் இணைந்து செயல்பட்டதைத் தெரிந்தே இருந்திருக்கிறாரா?"

"ஆம்! பல்லவ யுத்தத்துக்கு நாளும் குறிக்கப் போகிறார். வியூகத் திட்டங்களை அந்த ஆண்டவனால் கூட உணர முடியாது."

- நாகமாலினி தேம்பி அழத் தொடங்குகிறாள்.

"நான் மோசம் போய்விட்டேன் - இவனால் மோசம் போய்விட்டேன்." அவளது மார்புகளில் துக்க விம்மல்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"நாகா! இது அழும் வேளையல்ல... சிந்திக்கும் வேளை."

"எதைச் சிந்திக்க...? நான் அரசரையடைய வழி காண்பதாகக் கருதி அரசரைப் பிரியவல்லவா வழி பார்த்திருக்கிறேன். அதைச் சிந்திக்கவா? இல்லை, இவன் பல்லவன் என்றறியாமல் இவனுக்கு அடைக்கலம் தந்து ஏமாந்து இவன் பின் இதுகாறும் வந்துவிட்டேனே அதைப் பற்றிச் சிந்திக்கவா?

அதுவும் இல்லை யாரை எதிரியாய்க் கருதி அவள் வீழ வேண்டும் என்று கருதினேனோ அவள் தந்தை தாங்களே நட்பு முகம் காட்டி எனக்கு உகந்தது செய்ய வந்துள்ளீர்களே, அதைப் பற்றிச் சிந்திக்கவா?

எதைச் சிந்திக்க? எப்படிச் சிந்திக்க...?"

பல்லவ யுவனே-நீ என்னை நன்றாகவே ஏமாற்றிவிட்டாய்."

"அனைத்தும் நன்மைக்குத்தான். கவலைப்படாதே நாகா. அருள்கூர்ந்து நான் கூறுவதைக் கேள்."

"என்ன கூறப் போகிறீர்கள்?"

"பாண்டியன் ஜாதகம் என் மனசில் பதிந்து விட்டது. அவன் தோற்றால் மட்டுமே மதுராவை அவன் பிரிய இயலும்; என்னாலும் பிரிக்க இயலும். இப்பொழுது அதற்கான செயல்களைப் பற்றிப் பேசு."

"அவன் வெற்றிக் காலத்தை நான் கணித்துத் தந்துவிட்டேன். அதை எப்படியாவது மாற்றி நாழிகைக் கணக்குகளில் தவறு வரும்படி செய்து விடுகிறேன்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"பல்லவ தளபதி! என் மகள் நிமித்தம் இந்த ஒரு முறை வெற்றித் தேவதை உங்களை அணைக்க வழி செய்கிறேன். ஆனால், எக்காரணம் கொண்டும் களத்தில் பராந்தகனைக் கொன்று விடாது பராந்தகன், நாகாவை அடைய வழி செய்ய வேண்டும். அதற்கு எனக்கு நீர் சத்தியப் பிரமாணம் செய்து தர வேண்டும்..."

"தாராளமாக..."

உதயசந்திரன் உற்சாகமாகக் கை நீட்டுகிறான்.

"முடியாது, இது நடக்கக் கூடாது. என் காதலின் வெற்றியை விட உன்னதமானது, இந்த மண்ணின் வெற்றி. என் அரசர் தோல்வியைக் கனவிலும் அணையக் கூடாது. இதற்கு நான் உடன்பட மாட்டேன். எந்நிலையிலும் பல்லவ வெற்றிக்கு நான் துணை நிற்க மாட்டேன்."

சீறி விழுகிறாள் நாகமாலினி.

"ஒன்றை நினைவில் வை. நீ இப்பொழுது இங்கிருந்து விலகி அரண்மனை சென்று என்னதான் பிலாக்கணம் படித்தாலும் உன்னை நேர்மையளாய், சீரிய காத லுடையவளாய்க் கருதப் பராந்தகர் ஒப்பமாட்டார்."

"பரவாயில்லை. அவரை விடவும் தேசம் பெரிது. அவர் வெற்றி பெரிது. நான் இதுவரை இழைத்த தவறுகள் போதும். எங்கள் கெங்க வம்சத்து வயிர மணி மாலையைக் கவர்ந்த கள்வன் பல்லவன்?

நாடு பிடிப்பதை வேடிக்கையாகக் கருதுபவன் பல்லவன்; சிற்றரசர்களை அடிமைகளாய் நினைப்பவன் அவன். அவன் ஒருபோதும் வெற்றி பெறக்கூடாது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பாண்டிய வெற்றி பராந்தகரின் லட்சியம் மட்டு மல்ல, அவர் தந்தை கோச்சடையரின் லட்சியக் கனவு. உங்களுக்கு நான் துணை நின்றால் கோச்சடையர் ஆன்மா என்னை மன்னிக்காது."

நாகமாலினியின் வீரக்குமுறலைக் கேட்டு ஸ்தம்பிக் கிறார் அழகர் நம்பி.

"இனி இவளிடம் பேசிப் பயனில்லை" என்று வன்மமுடன் நிமிரும் உதயசந்திரன், நொடிப் பொழுதும் தாமதியாமல் அவள் பிடறியில் வர்மத் தாக்குதல் நிகழ்த்துகிறான்.

அடுத்த நொடியே நாகமாலினி கை கால்களை இழுத்துக் கொண்டு வாதத்தால் சிதைந்த காராம் பசு போல் தரையில் விழுந்தாள்.

"உதயா... என்ன இது?" பதைக்கிறார் பட்டர்.

"ஒன்றுமில்லை பட்டரே! சிறியதோர் வர்மத் தாக்குதல் இது. இவள் இனி அசைய முடியாது. இவளை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் உங்கள் மகளை மீட்கும் முயற்சியில் பின்வாங்கிடாது செயல் படுங்கள்.

பாண்டியர் யுத்த ஓலை போக்காமல் களம் புகமாட்டார் என்று உறுதியாய் நம்புகிறேன். யுத்த காலத்தில் அவர் கூறிய முகூர்த்தத்தில் கால் பதிக்காத படி பார்த்துக் கொள்ளுங்கள். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்."

"உதயா... இந்த இடத்தில் நீங்கள் இருப்பதும் ஆபத்து."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"தெரியும் இந்த நொடியே நான் இடம் மாறி விடுவேன்."

"எங்கே போவீர்கள் - பாண்டிய மண்ணில் தாங்கள் ஒளிவதற்கு இடமேயில்லை - எப்பக்கம் திரும்பினாலும் உளவாளிகள்."

"இவர்கள் அத்தனை பேர் கண்களிலும் மண்ணைத் தூவியபடி நான் காஞ்சியை அடைய எனக்கு வழி தெரியும், நீங்கள் கவலைப்படாதீர்கள்."

"நானே தர்ப்பைப் புற்களை அறுப்பதற்காக வந்தவன் போலத்தான் இங்கு வந்துள்ளேன். வரும் வழியெல்லாம் உளவாளிகள்."

"புரிகிறது, ஆனால், எப்படியாவது தப்பித்தானே தீரவேண்டும்."

"நானொரு உபாயம் கூறவா?"

"என்ன?"

"நீங்களும் நாகாவும் அழகர் ஆலயத்தின் தேர்க் கூடத்தில் தங்குங்கள். அங்கு என்னை மீறி எவரும் நுழைய முடியாது. மிக மிகப் பாதுகாப்பான இடம்."

"அற்புதமான வழி. ஆனால், நான் எப்படி அங்கு வருவது?"

"இன்று நள்ளிரவு நான் தேர்க்கூடத்தில் காத்திருக்கிறேன். மாறு வேடத்தில் வந்து சேருங்கள். தர்ப்பைப் புற்களை நெற்கதிர் போல் அறுத்துக் கட்டி

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வண்டியில் பூட்டி, அந்தப் புற்கட்டுக்குள் நாகாவைக் கிடத்தியும் அழைத்து வரலாம்.

வரும் சதுர்த்தி நாளன்று அமாவாசையும் சூரிய கிரகணமும் வருகின்றன. அதன் பொருட்டு மாமதுரை அந்தணர்க்குத் தர்ப்பை கற்ப மூலிகையாய்ப் பயன் பட்டாக வேண்டும். அவர்களுக்காகவே தர்ப்பை என்று நான் முன்பே கூறிவிடுகிறேன்."

"ஆஹா, அற்புதமான உபாயம், பட்டரே. உங்கள் உதவிக்குப் பல்லவரிடம் கூறி பல்லவ தேசத்தில் ஒரு பேரூரையே நான் தானமாக வாங்கித் தருகிறேன்."

"எனக்கு என் மகளின் உயிரை அந்தக் காலன் வாங்காது தானமாக வழங்கினால் அது போதும் உதயசந்திரரே!"

உதயசந்திரன் பட்டரை ஆரத் தழுவிக் கொண்டான்.

'எப்பொழுதும் அதிர்ஷ்ட தேவதை என்னைக் கைவிடுவதில்லை. யார் ரூபத்திலாவது வந்து உதவிக் கொண்டே இருக்கிறாள்' என்று மகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்தான்.

பட்டரும் மனபாரம் நீங்கியவராய்க் குகைப் பகுதியை விட்டு வெளி வந்து மலைச்சரிவின் நீர்த் தேங்கிய பரப்பில் நிமிர்ந்து தழைத்துக் கிடக்கும் புற்கூட்டம் நோக்கி நடையிட்டு மெல்ல நழுவத் தொடங்கினார்.

பல்லக்குகளும், புரவிக் கூட்டமும் புழுதி பறக்க நடையிட்டுக் கொண்டிருக்க எதிரில் ஓங்கி உலகளக்கும் ஆனை மலை!

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கட்டியக்காரர்கள் ஒரு குழுவாக நடந்து முழக்க மிட்டுச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

வீரதீர சூர ராஜ பாண்டியர் மாவேந்தர் திரு வீதி பராக்...

கஜகர்ண சம்பூரண புஜ பல பராக்கிரம அழகர் அடி போற்றும் அதி சிரேஷ்டர் பராக்...!

புவனத்தரசர் புரவலர் புண்ணியர் கோச்சடையார் புதல்வராம் பராந்தக நெடுஞ்சடையார் பராக்...

- பல்லக்கு ஒன்றுள் பைராகி அமர்ந்திருக்கிறார். அற்புதமாய்க் கட்டியங்களைச் சிலாகிக்கிறார். இதை விடவும் ராக தாளத்துடன் பல்லவனின் கட்டியங்களைக் கேட்டது காதில் அலை மோதுகிறது.

"எனக்கிணை எவர். அத்தி வரதன் இருக்க எந்த எத்தன் எனை வெல்லக்கூடும்?" ஆங்காரமாய் நந்திப் பல்லவன் செருமாந்ததெல்லாம் அவர் நினை வில் கூறுகிறது. ஏறத்தாழ ஹிரண்ய கசிபுவின் ஆங்காரம் அதில்.

'ஹிரண்யன் இப்படித்தான் செருமாந்தான். என்னை வெல்ல எவர்? விண்ணில் மண்ணில் நீரில் நெருப்பில் காற்றில் ககனத்தில் இரவில் பகலில் எதனில் எனக்கு எதிரி உண்டு! நானே பரம்பொருள்... நானே சர்வமும்... நானே ஜகம். நானே அகம்.

ஆ! அந்தக் கர்வத்துக்கும் பங்கம் வந்ததே! அந்த வரத்துக்கும் மற்றோர் திறம் முளைத்து ஹிரண்ய வதம் நிகழ்ந்ததே! பேரருளாளன் நாரணன் நரசிங்கமாய்த்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தூண் பிளந்து வந்து ஹிரண்யன் மார் பிளந்தானே... தர்மம்தனை அளந்தானே..! தேவதேவ பிதா ஹரி சூர்ய கோடி சுகாபுரி..

- பைராகி நடந்ததைச் சிலாகிக்கிறார்; நடக்க வேண்டியதையும் நினைக்கிறார்.

ஆனைமலையின் நடுமுதுகுச் சரிவு ஆங்கோர் வானவில்லின் தோற்றம், வானவில் தோன்றி முடியும் இடத்தில் ஓர் சில்லென்ற ஊற்றுக் கண்.

தொலை தூர வனத்திலிருந்து ஒரு அரிமா அந்த ஊற்றுக் கண்ணை ஒட்டிய பாறை மேல் இளைப்பாறிக் கொண்டிருக்கிறது.

"நிறுத்துங்கள்?" பைராகியிடம் கட்டளை. பல்லக்கு பரிவாரங்கள் சரேலென்று தேங்கி நிற்க, மற்றையோர் சிவிகை திரைச்சீலை நீக்கி முகம் காட்டிப் பேசுகிறான் பராந்தகன்.

"பைராகி, ஏன் நிறுத்தக் கோரினீர்?"

"உரிய இடம் வந்துவிட்டது பராந்தகா. அதோ அரிமா! அதுவே நரசிங்க மூர்த்திக்கான ஆலயப் பிரதிஷ்டைக்கான கரு நிலம்."

பைராகி கை காட்டிய திக்கில் அரிமா எழுந்து நிற்கிறது. கூட்டமே அரவத்துடன் நோக்குகிறது.

"இங்கே அந்த நரசிங்கத்திற்கு ஆலயம் எழுப்பு. பல்லவன் அல்ல. எந்த வல்லவனாலும் நீ வெல்ல முடியாதவன் ஆவாய்!" பைராகியின் பேச்சைக் கேட்டுத்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தீர்த்தர் முதல் மதுர கவியார்வரை சகலரும் சந்தோஷிக்க, பட்டர் மட்டும் பதறிப் போனார்.

'நரசிங்கப் பிரதிஷ்டையா? கவசத்தில் பெருங்க வசமாயிற்றே நரசிங்கக் கவசம்- நாராயணா, இது என்ன சோதனை! இங்கே நீ வந்தமர்ந்து என் நினைப்புக்கு வலுவைக் குறைத்து விடாதே-'

- பட்டர் மானசீகமாய்ப் பிரார்த்திக்க, அர்த்த புஷ்டியுடன் ஒரு கரம் அவர் தோள்மேல் விழுகிறது!

# 18

தோளின் மீது விழுந்த கரத்தைத் தொடர்ந்து அதிர்ச்சியுடன் திரும்பும் பட்டர் அழகர் நம்பியை உற்றுப் பார்த்து நகைப்பவன் சாத்தன் கார்கோடன்!

தோளின் மீது விழுந்த அவன் கட்டை விரலில் கூடக் காயத்திற்குப் போடப் பட்டது போல் ஒரு கட்டு.

"யாரது சாத்தன் கார்கோடனா? என்னப்பா சேதி- அழைப்பது போல் தெரிகிறதே..." நடுங்கும் குரலில் கேட்கும் பட்டர், கைக் கட்டைப் பார்த்து ஆச்சரியம் கொள்கிறார்.

"அழைக்கவில்லை- ஆயத்தம் செய்கிறேன்."

"எதற்கு?"

"அந்த அரிமா இந்தப் பக்கம் பாய்ந்துவிடப் போகிறது."

"அது தெய்வீக ஜீவன் சாத்தா- பாயாது-"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பட்டரின் கருத்துக்கு இசைவான புன்னகை சாத்தனிடம்.

"ஆமாம். இது என்ன கையில் காயம்?"

"மைச் சிறகினை எழுதும் பொருட்டுச் சீவினேன். அப்பொழுது கத்தி கையில் பட்டுவிட்டது."

"மைச் சிறகினை சீவினாயா? அது கற்றோர் மாட்டாயிற்றே - கவிஞர், கணக்கர், கல்விச் சாலை காப்பவர் முதலியோர் செயலாயிற்றே...?"

"ஏன் என் போல் வீரர்கள் எழுதும் பொருட்டு மைச்சிறகு பற்றுதல் பாவமா என்ன?"

"நான் அப்படிச் சொல்லவில்லை - உனக்குக்கூட எழுதும் பணி உள்ளதா என்று எண்ணிக் கேட்டேன். கட்டாரி பாய்ச்சவும், களரி வீச்சு புரியவும், விட்டாலும் அகலாத புரவிமேல் ஏறவும், வில்லெடுத்துப் பாணம் போடவும் தெரிந்த வீரனுக்குச் சொல்லெடுத்து எழுதுதல் சுலபமா என்ன?"

"பட்டரே. பராந்தகரின் அருமை பெருமைகளை நானே பதிவெடுக்க உள்ளேன். எனது குறிப்புகளாலேயே பராந்தகர் புகழ் வையம் உள்ள அளவும் நிலை பெறப் போகிறது.

எனது குறிப்புகளில் பராந்தகர்க்கு உற்றவர் மட்டுமல்ல; பல்லவன் போல் மற்றவர்க்கும் இடம் உண்டு. உம்மைப் போன்ற பட்டர்க்கும் இடம் உண்டு."

"நானொரு அல்பாத்மா. எனக்கு எதற்கு அரச சரித்திரத்தில் இடம்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"தாங்கள் பட்டர் மட்டுமல்லவே, அரசர் பிரானின் மாமனாருமாயிற்றே தாங்கள்...?" சாத்தனின் கேள்விக்கு ஏனோ பட்டர் பதில் சொல்லாமல் சிரிக்கிறார்.

குறுக்கிடுகிறது அரிமாவின் கர்ஜனை.

"சரி, சரி. நடக்கப் போவதைக் கவனி..." பட்டரின் பார்வை, பேசியது போதும் அரிமாவின் பக்கம் திரும்புகிறது.

அரிமாவுக்குச் சற்றுத் தள்ளி வணங்கி கரத்துடன் பராந்தகன் தெரிகிறான். அருகிலேயே பைராகியும் நிற்கிறார்.

சுற்றிலும் வீரர்களின் வளையம். உருவிய வாளுடன் அநேக வீரர்கள். அரிமா ஏதும் அடம் செய்து பராந்தக னுக்கு இடர் செய்தால் அதைத் தாக்கிச்சாய்க்க தயாராகத் தெரிகிறார்கள்.

"யாரும் அரிமாவைத் தாக்கக் கூடாது. அது நரசிங்கம்; அரசரை ஏதும் செய்திடாது..." பைராகி உரத்த குரலில் கத்திப் பேசுகிறார்.

பராந்தகன் பார்வையோ அரிமா மேலேயே இருக்கிறது.

அது நெடுநேரம் வாலைக் குழைத்து அவனைப் பார்த்து நிற்க, மெல்ல பராந்தகன் அதை நெருங்கினான். அதனிடம் எதிர்ப்பில்லை.

அதன் பிடரியை வருடத் தொடங்குகின்றன பராந்தகனின் கரங்கள்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

“ஆஹா, என்ன ஒரு அற்புதக் காட்சி! பேரரசின் அஞ்சாமைக்கு அரிமாவும் அடிபணிந்து விட்டதே..”

அடுத்த நொடியே வானில் கார்மேகக் கூட்டம் இடி முழக்கத்துடன் சங்கமிக்கத் தொடங்குகிறது.

மழை. பெருமழையாக வர்ஷிக்கலாம்; அவ்வளவும் சுபசகுனம்.

“பராந்தகா.. அற்புதம். அற்புதம்! இயற்கையன்னை யின் நல்லாசியும் கிட்டிவிட்டது. இதுதான் நரசிங்கப் பெருமாளின் ஆலயம் அமைக்க உகந்த இடம்.

“இங்கே ஆலயம் அமையட்டும்... அந்த ருத்ர மூர்த்தியின் பேரருள் இம்மாமதுரை மண்ணில் என்றும் நிலைக்கட்டும். பல்லவனை வெற்றி கொள்ளும் பொருட்டு உபாசனா மூர்த்தியாக எழுந்தருளும் இந்த நரசிங்க ஆலயம் வெற்றிக்கே வழி காட்டட்டும்..”

பைராகி பேருணர்ச்சியோடு பேசப் பேசக் கூட்டமே புல்லரிக்கிறது. பச்சைமால் தீர்த்தர் நெகிழ்ச்சியின் உச்சத்தில் நிற்கிறார்.

பட்டர் முகத்தில் மட்டும் கலவரத்தில் திணறுவது போன்ற ஒரு குழப்பம்.

சாத்தன் அதைத் துல்லியமாய்க் கணித்து மனசுக் குள் எழுதிக் கொள்ளத் தவறவில்லை.

அர்த்த ஜாமம்.

கடம்பவனப் பெருநகர் முழுக்க பவளமல்லி வாசமும் மனோரஞ்சித மலர்களின் வாசமும் கலந்து வீசும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இரவுப் பொழுது. நகரப் பெருவீதியின் எண்ணெய் விளக்குகள் எரிந்து அடங்கி ஆங்காங்கே அதன் கசட்டு வாசம் வேறு நாசியை நிமிண்ட, இரவு பாரா செல்லும் காவலர்களின் உலாக்கள் ஆங்காங்கே-

நடுவில் கிரீச்கிரீச் என்ற சப்தத்துடன் நடையிட்டுக் கொண்டிருக்கினறன இரண்டு மாடுகள். அவை இழுத்துச் செல்லும் வண்டியின் பாரத்தை மீறித் தர்ப்பைப் புற்களின் கட்டுக்கள் தெரிகின்றன.

வண்டி ஓட்டி பாகைத் துணியால் முகத்தை மறைத்த நிலையில் தூங்கும் பாவனை புரிய, அந்த வண்டியிரண்டும் கூடல் அழகர் ஆலயம் நோக்கி அசைவது தெரிகிறது.

நல்ல வேளை-

யாரும் எதிர்ப்படவில்லை. எங்கு எதற்கு என்று கேள்விக் குடைச்சல் இல்லை. தர்ப்பைக்கட்டின் உள்ளே மயங்கிய நிலையில் கைகால்களை அசைக்கும் திறன் அற்றவளாகக் கிடக்கிறாள் நாகமாலினி. உதய சந்திரன்தான் வண்டி ஓட்டிபோல் உருமாறியிருப்பவன். நன்றாகவே வேடம் தரித்திருக்கிறான்.

நாகமலைப் புறத்தைவிட்டு நீங்கப்பட்ட பாட்டில்- அந்த நள்ளிரவிலும் அதை நினைத்தால் வியர்க்கும் போல் தோன்றுகிறது.

கூடல் அழகர் ஆலயத் தேரடி மண்டபத்தை ஒட்டி மெல்லிருளில் நின்றுகொண்டிருக்கிறார் பட்டர் அழகர் நம்பி.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

சபதித்தபடி வரும் வண்டியைப் பார்த்து நிமிருகிறார்.

நெருங்கிவிட்ட வண்டியில் இருந்து தர்ப்பைக் கட்டுகள் இறங்குகின்றன. உதயசந்திரனே இறக்குகிறான். அப்படியே வேகமாய் நாகமாலினியையும் இழுத்துத் தோள்மீது போட்டபடி மண்டபத்தை எட்டுகிறான். உள்ளே திகுதிகுக்கும் தீப்பந்தம். அடர்ந்த மஞ்சள் ஒளி. வவ்வால்கள் அடைந்து கிடப்பதற்கு அறிகுறியாய் அதன் கழிவு நாற்றம்.

ஆங்காங்கே நிலைக் கால்களும், மரக்குதிரை உருவங்களும் தெரிகின்றன.

“வரும் வழியில் ஏதும் இடர்ப்பாடில்லையே..?”

“இல்லை பட்டரே. நகரம் நன்றாகவே தூங்குகிறது. இதே போல் இன்னமும் பத்து தினங்கள் தூங்கிவிட்டால் போதும். எங்கள் பல்லவர் படை மதுரையைச் சுற்றி வளைத்துவிடும்..”

“மதர்ப்பு வேண்டாம் உதயசந்திரரே. பாண்டியன் பராந்தகன் இன்று ஒரு மகத்தான செயல் புரிந்துள்ளான் - அதைக் கேட்டால் உங்கள் பல்லவ சக்கரவர்த்தியும் ராஜ குருவுமேகூட விதிர்த்துப் போவார்கள்.”

“என்ன பட்டரே.. புதிர்போல் இருக்கிறதே உங்கள் பேச்சு?”

“புதிர் இல்லை உதயசந்திரா. எல்லாம் அந்த பைராகியின் செயல். எம்பெருமான் நாரணனின் ரௌத்ர சொரூபம்; நரசிங்க சொரூபம். அதை ஆனைமலையில்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

குடவரைக் கோவிலில் எழுந்தருளச் செய்யவிருக்கிறான் பராந்தகன்.

"அவனுக்கும் அருள் மிகுதிபோலும்... ஆங்கே ஓர் அரிமா அந்த நரசிங்க வடிவாய் நின்று அருள் பாலித்துச் சென்றது. நான் என் கண் இரண்டால் கண்ட காட்சி அது."

"அதற்கென்ன?"

"நரசிங்க மூர்த்தி உபாசனா தெய்வம். அதர்ம சத்ருவும்கூட. அவரை உபாசிப்பவர்களுக்கு ஓடிவந்து உதவும் தெய்வம் அது. எங்கே அதன் உதவியால் பராந்தகன் வென்றிடுவானோ என்று ஐயமாய் உள்ளது."

"காஞ்சியாதிபதி நந்திப் பல்லவரை விடவா ஒருவர் ஆலயம் சமைக்க முடியும்? அவரும்தான் நாரண உபாசகர். அத்தி வரதன் எனும் அருளாளனை விடவுமா ஒருவர் இருந்துவிட முடியும்?"

உதயசந்திரனின் கேள்விக்குப் பட்டரிடம் ஆழ்ந்த மௌனம். பார்வை தேர்க்கால் ஒன்றின் மேல் கிடத்தப்பட்டிருக்கும் நாகமாலினி மேல் செல்கிறது.

"இந்தப் பெண்ணை எப்படி மௌனமாக்கி அழைத்து வருவது என்பதுதான் பெரிய கவலையாய் இருந்தது. இறுதியில் தொண்டையைக் கட்டும் அடைப்பான் வகை மூலிகைச் சூரணம் கொடுத்து ஊமையாக்கி மயங்கச் செய்து அழைத்து வந்துள்ளேன். இவள் நினைத்தாலும் பேசமுடியாது. முறி மருந்தைக் குடித்தால் தான் தொண்டை கட்டு விடும். இவளைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். பல்லவ சக்கரவர்த்தியைச்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

சந்தித்துப் போர் வியூகம் பற்றி விவாதித்துவிட்டுத் திரும்புவேன்.

ஆமாம். எந்த நாழிகையில் பராந்தகர் போர்க்களப் பலி தர இருக்கிறார் தெரியுமா?"

"நாளை தெரிந்துவிடும் உதயசந்திரரே... அரண்மனையில் எப்படியாவது சேதி அறிந்து வந்து விடுவேன். அந்த நாழிகைக் கணக்கைத் தப்பாக்க வேண்டும். அதற்கும் ஆவன செய்ய இருக்கிறேன். பைராகி உடன் இருந்தால் மிகவும் சிரமம்தான்."

"உண்ணுவதற்கு ஏதாவது கிட்டுமா?"

"போய்ப் பணியாரமும் பாலும் பழமும் கொண்டு வருகிறேன்."

பட்டர் தேரடிக்கூடம் விட்டு வெளிவந்து முன் மண்டப தூண்களைக் கடந்து ஆலய மடப்பள்ளி அறைநோக்கி நடந்து, அங்கிருந்த உணவுப் பதார்த்தங்களைச் சுமந்தபடி திரும்ப நடக்கிறார்.

உதயசந்திரன் உணவைப் பார்த்து உற்சாகம் கொள்கிறான்.

"நன்றி பட்டரே! மிக்க நன்றி. உங்கள் உதவிகள் மறக்க இயலாதவை. பல்லவ வெற்றிக்குப் பிறகு உங்களைத் தங்கம் வைரத்தாலேயே எங்கள் அரசர் குளிப்பாட்டும்படி செய்வேன்."

"அதெல்லாம் எதுவும் வேண்டாம் உதயசந்திரா! என் மகள் மதுரவல்லிக்கேற்ப மணாளன் வாய்த்து அவள் நலத்துடன் வாழ்ந்தால் அதுவே போதும் எனக்கு."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"நிச்சயம் நிகழும். காஞ்சியில் உள்ள செல்வந்த வைணவர் குடும்பத்துக்கு இணையாக உங்கள் செல்வச் செழிப்பையும் உயர்த்தி, நந்திப் பல்லவரே உங்கள் திருமகளுக்கு மணம் செய்து வைப்பார்."

"அது நடந்தால் போதும். அதற்கே நான் தவம் இருக்கிறேன். அவள் மனத்தின் காதல் உணர்ச்சிகள் அஸ்தமிக்க வேண்டும். பராந்தகன் ஒரு படுகோழையாகக் காட்சி தரவேண்டும்.

அரசனின் காதலி என்ற அழுக்கு நீங்கி அந்தணச் செல்வியாய் என்மகள் நிலைக்க வேண்டும்."

பட்டர் பேசப் பேச உதயசந்திரனின் சிறிய விழிகளில் ஆச்சரியப் புனல் பொங்கியெழுகிறது.

இந்த மனிதருக்குத்தான் என்னவொரு பாசம். என்னவொரு வர்க்கப்பற்று- அவனுக்குள் வியப்பலைகள்.

அந்த வியப்பு கலையாமல் அங்கிருந்து மீண்டும் வண்டியில் கிளம்புகிறான்.

எல்லை வரை சென்றுவிட்டால் போதும். ஆனை மலைச் சருக்கத்தில் புரவிநின்ற வண்ணமிருக்கும். பல்லவ ஒற்றர்களும் அங்கு ஏதும் செய்தியோடு காத்திருக்கக் கூடும். அவர்களுடன் இணைந்து பாண்டி நாட்டை கடந்து விடலாம்.

சிந்தனையோடு அண்ணாந்து பார்க்கிறான் பிறை நிலாவின் முற்றிப் பருத்த நிலை.

இன்றிலிருந்து ஏழாம் நாள் பௌர்ணமி. அநேக மாய் அன்றே யுத்தப் பிரகடனமும் களபலியும் ஆவேச மோதலும் நிகழத் தொடங்கலாம்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"பல்லவப் படைகள்கூட எழுச்சியுடன் தயாராக இருக்கலாம்."

"நந்திப் பல்லவர் என்னை எதிர்நோக்கியே காத் திருப்பார். பாண்டியப் படைகளின் பலத்தையும் பல வீனத்தையும் அவர் எதிரில் பிட்டுப்பிட்டு வைக்க வேண்டும்."

'பைராகியின் சூழ்ச்சிகளை வரிசைப்படுத்த வேண்டும்.'

நரசிங்க உபாசனையை வெல்லும் வழிமுறை களைப் பார்த்திட வேண்டும்.

பட்டரின் உதவிகளை கூறிப் பேரரசரை உற்சாகப் படுத்த வேண்டும்.

உதயசந்திரனுக்குள் எண்ண அலைகள். யாதொரு தடையுமின்றி அவனது மாட்டுவண்டியும்கூட ஆனை மலை நோக்கி நடையிடுகிறது.

விடிவதற்குள் போய்விடலாம்.

**கா**ஞ்சி... பிரதான பாதைகளில் உள்ள பறை மேடைகளில் இடைவிடாத பறையொலியும் அதைத் தொடர்ந்து போர்ச் செய்தியும் நகரெங்கும் முழங்கிய வண்ணம் இருக்கின்றன. டம்டம் டம்டம்-

"மாநகர் காஞ்சியின் மாந்தர்களே! பல்லவ நாட்டு வல்லவர்களே! நல்லவர் வாழும் மண்ணாம் காஞ்சிக்குப் பாண்டிய நாடு அறைகூவல் விடும் நிலை வந்துள்ளது.

நம் மாமன்னரைப் பாண்டியப் பராந்தகன் போருக் கழைத்து இந்தப் பூமியைக் கைப்பற்றிச் செல்வாராம்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

ஒற்றர் செய்திகள் ஓய்வின்றி வருகின்றது. பல்லவ புருஷர்கள் ஓரணியில் இணையும் வேளை வந்துவிட்டது. இளைய சிங்கங்கள் எழுச்சியுடன் களம் புகப் பேரரசர் அழைக்கிறார்.

வெற்றிமேல் வெற்றி பெற, பல்லவ தேசம் நாஞ்சில் பட்டினம் வரை களம் விரிக்க களம் தேடி வருக. டம்டம் டம்டம்-"

பறையொலி முழங்குமிடமெல்லாம் மக்களின் சந்திப்பும் பேச்சும் பரபரப்பைக் காஞ்சியில் கொளுத்திப் போட்டு விட்டது தெரிகிறது.

வரிசை வரிசையாய்ப் புரவிக் கூட்டங்கள் போகின்றன, வருகின்றன.

யுத்த மைதானம் விரிந்து கிடக்கிறது.

அணித் தலைவர்கள் யானை மீதமர்ந்து தங்கள் குழுக்களை மேற்பார்வை செய்தவண்ணம் உள்ளனர்.

தளவாடச் சாலையில்அனற்பொறி பறக்க ஆயுத வார்ப்புகள் அபரிமிதமாய் உருவாகிக் கொண்டிருக் கின்றன.

வர்த்தக அங்காடிகளில் பொலிவு குறைந்து அங்கும் யுத்தம் குறித்தே பேச்சு.

பரபரப்பு மிகுந்த நகர எல்லையில் அதிவேகமாக நுழைகிறான் உதயசந்திரன்.

பறையொலி கேட்டுச் சற்று அதிர்ச்சியும் கொள் கிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இங்கு மட்டும் எதற்கு இத்தனை வேகம்?

யாருடைய செயல் இதெல்லாம்...?

கேள்விப் புயல் வீச அரண்மனை பிரவேசிக்கும் உதயசந்திரனை அரண்மனை ஆர்வமாய் வரவேற்கிறது.

கட்டிய முழக்கம் தர்பார் மண்டபத்தில் தவிப்புடன் இருக்கும் நந்திப் பல்லவர் செவிகளையும் எட்டுகிறது.

"யார் உதயசந்திரனா?"

"ஆம்... தளபதி உதயசந்திரர் வந்துவிட்டார்."

"என் வீரத் தளபதி விரைந்து வரட்டும். நற் செய்திகளை நிறையத் தரட்டும்."

"ஆனந்த வந்தனம் பிரபுவே..."

"வா உதயா... வா! உன்னைக் கண்ட பின்பே உயிர் மூச்சு ஒழுங்காகிறது. நீ சுமந்து வரும் நற்செய்திகளுக்காக நான் நாளும் காத்திருந்து சோர்ந்துவிட்டேன்.

உன்னைப் பாண்டியன் இனம் கண்டுகொண்டதாக அறிந்தேன். பதைத்துப் போனேன். எப்படித் தப்பினாய்?"

பதைபதைக்க நந்திப் பல்லவர் கேட்கும்போதே அவர் பாதம் பணிந்து எழுகிறான் உதயசந்திரன்.

"ஒரு கதவு மூடிக் கொண்டாலும் இந்த உதயனின் வாழ்வில் மறு கதவு ஏதோ ஒரு வகையில் தானாக திறந்துகொண்டு விடுகிறது அரசே... நான் எனது செய்திகளைக் கூறும் முன் தேசமெங்கும் ஒலிக்கும் பறையொலி பற்றி அறிய விரும்புகிறேன். எதற்கு இத்தனை

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

ஆவர்த்தனம்? அங்கே பாண்டிய மண் பரபரப்பற்று கிடக்கிறது. யுத்தத்திற்கான முகாந்திரங்களே இல்லை."

"தெரியும். தெரியும் பதுங்கிப் பாயும் புலிபோல் பாண்டியன் வெளிப்படலாம். அதற்கு இடம் இல்லாமல் போரில் வெற்றி பெறும் வரை பல்லவ மண்ணில் பறையொலிக்கும் உதயா..."

"பதுங்கிப் பாய அவர் என்ன கோழையா?"

"சுத்த வீரனாய் இருந்தும் யுத்த தந்திரம் தெரியாதவன் போல் இதென்ன கேள்வி...?"

"பாண்டியர் பராந்தகர் யாகம் யோகம் என்று ஆன்மீக சக்திகளின் பாதையில் விரைந்து சென்று கொண்டிருக்கிறார்..."

"அது ஊருக்கு- உள்ளுக்குள் நடப்பதே வேறு."

"அரசே, பாண்டிய மண்ணில் இருந்து சேதி கொண்டு வந்திருப்பது நானா, இல்லை நீங்களா?"

"உன்னைப் போல அங்கு வேறு பலரும் இருந்து எனக்குச் சேதி தரலாம் அல்லவா?"

"அவர்கள் தந்த சேதிதானா அது?"

"ஆம்... பௌர்ணமிக்கு முந்திய இரவில் பத்தாயிரவர் கொண்ட படை பாண்டிய எல்லை நீங்கிப் புறப்படத் தயாராகி விட்டது உதயா."

"எதை வைத்துக் கூறுகிறீர்...?"

நந்திப் பல்லவனிடம் ஒரு வீரப் புன்னகை உதடு பற்றி நெளிகிறது. அடுத்த விநாடி, "அனைத்தும் பைராகி

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கூறியவை" என்ற மறுவிநாடி உதயசந்திரன் நிலை குலைந்து போகிறான். "பைராகி நமது உளவாளியா?"

# 19

உதயசந்திரன் முகத்தில் வியப்பு- வியப்பென்றால் வியப்பு அசாதாரண வியப்பு! ராஜதந்திர மகா சொரூபியாக எதிரே நிற்கும் பேரரசர் நந்திவர்மப் பல்லவனைப் பார்த்து அந்த வியப்புக் கலையாமல் நோக்குகிறான்.

'எது குறித்தும் கவலையில்லை. அதிலும் பைராகி குறித்து துளியும் ஐயம் வேண்டாம்; பைராகி வேறு யாருமில்லை எனது தூதுவரே' என்கிற மகா ரகசியத்தோடு நந்திப்பல்லவன் உதயசந்திரனை நோக்குவதை உதய சந்திரனாலேயே எதிர்கொள்ள இயலவில்லை.

"பேரரசே... பைராகி நமது தூதுவர் என்பதை என்னால் ஒரு கோணத்திலும் எண்ணிப் பார்க்க இயலவில்லை. எப்படியோ ஏமாந்தேன். காஞ்சியின் வெற்றிக் கனவை எங்கே அந்தக் கிழம் கெடுத்துவிடுமோ என்கிற ஐயப்பாடும் மிகவே இருந்தது. தங்களின் பதிலால் பல்லவ தேசத்து வெற்றி உறுதிப்பட்டுவிட்டதை உணருகிறேன். அத்துடன் பாண்டியன் புத்தில் படையை உருவாக்கியிருக்கும் ரகசியம் உள்ளபடியே எனக்கு வியப்பளிக்கிறது. ஆயினும் ஒரு விளக்கம் வேண்டும்."

உதயசந்திரனின் வினாவை நந்திப் பல்லவன் புன்னகையோடு அங்கீகரிக்க, உதயசந்திரனின் கேள்வி தொடருகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"எப்படியோ பாண்டியன் அன்பைப் பெற்றுவிட்டு அந்தக் கிழவர் நரசிங்க ஆலயம் எழுப்ப பாண்டியனைத் தூண்டுவது எதற்காக...? அதிலும் பாண்டிய மண்ணில் எழுப்பப்படும் அந்த ஆலயத்தின் அருள் அலைகள் பாண்டியனுக்குத் தானே கவசமாய் இருந்துகாக்கும்?"

அந்த வினா முன் நந்திப் பல்லவன் முகம் சற்றே சுருங்குகிறது. பின் மலர்ந்து திருவாய் உவக்கிறது. "உதயா, ஆலயம் அமைப்பவரை விடவும் அதற்கு காரண மானவர்க்கே பலாபலன்கள் மிகுதி என்பதை நீ அறிய மாட்டாயோ? ஆலயத்தில் நரசிங்க மூர்த்தியின் திரு விழிகள் வாஸ்து மரபுப்படி திறக்கப்படும் வேளையில் அந்த பைராகி, ஆகுதியில் என் நாமத்தை உச்சரித்தே வெற்றிவரம் வேண்டுவார். இதை அந்தப் பாண்டியன் அருகிலிருந்தாலும் அறியமாட்டான்.

ஸ்ரீ சுதர்ஸன மஹா ஹோமத்தில் எனது ஆகுதியைத் தட்டிப் பறித்த பாண்டியனுக்கு நான் புகட்டும் பாடம் இது மட்டுமா. போர்க்களத்து வெற்றிக்கும் வரத்தை அவன் மண்ணிலேயே பெற்று விடுவேன். அதன் பிறகு நடைபெறும் யுத்தத்தில் பல்லவ வீரபுருஷர்களின் வீரம் மட்டுமே வெற்றி பெறும்."

நந்திப் பல்லவனின் கொக்கரிப்பான பேச்சு உதயசந்திரனை உற்சாகப்படுத்தும் அதே சமயம் வாயில் மணியின் நாதம் பிரதானி ஒருவர் வந்திருப்பதைச் சொல்கிறது; நந்தியும், உதயசந்திரனும் வாயிற்புறத்தைப் பார்த்து நிமிர, பிரதானியாக உள்ளே நுழைபவர் பல்லவனின் ராஜகுரு யோக மகேந்திர தாசர்!

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அனந்தகோடி வந்தனங்கள் நந்தி..." என்கிற பீடிகையுடன் நுழைகிறார் ராஜகுரு. அவர் பார்வை உதயசந்திரனின் மேல் பதிகிறது. உதயனும் சிரம் வளைத்து வந்தனம் புரிகிறான்.

"வீர யுவனே... உன் வருகை தெரிந்தே வந்தேன். எப்படி இருக்கிறது பாண்டிய தேசம்?" ராஜகுருவின் உதட்டில் விசாரிப்பு.

"வெற்றியின் விளிம்பில் நாமும்... குழப்பத்தின் பிடியில் அவர்களுமாக அமர்க்களமாக இருக்கிறது. தாசரே..." உதயன் உற்சாகமாகப் பேச்செடுக்கிறான்.

"எதை வைத்து எப்படி என்று விவரிப்பாயா?" யோக மகேந்திர தாசரின் கேள்வியில் அவர் விஸ்தாரமாக விளக்கங்களை எதிர்பார்ப்பது தெரிகிறது.

"பாண்டிய அரண்மனைக்குள் ஒரு விருந்தினன் போல் பல நாட்கள் இருந்துவிட்டேன்.. இது என் முதல் வெற்றி. ஒரு முறை கைதுசெய்யப்பட்டும் என் சாமர்த்திய வாதத்தால் விடுபட்டேன். இது என் இரண்டாவது வெற்றி. கெங்க வம்சத்து மங்கை நாகமாலினியின் உள்ளத்தைப் பலவாறு குழப்பி, இன்று அவனைச் செயலிழக்க வைத்துள்ளேன்... இது என் மூன்றாவது வெற்றி. அனைத்துக்கும் மேலாக அங்கே நம் சார்பில் ஒரு மாபெரும் உளவாளியை உருவாக்கிப் படைபலம் அறிந்த நிலையில் திரும்பி வந்துள்ளேன்... இதுவே என் மிகப் பெரிய வெற்றி."

"யார் அந்த உளவாளி?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"கூடலழகர் ஆலயத்துப் பட்டர் பிரான் அழகர் நம்பி?"

"பாண்டியனின் மாமனாக வேண்டியவன் பல்லவனின் தாசனாகிவிட்டானா?"

"ஆம்... அந்த வைதீகப் பழத்துக்கு அரசனைவிட ஆலயம் பெரிதாக இருக்கிறது. நாட்டின் வெற்றியைவிட வீட்டின் வெற்றி பெரிதாக இருக்கிறது. அவர் பாண்டியனின் வெற்றிக்குப் பாதகம் புரியக் காரணமே மகளின் ஜாதகம்தான்."

"விந்தையான திருப்பம் இது-போகட்டும். பைராகி எப்படி இருக்கிறார்?"

"அவருக்கென்ன... சொற்ப காலத்தில் ராஜகுரு பச்சைமால் தீர்த்தரையும், பாண்டியர் பராந்தகரையும் கவர்ந்துவிட்டார். அவரைத் தைத்த கட்டாரி அவரை பாண்டிய அரசோடு சேர்ந்தே தைத்துவிட்டிருக்கிறது. இது விநாடி நம் அரசர்பிரான் கூறக் கேட்டே நான் அந்த உண்மையை அறிந்தேன்."

"அதுதான் நடிப்பின் சிறப்பு. ரகசியமென்றால் இப்படித்தான் இருக்கவும் வேண்டும். மதியூகத்தில் நாம் இந்தக் கணம் வரை துளியும் குந்தகமின்றிச் செயல் பட்டு வந்திருக்கிறோம் என்பதை அறிய மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆயினும் விதி வியூகம் அனைத்திலும் பெரிது!"

யோக மகேந்திர தாசரின் முத்தாய்பில் நந்திக்கே சற்று அச்சம் ஏற்படுகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"குருவே- என்ன இது புரியாத முத்தாய்ப்பு..."

"நந்தி... நான் ஒன்றும் தவறாகக் கூறிவிடவில்லை; விதி வியூகம் பெரிது என்றேன் - யோசித்தால் உனக்கே அதன் உண்மை புரியும்."

"அருள்கூர்ந்து வெளிப்படையாகப் பேசுங்கள். எனக்குச் சோர்வு தருவது போல் எதுவும் கூறிவிட வேண்டாம்."

"நான் கூறுவது தற்போது சோர்வைத் தந்தாலும் அதுவே பின்னர் வெற்றியை, மகிழ்ச்சியை, கீர்த்தியைத் தரவல்லது என்பதை நீ அறிவாய்தானே?"

"நிச்சயமாக... பீடிகை வேண்டாம் விஷயத்திற்கு வாருங்கள்."

"யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, தேர்ப்படை அனைத்திலும் வல்லாண்மை இருந்தாலும் ஒருவர்க்குப் பூர்வ ஜென்மத்துப் பாவ புண்ணியங்களே அடிப்படையான பெரும்படை-

அந்தப் புண்ணிய பாவங்களுக்கு ஏற்பவே நாம் இடம் பார்த்து ஜனிக்கிறோம். உயிரை வளர்த்து அந்தப் பலா பலன்களை அனுபவித்துக் கழிக்கிறோம். அம்மட்டில் தற்போதைய உன் நிலையில் புண்ணிய பலன்கள் எதுவுமில்லாததை உன் ஜாதகம் வாயிலாக, உன் நட்சத்திர ராசியில் சஞ்சாரம் புரியும் கிரகங்கள் வாயிலாக நான் நன்கு அறிந்துள்ளேன். பாவக் கிரகங்களின் பார்வை கூர்மையாகவும் புண்ணிய கிரகங்கள் மறைந்தும் இருப்பதை மறந்து விடாதே.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பரிகாரம் புரியாமல் போர்க்களம் சென்றால் அந்த ஆண்டவனால் கூட உன்னைக் காப்பாற்ற முடியாது."

"வான சாஸ்திர நிபுணர் வராக பண்டிதர் கூறிய தையே திருப்பிக் கூறுகின்றீர்களா? நான் மறக்கவில்லை குருவே-"

"என்ற.ல் ஏன் பரிகாரத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யவில்லை. வரும் பௌர்ணமியன்று பேரிகை முழங்கலாம் என்கிற நிலையில் எதற்காக இந்தத் தாமதம்-"

"உதயனுக்காகவே காத்திருந்தேன். வந்துவிட்டான். நற்செய்தியாய்த் தந்தும் விட்டான். நான் இனி பரிகாரச் செயலுக்குத் தயாராகிவிட்டேன் குருவே-!"

"நல்லது நந்தி- உனது கவனம் அதில் இருக்கட்டும். உதயா- நீ படை வளத்தைப் பார்வையிடு. பாண்டியன் வலுவை நேரில் அறிந்து வந்தவன் நீ. நமது யுவர்களுக்குப் பயிற்சியை வேகமாக அளிப்பது உன் பொறுப்பு. ஏற்ற வீரர்களைப் படைத் தலைமைக்குத் தேர்ந்தெடுப்பதில் இருந்து வியூகம் வகுப்பது வரை அனைத்திலும் உன் செயல்கள் இனி வேகமாக இருக்கட்டும்."

"மந்திரி மாறவல்லபரை வியூகம் வகுக்கும் வேலையில் உடன் வைத்துக்கொள் உதயா. தளவாடச் சாலையில் ஆயுத உற்பத்தியில் கவனமாக இருக்கும் அவருக்கும் உனது அசைவுகள் நுட்பமாகத் தெரிந்திருக்க வேண்டும். யுத்தம் என்பது கூட்டுச் சக்தி- மறந்து விடாதே."

உதயசந்திரன் அதை அறிவுபூர்வமாக அங்கீகரித்த போதிலும் உணர்வில் ஏதோ நிரடல் இருப்பதை நந்தி உணருகிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"என்ன உதயா... எதற்கோ தயங்குவது போல் தெரிகிறதே."

"அரசே... பட்டரின் வசம் ஒப்புவித்துள்ள நாக மாலினியை எண்ணியே கலங்குகிறேன். அவளை நான் பாண்டிய மண்டலம் விட்டு இங்கு அழைத்து வரத் தங்கள் ஆக்ஞை வேண்டும்."

நந்தி அந்த விருப்பம் முன் நீண்ட மௌனம் கொள்கிறான். ஆழ்ந்த யோசனையில் முகமெல்லம் சிந்தனை ரேகைகளின் வியப்பைப் பார்க்க முடிகிறது. யோக மகேந்திரதாசரும்கூட அதே நிலையில்தான் இருக்கிறார்.

பல்லவன் என்ன கூறப் போகிறான்?

"உதயா... உனக்கு இனி பாண்டிய தேசத்தில் பணி இல்லை. உன்னைப் போல் ஒரு வீரன் இல்லாமல் நமது படை வாடிக்கிடப்பதை நீ அறியமாட்டாய்.

நீ காஞ்சியை விட்டு நீங்காதே. நாட்கள் குறைவாக இருக்கிறது. நாகமாலினி பட்டரின் பொறுப்பிலேயே பாதுகாப்பாக இருக்கட்டும். களத்தில் பாண்டியனை வெற்றிகண்ட பின் பெருவீரனாக அவளை இங்கு அழைத்து வருவதுதான் உனக்கு நல்லது."

நந்தியின் கருத்துக்கு பதில் பேசும் நிலையில் உதயசந்திரன் இல்லை. மௌனம் கொண்டு அதற்கு அங்கீகாரம் தருகிறான்.

"நல்லது நீ செல்லலாம்..." நந்தியின் ஆணையைத் தொடர்ந்து அவனது இருப்பிடம் நோக்கி நடக்கத் தொடங்குகிறான்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

யோகமகேந்திர தாசர் புன்முறுவலுடன் நந்தியைப் பார்க்கிறார். பார்க்கும் பார்வையிலேயே நந்திக்குப் பாராட்டைத் தெரிவிக்கிறார்.

“பரிகாரச் செயல் எப்போது?” உதட்டில் வினாவல்.

“நாளை மறுதினம்... அதாவது சங்கடஹர சதுர்த்தியன்று...”

“ஓ... தும்பிக்கை நாதரின் பேரருள் தடையறப் பெருகிவரும் தினத்தன்றா?”

“ஆம் குருவே...”

“கவனமாகச் செயல்படு... பரிகாரச் செயல்கள் எதுவென்று ஞாபகத்தில் இருக்கிறதா?”

“ஏன் இல்லாமல்? சூரியோதய வேளையில் கற்பும் சாமுத்ரிகா லட்சணமும் உள்ள ஆடவனைக் கள பலியாய் கொடுத்து, நவதான்யப் படுக்கை விரித்து அதன்மேல் அமர்ந்து ஒரு மண்டலம் புரியவேண்டிய கோடி நாம ஜெபத்தை நான் ஒரு நாளில் புரிந்தாக வேண்டும்.

அதன் பிறகு பண்டிதர் கேட்கும் ஒன்றைத் தட்டாது கொடுத்துவிடவேண்டும், அல்லது எனக்கு மிகப் பிடித்தமான ஒன்றை விட்டுவிட வேண்டும்...”

“உனக்கு மிகப் பிடித்தது எது?”

“என் ஆசை மனைவி ரீவா...”

“அவளை விடவும் பிடித்த ஒன்று உன்னிடம் உண்டு.”

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

“குருவே.. எனக்கே தெரியாமல் என்ன அது?”

“எட்டுத் திக்கையும் வசப்படுத்தி, முடிந்தால் வானையும் வசப்படுத்தி ஆளவேண்டும் என்கிற ஆசை.”

“ஆம்... உண்மைதான்! பூமி ஒன்று. அதுபோல் இறைவனும் ஒன்று. அதுபோல் பூவுலகுக்கெல்லாம் அரசனும் ஒருவனாக, அது நானாக இருக்க வேண்டும்.”

“அந்த ஆசையையா இந்தப் பாண்டிய வெற்றிக்கு ஈடாக விடப் போகிறாய்?”

“ஊஹூம்! கூடாது.. மாட்டேன். அந்த ஆசைதான் என் ஊனுயிரின் இயக்கத்துக்கே உற்சாகம் தருவது. அதை இழந்துவிட்டால் நான் சந்நியாசியாகிவிடுவேன்.”

“அதற்காகத்தான் பலமுறை கேட்டேன். பேசாமல் பண்டிதர் கேட்பதைக் கொடுத்துவிடு. நூற்றி எட்டுக் கிராமங்களுக்கு மேலாகவா அவர் கேட்டுவிடப் போகிறார்?”

“இந்தப் பல்லவ தேசத்தில் பாதியைக்கூட அவர் கேட்டுவிட்டுப் போகட்டும். கொடுத்துவிட்டுப் பிறகு அவரையும் போருக்கழைத்து அதைப் பெற்றுக்கொள்ள எனக்குத் தெரியும்.”

நந்தியின் கருத்தால் ராஜகுருவிடம் பலத்த சிரிப்பு. அந்த நிமிடமே வெற்றி கிட்டிவிட்டதைப் போன்ற சிரிப்பு அது..

அர்த்த ஜாமம்!

பாண்டிய தேசம் பூந்துயில் கொண்டிருக்கும் நேரம். வீதிக் காவலர்களின் பாராச் சப்தம் மட்டும் அவ்வப்போது

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கேட்டுக் கொண்டிருக்க, அரண்மனை மதிலை ஒட்டி ஒரு கரிய உருவம்!

அது மதிலின் உச்சிச் சாரத்தில் ஒரு கயிற்றைப் போட்டு ஏற எத்தனிப்பது நன்கு தெரிகிறது. மிகுந்த எச்சரிக்கையுடன் சுற்று முற்றும் பார்த்துவிட்டு, கணத்தில் கயிற்றை வீசிவிட்டு மேலேறுகிறது அந்த உருவம்.

ஓர் உடும்பைப் போன்ற வேகம். உச்சிச் சாரத்தில் ஆங்காங்கே உள்ள காவற்சாவடிகளில் மங்கிய தீப்பந்த ஒளியில் அரைத் தூக்கத்தில் சில வீரர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் பார்வைக்கும், கருத்துக்கும் ஆட்படாமல் அந்த உருவம் உருண்டும் புரண்டும் முன்னேறுவதைப் பார்த்தால் பாண்டிய அரண்மனை அதற்கு நன்கு பரிச்சயப்பட்ட மாதிரி தெரிகிறது.

மெல்ல மெல்ல முன்னேறி அந்தப்புர மதில் அருகே சென்று அங்கிருந்து லாவகமாக ஒரு கர்ணம் அடித்துத் தரையிறங்கி, அந்தப்புரத்து உப்பரிகையை நெருங்கி உள்ளேயும் நுழைந்து, அங்கே அம்சதூளிகா மஞ்சத்துக்குச் சற்று அருகே வழவழப்பான பளிங்குத் தரைமேல் படுத்திருக்கும் ஒரு பெண்ணை நெருங்கி மெல்ல அந்தப் பெண்ணின் தோளைப் பற்றுகிறது.

அந்தப் பெண்ணிடம் பதற்றம், வாரிச்சுருட்டியபடி எழுந்து கொண்ட அந்தப் பெண் ஓங்கி அலறும் முன் வாயை அடைக்கும் அந்த உருவை அந்தப் பெண்ணும் துடித்தபடி வெறிக்கிறாள்.

"கோமளம் கத்தாதே.. நான் பரணி.. நாகாபரணி" என்கிற அந்த உருவில் குரலைக் கேட்ட கோமளம்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

எனும் அந்த தோழிப் பெண் அப்பாடா என்று பெரு மூச்செறிகிறாள்.

எழுந்திருந்து மாடத்து விளக்கைத் தூண்டி ஒளியைக் கூட்டிக் குரலுக்குரியவனைப் பார்த்து வியக்கிறாள்.

"பரணி... நீயா? என்ன தைரியம் உனக்கு... எப்படி உள்ளே...?"

"அதான் கூறிவிட்டாயே தைரியமென்று. ஆமாம், எங்கே நாகமாலினி?"

"மெள்ளப் பேசு. நாகா அந்த ஐங்கரனுடன் போய்விட்டாள். ஐங்கரன் யார் என்று தெரியும்தானே?"

"அறிந்தேன். அவனொரு மாபெரும் துரோகி. தன்னைப் பாண்டிய புலவன் என்று என்னை நன்கு ஏமாற்றிவிட்டான். அவனொரு பல்லவன் என்பதும் அறிய வந்துள்ளது."

"எனக்கும் அதை எண்ணிக் கலக்கமாக உள்ளது. ஏனோ பாண்டியர், அரண்மனைவிட்டு நாகமாலினி நீங்கிய செயலை மாநகர் அறிய பிரஸ்தாபிக்காமல் இருக்கிறார். எல்லாமே ஒரே மர்மமாக இருக்கிறது. நாகமாலினி எங்கே எப்படி இருக்கிறாள் என்றே தெரியவில்லை. நாகாவுடன் உன்னைச் சந்திப்பதாகத்தான் அவன் அழைத்துச் சென்றான்."

"இந்த மண்ணின் மலைக் குகைகள், ரகசிய இடங்கள் அனைத்தையும் குடைந்து பார்த்துவிட்டேன். அவர் களைக் காணவில்லை. எனக்குக் கலக்கமாக இருக்கிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உனக்கு ஒருவேளை தெரிந்திருக்கிறதா என்று பார்க்கத் தான் வந்தேன்."

"இங்கே எனக்கு உரிய மரியாதை போய்விட்டது. பேரரசின் தாய், நம் அரசரின் தமக்கை பூகந்தரிதேவியார் கூட நாகாமேல் மிகுந்த கோபமாய் இருக்கிறார். கெங்க தேசத்து பெயரைக் கெடுத்துவிட்டாள் என்று ஒரே புலம்பல். நான்கூட ஒரு கைதி போலத்தான் இருக்கிறேன்."

"நீ எப்படியாவது நாகாவின் இருப்பிடத்தைக் கண்டுபிடி- அவள் ஒருபோதும் அந்தப் புலவனுடன் இந்த மண்ணைவிட்டு நீங்கமாட்டாள். அப்படியொரு நிலை வந்தால் உயிரை விட்டாலும் விடுவாள். ஆகையால் இந்த மண்ணில்தான் அவள் இருந்தாக வேண்டும்."

"பாண்டிய பேரரசை மணந்து அவளை மகிழ்வாக வாழ வைக்கத்தான் நான் இந்த மண்ணுக்கே வந்தேன். இன்று எங்கள் பாதையே மாறிவிட்டது. ஆமாம்- எப்படி இருக்கிறாள் அந்த மதுரவல்லி?"

"அரசர் பிரானின் உற்சாக ஊற்றாக பாண்டிய வெற்றியின் அடிநாதமாக அனைத்துமாக இருக்கிறாள்."

"நாகமாலினி இருக்க வேண்டிய இடத்தில் அவள் இருக்கிறாள். நாகமாலினி இப்படி திசை தப்பி அவப் பெயர் பெற்றுவிட்டதை நினைத்தால் எனக்குக் கொதிப்பாக இருக்கிறது கோமளம்."

"நாகாவை நம் ஸ்ரீபுருஷ மகாராஜா எந்த நோக்கத் திற்காக அனுப்பினாரோ அந்த நோக்கமே பாழ்பட்டு விட்டதே! நானும் தலமறைவாகத் திரிந்தும் பலன் இல்லாது போய்விட்டதே-"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நாகாபரணி வருத்தம் மிகக் கொள்கிறான்.

"சரி.. சரி.. கிளம்பு பரணி. இந்த அரண்மனைக்குள் நீ இத்தனை தைரியத்துடன் வந்ததை நினைத்தால் எனக்கு குலை நடுக்கம் ஏற்படுகிறது.

நீ ஒவ்வொரு முறையும் தப்பிவிட முடியாது. சீக்கிரம் கிளம்பு; எப்படியாவது நாகாவைக் கண்டுபிடி"

கோமளத்தின் எச்சரிக்கை செய்த அதே நொடியில் திகுதிகுக்கும் தீப்பந்தம் தாங்கிய ஒரு வீரர் கூட்டம் அவர்களைச் சுற்றி வளைக்கிறது.

அவர்களில் நடுநாயகமாகத் திறந்த மார்பின் அடர்ந்த கேசம் செழுமிக் கிடக்க மீசை நீவித் தெரிகிறான் சாத்தன் கார்கோடன்!

கோமளத்தின் விழிகள் அதிர்ச்சியில் விரிய, நாகாபரணி விதிர்த்துப் போக, கார்கோடனின் உதட்டில் அசுரச் சிரிப்பொன்று ஆரம்பமாகிறது.

அது இனி நாகாபரணியை என்னவெல்லாம் செய்யப் போகிறதோ?

"தூங்காமல் தூங்கும் பாண்டிய நாட்டின் விழிப்பைப் பற்றி நட்புள்ள நீ கூட தப்புக் கணக்கு போட்டு விட்டாயே நாகாபரணி.

நேர்வழியில் செய்து பார்க்க வேண்டிய செயல் களைக் குறுக்கு வழியில் சாதிக்கப் பார்த்து இன்று இப்படிக் கையறு நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டாயே..

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பங்கமற்ற கெங்க தேசத்துக்கு இப்படியா அசிங்கம் பூசுவாய்? இனி என் பிடியிலிருந்து எந்தக் காலத்திலும் நீ தப்ப முடியாது..."

சாத்தனின் ஆவேசப் பேச்சின் அர்த்தச் செறிவில் நாகாபரணி மெழுகென உருகினது போல் தெரிகிறது அமைதியாக நின்று, சாத்தனுக்கு அதிக சிரமங்கள் இல்லாமல் செய்துவிட்டான்!

உதிக்கப் போகிறான் கதிரவன். உறை பனிக் கூட்டம் அது தெரியாமல் கும்மாளமடித்துக் கொண்டிருக்கிறது.

புள்ளினங்களுக்கு ஆதவனின் வருகை இன்னும் சில நாழிகளில் என்று எப்படித்தான் தெரியுமோ? உறக்கம் கலைந்து அலகு பிளந்து தங்களின் பட்சி பாஷையில் மதுரை நகருக்கே விழிப்பேற்படுத்துவன போல் தெரிகிறது.

கதலி வனத்துக் கிளிக் கூட்டம் சற்று வாயாடிப் பட்டம் பெற்ற இனம் போலும்? சப்தம் மிக அதிகமாய் இருக்கிறது.

ஆனால், கிரிதிருமால் நதியின் நீரோட்டத்தில் மட்டும் எந்தச் சப்தமும் இல்லை.

படித்துறைகள் வரப்போகும் மாந்தர் கூட்டம் நிமித்தம் வெறிச்சோடிக் கிடக்க, ஒருவர் மாத்திரம் ஆற்றுப் பாதையில் வந்து கொண்டிருக்கிறார்!

உற்றுப் பார்க்கையில் அது பட்டர் அழகர் நம்பி என்பது புலனாகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கங்கைக்கு ஈடான திருமால் நதியில் தீர்த்தமாடி விட்டு, அந்த ஈரக்கச்சமுடன் அவர் அழகர் ஆலயத்து வாயிற் கதவைத் திறப்பது இன்று நேற்றான செயலா என்ன?

ஆயினும், இன்று மிக விரைவாகவே அது நடந்தேறுகிறது.

பட்டரின் ஈரத் திருமேனி தேரடிக் கூடம் நோக்கிச் சென்று, அங்கு வைக்கோற் படுக்கைமேல் ஒரு நோயாளி போல் கிடக்கும் நாகமாலினியை ஒரு பார்வை பார்த்துவிட்டு, திரும்புவதெல்லாம் கூடச் சில நாட்களாக வழக்கமான ஒன்றாகிவிட்டது.

அப்படிப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது தினமும் ஒரு வைணவ அந்தணர் பட்டரைப் பார்க்க வருவதும், இருவருமாய் சில மணித்துளிகள் பேசி மீள்வதும்கூடப் பார்ப்பவர்களுக்குப் புதிய காட்சிதான்.

"வாருங்கள் சிரோன்மணி வரதரே... ஏதும் சேதி உண்டோ?"

"இல்லாமலா இந்த அதிகாலை வருவேன்? காஞ்சியில் இருந்து எனது கடம்பவனத்துக்கு அதிவிரைவான ஒற்றர் சேதி வந்துள்ளது. உடன் பதிலைப் பெற்று அனுப்ப விக்ஞாபனம்."

"சேதியைத் தாருங்கள். பதிலோடு வருகிறேன்."

பட்டர் அந்த அந்தணர் தந்த செய்தி ஓலையுடன் திருச்சந்நிதி திறக்கிறார். கூடல் அழகன் திவ்ய சொரூபியாக அமர்ந்து சேவை சாதிக்க, அவன் முன்னம் பெரிதான

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பஞ்சமுக கண்டா விளக்கு. அதன் ஐந்து திரிகளும் நெய் குடித்து அணையாத ஜோதியாகி வெளிச்சம் கசியவிடும் இடத்தில் சேதியை வாசிக்கத் தொடங்குகிறார்.

'பட்டர் பிரானுக்கு!

பணிந்த வந்தனங்கள். பல்லவப் பேரரசர் படைநலம் செழிக்க என்னை இங்கே பணித்துவிட்டார். நாக மாலினியை ரகசிய இடத்தில் போர் முடியும்வரை தாங்கள் பாதுகாப்பான். ரகசியமாக வைத்திருக்க வணங்கிப் பிரார்த்திக்கிறேன்.

அவள் என் பிடியில் பல்லவ தேசம் ஏகிவிட்டதாகப் பாண்டியன் கருத வேண்டும். அந்தக் குழப்பத்தில் கெங்கன் ஸ்ரீ புருஷனும் கலங்கிடவேண்டும்.

நாகமாலினி என்பால் பிரேமையில் இருப்பதாய் இனி மற்றவர் கருதும்படி செய்திகள் பாண்டிய தேச மெங்கும் பரவும். பல்லவ ஒற்றர்கள் அதைச் செய்வார்கள். போருக்குமுன் இந்தக் குழப்பம் மிக அவசியம்.

வரும் பௌர்ணமியன்று யுத்தம் தொடங்கலாம். நாகமாலினியை அதுவரையில் கவசமாய் இருந்து காத்திடுங்கள். பல்லவப் பேரரசர் தங்கள் பேருதவிக்குத் தன் நெஞ்சார்ந்த நன்றி பணித்தார் யுத்த வெற்றிக்குப் பிறகு தாங்கள் விரும்பினால் காஞ்சியில் வைணவ ஆலயம் ஒன்றைத் தங்களுக்காகவே எழுப்பி, அத்துடன் தானமாய் நூற்று எட்டு கிராமங்களையும் பல்லவப் பேரரசர் வழங்கச் சித்தமாய் உள்ளார்.

நம்பிப்பட்டினம் என்கிற நாமத்துடன் தங்கள் தலைமுறைகள் உவக்க அது திகழட்டும், தங்கள் உள்ளக்கிடக்கை வெல்வதாக.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

*தாசன்,*

*உதயசந்திரன்.*

கடிதத்தை வாசித்த பட்டர் அழகர் நம்பி நிமிர்ந்து அழகர் பிரானைப் பார்க்கிறார். அந்தத் தேவ உருவின் தீர்க்கமான கருவிழிகள் அவருக்கு அச்சமூட்டுவனபோல் தோன்றுகின்றன.

'பாசத்தின் நிமித்தம் நீ செய்யும் இந்தச் செயல் பாடெல்லாம் துரோகங்களாயிற்றே... அறம் வளர்க்க வேண்டிய நீ இப்படிச் செய்யலாமா?' என்று கேட்பதுபோல் ஒரு பிரமை.

பட்டரின் உள்ளத்தில் தடுமாற்றம். எந்தப் பதிலை உதயசந்திரனுக்கு எழுதுவது?

வெளியே காத்திருக்கும் அந்தண உருவம் இப்போது திருச்சந்நிதி முன் வந்து கூப்பிய கரத்துடன் காத்துநிற்க, திடும்மென்று சதங்கை ஒலிச் சப்தம்.

அந்தணர் சப்தம் வந்த திக்கைப் பார்க்கிறார். ஆதவன்கூட மேலெழும்பிப் பொற்கதிர் பாய்ச்சி, அந்த சதங்கைக்கால்களுக்குச் சொந்தமான தேகத்தைப் பளிச் சென்று காட்ட... வந்து கொண்டிருப்பவள் மதுரவல்லி.

அவர் தோளில் அஞ்சுகம் ஒன்று! தோழி போல் பழகும் அந்த வாயாடிக் கிளி திடுமென்று அவள் தோள் விட்டு நீங்கித் தேரடிக்கூடம் நோக்கிப் பறந்து அங்குள்ள மறைவிடத்தில் நுழைந்து மறைந்தும் போனது. பின்தொடர்ந்து ஓடுகிறாள் மதுரவல்லி.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

சப்தம் கேட்டு எட்டிப் பார்த்த பட்டரும்கூட அதைப் பார்த்துப் பதைபதைத்துப் போனார்.

"மதுரா! போகாதே நில்...!" திருச்சந்நிதி விட்டு வெளியே வந்து சேவை மண்டபம் கடந்து தேரடிக்கூடம் நோக்கி ஓடத் தொடங்குகிறார்.

# 20

அந்த அஞ்சுகம் அவ்வாறு பறந்து தேரடிக் கூடம் அடையும் என்றோ அதைப் பின்தொடர்ந்து மதுரவல்லி ஓடக்கூடும் என்றோ பட்டர் ஒருகாலும் நினைத்திருக்க மாட்டார்.

நாமொன்று நினைத்தால் தானொன்று நடக்கும் என்பது இதுதானோ?

பட்டரிடம் பதைப்பு கூடிப்போக அஞ்சுகமும் தேரடிக் கூடத்தின் உள்ளே வைக்கோற் பிரிகளின் மேல் போய் அமர்ந்துகொள்கிறது.

மதுரவல்லி முகத்தில் அதன் நிமித்தம் கோபம். ஏற்கெனவே செவ்வரளியாய்த் துலங்கும் அவள் முகத்தில் மேலும் ரத்தப் பாய்ச்சலால் செந்நிறம் கூடித் துலங்கு கிறது. கருநிற விழி மணியிரண்டும் அந்தச் செந்நிறத்தின் நடுவில் உருளும் கருமுத்தாக ஒளிருகின்றன.

"அடி கள்ளி- உனக்கு அதிகம் செல்லம் கொடுத்தது என் தவறு. இல்லாவிட்டால் இப்படிப் பறந்துவந்து என்னை மூச்சிரைக்க விடுவாயா?" மதுரவல்லி பேசும் போது பட்டரும் அங்கு நுழைந்துவிடுகிறார்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"மதுரா- இங்கென்ன செய்கிறாய், எதற்காக இங்கு வந்தாய், இங்கெல்லாம் உன் பாதம் படலாமா?"

- பட்டர் ஏகவசனத்தில் அடுக்கிய வினாக்களைத் தொடர்ந்து அதிர்ந்துபோய்த் தந்தையை நோக்குகிறாள் மதுரா.

நயனங்களில் அதிர்வலை பாய்வதும் இமைகள் சிலிர்த்து துடிப்பதும் நிகழும்போது அவள் காதுகளை ஒருவகை முனங்கல் சப்தம் எட்டாமல் போகவில்லை.

ஏதோ ஒரு உயிர் ஜீவமரணப் போராட்டத்தின் இறுதியில் சுரத்தின்று முனங்குவது போன்ற முனங்கல் அது.

மதுராவிடம் விடைப்பு.

"அப்பா, இதென்ன முனங்கல்சப்தம், யாரிடமிருந்து?" பட்டர் முகத்தில் இந்தக் கேள்வியால் மேலும் அதிர்ச்சி பரவுகிறது.

"ஒன்றுமில்லை... நீ இங்கிருந்து கிளம்பி வா என்னுடன்."

- பட்டரின் அழைப்பைப் புறந்தள்ளிப் பார்வையை தேரடிக்கூடம் முழுவதும் செலுத்துகிறாள் மதுரவல்லி. கல்தூண்களில் காசண்டியும், பந்தக்கூடும் தெரிய, ஆங்காங்கே வடநார் கயிற்று வட்டங்களும், இரும்புச் சங்கிலிகளும் பிணைந்து தொங்க, இரு தேர்ச் சக்கரங்கள் சிதைந்ததால் தனித்துப் பிரித்துக் கிடத்தப்பட்டிருக்க, அதன் மேல் வைக்கோற்பிரிக் கொட்டாரம் ஒன்று-

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அதன் பின்னால் இருந்துதான் சப்தம் வருகிறது.

சற்றும் தாமதியாமல் மதுரவல்லி முன்சென்று அந்த பிரிகளை அகற்றிவிட்டுப் பார்த்தபோது அவள் விழிகள் விரிந்த விரிவில் பெரும் அதிர்ச்சியான எல்லை தெரிகிறது.

வைக்கோற் பிரிகளுக்கு அப்பால் ஒரு நைந்த பட்டுத் துணிமேல் முடக்கோலத்தில் நாகமாலினி.

"அப்பா யார் இந்த பெண்... இங்கே எதற்காக கிடத்தப்பட்டிருக்கிறாள்?" மதுரா இதுபோல் அதிர்வாகப் பட்டரிடம் பேசியிருப்பாளா என்பது சந்தேகமே.

பட்டர் அடுத்த நொடி கூடலழகர் ஆலயத் திருக்கோபுரத்தைப் பார்த்து, "பெருமாளே..." என்று கேவத் தொடங்கி விடுகிறார்.

"யார் இந்தப் பெண்? இவளுக்கு ஏன் இந்த முடக்கோலம்?"

"இவள்- இவள்-"

"உம். சொல்லுங்கள். உங்கள் செயலில், சொல்லில் பிழை இருப்பதை நான் உணராமல் இல்லை. அது இந்த அளவு ஒரு பெண்ணைச் சார்ந்ததாக இருக்கும் என்று கனவிலும் நினைக்கவில்லை. யார் இவள்?"

"இவள் யாரென்பதை நான் நமது இல்லத்தில் உரைப்பேன். வா முதலில் இல்லம் ஏகுவோம்."

"முடியாது. இங்கேயே, இப்பொழுதே கூற வேண்டும்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"மதுரா... என் ஆசைச் செல்வமே! என்னை சோதிக்காதே. உன் தந்தை எந்தத் தவறும் செய்துவிட வில்லை."

"வீண் பேச்சுகள் எனக்குத் தேவையில்லை. இந்தப் பெண்ணை நான் பார்த்தது போலவும் தெரி கிறது. பாராதது போலவும் தெரிகிறது. உண்மையைச் சொல்லப் போகிறீர்களா, இல்லையா?"

- இருவரின் வாக்குவாதத்தின் இடையே புரவி ஒன்றின் குளம்படிச் சப்தம் குறுக்கிடுகிறது.

பட்டர் விழிகள் அதன் காரணமாகத் தீப்பிடித்த மாதிரி விரிகிறது.

"மகளே- சற்றுப் பொறு. வந்துவிடுகிறேன்."

- பட்டர் தேரடிக் கூடத்தை ஒட்டி ஆலயம் சார்ந்த வாழைத்தோப்பின் உள்ளே நுழையத் தொடங்குகிறார்.

ஆயிரமாயிரம் வாழைகள்!

கிரிதிருமால் நதி நீரால் ஊட்டச்சத்துடன் பூவும் குலையுமாய்ப் பொலியத் தழைந்த வாழைகள்.

வாழைத் தோட்டத்தின் மறுபுறத்தில் கடம்ப மரக்கூட்டம் கொண்ட ஒரு சிறு வனம் போன்ற பகுதி. அதனுள்தான் யானை கட்டி மண்டபமும் வசந்த மண்டபங்களும் இருக்கின்றன.

இராஜ்ஜியாபதியின் உறவுக் கூட்டம் பௌர்ணமிக் காலத்தில் அமர்ந்து குலாவுவதன் பொருட்டோ இல்லை; மாநகர் வரும் அண்டை நாட்டு வியாபாரிகளைத் தங்க

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வைக்க வேண்டியோ கட்டப்பட்டிருக்கலாம் எனும்படி யான மண்டபங்கள்.

அந்த மண்டபங்களை ஒட்டி புரவிப்பாதை ஒன்று உண்டு. அது ஓரிடத்தில் மூன்றாகப் பிரிந்து கிடக்கிறது. அந்தப் பாதைகளில் ஒன்றில்தான் அந்தப் புரவி வந்திருக்க வேண்டும். புரவிமேல் வந்த வீரன் இப்பொழுது அதைவிட்டு இறங்கிப் புரவியின் சேணப்பைக்குள் கையைவிட்டு ஒரு சேலை ஒன்றை எடுப்பது நடந்துவரும் பட்டரின் பார்வைக்குப் பளிச்சென்று தெரிகிறது. பட்டரைப் பின்தொடரும் மதுரவல்லியும்கூட இதைக் காண்கிறாள்.

புரவியை ஆரோகணித்து நிற்கும் வீரன் இப்பொழுது பட்டர்பிரானைப் பார்த்து வணங்கி, தன் இடைக்கச்சில் இருந்து பல்லவ இலச்சினை பொறித்த வில்லை ஒன்றினைக் காட்டுகிறான்.

பின்னர் ஓலையை அவர் வசம் தருகிறான்.

பட்டரின் பதைத்த நிலைப் பற்றித் தனக்கொன்றும் கவலையில்லை என்பது போல் அடுத்த நொடியே குதிரை மேல் ஏறிச் சிட்டாகப் பறக்கத் தொடங்குகிறான்.

யார் இவன்?

அதென்ன ஓலை?

வினாக்களைப் பந்தாக அடித்தபடி பட்டரை நெருங்கிய மதுரவல்லி, சற்றும் தாமதியாமல் அந்த ஓலையை அவர் வசம் இருந்து பிடுங்குகிறாள்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"மகளே மதுரா! வேண்டாம். சொன்னால் கேள்." பட்டர் பதைக்கப் பதைக்க, அதை வாசிக்கத் தொடங்கு கிறாள்.

'பட்டர்பிரானுக்கு!

உதயசந்திரன் வந்தனங்களுடன் விழையும் மடல். நலமாய் காஞ்சி சேர்ந்தேன். இங்கு யுத்த முகாந்திரங்கள் மிக பலமாய் உள்ளன. அதன் காரணமாய் நான் அங்கு வரஇயலாத நிலை. யுத்தம் நிகழ்ந்து பல்லவன் சேனை வெற்றி காணப் போவது எங்கள் கரத்தில் மட்டுமல்ல. தங்கள் கரத்திலும் உள்ள விஷயம். பாண்டியன் ரகசிய மாகப் பத்தாயிரவர் கொண்ட படையை உருவாக்கி விட்டதாகவும், பௌர்ணமிக்கு முந்தைய இரவில் அது மதுரை விட்டு நீங்கி, பல்லவ தேசம் நோக்கிக் கிளம்ப இருப்பதாகவும் அறிந்தேன்.

அப்படிக் கிளம்பும் முன் யுத்த பலி தராமல் பாண்டியர் படை செலுத்த அனுமதிக்க மாட்டார். அந்தப் புலிக்கான முகூர்த்தம் தோல்விக்கு இட்டுச் செல்லும் ராட்சஸ வேளையாக இருக்க ஆவன செய்யுங்கள். பச்சைமால் தீர்த்தரை மட்டும் இம்மட்டில் தாங்கள் சமாளிக்க நேரலாம். பைராகி குறித்துக் கவலை வேண்டாம். அவர் பல்லவ ஒற்றர்! ஆச்சரியமாயிருக்கிறதா? அதுதான் நந்திப் பல்லவரின் தீரம்; ராஜ தந்திரமும்கூட.

அதுகாறும் நாகமாலினியைப் பொன்போல் பாதுகாக்கப் பிரார்த்திக்கின்றேன். யுத்தகளத்து வெற்றிக்குப் பிறகு தங்கள் செல்வ மகள் மட்டுமல்லாது நாகமாலினியும்கூடப் பாண்டியரை வெறுக்கும் நிலை வரவேண்டும். அந்தக் கன்னியை நான் மணந்து மகிழ வேண்டும்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தாங்கள் பிழை முகூர்த்தம் கணித்துவிட்டதை இதேபோல் இலச்சினையுடன் வரும் ஒற்றன் வசம் லிகிதமாய் எழுதி அனுப்பிவிடவும். இந்த ஒற்றன் மீண்டும் உங்களை மறுதினம் சந்திப்பான்.

தங்கள் அன்பில் நெகிழும்

**உதயசந்திரன்.'**

- ஓலைச் செய்தியை வாசித்த மதுரவல்லி முகத்தில் இடி இறங்கியதுபோன்ற கலக்கம், விழி மணிகளில் குரூரச் சிவப்பு.

"அப்பா என்ன இது - இந்த உதயசந்திரன் பல்லவத் தளபதியல்லவா?"

- பட்டர் மௌனிக்கிறார். அடர்ந்த மௌனம். உடலெல்லாம் நடுங்கும்படியான மௌனம். "தேரடிக் கூடத்தில் உள்ள பெண் நாகமாலினியா? கெங்க தேசத்து அரசர் ஸ்ரீ புருஷ மகாராஜாவின் பேத்தியா?"

பட்டரிடம் நடுங்கிய நிலையில் ஆமோதிப்பு.

"தாங்கள் தெய்வீக ஆராதனை புரியும் லௌகிக சந்நியாசி என்றல்லவோ எண்ணியிருந்தேன். எப்பொழுது இருந்து இப்படித் தேசத் துரோகியானீர்கள்..."

"உன்னைப் பாண்டியர் காதலிக்கத் தொடங்கியதில் இருந்து."

- நடுங்கும் குரலில் கூறியதைக் கேட்டு விடைத்து அவரை நோக்குகிறாள்.

"என் காதலுக்கும், உங்கள் துரோகத்துக்கும் என்னப்பா சம்பந்தம்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அரசனுக்கும் ஆண்டிக்கும் உள்ள சம்பந்தம் மகளே அது."

"புரியும்படி கூறுங்கள்."

"மதுரா, என்னை இதற்கும்மேல் எதுவும் கேட்காதே. நான் எதையும் விளக்கமாகக் கூறும் நிலையில் இப்பொழுது இல்லை."

"குற்றம் தங்களைக் குற்றுயிரில் குறுகல்களை உருவாக்குகிறதோ?"

"மகளே-வேண்டாம். இந்த அந்தணன் இப்பொழுது செந்தணலாய் இருக்கிறேன்."

"அவ்வாறு ஆகக் காரணம் எது?"

"உன் காதல்."

"என் காதலில் என்ன பிழை?"

"காதலே முதலில் பிழைதான் மகளே... கண்ணில்லாத அந்த மயக்கம் அது. அதனினும் பெரும்பிழை அந்தணர் குலத்துப் பெண் நீயும் க்ஷத்திரிய குலத்து அரசன் பாண்டியனும் இணையப் போவது...?"

"அரச காதலுக்கு ஏங்கும் உலகில் இதென்ன புதுக் கருத்து?"

"அரச காதலுக்கு அரசியர் ஏங்கட்டும். அந்தணச் செல்வி நீ ஏங்க வேண்டாம். நம் கடன் நாரணனைத் தொழுது அவனடி சேர்வது மட்டுமே..."

"இத்தனை தீர்க்கமுள்ள தாங்கள் எங்கள் காதல் வளரும்போது ஏன் மௌனமாயிருந்தீர்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"எங்கே மௌனமாக இருந்தேன்? புழுங்கினேன். வெம்பினேன், வெதும்பினேன். எனை வழிநடத்த வேண்டிய அரசனை நான் எப்படி வழி நடத்துவது என்று புரியாமல் குழம்பினேன். அப்பொழுதுதான் உதயசந்திரன் பற்றி அறிந்தேன். அவனை நெருங்கினேன்."

"பாண்டியரை நெருங்கிக் காதல் குறித்து உங்கள் கருத்தைக் கூறாமல் பல்லவனை நெருங்கக் காரணம்?"

"பல்லவன், பாண்டியனை வென்றுவிட்டால் தோல்விப் பழி உன் மேலும் விழுமல்லவா?

உன் காதல் மயக்கத்தால் பாண்டியன் தோற்றான் என்றும் பழியும் எழுமல்லவா? அதை நீ தாங்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும்."

"அதனால்..."

"அவனைக் கை கழுவுவாய்; வைணவக் கிழத்தியாய் நோன்பு நோற்கத் தொடங்குவாய் என்று..."

"என்றெல்லாம் கற்பனை செய்தீரோ...? காதலுக்கு எதிராய் எத்தனையோ சதிகளை நான் கேட்டிருக்கிறேன். இது புதிது எனக்கு. நாளைய சரித்திரம் உங்களைத் துரோகி என்று இகழப்போவதைவிடவா நான் பாண்டியரை மணப்பது தவறு?"

- மதுரவல்லியின் கேள்விக் கணைகள் வனக்காற்றை மீறி பட்டரைப் புழுக்குகின்றன.

"இந்த மாநகர் எத்தனையோ அரசர் பெரு மக்களைப் பார்த்துவிட்டது. ஆயினும் வைணவத்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தாம்பத்தியத்திற்கு அதன் வேர்களுக்கு நீர் விட்டு தழைக்கச் செய்த ஒரே அரசர் பராந்தகர் மட்டுமே.

க்ஷத்திரிய தர்மத்தில் பலி பூஜைகளும் ரௌத்ரங்களும் அங்கீகரிக்கப்பட்ட விஷயங்கள்.

அவைகளைப் புறந்தள்ளி இந்த மாநகரில் கூடலழக ருக்கு இத்தனை பெரிய ஆலயத்தை அமைத்து வைணவதாசன் நான் என்று உலகறிய முன் வந்து நின்ற ஒரே அரசர் பராந்தகர் மட்டுமே!

அவரது வைணவப் பற்றுக்கு என் காதலும் ஒரு ஊக்கப் பொருளாய்ப் பயன்படுவது குறித்து நான் மகிழாத தினமில்லை, நொடியில்லை. பொழுதில்லை.

எங்கும் சிவாலயங்கள்! நடுவில் ஹரிக்கும் பேராலயம். ஹரியும் சிவனும் ஒன்றே என்ற சத்தியத்தை உணர்த்துவது போன்ற பெரும் போக்குக் கொண்ட பேரரசர் பாண்டியர்.

அவரை நெருங்கி, என் மகளை மறந்துவிடு என்றோ, இல்லை. என்னிடமே நேரடியாக, எனக்கும் உங்கள் காதலில் ஒப்புதல் இல்லையென்றோ கூறியிருந்தால்– அதுவல்லவோ அழகு.

இப்பொழுது பல்லவ ஒற்றனாய், ராஜ்ய துரோகியாய், மகா பாவியாய் மாறி நிற்கிறீர்களே அப்பா. இது எந்த வைணவ தர்மத்துடன் சேர்ந்தது?

சொல்லுங்கள். சொல்லுங்களப்பா. சொல்லுங் கள்..." மதுரவல்லியின் இடி போன்ற கேள்விகள் முன் நடுநடுங்கிப் போகிறது பட்டர் தேகம்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

'மகளே, என்னை மன்னித்துவிடு' என்று நா பேசத் துடிக்கிறது ஆனால், முடியவில்லை.

"அப்பா-" என்கிறாள் சற்றுக் கூர்மையாக.

"என்னம்மா-"

"இப்பொழுதுகூட ஒன்றும் கெட்டுவிடவில்லை. உங்கள் உள்ளக்கிடக்கை புரிந்த உங்கள் மகள், உங்களால் வாலைக் குமரியாய், வசந்தப் பதுமையாய் வளர்ந்து விட்ட உங்கள் மகள், உங்களுக்கெதிராய் ஒரு துரும்பைக் கூடக் கிள்ளிப் போடமாட்டேன்- கவலையே படாதீர்கள். காலம் இப்பொழுதும் கெட்டுவிடவில்லை.

உங்கள் பாவத்திற்குப் பிராயச்சித்தமாக நான் கூறுவது போல் செய்யுங்கள். பதிலாக நான் பாண்டியரை மணக்க மாட்டேன் என்று உறுதி தருகிறேன் உங்களுக்கு-"

"மதுரா- நீ என்ன செய்யச் சொல்கிறாய்?"

"பராந்தகர் இந்த யுத்தத்தில் வென்றாக வேண்டும். பார் உள்ள அளவும் அவர் புகழ் நிலைக்க வேண்டும். தோல்வி என்ற சொல்லே அவர் சரித்திரத்தில் இடம் பெறக் கூடாது- இதுவே என் ஆசை."

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் மகளே!"

"முதலில் நாகமாலினியை அரசரிடம் ஒப்புவியுங் கள். அவள் முடத்திற்குக் காரணம் எது?"

"உதயசந்திரனின் வர்மத் தாக்குதல்."

"அதிலிருந்து அவள் மீளட்டும். மீண்டு அரசரைச் சந்திக்கட்டும். அவளால் தெங்க நாட்டுப் படை புத்துயிர்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பெற்றுப் பாண்டியப் பெரும்படையுடன் சேரட்டும். மற்றதை நான் பிறகு கூறுகிறேன்."

- மகளின் கருத்துக்கு மறு கருத்து கூறும் நிலையில் பட்டர் இல்லை. ஆனால், மதுராவின் உள்ளத்திலோ ஆயிரமாயிரம் சிந்தனைகள்! முடிவுகள்.

**நா**கமாலினியின் நாடியைச் சோதிக்கிறார் அரண்மனை வைத்தியர் அனந்த சித்தர். அருகிலேயே சாத்தன் கார்கோடன், வல்லபன் கணபதி.

எதிரிலுள்ள சிம்மாசனத்தில் ஆழ்ந்த சிந்தையுடன் பராந்தகன். பராந்தகனை உற்றுப் பார்த்த நிலையில் பச்சை மால் தீர்த்தர்.

"நாகாவை யாரோ தொடு வர்மத்தால் தாக்கிப் பிடரிக் கட்டு விழச் செய்து உடம்பைச் செயலிழக்கச் செய்துள்ளார். பிடரிக்கட்டை நீக்கிடும் உபாய மறிந்தவர் நாகமாலினி தேவியாரின் ஊனத்தைச் சரி செய்யலாம்."

- அடுத்த நொடியே வல்லபன் கணபதி முன்சென்று கைகளை விறைப்பாக்கி ஆழ்ந்த மூச்செடுத்து, நாக மாலினியின் பின் முதுகுப்புறமாய் ஒரு தட்டு தட்டவும் அடுத்த நொடியே நாகமாலினியின் விடைத்த கால் களும் கோணிக் கொண்ட கையும் நேர்படுகின்றன. ஆயினும் வாய் பேச முடியவில்லை.

அதற்கும் அனந்த சித்தர் ஒரு சூரணம் தருகிறார்.

தொண்டை அடைப்பு விலகுகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

மாறாக நாகமாலினியின் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர். மார்பில் விம்மல். நொடித் தாமதமும் இன்றி ஆசனத்தில் அமர்ந்துள்ள பராந்தகனின் திருவடிகளை ஓடிப் பற்றுகிறாள் நாகமாலினி.

"அழாமல் நடந்ததைக் கூறு-"

-பராந்தகனின் விக்ஞாபனத்தைத் தொடர்ந்து நாகமாலினியிடம் விளக்கம் ஆரம்பமாகிறது. அதே சமயம் பைராகியின் அறையில்-

குட்டிபோட்ட பூனை போன்ற நடை பைராகியிடம்- பைராகி எதிரே ஆலயச்சிற்பி. "திருவிக்கிரகம் பின்னமின்றி வந்துள்ளதா?"

- பைராகியின் கேள்விக்குச் சிற்பியிடம் பதிலில்லை. "உன்னைத்தான் கேட்கிறேன். நீதானே சிற்பி நரசிங்க திருவிக்கிரகத்தில் ஏதும் பின்னம் உள்ளதா என்ன?" பைராகியிடம் கடூரம்.

"என்னவென்று சொல்வேன்... எந்தக் கல்லைத் தொட்டு விக்கிரகம் வார்க்க முனைந்தாலும் அந்தக் கல் சிதறி உடைகிறது; அதிசயமாய்-"

"அதிசயமாய்-?"

"அதிசயமாய் ஒரு கல்லில் தேரை வந்து விழுந்தது. என் சிற்பக் கலை வாழ்வில் இதெல்லாம் ஆச்சரிய அனுபவங்கள், ஆனால் தென்பகுதியில் அரங்கம் அமைத்த குன்றம் ஒன்றில் தனிக் கற்களில் விக்கிரகம் வார்க்காமல், மலைச் சரிவிலேயே விக்கிரகம் சமைத்து ஓர் ஆலயம் எழுப்புவதாக அறிந்தேன்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அரங்க குன்றத்திலா?"

"ஆமாம்."

"எனக்குத் தெரியாமல் இன்னொரு ஆலயமா? அதிலும் போர் வெப்பம் மிகுந்த இவ்வேளையில்..?"

"ஆமாம். சாத்தனின் மேற்பார்வையில் நெடுநாட்களாய் அங்கு ஆலயப்பணி நடப்பதாகக் கேள்வி, அது மட்டுமல்ல, பாண்டியர் பெருமகளை அந்த மலை முழுக்க கல்வெட்டாகத் திட்டவும் திட்டமிருப்பதாக அறிந்தேன்."

பைராகி முகம் அதைக் கேட்டுச் சிவக்கிறது.

"ஆலயத்தின் முன் மலைப்பரப்பைக் குடைந்து குளம் அமைத்து அதனுள் ஆழிமண்டபம் அமைத்து..."

"செய்யட்டும், செய்யட்டும். நாளை பல்லவன் வசம் இந்தப் பாண்டிய தேசம் அடிமைப்படும்போது அந்தக் கலைச் செல்வங்கள் எல்லாம் பல்லவனுக்குத் தானே வரப்போகின்றன?"

- பைராகி தனக்குத்தானே பேசிக்கொள்வது சிற்பிக்கு புரியவில்லை.

"சரி, நீ செல்." சிற்பியை அனுப்பிவிட்டு அழைப்பு மணியை அசைக்கின்றன அவர் விரல்கள்.

பறந்து வருகிறான் ஒரு வீரன்.

"அரசர்பிரான் இப்பொழுது எங்கிருக்கிறார்?"

"ஆலோசனை மண்டபத்தில் என்று அறிகிறேன்."

"என்னை விட்டுவிட்டு ஆலோசனையிலா..?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

- பைராகி முகம் மாறும்போது பராந்தகனே அங்கு பிரவேசிக்கிறான். அவனது எதிர்பாராத பிரசன்னம் பைராகியை அதிர்ச்சிக்குள்ளாகிறது.

"வணக்கம் பைராகி அவர்களே-"

"வா பராந்தகா வா- இப்பொழுதுதான் உன்னைப் பற்றி நினைத்தேன்."

"என்னவென்று? எப்படி இந்தப் பராந்தகனை இன்னமும் ஏமாற்றலாம் என்றா?"

- பராந்தகன் கேள்வி பைராகியிடம் சிலிர்ப்பூட்டு கிறது.

"என்ன சொல்கிறாய் நீ?"

"நீ ஒரு பல்லவ ஒற்றன் என்கிறேன்."

- அடுத்த நொடியே பைராகியிடம் ஆழ்ந்த அமைதி-விழிமணிகளில் வியப்பு.

"ஏன் மௌனமாகி விட்டீர்?"

பைராகியிடம் மட்டும் ஏனோ மௌனம் தொடருகிறது.

"வாயைத் திறந்து பேசுங்கள். உங்கள் பல்லவ னுக்குத் துளிக்கூடப் புத்தி இல்லை. அதனால்தான் அனைத்திலும் காலம் கடந்த ஞானம் அவனுக்கு. யாகம், வேள்வி ஆலயம் என்று எத்தனை சூதுகள்... ஹூம். எத்தனை சூதுகள்?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"வீரர்களின் வெற்றியும் தோல்வியும் அவரவர் நெஞ்சத்து நிஜங்களிலும் புஜங்களிலும்தான் இருக் கின்றன. காலமும் நேரமும் சற்றே துணை செய்யும் அம்சங்கள் மட்டுமே. இதெல்லாம் புரியாமல் உங்களைப் போல் இந்தப் பாண்டியனை ஏமாற்ற எத்தனை பேர் வந்துள்ளீர்?"

- பராந்தகனிடம் பராக்கிரமப் பேச்சு? ஆனாலும் பைராகியிடம் ஆழ்ந்த மௌனம்.

"எனக்கு மண்ணாசை கிடையாது. ஆயினும் மண்ணாசை கொண்டோரை வெல்ல வேண்டுமென்றால் நானும் அந்த ஆசைக்கு உட்படத்தான் வேண்டியுள்ளது.

உங்கள் பல்லவனுக்கும் எனக்கும் பழி தீர்க்கும் விஷயங்கள் நிறையவே உண்டு. அனைத்தையும் யுத்த மேடையில் நேருக்கு நேர் நான் தீர்த்துக் கொள்வேன்.

என் வசம் படை என்றோ தயார்! என் கைச் சொடக்கிற்காகக் காத்திருக்கின்றன.

அத்தனையும்- இனி கணப்பொழுதும் தாமதமின்றி நான் போர்க்களத்தில் அனைத்திற்கும் பதில் தந்துவிடச் சித்தமாக இருக்கிறேன்.

இங்கே உங்களை நான் எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆயினும் உங்கள் வயதுக்கும் வைணவத் திருமேனிக்கும் மதிப்பளித்து உங்களை இந்த விநாடியே பல்லவ தேசம் நோக்கித் திருப்பி அனுப்புகிறேன்.

செல்லுங்கள், என் போர்ச் செய்தியுடன்-

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வரும் பௌர்ணமி நாம் யுத்த களத்தில் நேருக்கு நேர் சந்திப்போம். இடைப்பட்ட தினத்தில் எத்தனை நேச நாட்டுப் படைகளை உதவிக்கு அழைக்க முடியுமோ அத்தனை படைகளையும் நந்திப் பல்லவன் துணைக்கு அழைத்துக் கொள்ளட்டும்.

உம். புறப்படுங்கள்."

- பராந்தகனின் பராக்கிரமமான உரை கேட்டு அந்த வைணவக் கிழட்டு மேனி நடுங்கிப் போகறது மெல்ல அதன் மௌனம் கலைகிறது.

"பராந்தகா, நீ நிஜமாலுமே சுத்த வீரன்; அற்புத வைணவன்; உத்தம ராஜ தந்திரி, உனக்கு என் மனப்பூர்வ ஆசிகள்."

- பேசிய கையோடு பராந்தகரை நெருங்கிய பைராகி பராந்தகனின் இடைக்கட்டாரியை தன் மார்பின் மேல் பாய்ச்சிக் கொள்கிறார்.

"பைராகி என்ன இது பேதைமை?"

பதறுகிறான் பராந்தகன்.

"பேதைமை இதுவல்ல பராந்தகா- இதுவே உத்தமச் செயல். இதுகாறும் நான் செய்ததுதான் பேதைமையான செயல். உன் நேர்மையான வீரத்துக்கு நான் தலைவணங்குகிறேன். ஒரே ஒரு விக்ஞாபனம்."

"என்ன பைராகி?"

"அந்த நரசிம்ம ஆலயத்தைக் குடவரைக் கோயிலாக அமைத்து முழுமைப்படுத்திவிடு. ஸ்ரீ நரசிம்மானுக்கரகம்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

உனக்குத் சித்திக்கட்டும். உன் புகழ் பார் உள்ள அளவும் நிலைக்கட்டும். ஒரு முக்கியச் செய்தி..."

"என்ன பைராகி?"

"பைராகி அந்தச் செய்தியைப் பராந்தகனின் காதோரமாய்ச் சொல்லச் சொல்ல, பராந்தகன் முகத்தில் தாளமாட்டாத வியப்பலைகள்!"

அதே சமயம் பைராகியின் உயிர்ப் பறவையும் மேலெழும்பி விட்டிருந்தது.

# 21

**பை**ராகியின் உயிர்ப்பறவை நாரண நாமத்துடன் மெல்ல மெல்ல விடுபட்டு மேலெழுகிறது. பராந்தகன் சிலையாகிறான். தலை சாய்ந்த அந்த கிழச் சிங்கத்தை பார்த்து வியர்க்கிறான். மெல்ல அகுயை வசப்படுகிறான்.

'இந்த பைராகிதான் என்ன ஒரு தீர்க்கமான மனிதர்!' - நெஞ்சு விம்ம அந்த கிழட்டு உருவைப் பார்த்து பெருமூச்செறிகிறான்.

சிலரின் மண்ணாசை இப்படி எத்தனை மகத்தான மனிதர்களையெல்லாம் விழுங்குகிறதோ?

பாண்டிய வெற்றியின் முதல் பலியாக பைராகியே ஆகிவிட்டதை எண்ணி அவன் கண்கள் கலங்குகின்றன.

அருகாமை மயிலாசனத்தில் களைத்து அமர்ந்து கண்கள் கலங்க நெகிழும் போது பச்சைமால் தீர்த்தரின் வருகை அங்கே நிகழுகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தீர்த்தர் மரித்து கிடக்கும் பைராகியை பார்த்து விட்டு எந்த சலனமுமின்றி பராந்தகனைப் பார்க்க, பராந்தகனிடம் பிடிபடாத ஆச்சரியம்.

"தீர்த்தரே... பைராகி தன்னைத்தானே மாய்த்துக் கொண்டுவிட்டார்?"

"தெரியும்."

"எப்படித் தெரியும்?"

"வைதிக ஞானிகள் பிறர் தண்டனை தரும் வரை காத்திருக்க மாட்டார்கள்."

"தண்டனைக்குரிய செயலில் மட்டும் ஈடுபடுவார் களோ?"

"இங்கே குற்றமாகக் கருதப்படும் விஷயம் அந்நிய மண்ணில் ராஜ விசுவாசமாக கருதப்படுவதால் அந்த ஈடுபாட்டை குறை சொல்ல முடியாது பராந்தகா. மண்ணில் சில தர்ம நியாயங்கள் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.

ஞானி அஹிம்சை பற்றி பேசினால் அது அழகு, வீரன் பேசினால் அது கோழைத்தனம்.

தன் நிலைக்கும் கடப்பாட்டிற்கும் ஏற்பவே எதை யும் செய்தல் வேண்டும். மீறினால் நாகமாலினியின் நிலைதான்!"

"தீர்த்தரே... பல்லவனால், அவன் பேராசையால் அற்புதமான மனிதர்களெல்லாம் மாறிவிட்டனரே. அதை

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நினைக்க நினைக்க என்ன அரசு? என்ன ஆட்சி இது? என்று சலிப்பாக இருக்கிறது.

மனதின் மகத்தான உணர்ச்சிதான் காதல். எனக்குள்ளே அரும்பிய மகத்தான அந்த உணர்ச்சி, பட்டருக்குள் இப்படியா நேர் எதிராக மாறும்?

"சில தர்ம நியாயங்கள் மட்டும் இடத்திற்கு இடம் மாறும் என்று நான் சற்று முன் கூறியது இதற்காகவும் சேர்த்துதான் பராந்தகா."

- தீர்த்தரின் விளக்கம் பராந்தகனுக்குள் மேலும் சோர்வையே தருகிறது. பைராகியைச் சந்திக்கும் முன் வரை அவன் குருதியில் குதிகாளமிட்ட வீர உணர்ச்சியெல்லாம் இப்போது நடந்து முடிந்த விஷயங்களை அறிந்த நிலையில் ஆவியாகிவிட்டதைப் போல் தோன்றுகிறது.

அருகே கிடக்கும் பைராகியின் சடலம் அவனது மனக் கண்ணில் ஏதேதோ நினைவுகளை கிளறி விடுகிறது. கூடவே நம்பியின் உருவமும் மனக்கண்ணில் தோன்றி 'என் மகளை காதலிக்காதே' என்று கூறுவது போல் ஒரு பிரமை.

தன்பாலுள்ள காதல் காரணமாய் பலவிதத்திலும் மாறி மதுரவல்லியை நாகாபரணியை விட்டே கொல்லத் துணிந்த நாகமாலினி வேறு இப்போது மனதில் முண்டுகிறாள்.

அனைவருமே மிகுந்த நம்பிக்கைக்குரியவர்கள்!

அழிச்சாட்டியமாய் மாறிப்போனார்கள்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தர்ம நெறிமுறைகளை விட்டு விலகியும் போனார்கள்.

அனைவரின் ஆதார சுருதியும் அன்புதான். ஆனால், வழிமுறைகளில்தான் எத்தனை வித்தியாசம்?

பராந்தகனுக்குள் புதிய சிந்தனைப் புயல்.

வரக் கூடாத வேளையில் வந்துவிட்ட விசாரப்புயல்.

வீரம் கொப்பளிக்க வேண்டிய வேளையில் மனதில் வீணான சிந்தனைகள். தீர்த்தர் அதைக் கண்டு முதல் முறையாக பதைத்துப் போகிறார்.

காஞ்சியெங்கும் யுத்த முஸ்தீபு; பாலாற்றங்கரையின் மணல்வெளி மேலெல்லாம் போர் கூடாரங்கள். எதிரே அறுவடையான வயல்வெளி முழுக்க வீரர்களின் அணிவகுப்பு.

உதயசந்திரனின் நேரடிப் பார்வையில் நால்வகைப் படையின் மல்லர்கள் பிரிவில் அவன்தன் வியூகம் பற்றி கூறிக் கொண்டிருக்கிறான். ராஜ்ய பிரதானிகளின் மேற் பார்வையில் திரும்பிய பக்கமெலாம் அணி அணியாய் அலை அலையாய் வீரர் வரிசை.

மொத்த வீரர்களை மண்டலப் பிரிவாக்கி அணிக்கு நாற்பத்திஎட்டு பேர் என்று வகுத்துப் பிரித்து அந்த அணிக்கு உகந்த தலைமையாளனையும் தேர்வு செய்து அந்த தலைமையாளன் எப்படி தன் அணியுடன் களம் புகவேண்டும் - போரிட வேண்டும் என்பதையும் கூறி போர்க்கள அணிவகுப்பில் ஒரு ஒழுங்குமுறையை அவன் உருவாக்குவதில் அவனிடம் ஒரு வெறி தெரிகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

சர்ப்ப வியூகம்.

சக்கர வியூகம்.

கடக வியூகம் என்கிற வியூகங்கள் போருக்கு பழையவை. மண்டலப் பிரிவு அதில் புதிதாய் மந்தி வியூகம் என்கிற புதிய தாக்குதல் முறை என்ற உதயன் செல்லும் வேகம் கண்டு ராஜகுரு யோக மகேந்திர தாசரே வியக்கிறார்.

எப்படியும் பாண்டியனை வென்றுவிட இவன் துடிப்பது ஒருக்கால் அந்த நாகமாலினிக்காகவும் இருக்குமோ?

இருக்குமோ என்ன? அதுவேதான்... தாசருக்கு விளக்கம் கிட்டுகிறது.

"ஆம், தாசரே- இந்த போரின் வெற்றியில்தான் என் காதலின் வெற்றியும் உள்ளது. நாகமாலினி ஒரு வீரப் பெண். அவளை அடைவதன் மூலம் கெங்க நாட்டையே அடைவதாக கருதுகிறேன். நம்மை ஜென்ம பகையாய் நினைக்கும் கெங்க அரசர் ஸ்ரீ புருஷரையே இந்த காதல் மாற்றலாம். ஒரு வைரமணி மாலையால் வந்த பகை இந்த வைரப்பெண்ணை கரம் பற்றுவதால் மாறலாம் அல்லவா?"

"கொக்கு தலையில் வெண்ணெய் வைத்து பிடிப்பது உன் ஆசையை விட விவேகமாய் தோன்றுகிறது எனக்கு. காதலுக்கு கண்ணில்லை என்பது சரிதான்."

"தாசரே... என் வேகத்தை எதையாவது பேசி கெடுத்துவிடாதீர்கள். பட்டரிடமிருந்து பதில் ஓலை வராத

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

சஞ்சலத்தை வெல்வதே எனக்கு பெரும்பாடாக இருக்கிறது."

"உனக்கு அது பெரும்பாடென்றால் எனக்கு பைராகியிடம் இருந்து ஓலை வராத குறை. நரசிம்ம ஆலய ஸ்தாபிதமும் மற்ற செயல்களும் எந்த அளவில் என்றும் தெரியவில்லை.

நந்தியோ பரிகார வேள்வியில் ஈடுபட்டு கோடி நாம ஜெபம் புரியத் தொடங்கிவிட்டான். எதற்கும் அவனை நெருங்கக்கூட இயலாது. அமைச்சகமோ படைப்பிரிவில் பயிற்சியில் மூழ்கிக் கிடக்கிறது."

- யோக மகேந்திரதாசர் மெலியச் சலித்தபோது உள் நுழைகிறான் ஒரு தூதுவ ஒற்றன்.

அவன் கரத்தில் ஒரு ஐம்பொன் குப்பி. அதில் பட்டரிடம் இருந்து வந்ததாய் ஒரு சேதி.

ஆர்வமாய் சேதியை வாசிக்கும் தாசர் புளகாங்கித மாய் உதயசந்திரனை பார்க்கிறார்.

"உதயா... உன் நாகா பத்திரமாய் இருக்கிறாள். பாண்டியனுக்கும் களபலிக் காலத்தை தவறாக கணித்து கொடுத்து விட்டாராம் பட்டர்.

பௌர்ணமி யுத்தம் நமக்கே சாதகம்.

உன் விசித்திர ஆசைகள் பலித்தாலும் பலிக்கும் போல் தெரிகிறதே_"

- தாசரின் பேச்சால் புத்துயிர் பெற்றவன் போல் ஆகிறான் உதயசந்திரன்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அருகாமைப் புரவிமேல் பாய்ந்து ஏறி அடுத்த களம் நோக்கி அவன் சிட்டாக பறப்பதில் அது நன்கு தெரிகிறது. யோக மகேந்திரதாசரிடம் கூட வெற்றிப் புன்னகை.

வந்த சேதியை திரும்ப வாசிக்கிறார்.

முகத்தில் கர்வத்தின் படர்ச்சி.

'நன்றி பட்டரே!' என்கிறது உதட்டு சப்தம்.

"நீங்கள் அனுப்பிய அந்த தவறான சேதி இன்னேரம் காஞ்சியை எட்டியிருக்கும். எதிரி தவறான பாதையில் முதல் அடி எடுத்து வைத்திருப்பான்."

மதுரவல்லி குமைந்தபடி நிற்கும் பட்டர் எதிரே கூறும்போது குறுக்கிடுகிறது ஒரு உருவம். அரண்மனைச் செவிலி என்பது பார்த்த மாத்திரத்தில் தெரிந்து விடுகிறது.

வீட்டு வாயிற்புறமும் பல்லக்கும் வீரர்களின் வரிசையும் தெரிகிறது.

"என்ன சேதி?"

"உடனடியாய் தங்களை அரண்மனைக்கு அழைத்து வர தீர்த்தர் உத்தரவிட்டிருக்கிறார்." செவிலி யின் பேச்சுக்கு மறுபேச்சின்றி ஓடிச்சென்று பல்லக்கில் ஏறுகிறாள் மதுரவல்லி. பட்டரையும் இழுத்து ஏற்றிக் கொள்கிறாள்.

பல்லக்கின் மாநகர் விஜயத்தில் மெல்ல பாண்டிய மண்டலத்திலும் யுத்த ஜுரம் பரவி விட்டது தெரிகிறது.

ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக ஆடவர்கள் பேசிக் கொள்வதும், சாவடிக் கொட்டாரங்களில் பெரிய பிர

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

சங்கமே நடப்பதும் மதுரவல்லியின் காதுகளில் விழாமல் இல்லை.

அவர்களை கடந்து பல்லக்கு விரையும்போது அவர்கள் ஒருவகை பக்தியுடன் பேச்சை நிறுத்தி பல்லக்கை உற்றுப் பார்ப்பதும் மதுராவுக்கே ஆச்சரியம் தருகிறது.

'காரணமில்லாமல் தீர்த்தர் அரண்மனைக்கு அழைக்கமாட்டாரே' சிந்தனை அலைகளின் பிடியில் அகப்பட்டவளாக மதுரவல்லி கண்களை மூடி யோசிக்க, அந்த பட்டுச் சிவிகை அரண்மனை வாயிலைத் தாண்டி உள்ளே சென்று முற்றத்தில் பிரவேசித்து, அன்ன வாகன மண்டபத்தையொட்டி நிற்க, திரைச்சீலை விலக்குகிறாள் மதுரா.

எதிரில் சோகமாய் தீர்த்தர். அருகிலேயே ராஜ மாதா பூசுந்தரி தேவியார், சாத்தன் கார்கோடன், வல்லவன் கணபதி, மதுரகவியார் என்று பாண்டிய நாட்டின் பிரதான மானிடத் தூண்களே அங்கு தெரிகின்றன. அனைவர் முகத்திலும் ஏனோ இனம்புரியாத சோகம்.

இவர்களுக்கெல்லாம் என்னவாயிற்று... ஏன் இவர்கள் இப்படி நிற்கிறார்கள். ஊரை யுத்தப் பரபரப்பு பிடித்தாட்டும்போது இவர்கள் மட்டும் ஏன் இப்படி சோகம் பூசிக்கிடக்கிறார்கள்?

மதுரா கேள்விக் கனலுடன் சிவிகை விட்டு நீங்குகிறாள்.

“வா மதுரா, வா- ராஜ மாதாவிடம் இணக்கமான் அழைப்பு. மதுரா கணமும் தாமதியாமல் பூசுந்தரியை எட்டி பாதங்களில் விழுந்து வணங்கி எழுகிறாள்.”

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"ஏன் எல்லோரும் உற்சாகமற்று சோகமாக தெரிகிறீர்கள். என்னை இந்த அரண்மனைக்கு அழைத்த காரணம்?" தழைந்த குரலில் அவளின் கேள்விக்கு தீர்த்தரிடம் ஒரு ஆழமாமன பெருமூச்சு.

"இப்பொழுது காரணத்தை கூறப் போகின்றீர்களா இல்லையா?" பதறுகிறது மதுரவல்லியின் அதரங்கள்.

"நிச்சயம் கூறத்தான் போகிறேன். அதற்குதானே உன்னை அழைத்து வந்தேன். பல்லவன் படைதிரட்டி யுத்த முரசு கொட்டியபடி காஞ்சியை விட்டுப் புறப்பட்டு விட்டான்."

"ஆனால், இங்கோ எல்லைப்புறத்தில் நம் படைகள் தயாராய் இருந்தும் அதை வழிநடத்த வேண்டிய பாண்டியன் தயாராய் இல்லை." தீர்த்தரின் விளக்கத்தால் திடுக்கிடுகிறாள் மதுரா.

"ஏன் தயாராய் இல்லை?"

"அதீத மனச்சோர்வு காரணமாய் தயாராக இல்லை எனத் தெரிகிறது."

"வீரம் பொங்கிப் பிரவாகிக்க வேண்டிய வேளை யில் சோர்வா - எதனால்?"

"எதன் பொருட்டு என்று விவாதிக்க கால நேரமில்லை பெண்ணே. இந்த விநாடி பாண்டிய மண்ணின் வெற்றி உன் கரத்தில்தான் இருக்கிறது."

"என் கரத்திலா?"

"ஆம். பராந்தகன் உன்னால்தான் புத்துணர்வு பெற வேண்டும். அதன் நிமித்தம் போர்க்களம் புக வேண்டும்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வெற்றியும் பெற வேண்டும். அவன் உள்ளசோர்வுக்கான மருந்து உன்னிடம் மட்டுமே இருப்பதாக நான் நம்புகிறேன்."

"உங்கள் பேச்சும் கருத்தும் ஆச்சரியம் தருகிறது. இப்பொழுத மன்னர் எங்கே?"

**மா**டத்தில் மார்தூக்கி நின்றுகொண்டிருப்பது பராந்தகன்தான்! விழிகளில் வான்வீதியில் லயிப்பு முகத்திலோ ஆழ்ந்த சிந்தனையின் வியாபிப்பு.

சந்நியாசம்வரை சிந்தனை போய்விட்டது நன்கு தெரிகிறது. உயிர்களை காக்கும் பொறுப்பில் உன்னதம் ஏதும் இல்லை என்பது போல் மனதில் ஒரு தீர்மானம்.

அரசன் என்றால் அவனுக்கு காதல் கூடாது.

சதா யுத்த சிந்தனையோடுதான் இருந்தாக வேண்டும். நாற்புறமும் கவனமாய் இருந்துகொண்டும், எதிரிகள் வலுப்படாதவாறு பார்த்துக் கொண்டும் வாழ்வதும் ஒரு வாழ்வா என்ன?

அவன் எண்ணத்திற்கேற்ப எந்த கட்டுப்பாடுமின்றி ஒரு சிட்டுக்குருவி உப்பரிகைக்கு அப்பால் தழைத்தபடி பொசிந்து கிடக்கும் வேங்கை மரத்துகிளையில் வந்த மர்ந்து அலகு உரசி பாண்டியப் பேரரசனைப் பார்க்கிறது.

'மாமன்னனே, நீ பெயரளவில்தான் மன்னன் உள்ளபடியே நான்தான் உன்னிலும் உயர்ந்தவன். நேற்றை பற்றி கவலை எங்களுக்கில்லை. நாளை என்றும் ஒன்றும் எங்களுக்கில்லை. நிகழும் இந்த கணமே எங்களுக்கு எல்லாம்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அந்த கணத்தில் எல்லையற்ற வானம் ஏறுவோம். எங்கும் தாவுவோம். எங்களுக்கான காய் கனிகள் இந்த மண்ணில் எங்குதானில்லை?

யாரும் எங்களுக்கு எதிரியில்லை.

ஆசைக் கனவுகள் எதுவும் காணவும் எங்களுக்கு தெரியாது. கூடித் திரிவோம். குலாவுவோம் குதூகலிப் போம்.'

- அந்த சிட்டுக்குருவியின் லயிப்பில் அது பேசுவது போல் ஒரு பிரமை பராந்தகப் பாண்டியனிடம்! 'நான் இதுபோல் ஒரு குருவியாய் பிறவாது போனேனே...' - எண்ணத்தில் ஏக்கம் ஒரு பந்தாய் எழும்பி விழும் போது சதங்கை சலீரிட உள் நுழைகிறாள் மதுரவல்லி. சிட்டுக்குருவி அவள் பார்வையிலும் படுகிறது.

கலங்கிய விழிகளுடன் ஏறிடுகிறாள். ஏனோ பராந்தகன் பார்வையை வேறுபுறம் திருப்பிக் கொள் கிறான். மதுரவல்லியின் இதழ்கடையின் அதன் எதி ரொலியாய் ஒரு இளநகை. பராந்தகன் அதன் காரணம் புரியாமல் மதுராவைப் பார்க்கிறான்.

"போர் முனையில் படையின் முன் வீர உரை ஆற்றி பாண்டிய மண்டலத்தின் வெற்றிக்கு முழுமுதற் காரணமாய் இருக்க வேண்டிய தாங்களா இப்படி ஒரு சாதாரண சிட்டுக்குருவியிடம் மனதை இழந்து விசாரத் தில் விழுவீர்கள்?"

அதை எண்ணும்போது என்னால் நகைக்காமல் இருக்க முடியவில்லை - மதுரவல்லியின் பதிலால் பராந்தகன் முகத்தில் மேலும் இறுக்கம் கூடுகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அரசே.. எங்கே என் காதல் காரணமாய் உங்களை தோல்வி தழுவிவிடுமோ என்று அடிக்கடி அஞ்சி வந்தேன். அதை உண்மையாக்குவது போல் இதென்ன போக்கு?"

பராந்தகன் அந்த வினா முன் மதுரவல்லியை வெறிக்கிறான்.

"மதுரா.. உனக்கு தெரியாது. என் மனதில் நான் என்ன நினைக்கிறேன் என்று உனக்கு தெரிந்தால் நீ இவ்வாறு பேச மாட்டாய்?

அற்ப மண்ணாசை அற்புதமான மனிதர்களை யெல்லாம் துரோகிகளாக்குகிறது. பாவத்தின் பாதையில் அவர்களை செலுத்தி பந்தாக உருட்டி விளையாடுகிறது. இதை நன்கு உணர்ந்தேன்.

ஒரே தேசம், ஒரே அரசன் என்கிற நிலை இருந்தால் இந்த ஈன நிலை வருமா? இந்த வினாவிற்கான விடையில் தான் இருக்கிறது எனது எழுச்சி?"

"விடை கிட்டியதா இல்லையா?"

"கிட்டியிருந்தால் போர்க்களத்திலோ இல்லை ஆலயத்திலோ அல்லவா இருந்திருப்பேன்."

"போர்க்களம் என்பது சரி - ஆலயம் எதற்கு?"

"சந்நியாசிகளின் புகலிடம் அதுதானே?"

"சந்நியாசம் வாங்குகின்ற அளவிற்கு அப்படி என்ன நிகழ்ந்துவிட்டது?"

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"எது நிகழவில்லை? என் மேலுள்ள காதலால் மாமன் மகளே கொலைகாரியாகி விட்டாள். உன் மேலுள்ள பாசத்தால் உன் தந்தையே இந்த மண்ணின் துரோகியாகி விட்டார். ராஜ விசுவாசம் என்று கூறிக்கொண்டு ஒரு வைணவ சந்நியாசி உளவுவேலை பார்த்திருக்கிறார்.

அனைத்துக்கும் மேலாக இந்த மண்ணைப் பிடித்து பல்லவக் கொடியை பறக்கவிட நந்திப் பல்லவனோ யாகம், யோகம் என்று கடவுளையே தர்மசங்கடப்படுத்துகிறான்.

இத்தனைக்கும் நடுவில் ஒரு பாவமும் அறியாத மக்கள் கூட்டம்!

இதையெல்லாம் சிந்தித்தால் பற்றற்ற சந்நியாச நிலை மேல் என்றுதானே தோன்றும்?"

- பராந்தகனின் வினாக்கள் மதுரவல்லியைக்கூட சில வினாடிகள் மௌனிக்கச் செய்துவிடுகின்றன.

ஆனபோதிலும் இந்த சிந்தனைகூட ஒருவித மயக்கம் என்று எதைக் கொண்டு உணர்த்த?

ஆழ்ந்து யோசிக்கிறாள்-

மண்ணாசை துளியுமின்றி அஹிம்சை மார்க்கமாய் பராந்தகன் சிந்திப்பதன் மூலம் ஒரு மகானைப் போலத் தான் அவள் கண்களுக்கு தெரிகிறான்.

இவன் முன் ஏகதேச சக்கரவர்த்தியாகிட துடிக்கும் அந்த நந்திப் பல்லவன் எங்கே?

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பேராசைக்காரன் அரசனாய் இருந்தால் அந்த அரசனின் குடிகள் அன்றாடம் யுத்த பயத்துடன்தானே பொழுதுகளை கழிக்க முடியும்?

குடி படைகளின் நலன் குறித்தும் போரால் விளையும் துயரம் குறித்தும் சிந்திக்கும் மன்னனின் ஆட்சிதானே மக்களின் ஆட்சியாக இருக்கும்?

மதுரவல்லி, பராந்தகனை சமீபிக்கிறாள். தன் பட்டு கரங்களால் அவன் கரத்தைப் பற்றியபடி அவனை ஏறிடுகிறாள். உதடுகள் பிரிகின்றன.

"உன்னதமான சிந்தனை உங்கள் சிந்தனை.

உங்களைப் போன்ற மண்ணாசையற்றவரே இந்த மண்ணை ஆளவேண்டும். மனிதநேயம் மிகுந்த நெஞ்சமே மன்னனாக இருக்க வேண்டும்.

ஏகதேசம் ஒரே அரசன் என்ற நிலை இருந்தால் இமயம் முதல் குமரி வரை குடிபடைகள் யுத்த கலக்கமற்று வாழ்வார்கள் என்பது சத்தியமே!

அப்படி ஒரு நிலை வரவேண்டுமானால் பல்லவன் மட்டுமல்ல, இன்றைக்கு இணக்கமாக இருக்கும் சேர சோழர்கள்கூட உங்கள் எண்ணப்படி இந்த நாவல பூமியை நலம் திகழும் பூமியாக்க வேண்டுமென்றால் பல்லவனை நீங்கள் வெற்றிகொண்டால்தான் அது நிகழும்?

உங்கள் கருணைப் பேரரசின் எல்லை பாண்டிய மண்டலம் தாண்டிச் செல்ல பல்லவன்தானே இன்று தடைக்கல்!

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அந்த தடைக்கல்லும்கூட தானாய் உருண்டு நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கும் வேளையில் அதை தவிடு பொடியாக்காமல் இப்படியா நீங்களே பொடியாகிப் போக முயல்வீர்கள்.

விசாரம் வீரனுக்கு வரலாமா?

நாம் வணங்கும் நாரணமூர்த்தியே அசுரவதம் புரிந்தவர்தானே?

எனக்கிணை எவர் என்று மார்தட்டிய ஹிரண்யனை அவனது பாதுகாப்பான வரங்களுக்கு நடுவிலும் பாதை கண்டு, வதைத்து, பிரகலாதன் நம்பிக்கையை காப்பாற்றிய நாராயணனை தொழும் தாங்களா இப்போது பிரகலாதன் போல் உங்களை நம்பி காத்திருக்கும் இந்த மதுரை மக்களின் நம்பிக்கைக்கு குந்தகமாய் சிந்திப்பது?"

- மதுரவல்லியின் இணக்கமான பேச்சின் எதிரொலி பராந்தகன் உடைவாளை அழுத்தமாய் பற்றத் தொடங்கு கிறான்.

நெகிழ்ந்து போகிறாள் மதுரா.

# 22

கணமும் தாமதியாமல் அவள் வாளாலேயே விரல் கீறி ரத்தத் திலகம் இடுகிறாள்.

"ஏக தேசம் ஒன்று. அது- பாண்டி மண்டலம்!"

"ஏக ராஜ புருஷரும் ஒருவரே-அவர் மாமன்னர் பராந்தகர்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

-ரத்தத் திலகம் இட்ட நிலையில் பராந்தகன் காதுகளில் விழுவது போல் கிசுகிசுப்பாக அவள் பேசுவதைக் கேட்டுப் பராந்தகன் நகைக்கிறான். இறுக்கம் பரவிய முகத்தில் வியாபித்த அந்த நகைப்பு பாலைப் பசுமையாய்த் தெரிகிறது. அந்த பசுஞ்சிரிப்பைப் பாண்டிய அரண்மனையே கண்டு மகிழ்ச்சி கொள்கிறது.

போர் முரசின் முழக்கம் உற்சாகமாய் எழும்பத் தொடங்குகிறது! சாத்தனும் கணபதியும், எயினனும் ஏலாதியும் நாற்புர வாயில்களை நோக்கிப் பிரிகிறார்கள்.

ஒவ்வொரு வாயிலிலும் முரசின் நிமித்தம் திரண்டு விட்ட பாண்டிய வீரர்களை அவர்கள் வரிசைப்படுத்திக் கொண்டு விடுவார்கள்.

பல்லவனுக்கு பாடம் புகட்டாமல் திரும்ப மாட்டார்கள் அவர்கள். கெங்கர்களின் படை வழியிலேயே இணைந்து கொள்ளும் என்று ஓலை மூலம் தகவல் வந்து சேருகிறது.

வேணாட்டுப் புரவிக் கூட்டம் பராந்தகன் அழைக்காமலே நட்புரிமையுடன் வந்து கலந்து கொள்கிறது.

மதுரைக்கு மூன்று காத தூரத்தில் ஆனைமலை சருக்கத்தில் உள்ள கடம்பவனம் மிக அடர்த்தியானது.

அந்த வனத்தினுள் பல்லவனை எதிர்கொள்ள ஏற்கெனவே படை தயாராக இருக்கிறது. அந்தப் படையும் கிளம்பிவிட்டது.

எல்லைக் காளிகோவில் வாயிலில் கவச உடை தரித்த நிலையில் வந்து சேர்கிறான் பராந்தகன்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

யுத்த பேரிகை சப்தம் அங்கு மட்டும் அடங்கிய நிலையில் இருக்கக் காளி மாதாவை கைகூப்பி வணங்கிடும் அவனருகே தீர்த்தரும், மதுரவல்லியும் நிற்கின்றனர்!

அஷ்டமங்களப் புரவி அலங்கார அம்சங்களுடன் அவன் தாவி ஏறக் காத்திருக்கிறது.

பலி எழுதும் பீடமருகில் காத்திருக்க, காளி உபாசகன் பராந்தகனைப் பார்க்கிறான்.

தீர்த்தர் வேளை வந்துவிட்டது என்பதை உணர்ந்தவ ராக அண்ணாந்து விண்ணைப் பார்க்க உச்சத்தில் கருட வட்டம்! உள்ளத்தில் உகந்த வேளை வந்துவிட்ட மகிழ்ச்சி அவரிடம் அரும்புகிறது.

கூடியிருக்கும் மாதர்கள் குலவை ஒலி எழுப்ப மதுரவல்லியை நோக்கும் பாண்டியப் பராந்தகன் 'எனது உற்சாக ஊற்றாக எதிரே நிற்கிறாய் மதுரா... வெற்றி வீரனாக நான் திரும்பப் போவது இந்த மதுரைக்காக மட்டுமல்ல - உனக்காகவும்தான்!

பல்லவனை வென்று நான் திரும்பும் போது நீ வெற்றி மாலையோடு மணமாலையையும் சூட்டிடத் தயாராய் இருக்க வேண்டும், என்கிறான்.

பார்வையாலேயே அதற்கான ஆமோதிப்பைத் தருகிறது அவளது நிலை நயனங்கள்.

இடையிடுகிறது யுத்த முரசு... போட்டியிடுகிறது செண்டை

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

ஊடுருவுகிறது நாகரா. நாடி நரம்புகளைக் குடைந்து எழுச்சி மூட்டும் அந்த யுத்த இசைப் பரணியின் உச்ச கட்ட வேளையில் காளி மாதா எதிரே கற்பூரம் காட்டி முடித்து சிலிர்ப்பியபடி பீடம் அருகே வந்து நிற்கும் ராஜ எருதின் கழுத்தில் உபாசகனின் வாளிறங்குகிறது. துண்டு பட்டு விழுந்த அதன் சிரத்தைத் தொடர்ந்து பராந்தகனின் அஷ்டமங்கலப் புரவி அவனைச் சுமந்தபடி ஆவேச கதியில் ஓடத் தொடங்குகிறது. பின்தொடரும் புரவிக் கூட்டம் இனி வெற்றி மாலையோடுதான் திரும்பும்.

ராஜமாதா பூசுந்தரிகூட மாடத்தில் நின்று தொலைவில் களம்நோக்கி விரையும் ரதப் படையைப் பார்க்கிறாள். ரதங்களின் சக்கரங்கள் கிளப்பிய புழுதியில் ஆலவாய் நகரம் அமுங்கி விடும்போல தெரிகிறது.

இடையறாத யுத்த முரசின் சப்தம் ஒரு பக்கம் - புழுதி மறுபக்கம்.

வழக்கமாய் கோவில் மணி சப்தம்தான் மாடத்தில் நிற்கையில் காதில் மோதும். கிளிக்கூட்டம்தான் மதுரை வானை ஆளும். இன்று எல்லமே மாறிவிட்டது.

மதுரை மட்டுமா?

காஞ்சியும்தான்!

கோஷ நாம ஜபம் முடித்து புத்துயிர் பெற்ற ஒரு தெய்வீக வீரனைப் போலப் பல்லவன் நந்தியும்கூடத் தன் படைமுன் கம்பீர ஆகிருதியுடன் ஒரு வெண் புரவி மேல் அமர்ந்து படை நடத்தி வந்து கொண்டிருக்கிறான்.

உடன் உதயசந்திரன்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இரு படைகளும் மற்ற படைகளின் உதவி சேர்ந்த நிலையில் இரு நாட்டுக்கும் இடையில் எங்காவது ஒரு புள்ளியில் மோதிக் கொள்ளக்கூடும்.

அனேகமாக அது பெண்ணாடமாக இருக்குமோ?

வீரர்கள் விலகிய நிலையில் சந்தடி அடங்கிய சந்தைத் திடல் போல் திருவிழா முடிந்த பெருவீதிப் பட்டணம் போல் மதுரை நிசப்தமாய் இருக்கிறது. அவ்வப்போது யுத்த நிலை குறித்துக் களத்தினின்றும் தகவல்கள் வரும். அது ராஜமாதாவிற்கு எடுத்துச் சொல்லப்படும். மதுரவல்லியும் உடனிருந்து அந்தச் சேதி அறிந்து மகிழுவாள்.

ஆனால், நாகமாலினி அவ்வாறில்லாமல் ஒரு நோயாளி போல் மனம் உடைந்து படுத்த படுக்கையாய்க் கிடப்பதை என்னென்று சொல்ல?

அருகிலேயே கோமளம் வேறு.

"நாகா- உன்னை அரசர் இந்த அளவு மன்னித்து விட்டு வைத்திருப்பதே பெரிது- இன்றைக்கு அரசர் வாள் பிடித்துப் போர்முனைக்குப் போகக் காரணமே அந்த மதுரவல்லிதான்.

ஆனமட்டும் முயன்ற உன் முயற்சிகள் இப்படியா வீணாய்ப் போக வேண்டும்?

இனி என்றும் பாண்டிய நாயகி அந்த மதுரவல்லி தான் என்பதை எண்ணினால் எனக்கே உன் பேரில் அனுதாபம் ஏற்படுகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

பாவம் நாகாபரணி! இருட்சிறையில் தண்ணீருக்கும் வக்கற்று கிடக்கிறான். மதுரவல்லியைக் கொல்ல முயன்ற குற்றத்துக்கு மரண தண்டனையே அவனுக்கு கிடைக்கலாம்.

யுத்தகாலம் என்பதால் நீதி விசாரணை சற்றுத் தள்ளிப் போயிருக்கிறது."

- கோமளத்தின் பேச்சால் கொதித்துப் போகிறது நாகமாலினியின் நெஞ்சம். துவண்ட நிலையிலும் உடலில் ஒரு வகை ஆவேசம் கிளந்தெழுகிறது. அது மதுர வல்லியை மட்டுமின்றி உதயசந்திரனையும் சேர்த்தே ஒழித்துக் கட்டத் துடிப்பது போல் தெரிகிறது.

"நாகா! உன் செயல்களுக்காக நம் ஸ்ரீ புருஷ மகா ராஜா மிக வருந்தி ராஜமாதாவிற்குக் கடிதம் எழுதி யுள்ளாராம். அதற்குப் பரிகாரமாய் கெங்கர் படை பாண்டியப் படையுடன் இணைந்து போராடி வெற்றி பெறட்டும் என்றும் கூறியுள்ளாராம்.

நீ உதயசந்திரனிடம் அவன் யாரென்று அறியாது கலந்து செயல்பட்டதை எண்ணி வெட்கப்படுவதாகவும் கூறியுள்ளார்.

சுருக்கமாகச் சொன்னால் நாகமாலினியை எனது பேத்தி என்று கூறிக்கொள்ளவே வெட்கமாக இருக்கிறது. அவள் ஒரு சுத்தமான வீரம் மிகுந்த கெங்கப் பெண்ணே அல்ல என்றும் புலம்பியிருப்பதாகவும் தகவல்.

இவைகளில் எந்த அளவு உண்மையுள்ளது என்பதை நீயே ராஜமாதாவிடம் கேட்டறிந்து கொள்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

- கோமளம் விடமாட்டாள் போல் தெரிகிறது. நைந்த நிலையில் இருக்கும் நாகமாலினியின் உள்ளத்தில் புயலையும் பூகம்பத்தையும் உருவாக்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டாள் போல் பேசுகிறாள்.

நாகமாலினி அதைக் கேட்டு ஒரு பந்தைப் போல் எழப்பார்க்கிறாள். ஆனால், முடியவில்லை. வர்மத்தால் ஏற்பட்ட வாதை தீராது போல் இருக்கிறது. கை கால்களை வேகமாக அசைக்க முடியாது திணறத் தொடங்குகிறாள்.

"நாகா! என்ன இது- என்ன செய்யப்போகிறாய்?"

- கோமளத்தின் கேள்வி முன் விசும்பி அழுகிறாள்.

"கோமளம் என்னால் முன்போல் வேகமாகச் செயல்பட முடியவில்லை. என் தவறுக்குப் பரிகாரமாய் அந்த உதயசந்திரனை என் கரத்தாலேயே கொன்றால் தான் எனது ஆவேசம் அடங்கும்."

"நடப்பதைப் பேசு... பெண்கள் போர்க்களம் நுழைந்தாக வேண்டிய நிலையில் நம் பாண்டிய தேசம் இல்லை. இந்த கணம் நம் படையே போரில் முன் நிற்பதாகவும் தகவல் வந்துள்ளது."

"போரில் நாம் தோற்பது ஜெயிப்பது என்பது வேறு. நான் அந்த உதயசந்திரனைப் பழிவாங்குவது என்பது வேறு. என்னை, என் காதலை ஏய்த்துவிட்டான். நல்லவன் போல் நாடகமாடி என் மாமன்னர் இடையே நீண்ட இடைவெளி விழக் காரணமாகி விட்டான்."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

"அப்படியே நீ களம் புகுந்து அந்த உதயசந்திரனைக் கொன்றாலும் நீ பாண்டிய நாயகி ஆக முடியாது - அதைத் தெரிந்து கொள்."

"நான் பாண்டிய நாயகி ஆவதை விடவும் பெரிய செயல் பாண்டிய துரோகி ஆகிவிடாதிருத்தல். அதற்கு ஒரே வழி அந்த உதயசந்திரனை என் கரத்தாலேயே கொன்று தீர்ப்பது மட்டும்தான்."

- நாகமாலினியின் ஆவேசம் அவள் உடலின் துவண்ட நிலையையெல்லாம் ஒரு துச்சமாகக் கருதி ஒதுக்குகிறது. மனதின் அதிதீவிரமும் அதன் சக்தியும் உடலின் பாகங்களுக்கு சக்தியைப் பாய்ச்ச வேகமாக நடக்கத் தொடங்குகிறாள்.

சற்றைக்கெல்லாம் ஒரு அரண்மனைப் புரவி மேல் அவிழ்ந்த கூந்தல் காற்றிலாட அவள் சிட்டாய்ப் பறப்பதைக் கோமளம் மாடத்திலிருந்து பார்க்கிறாள்.

விரித்த விழிகளை இமைக்க மறந்து சிலிர்க்கிறாள். நாகாவின் அந்தப் புறப்பாடு அரண்மனைக்குள்ளும் வேகமாகப் பரவுகிறது. மதுரவல்லியின் செவியை அது சென்று சேர்ந்த அடுத்த விநாடியே மதுராவின் முகத்தில் எல்லையில்லாக் கலக்கம்.

கோமளமோ கலங்கியபோதிலும் தனது பேச்சு அவளைச் சரியான விதத்தில் செலுத்திவிட்டதாகவே கருதுகிறாள்.

நாகமாலினி மட்டும் பரிகாரம் தேடிக் கொண்டால் போதுமா?

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

நாகாபரணி?

அடுத்த நொடியே இருட்சிறை நோக்கித்தான் கோமளத்தின் கால்கள் அசைகின்றன.

அனைவரும் போர்க்களம் நோக்கி சென்றுவிட்டதால் காவல் பாராக்களிலோ, சிறைக் கொட்டாரத்திலோ எவரும் இல்லை.

ஒரே ஒரு மல்லன் மாத்திரம் மொத்த சிறைக்கும் கொட்டாரத்தைப் பூட்டி சாவியை வைத்துக் கொண்டு தனக்குத் தானே தாயம் உருட்டி விளையாடிக் கொண்டிருக்கிறான்.

அப்படித் தாயம் உருட்டி விளையாடும் அவன் தலைமேல் இடியென ஒரு சுழி மோதுகிறது. அடுத்த நொடியே கண்கள் செருகி மயங்குகிறான் அவன்.

சுழியால் அவனைத் தாக்கிவிட்டு நாகாபரணி அடைக்கப்பட்டிருக்கும் கொட்டாரக் கதவை திறப்பவள் கோமளம்தான்.

இருண்ட சிறைக்குள் தீப்பந்தம் தாங்கி எதிரே வந்து நிற்கும் கோமளத்தைப் பார்த்து வியக்கிறான் நாகாபரணி.

அவனிடம் நாகமாலினியின் முடிவைத் தெரிவித்து 'நீயும் அதுபோல் பரிகாரம் தேடிக்கொள்... கெங்க நாட்டின் மீது படிந்த கறையைக் கழுவு' என்பது போல் அவன் கை விலங்குகளை நீக்குகிறாள் கோமளம்.

நாகாபரணியின் முகத்தில் கடூரமான எண்ணத்தின் அலைகள். கை விலங்கு நீங்கிய நிலையில் ஒரு மிருகம்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

போல் மாறிச் சிரிக்கும் அவன் சித்தம் கோமளத்திற்கு விளங்கவேயில்லை.

"பரணி... எதற்காகச் சிரிக்கிறாய்? போ-யுத்தப் பிரவேசம் செய். மாமன்னர் மனதில் உன்பால் படிந்துள்ள கோபத்தைக் கரைத்து அவர் காலில் விழுந்து மன்னிப்பைத் தேடிக்கொள்."

"இல்லாவிட்டால்?"

"இது என்ன கேள்வி- இல்லாவிட்டால் அழியாத பழியை நம் நாகவம்சத்துக்கும் நாட்டுக்கும் இழைத்தவனாவாய்-"

"நான் எங்கே பழியை இழைத்தேன். பாண்டியரோடு என் நாட்டு உறவு பலப்படத்தானே பாடுபட்டேன். நாகமாலினியோடு பராந்தக பாண்டியர் இணையத்தானே கொலைகாரன் ஆனேன். இன்று அனைத்தும் பாழ்பட்டு நிற்கிறது. என் செயல்களும் எதிர்மறையாகிவிட்டது.

இதற்காகவா நான் இத்தனை கஷ்டப்பட்டேன்!"

"நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது இதுதான். பழங்கதை பேசிப் பலனில்லை. பழி வந்துவிட்டது. தீர்க்கும் வழியைப் பார்ப்பதுதான் விவேகம். நம் ஸ்ரீ புருஷ மகாராஜா கூட அதைத்தான் விரும்புகிறார்."

"நானும் பழி தீர்க்காமல் விடப்போவதில்லை கோமளம். என் கைக்கட்டுகளை நீக்கிய உனக்கு என் நன்றி."

- செருக்காக பேசியபடி வேகமாகச் சிறைவிட்டு நீங்குபவனை ஒன்றும் புரியாமல் பார்க்கிறாள் கோமளம்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அவன் பேச்சின் பொருள் அவளுக்குப் புரியவில்லை. இவன் எந்தப் பழியை தீர்க்கப் போகின்றானோ?

மகிழ்ச்சியான அந்த வெற்றிச் செய்தி மாமதுரைக் குள் நுழைந்தபோது யுத்தம் தொடங்கி ஒன்பது நாட்களாகி விட்டிருந்தன.

ஒன்பது நாள் யுத்தத்தில் பல்லவப் படைகள் நிர்மூலமாகி விட்டிருந்தன! பெண்ணையாற்றில் நீரோடு குருதியும், கலந்து ஓடியதில் ஒரு வகை இளங்காவி நிறம் பூத்திருந்தது. ஆயிரமாயிரம் பல்லவ - பாண்டியர்களின். சரீரங்களால் பெண்ணையாற்றங்கரையும், ஊரின் மைதான வெளிகளும் ஒரே பிணக்குவியலாக இருக்க, பல்லவன் நந்தி களத்தை விட்டுக் காஞ்சிக்குப் புறமுது கிட்டு ஓடிக்கொண்டிருந்தான்.

களம் புகுந்த நாகமாலினியின் ஈட்டியால் மார்பு நைந்து போயிருந்த உதயசந்திரன்கூட அந்த ஈட்டியால் நாகாவைத் திருப்பித் தாக்கி அவளுக்கு வீர சொர்க்கம் அளித்துவிட்டுத தப்பித்தால் போதும் என்று திரும்பிக் கொண்டிருக்கிறான்.

பல்லவன் முற்றிலுமாக எதிர்பார்த்திராத தோல்வி-

அவனது கூர்த்த தந்திரங்கள் அனைத்தும் பொடிப் பொடியாகிவிட்டன.

"கவசகுண்டலத்தோடு போர் முனையில் நேருக்கு நேர் நந்தி மட்டும் வரவே மாட்டான். அப்படி வருபவன் நந்தியாக இருக்க மாட்டான். அதை நினைவில் கொண்டு நந்தியை களத்தில் கண்டறிந்து தாக்கு" என்ற பைராகி

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

சாகும் முன்கூறிய ரகசியச் செய்தியால் பராந்தகன் நந்திக்கு வைத்த குறி பொய்யாகவில்லை.

பாகையால் முகம் மூடி ரத சாரதி போல வந்தவனைக் கண்டறிந்து பராந்தகன் அவனைத் தாக்க விழைந்த போதே நந்திப் பல்லவன் பாதி தோற்றுவிட்டான். மறு பாதியைப் பராந்தகன் சாதிப்பதில் அதிகம் சிரமங்கள் இல்லாது போய்விட்டன.

சாத்தனும், கணபதியும், எயினனும், ஏலாதியும் போட்டி போட்டுக் கொண்டு பல்லவ தலைகளைக் கிள்ளி எடுத்துவிட்டார்கள்.

உதயசந்திரனின் மந்தி வியூகமெல்லாம் சந்தி சிரித்துப் போய்விட்டது.

கால நேர வர்த்தமானங்கள் பாண்டியனுக்குத் துணை செய்து அவனை வெற்றிப் பாதைக்கு இழுத்து வந்து விட்டன.

பல்லவ தேசத்தையே அந்த வினாடி பராந்தகன் கைப்பற்றி அங்கே மீன் கொடியைப் பறக்க விட்டிருக்க லாம்.

ஆயினும் அவன் போல் தனக்கு மண்ணாசை இல்லை என்று நிரூபிக்க ஒரு சந்தர்ப்பம் கிட்டியதாக நினைத்துப் புறமுதுகிட்டு ஓடுபவனை நின்று நிதானித்து வேடிக்கை பார்க்கிறது பராந்தகனின் விழிகள்.

“பல்லவனே- இனிப் பாண்டி மண்டலம் குறித்து கனவிலும் நீ நினைத்துப் பார்க்கக் கூடாது. தவறாது கப்பம்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

செலுத்தி எனக்கு அடிமைப்பட்ட நாட்டரசனாய்ப் பணிவாக நடந்துகொள்."

- போர்க்களத்தில் ஒலித்த பராந்தகனனின் வீரமிக்க குரலொலி மதுரை வரை எதிரொலிக்கிறது. இரவைப் பகலாக்கும் வாண வேடிக்கையில் அது அப்பட்டமாய்த் தெரிகிறது.

ஊரே ஒன்றுதிரண்டு வெற்றி வீரராகத் திரும்பும் பாண்டியரை வரவேற்க ஆரத்தித் தட்டுடன் காத் திருக்க, மதுரவல்லியோ மகிழ்ச்சியின் எல்லையில் இருக்கிறாள்.

"உரிய வேளையில் பராந்தகனை நெறிப்படுத்திப் பாண்டிய மானம் காத்துவிட்டாய். உனக்கு என் ஆசியும் வாழ்த்தும்" என்று தீர்த்தர் முதல் ராஜமாதா வரை பாராட்டியதில் உச்சி குளிர்ந்துபோய்க் கிடக்கிறாள்.

இந்த மகிழ்ச்சியை நான் போற்றி வணங்கும் கூடலழகர் பிரானுக்கு முதல் காணிக்கையாய் அர்ப் பணிக்க வேண்டும். பிறகே மற்ற செயலெல்லாம்!

அவள் எண்ணத்திற்கேற்ப பட்டுச் சிவிகை அவளைச் சுமந்து கூடலழகர் ஆலயம் விரைகிறது. வீதி வலம்புரியும் அந்தச் சிவிகை பார்த்து மாநகர மக்களின் உவப்பான வாழ்த்தொலி.

"பாண்டிய நாயகியார் மதுரவல்லிதேவியார் கொற்றம் வாழ்க."

"பராந்தக நாயகியார் மதுரவல்லிதேவியார் சீர்மை ஓங்குக."

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

கண்கள் பனிக்க அந்த வாழ்த்தொலிகளைக் கேட்டுச் சிலிர்க்கிறாள் மதுரவல்லி.

காதல் மயக்கத்தால் தேசம் மறந்துவிடுவான் என்று கருதியவன், அதனால்தான் தேசம் விளங்கச் செய்தவனாகியதை நினைக்க நினைக்க காதலின் சக்தி அவளுக்குள் விசுவரூபம் எடுக்கிறது.

தன் காதல் நிமித்தம் வைணவம் தழுவினான். தன் காதல் நிமித்தம் இன்று வெற்றியும் தழுவியுள்ளான். தன் காதல் நிமித்தம் இன்னமும் பல சாதனைகளைச் செய்திட அந்தக் கூடலழகன் அருள்பாலித்திட வேண்டும்.

- அவள் நினைப்பைப் போலவே கிரிதிருமால் நதிதீரத்து இளங்காற்று இன்பமாய் வருடி திரைச் சீலை விலக்கி நகரின் காட்சிகளை அவளுக்குக் காட்டுகிறது.

அப்பொழுது இடையிடுறது ஒரு உருவம்.

உதட்டில் "பாண்டிய நாயகியார் மதுரவல்லி தேவியார் திருநாமம் வாழ்க" என்னும் வாழ்த்தொலி. பாகையால் முகம் மூடியிருப்பதால் உருவைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. உருவம் பல்லக்கை மறிக்கிறது.

"யார் நீங்கள்? என்ன வேண்டும் உங்களுக்கு?"

"தங்களை நேரில் வாழ்த்த வேண்டும்."

"என்னை வாழ்த்துமளவு நான் எதைச் சாதித்தேன்? களம் புகுந்து எதிரியை வென்றவர் அரசர். அவரை வாழ்த்துங்கள். வெற்றியால் குதூகலிக்கும் இந்தப் பாண்டிய நாட்டை வாழ்த்துங்கள். அனைத்திற்கும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அடிநாதமான அந்த நாரணனாம் கூடலழகர் பெருமாளை வாழ்த்துங்கள். அதைவிட்டு என்னை..."

- மதுரவல்லி முழுவதுமாகப் பேசி முடிக்கும் முன் திரைச்சிலை கடந்து அந்த உருவின் கரங்கள் அதிவேகமாக செயல்பட்டதில் மதுராவின் மார்பை கிழிக்கிறது கட்டாரி. வெறும் கட்டாரிகூட அல்ல! பாஷாணக் கட்டாரி.

"நாராயணா.. எம்பெருமானே?" மதுரவல்லியிடம் தீனமான அலறல்.

"உனது வெற்றியை என்னால் தாள முடியாது பெண்ணே. தாள முடியாது. நான் நாகவம்சத்தன். அந்த நாகம் போன்றவன். சரியோ தவறோ முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டான் இந்த நாகாபரணி."

இனி என்னைக் கண்டதுண்டமாய் வெட்டினாலும் கலக்கமில்லை.

என் தங்கைக்குக் கிட்டாதது எவர்க்கும் கிட்டக் கூடாது.

கனலாய்ச் சொற்களைக் கக்கி நிற்பவனை வீரர் கூட்டம் வளைத்துப் பிடிக்கிறது. அவன் அகோரமாய் அவர்கள் பிடியில் சிரிக்கிறான்.

ஒரு அரச காதலுக்கு முடிவு கட்டிய பழிச் செயல் நிமித்தம் விளைந்த சிரிப்பாகவே அது தோன்றுகிறது. 'என் வரையில் இதுதான் தர்மம்' என்பது போல் இடி இடியெனச் சிரிக்கிறான் நாகாபரணி!

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அதே வேளையில் அரச காதலுக்கு மிகப் பெரிய விலையாகத் தன் இன்னுயிரைத் தந்துவிட்ட மதுர வல்லியின் ஆன்மா அந்த மாநகரை விட்டு நீங்கும்போது மதுரைக்குள் நுழைகிறது பராந்தகனின் வெற்றிப்படை!

# 23

மாமதுரை எங்கும் மகிழ்ச்சி வெள்ளம்...

பராந்தகன் வெற்றித் திலகம் இட்ட நெற்றியோடு ரதத்தில் நின்ற வண்ணம் அவன் மாந்தரின் கரகோஷத்திற்கும் ஜெய கோஷத்திற்கும் நடுவிலே வந்து கொண்டிருக்கிறான்.

அவனுக்கு தெரியாது.

மதுரவல்லியின் உயிர்ப் பறவை அந்த வெற்றிப் பிரதேசம் விட்டு விலகியது.

அவன் விழிகள் மாநகர் மாந்தர் மேல் பதிந்திருந்த போதிலும் மனக்கண்கள் மதுரவல்லியின் நினைவில் தான் மூழ்கியிருக்கின்றன.

பாண்டியப் பெண்டிர் பட்டாளம் குலவை போடுகிறது. ஜெயக்கும்மி கொட்டி ஆரத்தி கரைத்து நெற்றித் திலகம் இடுகிறது.

வெற்றி மாலைகள் புதிது புதிதாய் பராந்தகன் தோள் மேல் விழுந்த வண்ணம் உள்ளன.

விழும் அந்த மாலைகளைவிடவும் மதுரவல்லி தனக்காகச் சூடவேண்டிய மாலையைத்தான் பராந்தகன் உள்ளம் மாலையாகவே கருதுகிறது.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

இந்த வெற்றி அவளால் வந்த வெற்றி.

இந்தப் பாண்டிய மண்டலமே அவளுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. பராந்தகனின் நினைவுகள் புத்தெழுச்சியாய்ப் புது ஊற்றாய்க் கிளர்ந்தெழும்போது மதுரவல்லி மாடவீதியில் பல்லக்கினுள் மாய்ந்து கிடப்பதை என்னென்று சொல்ல..?

வெற்றிச் செய்திக்கு நடுவில் மதுராவின் அந்த மரண செய்தியும் முடிந்தவரை பயணம் செய்யப் பார்க்கிறது.

அரண்மனை வாயிலின் வேத பண்டிதர் குழா மோடும் ராஜ அசுவத்தோடும் நின்றுகொண்டிருக்கும் ராஜமாதா பூ சுந்தரியையும் அச்செய்தி எட்டுகிறது.

இடி இறக்கியது போல் ஸ்தம்பிக்கிறாள் பூசுந்தரி.

மதுரவல்லியன் ஆவி நீங்கினதை விடவும், அதை நீக்கியவன் ஒரு கெங்க புருஷன் என்பதையறிந்து துடிதுடித்துப் போகிறாள்.

எப்பேர்ப்பட்ட பழி?

காலத்தால் கழுவ முடியாத இகழ்ச்சியல்லவா?

வெண்ணெய் திரண்டுவரும்போது தாழி இப்படியா உடையும்?

பூசுந்தரியை விடவும் புழுவெனத் துடிப்பவர் பட்டர் பிரான்தான்.

'எனக்கென இருந்த ஒரே செல்வத்தையும்கூட நான் இப்படிப் பறிகொடுத்துவிட்டேனே.. இதற்காகத்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

தானே அரச தொடர்பே வேண்டாம் என்று விலக ஆசைப்பட்டேன்.

மதுரா நீ கேட்கவில்லையே-

நான் துரோகியாகிவிடக் கூடாது என்று சொன்னாயே. இன்று ஒரு துரோகத்தாலேயே மாய்ந்து போனாயே-

நான் இனி என் செய்வேன்- என் வாழ்க்கை பொரு ளற்றும், அருளற்றும் போய்விட்டதே...' பிதற்றுகிறார் பட்டர்.

தீர்த்தர் கூட இறுகிப்போய் விட்டிருக்கிறார். மதுரை நகர் எங்கும் காதில் ஒலிக்கும் ஜெயகோஷம் மெல்ல அடங்கி மதுரவல்லியின் மரணத்தின் நிமித்தம் துக்கம் பரவத் தொடங்குகிறது.

ரதத்தைவிட்டுக் கீழிறங்கி மதுரவல்லியின் நினை வாகவே ஓடிவரும் பராந்தகனுக்கு இன்னும் செய்தி கூறப்படவில்லை.

'கூறுவதா வேண்டாமா? கூறாமல் இருக்க முடியாதே? கூறினாலும் அவன் தாங்குவானா?' - இது போன்ற வினாப்பந்துகளின் துள்ளலில் துவண்டு கிடக்கிறார் தீர்த்தர்.

வெற்றி விழாவை விமரிசையாகப் பன்னிரு தினங்கள் கொண்டாடும் உத்தேசத்தை என்ன செய்வது?

விறலியர், பாணர், கூத்தர், பிரகடனர், வியாசகர், வாண வேடிக்கைக் கலைஞர், மல்லேறுழவர் என்ற

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வகைக்கொரு கலைஞர் கூட்டம். மதுரை எங்கும் புத்தெழுச்சியோடு ஜன சங்கத்தில் தங்கள் திறமையைக் காட்டி மகிழ்விக்கச் செய்யவேண்டும் என்னும் ஏற்பாட்டுடன் காத்திருக்கும் வல்லபன் கணபதி அதோ வாளாது கிடக்கிறான்.

வெற்றியில் பங்கு கொண்டு வாழ்த்தவென்று வரும் அண்டை தேசத்து அரச குடும்பத்தவர்களை வரவேற்றும் வகைப்படுத்தவுமான பணி சாத்தனுக்கு-

இந்த வெற்றி நிமித்தம் நிவந்தங்கள் தந்தாக வேண்டும். எவரெல்லாம் பாண்டி தேச வெற்றிக்குப் பாடுபட்டார்களோ அவர்களுக்கெல்லாம் அவரவர் தகுதிக்கேற்ப ஐந்து வேலியிலிருந்து ஐம்பது வேலி வரை நிலங்கள். அந்தணர்க்கோ குடிபடை கோவிலுடன் கிராமங்களே. அதற்கான சாசனங்களை உருவாக்கி பராந்தகன் கரத்தாலே இந்த வெற்றியை நிலைநிறுத்திட வேண்டும் என்பது மதுரகவியாரின் ஆசை.

அந்தக் குடவரைக் கோயிலையும் செம்மைப்படுத்த வேண்டும். பரங்குன்றத்தில் குளம் வெட்டி, நாகமலையில் கல்வெட்டு அமைத்து ஆனைமலையில் ஆதி நரசிம்மன் ஆலயத்தை அவனி உள்ளளவும் மறவாதவாறு பொலிவிக்க வேண்டும் இது எயினனின் எண்ணம்.

பல்லவ வெற்றியின் எதிரொலிகளாய் அம்பாரமாய் பணிகள், அத்தனையையும் புறந்தள்ளி அமுக்கி விட்டது மதுரவல்லியின் இன்னுயிர்.

பராந்தகன் இதைத் தாங்குவானா?

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அவனுக்கு எப்படித் தெரிவிப்பது?

யுத்தகளத்து உத்திரியங்களில் அங்கங்கே குருதி ஒழுக்கு. வாளாபரணமும் மார்புக் கவசமும் உராய்வதிலே ஒரு வகை சப்தம்.

பட்டயக் கவசத்தின் பரல்மணிகள் கலகலவென ஒன்றன்மேல் ஒன்று மோதிக் கிளற்றும் சப்த அலைகள் நடுவே ஆகிருதியாய் பராந்தகன் அரண்மனையுள் காலெடுத்திருக்கிறான். தன் எதிரே நிமிர்ந்து இசைந்த பூரண கும்பத்தை புறந்தள்ளி 'மதுரா! மதுரா' என்று மன விழிப்போடு சுற்றிச் சுற்றி பார்த்த வண்ணம் நடக்கிறான்.

வந்ததும் வராததுமாய் மதுரவல்லி எங்கே என்று கேட்டால் எங்கே தன்னை பார்ப்பவர்கள் காதல் பித்தன் என்று கூறிவிடுவார்களோ என ஐயப்படுவது அவன் மௌனத்தில் புலனாகிறது.

ஒருக்கால் ஒளிந்துகொண்டு ஆவலைத் தூண்டு கிறாளா இந்தமதுரா?

'எங்கே மதுரவல்லி. ஏன் வெற்றித் திலகம் இட எதிர்வரவில்லை?' இப்படி ஒரு கேள்வி எந்த ஒரு வினாடி யிலும் பராந்தகனிடம் இருந்து வரலாம். அதற்கான விடையுடன் தயாராய் இருக்கிறார் தீர்த்தர்.

'தீர்த்தரே! உம்மால்தான் அவனைச் சமாதானப் படுத்திச் செம்மைப்படுத்த முடியும்.

பல்லவ வெற்றியை விடவும் இப்போது பாண்டியன் பராந்தகனை நிலை நிறுத்துவதுதான் பெரிய வெற்றி பார்த்துக் கொள்ளுங்கள்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வெளியே நடந்தது தேக வலிக்கான யுத்தம்.

இப்போது நடக்க இருப்பது மனோவலிக்கான யுத்தம்.

அதில் வென்றவன் இதில் வெல்வானா?

பல்லவனை வென்றதைவிடவும், அவன் தனது காதலை வெல்வதில்தான் அவன் எதிர்காலம் இருக்கிறது.

மதுரவல்லி இருந்து கொடுக்காமல் இறந்து கெடுத்துவிட்டாளே என்று எண்ணி செருமாந்து கொண்டிருக்கிறேன்.

பராந்தகனை என்ன விலை கொடுத்தாவது நிலை நிறுத்துங்கள்.

- பூசுந்தரி தேவியார் கூறியதை நினைத்தபடி பராந்தகனை நெருங்கிப் பீடிகையோடு பேச்சைத் தொடங்குகிறார் தீர்த்தர்.

அதே சமயம் தன்னை மாய்த்துக் கொள்ள ஆலயத்துக் கடம்ப மரத்தில் தூக்கு கயிற்றுடன் தயாராகிக் கொண்டிருக்கிறார் பட்டர் அழகர் நம்பி.

வாழ்வே சூன்யமாகிவிட்ட உணர்வோடு ஆத்ம ஹத்தி பாவம் என்று தெரிந்தும்கூடத் துக்கம் தாளாது கயிற்றைக் கட்டி முடிக்கும் அவரருகே பறந்து வருகிறது மதுரவல்லியின் பிரியத்துக்குரிய அஞ்சுகக் கிளி.

'அப்பா அப்பா...' என்று மதுரா அழைப்பது போலவே அழைக்கிறது. சோகமாய் அந்த அஞ்சுகத்தைப் பார்க்கிறார்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

'சந்தி பூஜைக்குப் போகவில்லையா?' என்று அது மனிதர்களைப் போலப் பேசுகிறது. எல்லாம் மதுரவல்லி யின் பழக்கத்தால், பயிற்சியால் வந்த வினை.

மதுரவல்லியே வந்து கடமையைச் செய்யச் சொல்லி உத்தரவிடுவது போல் ஒரு பிரமை அவருக்கு.

கயிற்றை வெறித்த வண்ணம் கீழிறங்குகிறார்.

அஞ்சுகம் அங்கிருந்து ஏவப்பட்ட அம்பு போல் அரண்மனை மாடம் நோக்கிப் பறக்கிறது.

அங்கேதான் வெட்டப்பட்ட மரம் போல வீழ்ந்து கிடக்கிறான் பராந்தகன்.

எந்த ஆறுதலாலும் பலன் இல்லை என்பது போன்ற சோகத்தில் சிக்கிக் கிடக்கிறான்.

போரிலே மாவீரனாய்க் காட்சியளித்தவன் - இங்கே தேம்பியழும் ஒரு குழந்தையாய்த் தெரிகிறான்.

திரும்பவும் அவனுள் சந்நியாச உணர்ச்சிகள்! தேசம் குடிமக்கள் வெற்றி தோல்வி எல்லாமே மாயவிளையாட்டு என்பது போன்ற விரக்தி தோற்றம்.

வெற்றியின் மகிழ்ச்சியில் நிலம் அதிர நடந்து நெஞ்சு விரிய நிமிர்ந்து அகம் சிலிர்க்கச் சிரித்துக் குதூகலிக்க வேண்டியவன், கும்மிருட்டில் கண் தெரியாமல் சுருண்டு விட்டது போல் தென்படுகிறான்.

ஒருத்தியின் பொருட்டுத் தேசமே வெற்றியை அனுபவியாது மங்கிப் போவதா?

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

வாராது வந்த மாமணி ஒளிராது நொறுங்கிக் கிடக்கிறதே?

அனைவருள்ளும் ஆயாசம் சிறைப்படும் அந்த தருணத்தில் அஞ்சுகம் குறிப்பறிந்து பேசுகிறது.

"அரசே... அரசே...' என்று விசாரிக்கிறது நிமிரும் பராந்தகன் எதிரே சிறகடித்து வந்து அமருகிறது.

"இந்த மண்ணில் மகிழ்ச்சி பாய வேண்டும். அப்பொழுதுதான் எனக்கு ஆத்ம நிம்மதி."

- அஞ்சுகத்தின் பேச்சைக் கேட்டு வியக்கிறான் பராந்தகன்.

"ஏ கிளியே! யார் நீ?" சோகமாய்க் கேட்கிறான்.

"நானா... நானா?" - அஞ்சுகத்திடம் எக்காளம்.

"சொல்லப் போகிறாயா இல்லை..." பொறுமை இழந்து வாளைப் பற்றத் தொடங்குபவனைப் பார்த்து துளியும் அஞ்சாது நிற்கிறது அந்த அஞ்சுகம்.

'நான் மதுராவின் தோழி! என் தோழியால்தான் இன்று இந்த நகரில் வெற்றி, அதைக் கொண்டாட வா' என்று மழலையாகப் பேசி உற்சாகமாய் மாடத்தை நான்கு முறை சுற்றி வந்துவிட்டு ஆகாயம் ஏறுகிறது அந்த அஞ்சுகம். இதுவும் மதுரவல்லியின் பயிற்சியாலோ? இல்லை கிளியிடம்தான் அதிகப்பிரசங்கமோ?

ஒருக்கால் இப்படியெல்லாம் ஆகக்கூடும் என்று முன்பே உணர்ந்திருப்பாளோ? மதுரவல்லியே நேரில் வந்துவிட்டு போனது போல் உணருகிறான் பராந்தகன்.

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

மின்னல் போல் ஓர் எண்ணம்.

ஒரு கிளிக்கு இருக்கும் தைரியம்கூடவா தனக்கு இல்லாது போய்விட்டது?

நிமிருகிறான்.

மதுரவல்லியின் உடல் கிடத்தப்பட்டிருக்கும் மண்டபம் நோக்கி நடக்கிறான்.

தீர்த்தர் இணைந்து கொள்கிறார்.

"தீர்த்தரே... மதுராவை நல்லடக்கம் செய்ய வேண்டும். அவள் நினைவாக இந்த மண்ணை மதுராபுரி என்று கூட அழைக்கலாம் அல்லவா?"

"தாராளமாக..."

"அவள் ஆன்மா சாந்தி பெற வேண்டும். அதற்காக வேதங்கள் கூறும் தானங்கள் அனைத்துக்கும் ஏற்பாடு செய்யுங்கள்."

"நிச்சயமாக..."

"பாவம் பட்டர் பிரான்... அவரை..."

"அவர் கூடல் அழகனை நீங்க மாட்டாராம். நாராணன் சேவையில் வரும் நாளைக் கழிப்பாராம்."

"அவ்வாறே ஆகட்டும். எனது குடி படைக்காப்பும் இனித் தொடரும்..."

- சூசகமாய் தான் நல்லாட்சி தொடரப் போவதை, மனத்தளவில் தேறிவிட்டதைச் சொல்லாமல் சொல்லும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

அவனை மகிழ்ச்சி பொங்க பார்க்கிறார் தீர்த்தர். வானம் ஏறிக் கொண்டிருக்கிறது. அந்த அஞ்சுகம் 'மதுரா! என்னுயிர்த் தோழியே- உனது சேதியை நான் உரியவர் களிடம் கூறிவிட்டேன். அவர்களை அவர்களாய் ஆக்கி விட்டேன். ஆயினும் நீயில்லாத பூமியில் எனக்கு மட்டும் என்ன வேலை?' என்று கேட்கின்ற மாதிரி கார்மேகம் சூழ்ந்து கொண்டிருக்கும் வானம் ஏறிக் கொண்டிருக்கிறது.

கார்மேகம் சூழ்ந்த வானிலே மெலிவான கரைவு. இதமான மழையால் அந்த வெற்றித் திருநகர் அபிஷேகிக்கப்படுகிறது.

மழைநீர் மகிழ்ச்சியின் வெளிப்பாடா? இல்லை இயற்கையின் கண்ணீரா என்பது புரியாத புதிரான சூழலில் வலுவான மதுரைப் பெருவெளி நனையத் தொடங்குகிறது.

பொழியும் மழை நீர் எதை வேண்டுமானாலும் அடித்துச் செல்லலாம். அழித்தும் செல்லலாம்.

ஆனால், பராந்தகனின் காதலை - அவனது வெற்றியை மதுராவின் தியாகத்தை, ஆனைமலையும், நாகமலையும், கிரிதிருமால் நதி தீரமும், கூடல் அழகர் ஆலயமும் உள்ளவரை காத்து நிற்கும் என்பது சர்வ நிச்சயம்.

முற்றும்

tamilebooks.net ; tamilnesan1981.blogspot.in

